GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
13 ... 1959
TRIPLICANE P.O., MADRAS

MADRAS
GOVERNMENT ORIENTAL SERIES

No. IV

உபதேச காண்டம்

ஞானவரோதய பண்டாரம் அருளிச்செய்தது

இரண்டாம் பாகம்

UPADESAKĀṆḌAM

Vol. II

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras.

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Govt. Oriental Manuscripts Library, Madras

No. IV

உபதேச காண்டம்

Vol. II

UPADEŚAKĀṆḌAM

Vol. II

CRITICALLY EDITED

BY

Thanigai-mani V. S. CHENGALVARAYA PILLAI, M. A.,

Personal Assistant to the Inspector

General of Registration (Retired), Madras.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

1950

Price Rs. 5-0-0

Printed
at the
Rathnam
Press,
Madras.

அத்தியாயம் 36.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி.

விநாயக விரதம்

(i) சித்திரை வெள்ளி விரதம்.

சித்திரை மாதம் சுக்கில பக்ஷம் வெள்ளிக்கிழமையன்று காலையில் முழுகி நித்தியகடனை முடித்து, பொன்னோ, வெள்ளியோ, செம்போ இவைகளில் ஒன்றினால் ஆகிய ஐங்கரமூர்த்தியைத் தாபித்து, ஆகமவிதிப்படி பூசித்து பாயசம் முதலிய நிவேதனம் செய்து, கோயிலுக்குப்போய் அங்கே விநாயகரையும் சிவபிரானையும் முறைப்படி வலம் வந்து, இயன்ற தானம் புரிந்து வணங்கி வீட்டுக்கு வந்து, மறையோர்க்குத் தானங்கொடுத்து, அப்பம் உணவாக அவருக்குக் கொடுத்த பின்னர் தான் உண்டு, மறுநாள் காலை நீராடிக், கடன்களை முடித்து, அந்த விநாயகர் உருவை அடியாருக்கு உதவிச், சிவனடியார்களுடன் உண்டு, இந்த மங்கள விரதத்தை முடிக்கவேண்டும். இவ்விரதத்தை முன்பு அத்திரி முனிவர் நோற்றுத் தமது கண்களினின்றும் சூரியனையும் சந்திரனையும் ஈந்தார். பிரமன் இதை நோற்று பிரம தத்துவத்தை அடைந்தான். குபேரன் நோற்றுச் சங்கநிதியையும் பதுமநிதியையும் பெற்றான். தேவர்கள் மாநுடர்கள் இருடிகள் நோற்று வீடு பேறுற்றார்.

(ii) விநாயக சதுர்த்தி விரதம்.

விநாயக சதுர்த்தி விரதம் பாவங்களைத்தீர்க்கும்; அம்பிகையிட்ட சாபத்தால் திருமால் குருட்டுப் பாம்பாகப் பூமியில் விழுந்து, இந்நோன்பை நோற்றுச் சாபம் தீர்ந்து பழைய உருவை அடைந்தார். ஒருமுறை பிரமனாதி தேவர்கள் இவ்விரதத்தை நோற்று விநாயகரைப் பணிய, அவர் அப்போது நடனம் செய்தார். நடனத்தைக் கண்ட சந்திரன் புன்சிரிப்புச் சிரித்தான். அவனை விநாயகர் சபித்தார். அந்த (சதுர்த்தி) நாளில் பிறையை யாராவது பார்த்தால் பாப இடர்க்கடலிற் படிவர். தேவகி மகனார் கிருஷ்ணபிரான் அத்தினத்திற் சந்திரனைப் பார்த்ததாற் பத்தி சிறந்திருந்தும் பழிக்கு ஆளானார். இவ்விரதம் பாவத்தைத் தொலைப்பதால் இதை அநுட்டிப்போர் விநாயகருக்கு உகந்தவர் ஆவர்; என்றும் போகம் துய்த்து ஈற்றிற் சிவனடி கூடுவர்.

(iii) சஷ்டி விரதம்.

கணேசருக்கு உகந்த மற்றொரு விரதம் "சஷ்டி" விரதம்; இவ்விரதத்தை நோற்று மனிதர்கள் அளவிலர் சிவனடி கூடினர். வித்யுன்மாலி என்னும் அரசன் முன் நோற்று நோய் தீர்ந்து, வஜ்ரதேகம் பெற்றுத், திலோத்தமையை மணந்து, மகவு ஈன்று, மகிழ்ந்திருந்து வீடுபேறு உற்றான். இந்த மான்மியத்தைப் படிப்போர், உவந்து கேட்போர், கேட்பிப்போர் போகங்கள் துய்த்துச் சிவனடிநிழல் சேர்வர்.

அத்தியாயம் 36.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி.

விநாயகர் விரதம்

(i) சித்திரை வெள்ளி விரதம்

எண்சீர் விருத்தம்.

880. எறிதிரைநீர்ப் பரவையுல கிரங்குசிறைச் சுரும்பர்
எழுகரட விகடமதம் இனிதருந்தச் சொரியும்
வெறிகமழ்சீர் இருகவுட்போர் விளக்குமொரு மருப்பு
வேழமுகக் கடவுளரு விரதமெடுத் துரைக்கேன்
செறியிரவி விடைமருவு வளர்மதியில் வெள்ளித்
தினத்திலிருள் புலர்காலை யெழுந்து புனல் மூழ்கி
யறிவொடுநித் தியகருமம் புரிந்துபொன்று ரஞ்செம்
பாகுதலைங் கரனையமைத் தாவாகித் துவந்தே. (1)

881. பிறைசெருகு குடிலமுடிப் பிஞ்ஞகனு கமத்தின்
பேசுவிதிப் படிபூசை பெரிதுபுரிந் தறுகாற்
சிறைவரிவண் டுழுமுறுக்கு வரிமலர்ப்பத் திரங்கள்
தெரிந்துபல விதஞ்சேரத் திரவியமெட் டாதி
குறைவறுபர் யதங்கள்நிவே இத்தமலன் கோயில்
குறுகியொரு மருப்பிறையைக் கொன்றைமுடியானை
மறையின்முறை வலம்புரிந்து கிடைத்தபொரு ளுதவி
வணங்கிமகிழ் தனதுறையுள் வரக்கொடுதான் வந்தே. (2)

எழுசீர் விருத்தம்

882. பொழிதரு கருணை மறையவர்க் கியன்ற
பூரிதா னங்கொடுத் தப்பங்
கழிபெரு நகைகூர் பத்தியா லருந்தக்
கடிதுநல் கியபின ருணவு
பழிகெட அருந்தி மற்றை நாட் காலை
பவித்திர நீர்படிந் திறைநூல்
மொழிவழி நியதி புரிந்தொரு கொம்பன்
மூர்த்தநல் லடியவர்க் குதவி. (3)

---

880. இரங்குதல்-ஒலித்தல்; விடை—ஆட்டுக்கடா; விடைமதி—மேடமாதம்—சித்திரை மாதம். பொன், தாரம், செம்பு, ஆகுதல்; தாரம்—வெள்ளி.

881. குடிலம்—சடை.

நோற்றுப் பேறு பெற்றவர்

883. திங்களங் கண்ணி மிலைந்தசெஞ் சடிலச்
சிவனடி யாருடன் அருந்தி
மங்கல விரதம் விதிப்படி முடிப்பான்
மன்னுமிவ் விரதமுன் இருடி
புங்கவன் எனுமத் திரிமுநி நோற்றுப்
பொழியருட் டிருந யனத்திற்
செங்கதிர்க் கடவு ளோடுடு பதியைச்
சிறக்கவே யீந்தனன் அம்மா, (4)

884. துளைநெடு நாள முளரியங் கடவுள்
தொல்லையிவ் விரதநோற் றமரர்
கிளைபுகழ் பிரம தத்துவ மடைந்தான் ;
கீர்த்திசேர் அளகையஞ் செல்வன்
வளைநிதி பதும நிதிகளிவ் விரத
மான்மியத் தாலடைந் தனன் ; தார்
விளைமதுச் சுரர்மா னவரிரு டியரிவ்
விரதநோற் றும்பர்வீ டடைந்தார். (5)

(ii) விநாயக சதுர்த்தி விரதம்.

885. மெய்த்தவெண் முநிவீர் ! ஒற்றைவெண் மருப்போன்
விநாய சதுர்த்திமா விரதம்
பைத்தலை யுரகன் மணிமுடி கிடந்த
பார்மிசை யெண்ணில்பா வமுந்தீர்த்(து)
உத்தம நெறிதந் திடுமிதை நோற்றோர்
ஓங்குபோ கங்களியா வையுந்துய்த்(து)
அத்தநாள் பரமன் உலகமும் அடைவர்
ஐயமற் றில்லையுண் மையதால். (6)

886. கனைகடல் அகடு திரிதரக் குடுமிக்
கனவரை மத்தெறிந் தமரர்
அனைவரும் நுகர அமுதருள் கடவுள்
அம்பிகை யுரைத்தசா பத்தால்

---

883. உடுபதி—சந்திரன்
884. வளைநிதி—சங்கநிதி
885. அத்தநாள்—முடிவுநாள்; ஈற்றில்
886. முனைஉரு—பழைய உருவம்; கண்ணாய்—கண்ணைப்பெற்ற

தனைமறந் திருகட் குருட்டுமா சுணமாய்த்
தரணியின் வீழ்ந்திது நோற்று
முனையுருக் கொணர்ந்த முளரியங் கண்ணுய்
முற்பெறு சாபந்தீர்ந் தனனுல். (7)

887. மலர்தலை யுலகு படைத்ததே வாதி
வானவர் இவ்விர தத்தால்
இலகொரு மருப்பைங் கரற்பணிந் தனரவ்
வேல்லையைங் கரன்நடித் தனன்பூங்
கலைமதிக் கடவுள் அற்புத னடனங்
கண்ணுரு முறுவல்செய் தனன்பூ
தலமிசை நகைசெய் சந்திரன் தன்னைச்
சபித்தனன் தந்திமா முகனே. (8)

888. அத்தினம் அதனிற் பிறையினை யொருவ
ராகிலும் நோக்குறர் நோக்கில்
எத்தகை யவரா கிலுங்கொடும் பாவ
இடர்க்கடற் படிகுவர் உண்மை
முத்தவெண் முறுவல் தேவகி பயந்த
முராரிசந் திரனைநோக் குபுபார்
பத்தியில் திகழ்ந்தும் நிந்தனை புரியப்
படர்பழி பெரிதுபூண் டனனுல். (9)

889. ஆற்றருந் தவத்தீர்! பாவநீத் தருள்வ
தாகையால் இவ்விர தத்தைப்
போற்றின ரவர்கள் ஐங்கரற் கினியர்
போகங்கள் இடையறு தருந்தி
யீற்றினில் அமலன் அடியிணை நீழல்
எய்துவர் தெரிந்தியான் உண்மை
சாற்றினன் இன்னுங் கணுதிபற் குவப்பாஞ்
சட்டிக விரதமற் புதமால். (10)

(iii) சஷ்டி விரதம்.

890. பருமணி யிமைக்கும் அவிரொளிச் சுடிகைப்
பாந்தள்மேற் கிடந்தமே தினியிற்
பொருவரு மனிதர் அளவிலர் நோற்றுப்
போற்றருங் கதியடைந் துய்ந்தார்

மருமலர்த் தொடையல் வித்தியுன் மாலி
மன்னன்முன் நோற்றுமெய் நோய்தீர்ந்(து)
அருள்சுடர் பாய வச்சிர தேயம்
ஆகியே யதிசய மானுன். (11)

891. கருகிநெய்த் திருண்ட மலர்க்குழல் கருங்கட்
கயல்விழிக் குமுதவாய்ச் சுணங்கு
பெருகிமுத் துரிஞ்சு முகிழ்முலைக் கிடைந்து
பெய்துறு நுசுப்புவான் மதியம்
பருகிவிட் டுமிழ்மா சுணவரை சிறுதாட்
பைந்தளிர் மெய்த்திலோத் தமை வேட்(டு)
உருகியின் புத்துள் துளைந்துமைந் தற்பெற்
றுறுசுக நுகர்ந்துவீ டடைந்தாள். (12)

892. இத்தகை விரதம் அளப்பிலர் நோற்றே
எறிமதுத் துளித்திடும் இதழிக்
கொத்தலர் தொடைநற் சடிலநா யகன்தாள்
குறுகினர் ஐங்கரன் கருணை
யுத்தம விரதம் உரைத்தனன் படிப்போர்
உவந்துகேட் போர்கள்கேட் பிப்போர்
சித்தமுள் மகிழ்போ கங்கள்துய்த் தீற்றிற்
சிவனடி நீழல்சேர் குவரால். (13)

அத்தியாயம் 37.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி

சுப்பிரமணிய விரதம்.

வேற்படை வள்ளலுக்கு உகந்த விரதங்களைக் கூறுவேன்: ஐப்பசி மாதம் பௌர்ணமியன்று முதல் வெள்ளிக்கிழமை காலையில் எழுந்து, சுத்தனாகி அறுமுகத்தண்ணலை நினைத்து, நித்திய கடன்களை முடித்து சுக்ரவார விரதத்தை நோற்கவேண்டும்: இதனுடன் கார்த்திகை விரதம், சஷ்டி விரதம். ஆக இந்த மூன்று விரதங்களையும் பத்தியுடன் நோற்பவர் போகங்களைத் துய்த்து இன்பவீடு அடைவார். இந்நோன்புகளை நோற்று (1) புல்லாங்குழலில் 5040 வகையான இசைகளை இசைக்கும் திருமாலும், பிரமன் முதலிய தேவர்

---

890. தேயம்—தேகம்; உடல்.

களும் அசுரரைவென்று களித்தனர்; (2) திக்குபாலர்கள் திக்குகளுக்கு அரசர்களாயினர்; (3) முசுகுந்தச் சக்ரவர்த்தி பகைவரைத் தடிந்து கணங்களும் தொழுகின்ற பதவியை அடைந்தார்; (4) நாரதமுநிவர் முதலியோர் நித்தத்துவம் அடைந்தார்கள். மற்றும் சிலர் மகவு, செல்வம், யோகசித்தி, ஞானசித்தி அடைந்து பேரின்ப வீட்டை அடைந்தனர். நல்லவழியில் இந்த விரதங்களை நோற்பவர் போகந்துய்த்து வீடு பெறுவர். இவ்விரத மான்மியங்களை உணர்வோர், படிப்போர், கேட்போர் போகங்களை அநுபவித்துக் கூத்தப் பெருமானது சேவடியை அடைவர்.

அத்தியாயம் 37.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி

சுப்பிரமணிய விரதம்

எழுசீர் விருத்தம்

வெள்ளிக்கிழமை விரதம்.

893. அருந்தவம் இழைக்கும் முநிவிர்! வில் உமிழ்போர்
அயில்வடி வேற்படை யண்ணல்
திருந்துளம் மகிழ மல்குமா விரதஞ்
செப்புகேன் துலையின்மா மதியின்
பொருந்திய கலைவெண் மதிவளர் திதிமுற்
புங்கவ வாரநற் காலை
யிருந்துயில் ஒருவிச் சுத்தனா யிதயத்
தெமதறு முகனையே நினைத்து. (1)

கார்த்திகை விரதம்—சஷ்டி விரதம்

894. நித்திய கருமம் புரிந்துபா வங்கள்
நீத்திடும் இவ்விர தத்தைப்
புத்தியுள் மகிழ விதிப்படி நோற்பான்
புகலருங் கார்த்திகை விரதம்
மெத்திய கந்த சட்டிகூர் விரதம்
மேவுமிம் மூவிர தமுநீள்
பத்தியிற் பரவி நோற்பவர் போகம்
பலநுகர்ந் தின்பவீ டடைவார். (2)

893. புங்கவ வாரம்—வெள்ளிக்கிழமை; புங்கவன்—குரு; (அசுரகுரு—சுக்கிரன்)

895. பச்சையற் கழையுட் டுளையயர் புறத்திற்
பவளவா யிதழ்குவித் தமைத்தே
இச்சையிற் கிளைத்த இசைகளோ ரையா
யிரத்துநாற் பதுவகை யிசைக்கும்
அச்சுதன் முளரி யயன்முத லியவிண்
ணமரர்நோற் றடற்பெருங் களத்தில்
நச்சயிற் படைவாள் அசுரரைச் சயித்து
நன்னெறி யிழைத்துகந் தனரால். (3)

896. எண்டிசைப் பாலர் இவ்விர தத்தை
யிழைத்திரு நான்குதிக் கரசு
கொண்டனர் வடிவேற் படைமுசு குந்தக்
குரிசில்செம் புலத்துமாற் றலரைத்
துண்டம தாகத் தடிந்திருங் கணங்கள்
தொழுபதம் அடைந்தனன்; மகதிப்
பண்டெரி முனிநா ரதன்முத லியர்முன்
பரவினித் தியத்துவம் அடைந்தார். (4)

897. அன்னியர் சிலர்வந் தியரிழைத் தொளிபாய்
ஆடகக் கிண்கிணி மணிக்கால்
மன்னிய புதல்வர்ப் பயந்தனர் செல்வம்
வளிபுறம் அடக்கியோ கங்கள்
உன்னரும் ஞானம் அடைந்துபே ரின்பம
ஓங்குவீ டடைந்தனர். இதிலோர்
நன்னெறி விரதம் புரிந்தவர் போகம்
நாடொறுந் துய்த்துவீ டடைவார். (5)

898. இந்தமூ விரதம் யாவனே லொருவன்
இழைத்தவன் எங்குலத் திறையாங்
கந்தவேள் அருளால் அறுமுகற் கிணையாய்க்
கருதுமிவ் விரதமான் மியங்கள்
சிந்தையி னுணர்வோன் படிப்பவன் கேட்போன்
சிறந்திடு போகமியா வையுந்துய்த்(து)
அந்தநாட் கனக மன்றினிற் குனித்த
அண்ணல்தன் சேவடி யடைவான். (6)

---

895. இசைவகையின் எண் 5040. 927-ஆம் செய்யுளையும் பார்க்க.
896. பண் தெரி முனி-நாரதன்.
897. வந்தியர்—மங்கல பாடகர்.

அத்தியாயம் 38.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி

வீரபத்திர விரதம்.

பின்னுமோர் விரதம் உண்டு; அது வீரபத்திரர்க்கு உரியது. செவ்வாய்க்கிழமையில் காலையில் எழுந்து புனிதநீரில் மூழ்கி, நித்ய கடன்களை முடித்து, வீரபத்திரர் வடிவை பொன் அல்லது வெள்ளியில் அமைத்து அபிடேகஞ் செய்து, பூவால் அருச்சித்து, அப்பம் முதலிய அறுசுவை உணவுகளை நிவேதனம் பண்ணிப் போற்றிச் சிவனடியார்களுக்கு இயன்ற பொன் முதலிய தானங்களைக் கொடுத்து வணங்கித், திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானையும் வீரபத்திரரையும் வலம் வந்து போற்றித், தானங்கள் செய்து, வீட்டுக்கு வந்து அடியார்களுடன் உண்டு, மௌனமாய்த் தியானத்துடன் இருந்து, மறுநாள் முழுகி, நித்யகடன்களை முடித்து, அடியார்களை வணங்கி, அந்த வீரபத்திர உருவை உதவி, இந்த விரதத்தை முடிப்பவர்கள் வீரவாழ்வை அடைவார்கள். இவ்விரதத்தை நோற்று (i) பிரமன் சிவபிரானுக்குத் தேர்ச் சாரதியாயினன்; (ii) இந்திரன் கற்பகவிருக்ஷத்தையும், இந்திராணியையும் பெற்று விளங்கினன்; (iii) மறையோர் சிவஞானம் பெற்றார்; (iv) அரசர்கள் செல்வத்தையும் பகைவரை அடக்கும் ஆற்றலையும் பெற்றார்கள். (v) வணிகரும் ஏனையோரும் மக்களைப் பெற்று போகங்கள் துய்த்து, ஈற்றில் வீடுபேறு உற்றனர். இந்த விரதத்தை நோற்பவர் வீரபத்திரரின் திருவருளால் ஜயத்தையும் சற்புத்திரர்களையும் அடைந்து சிவலோகம் சேர்வர். இந்த மான்மியம் படிப்பவர், கேட்பவர், கேட்பிப்பவர் செல்வமும் வீடும் அடைவர்.

அத்தியாயம் 38.

சிவவிரத மான்மியம்—தொடர்ச்சி

வீரபத்திர விரதம்

எழுசீர் விருத்தம்.

899. மாயிரு ஞாலத் திவ்விர தங்கள்
மகிழ்ந்துநோற் கின்றவர் அனந்தம்
ஆயபோ கங்கள் அனைத்தையும் அருந்தி
அந்தத்தில் இன்பவீ டடைவார்—
தூயவந் நியம விரதமோர்ந் துரைக்கேன்
சோதியாம் வீரபத் திரற்கு
நேயமாஞ் செவ்வாய் மல்கிருட் கணங்கள்
நீந்திடுங் காலையில் எழுந்தே. (1)

900. மறையவன் புனித மாதினீர் மூழ்கி
மகிழ்ந்துகா லையிற்கடன் கழித்தே
யிறையெனும் வீர பத்திரன் வடிவை
யிரணியத் தாலிர சதத்தாற்
குறைவற அமைத்த விடேகமா கியபூங்
கொத்தல ராலருச் சித்து
நிறையமு தபூபம் அறுசுவை யுடனே
நிவேதனம் பண்ணியேத் திசைத்தே. (2)

901. பொன்னவிர் இதழிச் சடிலநா யகனைப்
போற்றுநல் லடியவர்க் கியன்ற
சொன்னமா திகள்தா னங்கொடுத் திறைஞ்சிச்
சோதியா லயந்தனிற் குறுகிக்
கன்னல்வில் வேளை யெரித்தநா யகனைக்
கனைகழல் வீரபத் திரனைப்
பன்னருஞ் சிறப்பாய் வலஞ்செய்து வணங்கிப்
பரிந்துநற் பொருள்வழங் கியபின். (3)

902. தனதுமா டத்து வதிந்தரன் அடியார்
தம்முடன் அருந்திமோ னமதாய்
நினைவுடன் உறைந்து மற்றைநாள் மூழ்கி
நியதிகள் புரிந்துமெய் யடியார்
நனைமலர்ச் சரணம் ஏத்தியவ் வடிவை
நன்குற வுதவியிப் படியே
புனைமலர் வீர பத்திரன் விரதம்
போற்றினர் வீரவாழ் வடைவார். (4)

903. பங்கய மலர்ப்பொற் பொகுட்டிறை விரதம்
பரிந்துநோற் றரவரை யசைத்த
அங்கணற் கிரதங் கடவவே சூத
னயினன் ; குலிசவெம் படையோன்
கொங்கவிழ் மலர்சேர் கற்பகத் தருவுங்
குமுதவாய் இந்திரா ணியும்பெற்(று)
எங்கணும் புகழ இருந்தனன் ; மறையோர்
இருஞ்சிவ ஞானமெய் தினரால். (5)

---

900. மறையவன் புனிதமாது—கங்கை ; மறையவன்—சிவன்.

903. சூதன்—தேர்ப்பாகன்.

904. விடவர மணிச்சூட் டுலகினைப் பரிக்கும்
வேந்தர்கள் செல்வமும் ஒன்னார்
அடலினிற் செயித்த விசயமும் பெற்றார்;
அரும்பொருள் நாய்கர்பின் னவர்கள்
புடவியில் இந்த விரதநோற் றனந்தம்
புதல்வரைப் பயந்தரும் போகம்
உடனருந் தியபின் ஈற்றினில் மீள
உம்பர்வீ டடைந்தனர் மாதோ. (6)

905. இந்தநல் விரத மியாவர்நோற் கின்றோர்
எறிபடை வீரபத் திரன்தான்
தந்தருள் கருணை யால்விச யமுநற்
றனையரும் அடைந்துசங் கரன்சேர்
மந்திரம் அடைவர் இந்தவத் தியாய
மான்மியம் படிப்பவர் கேட்போர்
சிந்தையுண் மகிழ வந்துகேட் பிப்போர்
செல்வமும் வீடுமே யடைவார். (7)

அத்தியாயம் 39.

சிவதரும மான்மியம்.

சிவன், உமை, முருகவேள், விநாயகர், சிவகணநாதர்கள், சாலோக பதவி அடைந்தவர்கள் ஆகியோர்க்கு ஆபரணம், மண்டபம், செம்பொன், திருக்கோயில் அமைத்தல், பொன், வெள்ளி, செம்பு கல்லால் சிவபெருமானது திருவுருவம் அமைத்து, அதற்கு அபிஷேகம், அலங்காரம், மாலை, ஆடை, கந்தம், அன்னம், தீபம் முதலிய உபசாரங்கள் செய்து, உருத்திர கணிகையர், ஓதுவார், நந்தவனம், கிணறு, ஓடை, மரங்கள், தேர், வாகனங்கள் முதலிய ஏற்பாடுகள் செய்தல், திருவிழா நடத்தல், பழங்கோயில்களைப் புதுப்பித்தல், திருக்கோயிலை வலம் வருதல், வந்தித்தல், சிவபூஜை செய்யும் ஆசாரியருக்கு வீடு, பொருள், நெல் அளித்தல் முதலிய சிவபுண்ணியங்களைச் செய்க.

---

904. பின்னவர்கள்—நாலாம் வருணத்தினர்

905. மந்திரம்—இடம்.

குருவை வலம் வந்து சோம்பலின்றி அவர்க்குப் பணிவிடை செய்க; அடுத்த பத்தர்களுக்கு இடம், பொருள், கல்வி, சிவபுராணம், ருத்ராக்ஷம், திருநீறு, சிவலிங்கம், ஆபரணம், நெல், அன்னம் முதலியன அளித்திடுக; அடியார்கள் வந்தால் அவரை முகமலர்ந்து வரவேற்று, உபசாரமொழிகள் கூறுக; ஈசனது திருவுருவம் கொண்டுவரும் ஆசிரியரிடமும், அடியார்களிடம் பத்திபுரிபவரிடமும் தவறு செய்தல் கூடாது; மனம், வாக்கு, காயம் முதலியவற்றாலும் பொருளாலும் சிதமும் அவர்களுக்கு உதவுக. இவை சிவபுண்ணியமாம். இத்தகைய சிவபுண்ணியங்களை அநுட்டிப்போர் வஜ்ரதேகத்துடன் போகங்கள் அநுபவித்து, மணிவிமானத்தில் சிவலோகம் அடைந்து ஆயிரகோடி கற்ப காலம் சுகித்துப் பின் வீடுபேறு பெறுவர்.

அடியார் இலக்கணம்.

இங்ஙனம் சூதமுனிவர் கூற, முனிவர்கள் பத்தர்களுடைய இலக்கணம் எது என்று கேட்கச் சூதமுனிவர் கூறுகின்றார்:—தேவர், அசுரர், அரக்கர், இயக்கர் கந்தருவர், நாகர், முனிவர், நரர் (அந்தணர், அரசர், வைசியர், நாலாம் வருணத்தவர், கலப்பு ஜாதியர்) ஆகிய எவ்வகையருள்ளும் அடியார்கள் உண்டு. அடியார்களுக்குள் வருணாச்சிரம பேதம் கிடையாது; யாவரும் மகேசுரர்-அவர்கள் வருணாசிரம தருமத்தைக் கடந்தவர்கள் என்று மறைகள் கூறும். அடியார்களது அகத்துள் விளங்கும் 'இலக்கணம் மூன்று—அவைதாம் (i) மானத ஜெபம், (ii) மானத சிவபூஜை (iii) உள்ளத்தே பரம்பொருள் தோற்றமளித்தல். புறத்தே தோன்றும் இலக்கணம் பத்து அவைதாம்:— (1) கண்டம் தழுதழுத்தல், (2) நா அசைதல் (3) இதழ் துடித்தல் (4) நடுக்கமுறல் (5) மயிர் பொடித்தல் (6) அங்கம் வெதும்பி வியர்த்தல் (7) தள்ளாடி வீழ்தல் (8) கண்ணீர் பிலிற்றல் (9) கலுழ்ந்து இரங்கல் (10) ஆர்வத்தால் பரவசப் படுதல்.' இத்தகைய அடியார்கள் புண்ணியர்கள்; வீடுபேறு பெறுவார்கள்;

திருநீறும் கண்டிகையும் புனைந்தவர்களிடம் மேற்சொன்ன இலக்கணங்கள் இல்லாவிடினும், அவர்களைக் கண்டால் அவர்களை வீழ்ந்து வணங்கி உபசார மொழிகளைக் கூறவேண்டும். சிவாசாரியர்களையும் சிவனடியர்களையும் பணிந்தேத்துபவர் யாராயிருந்தாலும் நோயற்று மக்களுடன் உலகில் பல்லாண்டு வாழ்வர்; சகல தேவர்களாலும் உபசரிக்கப்பட்டு சிவலோகம் மருவி ஈற்றில் சிவனடி கூடுவர். சிவபுண்ணியத்தின் மேன்மை யெல்லாம் தேவிக்குச் சிவபிரான் முன்னம் கூறினர். அதிபக்குவர்க்கே சிவபுண்ணியத்தின் மேன்மையைக் கூறலாகும். சிவபிரான் தேவியின் பொருட்டு உரைத்தது இது என்றால் தமியேனாற் கூற முடியுமோ?

அத்தியாயம் 39.

சிவதரும மான்மியம்

அறுசீர் விருத்தம்.

906. அருமறைதேர்ந் திடுமுநிவீர்! இத்தகைய
விரதமெலாம் அறைந்தேன் இப்போ(து)
ஒருமையுடன் எல்லீருங் கேண்மின்கள்
சிவதருமம் உரைக்கின் றேனல்
பெருமைதிகழ் சிவலிங்கஞ் சிவயோகம்
உமையெற்குப் பேறு நல்குங்
குருபரனைங் கரன்கணு தியர்மற்றோர்
சாலோகங் குறுகி ஞர்கள். (1)

907. இத்தகையோர்க் காபரணம் மண்டபங்கள்
கொடுங்கைகதிர் எறிக்குஞ் செம்பொன்
முத்தமணி யழுத்துசிக ராதியநே
கங்கோயில் முழுதுந் தேர்ந்து
சித்தமுடன் பொருள்குறைகாட் டாதெடுக்கப்
பொன்வெள்ளி செம்பு கல்லாற்
பத்தியுடன் கண்ணுதலோன் திருவுருவ
மாதிவிதிப் படியே செய்வான். (2)

908. செய்யநறு நீராதி யபிடேகம்
அலங்காரந் தெரியல் ஆடை
துய்யகந்தம் அன்னமிருஞ் சுடருபசா
ரஞ்செய்து துவர்வாய்க் கன்னி
மையறுஞ்சொற் கலைவல்லார் ஆராமங்
கிணறோடை மரங்கள் பொற்றேர்
மெய்யிலகு வாகனங்கள் பொருள்சிறக்கச்
செயுந்திருநாள் விமலர்க் காற்றி. (3)

909. பழுதியஆ லயமீளப் பண்டுபோல்
ஈசனுக்குப் பரிந்து செய்க
விழைவுடனங் கணன்கோயில் வலஞ்செயல்வந்
தித்தல்மடி மேவா தென்றும்

---

908. தெரியல்—மாலை, ஆராமம்-நந்தவனம்.

909. மடி—சோம்பல் ; கிலை—இருப்பிடம்

அழகுறவே செய்கவிவை யாதிசிவ
புண்ணியங்கள் அனைத்துஞ் செய்வான்
மழவிடையோன் தனைப்பூசை செயுங்குரவ
னிலைநீதி மணிநெல் லீவான். (4)

910. மூலமல மாதியவாம் மலமகற்ற
வுருக்கொணர்ந்து முதல்வ னாகிக்
காலமிஃ தென்றறிந்து வந்தருளுந்
தனதுகுருக் கண்ணுற் றன்ற
சீலமுடன் அஞ்சிவலஞ் செய்துகுரு
வின்கருமஞ் சிறிதுஞ் சோம்பா(து)
ஏல இழைத் திடுவான்தன் அடியார்க்கு
முறையுளெடுத் தீக மாதோ. (5)

911. பின்னருமில் லுபகரணம் அனைத்தையுநல்
கிக்கலைகள் பெரிதும் ஈந்து
பொன்னவிரும் இதழ் கடுக்கை யண்ணல் புரா
ணங்கள்கண்டி புனித நீறு
பன்னருஞ்சீர் புண்ணியமாஞ் சிவலிங்கம்
அவிர்மணியா பரணஞ் சாலி
யின்னமிவை பத்திமல்க அளித்திடுக
பத்தர்பொருட் டறிந்து போற்றி. (6)

912. பையரவம் அரைக்கசைத்த அண்ணலடி
யார்தன்பாற் பரிந்து வந்தாற்
செய்யபொற்றாள் மலர்கண்டு கண்டவுடன்
எழுந்தெதிரே சென்று போற்றி
வையமிசைச் சிற்றடியேன் உய்யஅருள்
கொடுவந்த வள்ளலே! என்(று)
உய்யமுக மன்கூறி யிப்படியே
பலவிதத்தால் உவந்து செய்வான், (7)

913. திருவுருவங் கொணர்ந்துவரும் ஆசிரியர்
அடியவர்க்குத் தெருண்ட பத்தி
பொருவறவே செய்தவர்கள் காரியங்கட்
கிடர்சிறிது புந்தி யாலும்

---

910. கொணர்ந்து—கொண்டு

911. இல்—மனை

மருவவிழைத் திடக்கடவ னன்றுமனத்
தாலுமிகு வாக்கி னாலும்
உருவமதி னாலுமரும் பொருளாலும்
நித்தியமும் உதவி செய்வான். (8)

914. புரமெரிய நகைத்தசிவன் பொருட்டு மகிழ்
சற்குருவின் பொருட்டு மும்மை
வரமுணர வருசிவபுண் ணியஞ் செய்வோர்
பொருட்டுநிதி மற்றும் ஈதல்
பரகதிநல் கிடுஞ்சிவபுண் ணியங்களிவை
யென்றுமெய்ம்மை பகர்ந்தார்; நாளும்
இரவுபகல் ஒருவிடநின் றறிதூங்கு
முநிவீர்கள்! இறைவர் தாமே. (9)

915. இச்சிவபுண் ணியங்களைத்தேர்ந் தியாவரா
கிலுஞ்செய்தோர் எறிநீர்ப் பாரில்
வச்சிரமெய் கொணர்ந்தரும்போ கங்களெலாம்
மைந்தரவர் மைந்த ரோடு
நச்சிமகிழ்ந் தருந்திமணி மானத்திற்
சிவலோகம் நண்ணித் தண்டா
இச்சையிலா யிரகோடி கற்பமினி
திருந்துபின்வீ டெய்து வாரால். (10)

916. என்றுரைத்த சூதன்மொழி முநிவரர்கேட்
டையமுளத் தெய்திப் பத்தர்க்(கு)
ஒன்றுமிலக் கணமேதென் றுதரத்திற்
கேட்டனரீ ரொன்பான் பேதந்
தொன்று தொடர் புராணமெலாங் கரைகண்ட
சூதனவர் சொற்கேட் டம்பொற்
குன்றமணிச் சிலையீசன் அடியரிலக்
கண மெடுத்துக் கூற லுற்றான். (11)

---

914. **இறைவர் மெய்ம்மை பகர்ந்தார்—எனக் கூட்டுக. நாளும்...முநிவீர்கள் —விளி. அறி தூங்கும்—அறி துயில் கொள்ளும்.**

அடியாரிலக்கணம்

917. அரியசிவ பத்தர்சிலர் இமையவரில்
அசுரர்களில் அரக்கர் தம்மில்
கரிய இயக் கரில்வீணைக் கந்திருவ
ரிற்பிலநா கரில்வே தாந்தம்
உரிய முநி வரில்நரரில் அந்தணரில்
மனரிலயன் உருவிற் சேரப்
பெரியவரிற் பின்னவரிற் சங்கரரில்
அநேகருண்டு பேசில் அம்மா. (12)

918. இத்தகையோர் தமக்குவரு ணாச்சிரமத்
தொழில்சிறிதும் இல்லை யீசன்
சுத்தசிவ வுருவமா னவர்களனை
வருமாயேச் சுரர்க ளாமால்
சித்த மகி முநிவருணாச் சிரமரென்றே
மறைகளெலாஞ் செப்பும் அன்னோர்க்(கு)
உத்தமமாம் இலக்கணமீ ரைந்து புறம்
பாயுள்ள துரைக்கின் மாதோ. (13)

919. சுந்தரர்க்காய்ப்பரவை முன்றில் தூதுநடந்
தருள்குழகன் தொண்டர்க் கெல்லாம்
அந்தரமாம் இலக்கண மூன் றவைகளின்மா
னதசெபமே யாதி யாகும்
சிந்தைசெய்மா னதத்தியற்றுஞ் சிவபூசை
யோரிரண்டாஞ் தேர்ந்து நேடும்
புந்திமகிழ் பிரமம்வெளிப் படன்மூன்றுஞ்
சின்னமிவை புனிதம் ஆமால். (14)

920. இந்த இலக் கணமூன்றும் முன்னுணர்ந்த
முநிவர்களால் இயம்பப் பட்ட(து)
அந்தரமாம். இவைகளிலியா தொருவருக்கெப்
போதுண்டாம் அப்போ தற்று

---

917. மனர்—மன்னர் (க்ஷத்திரியர்); அயன் உருவிற் சேர் அப்பெரியவர்—அயன் ஊருவில் (தொடையில்) தோன்றிய வைசியர். பின்னவர்—காலாம் வருணத்தவர். சங்கரர்—கலப்பு ஜாதியர்.

919. அந்தரம்—உள்ளிடம்; ஆதி—முதல்; ஓர் இரண்டாம்—ஓர்ந்து உணரும் இரண்டாவதாம்.

வந்திடுமெய் யிற்புறம்பாய் தோற்றுமிலக்
　　கணம்பத்து வழங்கும் பாசத்
தொந்தவினை யனைத்துமொரிஇச் சித்தாந்தந்
　　தெளிந்துணர்ந்த தொண்டர் ஆமால். (15)

921. கண்டமிசை தழுதழுத்தல் நாவசைதல்
　　இதழ்துடித்தல் கம்ப மாதல்
விண்டுமயிர் பொடித்தலங்கம் வெதும்பியே
　　விதிர்விதிர்த்து வெயர்த்தல் நில்லா(து)
எண்டிசைதள் ளாடிவிழல் விழிகண்ணீர்
　　பிலிற்றல்கலுழ்ந் திரங்கல் ஆர்வங்
கொண்டுபர வசப்படுதல் இவைபத்தும்
　　அடியார்க்குக் குறிகள் அம்மா. (16)

922. இத்தகைய இலக்கணங்கள் புறம்பத்தும்
　　உள்ளத்தில் இயற்று மூன்று
முத்தலைவேற் படையண்ணல் எடுத்துரைக்கப்
　　பட்டஇவை முற்று முள்ளோர்
சித்துணரும் பெரியோர்கள் அவரேசங்
　　கரனடியார் சிறந்து லோகம்
அத்தனைக்கும் மேதகுசீர்ப் பவித்திரரா
　　வார்வீடும் அடைவர் அம்மா. (17)

923. அன்றியும்வெண் ணீறுகண்டி யணிந்தவர்கள்
　　சிவபத்த ரவர்கள் தம்பால்
ஒன்றுமிலக் கணமுன்னர் உரைத்ததிலா
　　விடினுமவர் உற்ற போது
சென்றெதிர் போய் விழிகளிப்பத் தெரிசித்துப்
　　பத்தியினுற் செம்பொற் பாதம்
முன்றிகழப் புவிவீழ்ந்து முறைபணிந்து
　　சிலமுகமன் மொழிக மாதோ. (18)

---

921. அடியார்க்கு உரிய பத்து இலக்கணம்: "பத்துக்கொலாமடியார் செய்கைதானே" (அப்-தேவா iv—18—10) 'பத்துடையீர் ஈசன் பழஅடியீர்' (திருவாச—திருவெம்); 'தொண்டர் மெய்யிற்றுலக்கு மிலக்கணம் உண்டோர் பத்து" (உபதே. கோனேரி-சிவபுண் .25)

924. விரிதிரைப்பார் மிசையாவ ராகிலுமிப்
படிச்சிவனை விமல னாகும்
அரியகுர வனையீசன் அடியரையேத்
தினர்பணிந்தோர் அளப்பில் போகம்
பிரிவறவாழ் தனயருடன் பேரருடன்
அருந்தியரும் பிணிதீர்ந் தாற்ற
லுரியவுரு வங்கொணர்ந்திவ் வுலகினெடுங்
காலமிருந் துவந்த பின்னர், (19)

925. பைம்பொனவை மணியொளிசேர் மானமிசை
யேறிவெயிற் பருதி லோகத்(து)
உம்பருடன் மதிக்கடவுள் உலகத்தோ
ருடன்மற்றும் உம்ப ரோடுங்
கும்பகட தடவிகட கவுட்டவளக்
களிற்றில்வருங் குலிச னாதி
பம்புதிசைக் கடவுளர்க ளொடுங்கலுழி
மதுத்துளிக்கும் பதும னோடும், (20)

926. தண்டுளவ மலர்ப்படலை மணிப்புயத்தோ
னெடுமுனிவர் தங்க ளோடுங்
கொண்டபெரு வியப்பினவர் முன்னடக்க
எத்திசைக்குங் குறுகித் தண்டா
மண்டுமொலி சூரமரர் துந்துபிகள்
கறங்கநனை மன்றல் வீசுந்
தண்டருவின் மலர்மாரி பொழிதரவிண்
ணரம்பையர்தாண் டவந டிக்க, (21)

927. கின்னரர்கிம் புருடர்விபஞ் சிகமெடுத்துக்
குரல்குரலாய்க் கிளைத்த கானம்
பன்னருமேழ் சுரத்திலையா யிரத்தொடெண்ணாந்
தாதியாய்ப் பகர்ந்த பேதத்(து)
உன்னருஞ்சங் கீதமெலாம் என்புருகத்
தெளிந்தோத ஓங்கு சோதி
மன்னியதிப் பியவுருவாக் கண்ணுதல்வாழ்
சிவலோகம் மருவி யம்மா. (22)

---

927. விபஞ்சிகம்—வீணை; சங்கீதவகை 5040. 895-ஆம் செய்யுளைப்பார்க்க.

928. அந்தகனை மார்க்கண்டற் காகவுதைத்
தருள்குழகன் அயற்சா ரூபம்
புந்திமகிழ்ந் தெடுத்தீற்றில் எங்கோன்பா
தாரவிந்தம் பொருந்தா நின்றார்
பந்தமறு முனிவீர்! என் றூற்சிவபுண்
ணியமேன்மை பகரற் பாற்றோ ?
இந்துநுதற் றேவிசிவ புண்ணியமீ
சன்முன்னர் இயம்பக் கேளா, (23)

929. ஆதரமீ தூரவியந் ததிசயப்பட்
டொல்லைமணி யாச னத்தின்
மீதெழுந்து மூவலஞ்செய் திறைஞ்சியெங்கோ
வே! யுலகர் விமல மாமுன்
பாதமல ரேகதியென் றிச்சிவபுண்
ணியந்தன்னூற் பகுத்த றிந்து
காதலுற வுனதுபே ரின்பவெள்ளத்
துட்படியக் கடவர் மாதோ; (24)

930. என்றுகரு ணாலயஅம் பிகைசொல்முனங்
கண்ணுதல்கேட் டெழிலி வார்ந்து
மன்றல்கமழ் மலர்க்குழலாய்! உத்தமத்தில்
உத்தமமாய் மரீஇ வரங்கள்
வென்றிபெறத் தருமெமது புண்ணியங்கள்
உலகோரால் வியந்து ணர்ந்தே
ஒன்றஅறி குவதரிது பலபசுபுண்
ணியம்புரிந்துள் உவந்து தேர்ந்தே, (25)

931. மாயிருஞா லத்தளப்ப அரியபசு
புண்ணியங்கள் வரையா துள்ளம்
நேயமொடு தேர்ந்திழைத்தான் மாப்புனித
மாய்த்துலையி னேரா யீட்டி
யாயவினை யோரிரண்டொத் தாய்ந்ததிபக்
குவராகும் அறிஞர் தம்மால்
தூயசிவ புண்ணியஞ்சாற் றிடவுறும்அன்
னியர்க்கெங்கே சொலுதற் கம்மா. (26)

---

930. எழிலி—மேகம்

931. சாற்றிடஉறும்—சாற்றிடத் தகும்.

932. அந்தணீர்! உண்மைசொல்கே ளுகையினுல்
எப்படியும் அளப்பில் காலம்
புந்திமகிழ்ந் தெண்ணில்பசு புண்ணியமெல்
லாம் புரிந்தாற் புனித மாக
வந்தசிவ புண்ணியத்தின் மனமுண்டாம்
அன்றியே வராதென் றீசன்
சுந்தரிதன் பொருட்டுரைக்கப் பட்டதிரு
தமியேன்தான் சொல்லற் பாற்றே. (27)

அத்தியாயம் 40.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி.

சிவ புண்ணிய மான்மியம் ஒரு சிறிது புகல்கின்றேன்.

நான்கு அரசகுமாரர்களின் கதை.

கோசல நாட்டு அரசன் அரேசனுக்கு நான்கு பெண்கள் இருந்தார்கள். அப்பெண்களின் சுயம்வரத்தில் நிடததேச மன்னன் மயேந்திரனை முதற் பெண்ணும் காம்பு தேச மன்னன் சானந்தனை இரண்டாம் பெண்ணும், காம்போச மன்னன் சுமாலியை மூன்றும் பெண்ணும், கொங்கண தேச மன்னன் விசாலாக்ஷனை நான்காம் பெண்ணும் மணந்தார்கள். அரேசன் நிதிகளையும் சதுரங்க சேனைகளையும் இவர்களுக்குப் பரிசளித்தான். இவர்கள் நகரின் புறத்தே தங்கியிருந்த பொழுது அங்கு கவுசிக முனிவர் வந்தார். அவரை இந்தக் குமரர்கள் கவனியாததால் அவர் பெருங்கோபம் கொண்டு, "ஏ! குமாரர்களே, நீங்கள் எம்மைக் கண்டு ஆதரவுடன் வரவேற்கவுமில்லை; யாம் சொன்ன மொழிகள் உங்கள் காதுகளில் விழவுமில்லை; அதனுல் நீங்கள் நால்வரும் உடனே அழகிழந்து குருடும், செவிடும் ஆகக்கடவீர்கள்; காட்டில் அலையக்கடவீர்கள்; உங்களுக்கு இனி மகவுமில்லை, ஊரும் இல்லை; மனைவியருடன் போகமும் இல்லை; அப்படி அவர்களுடன் கலவி செய்தால் உங்கள் தலை சிதறி வீழும்" என நால்வரையும் சபித்துப் போனுர். உடனே அவர்கள் அழகு இழந்து குருடும் செவிடும் ஆயினர். முனிவர் சாபத்தால் அவர்களது சேனைகளும் பொருள்களும் பொடிபட்டு நீருயின. மனைவியர் வழி காட்டக் காட்டில் காய் கிழங்குகளை உண்டு நால்வரும் அலைந்தனர். அப்போது அங்கே அகத்திய முனிவர் எதிர்ப்பட்டார். உடனே மனைவியருடன் அந்நால்வரும் அவர் பாதத்தில் வீழ்ந்து தங்களது வரலாற்றை மொழிந்து தாங்களே எங்களுக்குக் கதி' என்று அரற்றினர். அகத்தியர் இரங்கிச் சிவ புண்ணியச் செயல் ஒன்றே உங்கள் துயரை நீக்கவல்லது; இதற்கொரு கதை கூறுகின்றேன், கேளுங்கள் என்றுர்.

சாதாரணன் கதை.

(அகத்தியர் கூறுவது)

சேமாநகரத்தில் சாதாரணன் என்னும் அரசன் தன்மனைவியுடன் களித்திருந்த சமயத்தில் வசிட்டமுநிவர்வந்தார். அவர் சற்றுநேரம் காத்திருந்த பின்னர் அரசன் வந்து அவரை வணங்கிநின்றான். வசிட்டர் "மன்னா! உன் வாயிலில் என்னைக் காக்கவைத்தாய்; அதனால் நீ காட்டில் மனைவியுடன் திரியக் கடவை; இந்த நகரில் உள்ள மக்கள் யாவரும் புள்ளும் விலங்கும் ஆகக் கடவர்கள். மாடமாளிகைகள் உள்ள இந்நகரம் பெருங்கானகம் ஆகக் கடவது" எனச் சபித்துச்சென்றார். அங்ஙனமே எல்லாம் ஆயிற்று. அப்போது திரணவிந்து முநிவர் வர அவர் இவர்கள் வரலாற்றையறிந்து "நீங்கள் எத்தகைய துன்பத்தையும் விரைவில் நீக்க வல்ல சிவபுண்ணியத்தைச் செய்யுங்கள்; அருகில் உள்ள பிரமேச்சரத்துக்குச் சென்று அங்கே சிவாலயத்தில் உள்ள புல், கொடிகளைச் செதுக்கி நீக்கி, இறைவனை வலம்வந்து வணங்குங்கள்." எனக் கூறிச் சென்றார். அரசனும் அவன்மனைவியும் அவர்சொன்னபடியே தொண்டு செய்தனர். இங்ஙனம் பதினொரு நாள் செய்தபின்னர், அவர்களது அழிந்த நகரம் செழுவிய நகரமாயிற்று; புள்ளும் விலங்கும் மனிதர்களாயின; அரசன் மனைவியுடன் பழையநிலையைப்பெற்று நகரத்துக்குத் திரும்பிவந்து முன்போல ஆண்டு சிவபுண்ணியங்களை விரிவாகச்செய்து ஈற்றில் சிவனது திருவடியை அடைந்தான்—என இக்கதையை அகத்தியர் கூறி "நீங்களும் சிவ புண்ணியச்செயல்களைச் செய்து சித்தியையும் முத்தியையும் அடையுங்கள்" என்றார். அப்போது அவர்கள் "முநிவரே! நாங்கள் எந்த சிவபுண்ணியச் செயலைச் செய்வதென்று தாங்களே உரைத்தருள வேண்டும்" எனக்கேட்டு வணங்கினர். அப்பொழுது அங்கே அமுதேசருக்குப் பூஜை செய்யும் அன்பரான சிவாசாரியர் வர, அகத்தியர் அவரைப் பார்த்து "புட்பகிரிக் குலத்தில் தோன்றிய சிவாசாரியரே! இரவும், பகலும் இடர் உறும் இவர்களை நீங்கள் அடிமை கொண்டு இவர்கள் அமுதேசரது திருச்சந்நிதியில் தொண்டு செய்யுமாறு செய்வித்து இவர்களைக் கரையேற்றுங்கள்" எனக்கூறிச்சென்றார். எண்மரும் சிவாசாரியரை வணங்கி நிற்க, அவர் "அஞ்சுதல் வேண்டாம்; இறைவன் அடியார்க் கெளியன்; உங்கள் துயரைத்தீர்த்தருளுவன்" எனக்கூறி ஒரு சரித்திரத்தை அவர்களுக்கு எடுத்து உரைத்தார்.

முற்கலன் கதை

(சிவாசாரியர்கூறுவது)

முன்பு ஒருநாள் காசிப முநிவரின் மாணாக்கனாகிய முற்கலன் என்னும் அந்தணன் அவர் முன்னிலையிற் சாத்திரங்களைப் படிக்கும் பொழுது அவன் வாய் எச்சில் சிதறி முநிவர் மேல்விழ, அவர் வெகுண்டு 'நீ எருமைக்கடா ஆகக்கடவை' எனச் சபித்தார். அவனும் எருமை ஆயினன். ஒருநாள் அந்த

எருமை சத்தீச்சுரம் திருக்கோயிலை மும்முறை வலம் வந்து பசும் புல்லையும் மதிற்சுவரில் முளைத்திருந்த புல்லின் தொகுதிகளையும் ஒருசேரத்தின்று கொடி மரத்துக்கு அருகில் வந்தது; அப்போது இறைவனது தரிசனம் அதற்குக் கிடைத்தது. உடனே சாபம் நீங்கிப் பழைய உருவைப்பெற்றது. கண்டவர்கள் அதிசயித்தார்கள். சிவபுண்ணியத்தின்பெருமை இத்தகையது. வலம்வந்ததா லும், மதிற்சுவரில் முளைத்திருந்த புல்லைத்தின்று நீக்கியதாலும் எருமைக்குப் பேறு கிடைத்தது; ஆதலால் நீங்கள் சிவபுண்ணிச்செயல்களைச் செய்யுங்கள் என்று சிவாசாரியர் கூற "நாங்கள் என்ன தொண்டு செய்வது என்று தாங் களே உரைத்தருள வேண்டும்" என விநயத்துடன் எண்மரும் கேட்கச் சிவாசா ரியர் 'நீங்கள் ஆண்கள். நால்வரும் சோம்பலின்றி அமுதேசரை வலம்வந்து மகிழ்மின்கள்; பெண்களுள் ஒருத்தி திருக்கோயிலைப் பெருக்கி மெழுகுதல் வேண்டும்; ஒருத்தி ஈசனுக்கு அபிஷேகத்துக்குச் சுத்த நீர் கொண்டு வர வேண்டும்; ஒருத்தி நந்தவனத்திலிருந்து மலர் கொண்டுவரவேண்டும்; ஒருத்தி பழம், கிழங்குகள் நிவேதனத்துக்குக் கொண்டு வரவேண்டும்; இத்தொண்டைத் தினந்தோறும் செய்து ஈசனை வழிபடவேண்டும்' எனக் கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் இருபத்தொருநாள் தொண்டுசெய்தார் கள்; இருபத்திரண்டாம் நாள் குருடும் செவிடும் நீங்கிற்று; மிக்கமகிழ்ச்சியுடன் பலகால் வலம் வந்தார்கள்; எட்டு நாள்களுக்குப்பின் அவர்களது அழிந்து போன சேனைகளும் பொருளும் முன்போலத் தோன்றி விளங்கின; குமரர்கள் நால்வரும் பழைய அழகிய உருவத்தைப் பெற்றனர். எண்மரும் சிவாசாரியர் தாளில் வீழ்ந்து "தங்களால் நாங்கள் சாபத்தினின்றும் விடுபட்டோம்" எனக் கூறி வணங்கினர். சிவமறையோரும் "சிவ புண்ணியப்பலனால் நீங்கள் குருடு, செவிடு நீங்கப்பெற்றீர்கள்; உங்கள் பொருளையும் மீண்டு அடையப் பெற்றீர்கள் என்றும் சிவபுண்ணியச் செயலைச் செய்து வாழுங்கள்" என ஆசி கூறினர். எண்மரும் பின்னர் அமுதேசரைத் துதித்து அபிடேகமாதிய செய்வித்து, ஆலயத்தைச் சுற்றி இருந்த காட்டை அழித்து அந்த சிவாசாரியர் பெயரால் ஒரு நகரத்தையும் ஏற்படுத்தி ஆலயத்தைப் புதுப்பித்துக் கோபுரம், தேர் ஆதிய அமைத்துச் சிவாசாரியருக்கு நிதியும் அளித்தார்கள். சிவபுண்ணி யம் பல செய்து மனைவியர்களுடன் மகிழ்ந்து நல்மக்களைப் பெற்று வாழ்ந் தார்கள். அப்போது துருவாசமுனிவர் அங்கு வர அவரை நால்வரும் வணங்கி "அண்ணலே! எங்களுக்குச் செவிடு, குருடு ஆகும்படியான ஊழ்வினை ஏன் வந்தது" என வினவ, அவர் இந் நால்வரது முற்பிறப்பின் வரலாற்றை ஞானத்தால் ஆய்ந்து—

அரச குமாரர்களின் பழைய வரலாறு.

"யவன தேசத்தில் ஆதித்ய நகரத்தில் ஒருவன் உங்களிடம் வந்து சிவா லயம் கட்டுதற்கு நிதிவேண்டுமெனக் கேட்டான். நீங்கள் நிதி தருகின்றோம் என்ப் பொய் மொழி புகன்றீர்கள். நாளை ஆகட்டும், நாளை ஆகட்டும் என்று

அவனைப் பார்க்காமலும் அவன் சொல்வதைக் கேட்காமலும், அவனை வருத்தினீர்கள். அவனும் மனஞ்சலித்து நின்று விட்டான். நீங்கள். கடல் யாத்திரையில் கப்பல் கவிழ்ந்து இறந்தீர்கள். நரகில் மிக்க தண்டனை அடைந்தீர்கள். சிவபுண்ணியத்துக்கு நிதி தருகின்றேன் எனப் பொய் மொழியாவது புகன்ற புண்ணியத்தால் அரசகுமாரர்களாயினீர்கள்; நிதி கொடாத காரணததால் உங்கள் செல்வமெல்லாம் ஒரு நொடியில் நீறாயின; வந்தவனைப் பாராமலும் அவன் சொன்னதைக் கேளாமலும் இருந்த காரணத்தால் குருடும் செவிடும் ஆனீர்கள். அமுதேசரது கருணையால் நல்ல பார்வையையும் வெகு தூரம் கேட்கும் செவிகளையும் பெற்றீர்கள்; அரசாட்சியையும் மீள அடைந்தீர்கள்" எனக் கூறிமுடிக்க அரசகுமாரர்கள் அவர் தாளில் வணங்கி அவரை வழி விட்டனுப்பினார்கள்.

அத்தியாயம் 40.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

அறுசீர் விருத்தம்.

933. நட்டுந் தவத்தாற் பரஞ்சுடர்கண்
டிரண்டற் றொன்று யிருந்துகதி
காட்டுந் துறவீர்! ஒருமையுடன்
களிமீ தூர எல்லீருங்
கேட்டின் புற ஆ கமஞ்சுருதி
கிளக்குஞ் சிவபுண் ணியத்திலருள்
பூட்டுந் தனிமான் மியஞ் சிறிது
புகலா நின்றேன் புரையகன்றே. (1)

நான்கு அரசகுமாரர்களின் கதை.

[934—960, 973—979, 985—999.]

934. மங்கைப் பருவக் கிளிமொழியார்
மறுகு தொறும்பந் தெறிந்தடித்துக்
கொங்கைக் கிரியில் திமிர்ந்துகுத்த
குளிர்ச்சந் தகில்குங் குமங்களபம்
பங்கப் பழனம் எனஇளைஞர்
படர்ந்து வழுக்கி விழுநகைத்துச்
செங்கைத் தலங்கள் புடைத்தகத்திற்
செறிவர் திகழ்கோ சலநாடே. (2)

---

933. புரை—குற்றம்

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras

935. அன்ன வளங்கூர் தேசவர
சாகும் அரேசற் கொருநான்கு
கன்னல் மொழிச்செவ் விதழ்க்கனிவாய்க்
கயற்கட் புதல்வி யர்களுதித்தார்
தென்னங் குரும்பை யெனத்தனங்கள்
சிறிது புடைக்கும் பருவத்து
மன்னன் இவர்க்குக் கலியாண
மணிமண் டபங்கள் வகுத்தனனால். (3)

936. இரங்கு குதலைப் பசுங்கனிவாய்
இருகா திடறிக் குமிழ்மீண்ட
கருங்கட் சிறுதாட் புதல்வியர்க்குக்
கலியா ணங்கள் எனஅரசன்
புரங்கள் தொறுஞ்சேர் புரவலர்க்குப்
பொருக்கென் றுழையோர் பலர்விடுத்தே
மருங்கு நிறையக் குமரரெலாம்
வல்லை வருகென் றழைப்பித்தான். (4)

937. வரிவண் டுமிழ்மெல் லிதழ்க்கமல
மலர்மா திருகண் கவர்வனப்பு
விரியும் படிமல் லலைத்தெழுந்து
வீங்கு குவவு மணித்திண்டோள்
கிரிமந் தரத்து மலர்வாகை
கிளைத்த மடங்கல் ஏறனையார்
சுரிசங் கிரட்டுங் கொடிஞ்சி யந்தேர்
சூழக் கடவி விரைந்தடைந்தார். (5)

938. அங்கண் மிளிர்பைங் கனகமணி
யரியா சனங்கள் அவரவர்சேர்ந்(து)
எங்கண் டிசைகள் தொறுங் குழுமி
யிருந்தார் சிறிது பொடித்தரும்புங்
கொங்கை யணங்காங் கன்னியர்கள்
கூடி யவ்வவந் தரசிளங்கோ
சங்க நிறையுங் குமரரையஞ்
சனவாள் விழியால் நோக்கினரால். (6)

939. கன்னிக் கமுக மணிமிடற்றுக்
கமஞ்சூற் பாளை மடல்திறக்க
வுன்னிப் பகுவாய்க் கயல்தாவி
யுடைத்துப் பெருக்கா றெடுத்தசெந்தேன்
தன்னிற் களித்து முடப்பலவில்
தாழைப் பொழிலிற் கதலியிற்றுஞ்
செந்நெற் கதிரிற் குதித்துகளுஞ்
செறுச்சூழ் நிடத தேச மன்னன். (7)

940. சந்தங் கமழ்மஞ் சரிபுனைந்து
தனுவில் தழும்பு செறிதிண்டோள்
குந்தஞ் செறியும்யேந்திரனைக்
குறுகித் தலைமா மகள் கொடையின்
முந்துந் தருவை நிகர்வண்கை
முளரி பிணித்துக் கமழ்செந்தேன்
சிந்துங் குடப்பொன் மதுரகமலர்த்
தெரியல் அவன்பைங் கழுத்தணிந்தாள். (8)

941. சுரும்பு பெடையி னுெடுமுரன்று
துகைந்து குடைந்து சூழ்ந்துசெவ்வி
யரும்பு முறுக்கின் அறுகால்வைத்
தவிழ்த்து மதுவுண் டுறங்குமரை
விரும்பு குருகு செழுந்தரளம்
வெண்முட் டையென அடைகிடக்கக்
கரும்பு சிலையிற் புறங்காக்குங்
கழனிக் காம்பு தேசமன்னன். (9)

942. பம்பும் இருட்கால் எறிந்துகதிர்
பரப்பி முளைத்துக் கிளைத்தமணி
செம்பொன் இமைக்குங் கனைகழற்காற்
செல்வக் குரிசில் சானந்தன்
அம்பொன் மணிச்செங் கோல்பிடித்த
அகங்கை யிரண்டாங் கன்னிபிடித்(து)
உம்பர் மகிழ விதிப்படிதேன்
உமிழ்பைந் தொடையல் சூட்டினளால். (10)

939. கதலியில்தாம்; தாம்—தாவும் (இடைக்குறை)
940. மதுகம்—வண்டு
941. மரை—தாமரை (முதற்குறை)

943. வள்ளைக் கொடிமென் றுமிழ்மேதி
வரச்சூல் முதிர்ந்த சுரிசங்கம்
பிள்ளைக் குருகு மலரிவரிப்
பெயர்ந்து மணிநோக் கிற்றரியிற்
புள்ளைக் கடிந்துள் ஒளிக்கமள்ளர்
போரிற் கொடுசென் றேற்றமுத்தங்
கொள்ளைக் குகுத்த தியாக்கைக்
கோறைவ கியகாம்போச மன்னன். (11)

944. வாரித் தரளங் கொழித்தெறியும்
மகரா லயப்பார் முழுதுமல்லிற்
பூரித் திறுகி யெழுந்த மணிப்
புயத்திற் பொறுத்த சுமாலி கொடை
மூரித் தடக்கை பற்றுபுநூல்
முறையின் மூன்றும் புதல்விமலர்
வேரித் தொடையல் சூட்டியுளம்
வியந்து களித்து மகிழ்ந்தனளால். (12)

945. தென்றற் குழவிக் கன்றசைந்த
சிறுமென் னடையால் தவழ்ந்துலவு
மன்றற் குளிர்பூப் பொதுளுமிள
மலர்ச்சோ லையின்மாக் கதலிவஞ்சி
துன்றற் படுகோங் கிளங்கமுகு
துணர்ப்பூங் குருந்து குமிழ்மடவார்
ஒன்றற் குவமை கண்டிளைஞர்
உண்டாட் டயர்கோங் கண தேசம், (13)

946. பரிக்குங் குரிசில் மதிநிலவு
பழிக்குஞ் சுரிசங் குமிழ்தரளம்
விரிக்குந் திரையாற் கொழித்தெறியும்
வேலை யுலகு முழுதுமலர்

943. இவரி—ஏறி.

944. மகராலயம்—கடல், மல்—மற்போர்.

945. அசைந்த நடை. துணர்—பூங்கொத்து. கதலி, வஞ்சி, கோங்கு, கமுகு, குருந்து, குமிழ் இவை முறையே பெண்களின் தொடை, இடை, முலை, கழுத்து, பற்கோவை, மூக்கு இவைகளுக்கு உவமை.

946. பரிக்கும்—பாரந்தாங்கும் (ஆளும்).

தரிக்கும் புயத்திற் பொறுத்தருளுந்
தனிவேல் தடக்கை விசா லாக்கன்
தெரிக்குங் கரம்பற் றுபுநான்காஞ்
செல்வி யலங்கல் சூட்டினளால். (14)

947. இந்தப் படிநாற் கன்னியரும்
எழில்வார்ந் தொழுகு மலர்ப் படலைச்
சந்தப் புயவேல் தடக்கைமன்னர்
தனயர்க் குமரர் மறைநெறியில்
தொந்தப் படநாள் மலர்த் தெரியல்
சூட்டி மணந்தார் அரேச னெனுந்
தந்தைப் பெருமான் கலியாணந்
தன்னை விபவத் தொடுபுரிந்தான். (15)

948. கறையார் விழிமெல் லியர்மகிழுங்
கன்னற் சிலைவேள் எனவேட்ட
முறையார் மணவா ளர்க்குமணி
முடிகுண் டலம்பூண் கடகாதி
திறையார் பூரி நிதியாடை
தேசம் முதவிப் புதல்வியர்க்கும்
நிறையார் பணிசா துரங்கமணி
நிதிகள் அனைத்தும் உதவினனால். (16)

949. நஞ்சு திகழ்பற் கறையணற்பன்
னகப்பொற் படந்தா முல்குல்மக்கள்
மஞ்சு திகழோ தியர்க்கூட்டி
மருக ருடன் சீர்ப் புதல்வியரை
நெஞ்சம் மகிழ அனுப்பினன்பின்
நிருபர் குமரர் விடைகொடுவான்
விஞ்சு புரிசை நகர்தணந்து
வின்ரந்தோர் புறஞ்சேர்ந் தினிதிருந்தார். (17)

950. அன்ன குமரர் இனிதிருக்கும்
அமயம் முநியாங் கவுசிகன் வந்(து)
உன்ன அரிய கொடுஞ்சினத்தால்
உடன்று குமரர் நால்வரையுங்

948. கறையார்விழி—கறை—கறுப்பு. திறையார் பூரி நிதி—திறையாக வந்த பொன்முதலிய. சாதுரங்கம்-நால்வகைப் படை.
949. அணல்—வாய்ப்புறம்; தாழ்—போன்ற

கன்னல் மொழியா ரையும்விடுத்துக்
கடுஞ்சா பஞ்சொற் றனன்கணத்திற்
பின்னம் அறுசே னையும்பொருளும்
பிறவும் பொடிநீ றாயினவே.

951. விழுது விடுபாய் ஒளிபரப்பும் (18)
வெண்ணித் திலந்தாழ் வடமொடு விண் (டு)
உழுது முரல்பைந் தொடைத்திண்டோள்
ஒளிறும் வடிவேற் குமரருமெய்ம்
முழுதும் அழகு கனித்து முகிழ்
முலையார் களுமுள் நடுங்கிடஅப்
பொழுது முனி நின் றவர்முகங்கள்
பொருக்கென் றெதிர்நோக் குபுஅறைந்தான், (19)

952. நிருபர் புதல்வீர்! எமைப்போற்றி
நில்லா ததனால் எம்துமொழி
கருது மணிக்குண் டலஞ்செவியுட்
கவரா ததனால் உமக்கொல்லை
குருடு மருவிச் செவிடாகிக்
கோர அடவி முள்வனத்தில்
மருவி யுழிதந் திடக்கடவீர்
மருண்டு நீவிர் என்றுபின்னும், (20)

953. என்றும் உமக்குப் புரத்தினுமூ
ரினுஞ்சேர்ந் துறைவ திலியில்லை
கன்று செறிகை மனைவியர்பூங்
கலச முலைசேர் வதுமில்லை
ஒன்று படச்சேர்ந் திடிற்சிரமற்
றொல்லை புவிவீழ்ந் திடக்கடவ(து)
என்று சபித்து முனிவனும்
இகந்து தனதாச் சிரமமுற்றான். (21)

954. அருமா முனிசொற் றிடுசாபம்
அதனால் அரச குமரர்விழி
குருடாய்ச் செவிடும் ஆகினார்
கோல்கைக் கொடுத்து வழிகாட்ட

---

951. **கனித்தல்—இளகுதல்.**

953. **கன்று—கைவளை.**

954. **கந்தமூலம்—கிழங்குகள். பலம்—பழம். எய்த்து உழலினர்—இளைத்துத் திரிந்தார்கள்.**

இருகால் இடறித் தடவிநடந்
தெழுந்தே கந்த மூலபலம்
வெருவா தருந்தி நின்றொடுங்கி
வெங்கான் றொறுமெய்த் துழலினரால், (22)

955. அவ்வேலையிற்பைந் தழையுநறை
யலருங் கமழ்சா ரலினருவி
வெவ்வே றலையெற் றியமணிகள்
விரவி நவக்கோள் எனக்கொண்மூச்
செவ்வேள் மயிலா லித்தகவத்-
தென்றற் குழவி கன்றொடுறீஇ
யைவேள் வியிற்றா மம்புரைகார்
அசல மலைய முனியடைந்தான். (23)

956. திருகு சினவெஞ் சூர்தடிந்த
செம்மல் அருளாற் சலதிமுற்றும்
பருகி மகவான் தனைவிளித்துப்
பகைசெற் றிடுகென் றருள்சடிலஞ்
செருகு முடிப்பொற் கலசமுனி
செந்தா மரைத்தாள் இணையின்மணிக்
குருகு செறிகை மனைவியர்தங்
கொழுந ருடன்வீழ்ந் திறைஞ்சினரால், (24)

957. எந்தை யிவண்நீ யெய்துதவம்
எளியோம் இழைத்த தவமன்றே
தந்தை யர்கள்செய் தவமுமன்று
தாயர் குயிற்று தவமுமன்று

---

955. நவக்கோள்—நவக்கிரகம், தூமம் - புகை. அசலமலையம்—பொதியமலை; முனி—அகத்தியர்.

956. அருள்...முனி—அருளியமுனி. கலசமுனி—அகத்தியர். குருகு—கைவளை.

957. இந்தச் செய்யுளுடன் கம்பராமாயணம்—பாலகாண்டம்—கையடைப் படலம் (6)

'நிலஞ்செய்தவ மென்றுணரி னன்று நெடியோயென்
நலஞ்செய் வினை யுண்டெனினு மன்றநகர் நீயோன்
வலஞ்செய்துவணங்க எளி வந்த இது முந்தென்
குலஞ்செய் தவமென் றினிது கூற முனி கூறும்'

என்னுஞ் செய்யுளை ஒப்பிடுக. செய்த வரலான் ஆனது—செய்த (நீக்கின் விளைவு) வருதலால் ஆனது.

முந்தை மரபோர் புரிந்த்தவம்
முழுதும் வெளிப்பட் டதுவாகுஞ்
சிந்தை மகிழ்மா முனிவா! யாஞ்
செய்த வரலான் ஆனதென்றார் (25)

வேறு

958. **தே**ங்குகரு ணைக்கடலே! தாபதர்கோ
மான்! கொடிய தீதி ழைத்திட்(டு)
ஈங்குவிரைந் தரந்தையுறு தமியோங்கட்
கெக்காலம் இடர்செய் சாபம்
நீங்குவதெவ் வாறெந்த வுபாயத்தால்
உண்மையினி நீயு ரைத்துப்
பூங்கமல மலர்ச்சரண மேசரணென்
றடைந்தஎமைப் புரத்தி யம்மா. (26)

959. **என்**றுமனை வியருமயி ணருமுரைத்த
சொற்கேளா எறிநீர்ப் பௌவம்
ஒன்றுபடக் குடங்கையெடுத் தருந்துமுனி
கருணையினால் உபாயஞ் சொல்வான்
துன்றுபதி புண்ணியமும் மாற்செய்யில்
அரும்பாவத் துரிசு தீரும்
அன்றுமுனி புகல்சாபம் அகலுமுண்மை
செல்வமும்வந் தடையும் மாதோ. (27)

எழுசீர் விருத்தம்

960. **பொ**றிவரிச் சுடிகை மணிவிளக் கெடுக்கும்
புயங்கன்மேற் கிடந்தபார் முழுதும்
நொறிலிமைப் பொழுதில் தன்வச மாகும்
நுவன்றிடில் ஐயமற் றிலையாம்
இறுதியிற் சிவன்தாள் நீழல்வந் தெய்தும்
இச்சிவ புண்ணியம் இன்றிப்
பிறிதுநற் கதிமற் றிலையுமக் குவந்த
பெட்பினோர் காதைசொல் லுதுமால் (28)

958. அரந்தை—துன்பம்.
959. உம்மாற் செய்யில்—நீங்கள் செய்தால்.
960. புயங்கன்—ஆதிசேடன்.

சாதாரணன் கதை (அகத்தியர் சொல்லுவது) 961—972,

961 **சூ**ழித்திடு தரங்கக் கடலக டுளையச்
சுதையுருக் கீண்டெழு மதிவான்
கிழித்திடு நிலவு சாளரத் தொளிரக்
கிளர்தரு மணங்கொள்நற் காரைப்
பழித்திடு குழலார் அறல்தவழ்ந் துலவப்
பஞ்சணை யிளைஞர்வேள் நூலிற்
செழித்திடு கல்வி நாகரிற் களிக்கச்
சிறந்திடுங் **கீசமா நகரம்** (29)

962. **வி**ழைவுறப் பரிக்கும் புரவலன் கழைவில்
மேவு**சா தாரணன்** தனிவாய்
மழகதிர் விரிக்கும் மணிவளை மலர்க்கை
மனைவிபைங் குருமையிற் கனிந்துள்
அழகொழு கியபொற் குவிமுலை ஞெமுங்க
அணைந்துபன் னுள்நனந் தனையுட்
பழவினை தொடரக் கலவியுட் களிக்கும்
பகல்முனி **வசிட்டன்**வந் தடைந்தான் (30)

அறுசீர் விருத்தம்

963. **மு**ன்றல் கமழுங் கணமிசையே
வதிந்து சிறிது போதிருந்த
பின்றை யரசன் மனைவியொடு
பெயர்ந்து புறப்பட் டைம்புலனும்
வென்ற முனிவன் மலரடிமுன்
வீழ்ந்து வணங்கி யெழுந்தொடுங்கி
நின்று கரங்கள் கூப்பினனந்
நிலையே முனிவன் உடனறைவான் ; (31)

961. காரைப் பழித்திடு குழல்; கார்மேகம். அறல் குழல்;—அறல்—கரு மணல்; குழல்—கூந்தல். கலவி நாகரிற் களிக்க—" நாளு நாகர் நுகர்ச்சி நலத்தரோ" —சிந்தா—1347

962. கழைவில்—கழைவில்லான்—கரும்பு வில் மன்மதன்—ஆகுபெயர்; மேவு—போன்ற. பைங்குருமை—புத்தொளி. குருமை—ஒளி, நிறம்; நனம்—அகற்சி. உள்—உள்ள.

963. அங்கணம்—முற்றம்.

964. வருந்த லறமன் ஞ! மனையில்
வதிந்தாய் நின்வா யிலைநோக்கி
யிருந்த பொழுது வீண்போக
இரண்டு மூன்று நான்குகன்னல்
பொருந்து மளவும் உற்றனம்நீ
பொருக்கென் றடைந்தா யிலையதனுல்
அரந்தை யுறநின் மனைவியுடன்
அடவி சுழலக் கடவையென்றுன்; (32)

965. இந்த நகர மானவர்கள்
புள்ளும் இரைதேர் விலங்குமா
விந்தை கிரிநேர் சூளிகைபொன்
மேடை மணிமா நகரமிப்போ(து)
அந்தில் நிழல்தீர் அருங்கானம்
ஆகக் கடவ தென்றுசபித்(து)
எந்தை சரண மலர்மறவா
இருடி தனதாச் சிரமமுற்றுன். (33)

966. அலகின் மறைதேர் வசிட்டமுநி
யருமா தவத்தின் பெருவலியால்
உலக மிசையப் படியடைந்த
தொளிரும் வடிவாள் தனநிருபன்
கலக விழிமா மனைவியுடன்
கடுங்கா னவனும் உருக்கோணர்ந்து
விலகி விலகிக் கடுஞ்சுரமாம்
விபினந் தோறும் திரிந்தனுல். (34)

967. அந்த அமயம் அருமறைநூல்
அறத்தின் துறைபோய் மெய்த்தவங்கை
வந்த திரண விந்துமுநி
வதிந்து நிருபன் வரலாறு

---

964. கன்னல்—நாழிகை.

965. அந்தில்—அசைச்சொல். எந்தை—சிவபிரான்.

966. உலகமிசை—உலகில்; உருக்கோணர்ந்து—உருஅடைந்து, விபினம்—காடு

967. தவம் கைவந்த திரணவிந்து

சிந்தை தெளியக் கேட்டனைத்துந்
தேர்ந்து ஞுணர்ந்தே இருவரையும்
புந்தி மகிழ நோக்கி யெங்கோன்
பொருவில் சிவபுண் ணியங்குறித்தான். (35)

968. தீரா இடும்பை யனைத்தினையுந்
தீர்க்குஞ் சிவபுண் ணியங்கடிதென்(று)
ஆராய்ந் தமலன் சிவத்தலமிங்
கணித்தா யுளதோ என்றுகொலை
வாரார் சிலைவே டனைக்கேட்க
வருந்து மவனும் அணித்தாகச்
சீரார் பிரமேச் சுரமெந்தாய்
சிறக்க இருக்கின் றதுஎன்றான். (36)

969. அருமா தவமோர் வடிவமெடுத்
தனைய இருடிப் புங்கவன்தான்
வெருவா நிற்கும் இருவரையும்
மீளக் கருணை யுறநோக்கி
ஒருவா சகஞ்சொல் குவன்நீவிர்
ஓங்கு சிவத்தா னத்தணுகித்
தருவா ரிலைபுற் கொடிதூர்த்துச்
சம்பு வலஞ்செய் திடுமினென்றான். (37)

970. நிறைந்த கலைமா மதிவிசிறும்
நிலவு கடுக்கும் வெண்ணீற்றான்
மறைந்த வடிவம் வெளிப்படவே
வந்த முனிவன் அடிவணங்கிக்
குறைந்த வினிநாம் இழைத்தபெருங்
கொடும்பா வங்கள் எனஇருடி
அறைந்த படியே யிருவரும்போய்
அறிந்து சரியை புரிந்தனரால். (38)

---

968. கடிது தீர்க்கும் என்று—எனக்கூட்டுக.

969. சிவத் தானம்—சிவஸ்தலம். தரு (மரம்)—ஆர்—இலை—மரத்து இலை ஆர்த்து—பெருக்கிச் சுத்தஞ் செய்து.

970. கடுக்கும்—நிகர்க்கும் (வெண்மை நிறத்தில்); வெளிப்பட—தோன்ற, சரியை—சரியைத் தொண்டு வகை.

971. இருவர் தமக்கும் பதினொருநாள்
இகந்த பின்னர் அவண்மீளப்
பொருவில் நகர மானதுவான்
புள்ளும் விலங்கும் நரரான
ஒருமை பெறமா மனைவியுடன்
ஓங்கு நிருபன் அரசுமுன்போல்
மருவி யுலக மொருகுடைக்கீழ்
வதிந்து புரந்து வாழ்ந்தனனால். (39)

972. சிவபுண் ணியமான் மியத்தால்முன்
சிறந்த வுருவம் மீளவுமே
அவண்வந் தடைந்த தெனத்தெளிந்தே
அந்தச் சிவபுண் ணியம்விரிவாய்ப்
புவனி மீதிற் செய்தனன்பின்
புடைத்துக் கடைந்துள் அமுதுபெய்த
நவமென் முலையி னுடனீதி
நம்பன் அடித்தா மரையடைந்தான். (40)

973. படங்கொள் அரவின் முடிக்கிடந்த
பார்மேல் நீரித் தகைமையினால்
நடங்கொள் அமலன் புண்ணியங்கள்
நானு விதமும் இக்கணமே
தொடங்கி யிழைத்துப் புடவிநிதி
சோதி யுருவாஞ் சிவனருளால்
திடங்கள் பெறவே பெற்றிடுமின்
சித்தி யொடுமுத் தியுமென்றான். (41)

974. என்ற முனிவன் அடிமுனம்வீழ்ந்
திருகா திடறிக் குமிழ்மீண்டு
வென்றி பிறழ்செவ் வரிக்கருங்கண்
மின்னா ருடன்மன் னவரிறைஞ்சி

---

971. நரரான—மனிதர்கள் ஆயின.

973. என்றான் அகத்தியன்

நின்று முனிவ! எமக்கமலன்
நிகரில் சிவபுண் ணியமேதிங்(கு)
ஒன்ற வுரைத்தி யென்றுபுவி
உறமீ ளவுமே பணிந்தனரால். (42)

975. அங்கண் அரிய சிவற்கினிய
அமல வுருவாஞ் சிவமறையோன்
திங்கள் முடியாம் அமுதேசன்
சிறக்கும் பூசை செயுங்குரவன்
பொங்கு கலுழ்ச்சி யுடனணைந்தான்
பொருக்கென் றவனைக் கடமுனிவன்
செங்க மலநேர் விழிகளிப்பத்
தெரிந்து நோக்கி யறைகின்றான். (43)

976. தரள மணிகள் எறிதிரைபாய்
சலதி யுடைப்பா ரனைத்தினுக்குங்
குரவன் எனவாழ் புட்பகிரிக்
குலத்திற் பிறந்த சிவமறையோய்!
இரவு பகலா இடருறுமற்
றிவரை யடிமை கொண்டுடன்நீ
பரவு மமுதே சனைக்கொடிய
பாவ மகற்றுஞ் சம்புவையே, (44)

977. புந்தி மகிழ்ச்சி பெறச்சேவை
புரிவித் தமலன் அருகணைய
முந்து சிதைய புரியிடா
முன்னீ ரகன்றின் பங்களிவர்க்(கு)

---

975. சிவமறையோன்—சிவாசாரியர்—பூஜைக்குருக்கள். பொங்கு கலுழ்ச்சி சிவபக்தி நிறைவால்—உள்ளக்கிளர்ச்சியால்—கண்ணீர் கலுழுங் கலுழ்ச்சி. கடமுனிவன்—அகத்தியர்.

976. புட்பகிரி சிவாசாரியர் கோத்திரம் 'புட்பகிரிமடம்—ஆதிசைவ மடங்கள் பதினெட்டில் ஒன்று என்பர். ஆதிசைவமடம் நான்குமடங்களுள்ளும் புட்பகிரி ஒன்று என்பர்'

977. முந்து சிதைய—பழவினை நீங்க. புரியிடா—புரிந்து—செய்து.

எந்த அடைவில் வருமதனை
இரங்கிக் கருணை யாற்செய்தி
உந்து கடற்பார்க் குரவ ! என்றே
ஓங்கு கயிலை அடைந்தனனால். (45)

978. அண்ட முகடு தனையணவி
அளக்குங் குடுமி விந்தகிரி
கொண்ட பெருமை வலியடக்குங்
குடங்கை முனிவன் அகன்ற பினர்
மண்டு வியப்பால் இவர்கள்சிவ
மறையோன் சரண முனமிறைஞ்சி
அண்டர் பெருமான் அடியோங்கட்
கஞ்ச லெனவே யருடியென்றார். (46)

979. பையுள் மருவு மிவர்தொழுது
பகர்ந்த மொழிகேட் டுடன்விரும்பி
ஐயன் கருணைச் சிவமறையோன்
அறைகின் றனன்நுங் கட்கிரங்குந்
தைய லொருபா கன்னடியார்
தங்கட் கருளுங் கருணைவள்ளல்
உய்ய வருள்நித் தியன்உளன் நீர்
உறுகண் அனைத்துந் தீர்மினென்றான். (47)

முற்கலன் கதை (சிவமறையோன் சொன்னது) 980—985.

980. முன்னர் மறையின் விதிப்படியே
முத்தீ வளர்க்கும் முற்கலன் சீர்
மன்னு கருணைக் காசிபனன்
மாணுக் கன்மெய்க் குரவனரு(கு)
உன்ன அரிய சாத்திரங்கள்
உவந்து படித்தோர் நாட்கழகத்(து)
இன்ன லறவோ தும்பகல்வாய்
எழுந்த திவலை தெறித்தன்றே. (48)

981. அன்ன பகற்கா சிபனுடன்றே
அறைவான் உன்மத் தா ! நின்வாய்
தன்னில் எழுந்த திவலையினீர்
சற்றுத் தெறித்த ததனால்நீ

979. பையுள்—துன்பம்

பின்ன மறவே யெறும்மோட்டுப்
பிணர்க்கோட் டரிய மயிடவுரு
மன்ன எடுத்தி யெனச்சபித்தான்
மறையோன் மயிடம் ஆயினனால்; (49)

982. புரமா மருங்கிற் குளகருந்திப்
புதுப்புற் பச்சை தனைநோக்கி
வரமார் சத்திச் சுரச் சுற்று
மருங்கின் அணைய நாற்றிசையுந்
திரமாம் அறுகம் புற்றெருகுதி
சேரக் கறித்துச் சூழ்ந்துமுக்கால்
உரமாச் சுவர்ப்புல் தின்றுகொடி
ஓங்கு கம்பத் தருகணைந்தே. (50)

983. வண்டு மதுவுண் டுறங்கிதழி
மலர்ச்செஞ் சடில நாயகனைக்
கண்டுள் மகிழ்ந்த பொழுது முனி
கடுஞ்சா பந்தீர்ந் தழகுருவங்
கொண்டு பலகால் வலம்புரிந்து
குறித்தே தொழுதான் நாடவர்கள்
மண்டு வியப்பா லதனையெல்லாம்
மகிழ்ந்து நோக்கி யதிசயித்தார். (51)

984. சிவபுண் ணியமான் மியம்பலகால்
தேர்ந்து தேர்ந்து விரித்துரைத்தார்
அவமெய் கொணர்ந்த கொடியபக
டஞ்ஞா னத்தாற் சுற்றிவந்து
சுவர்மே லறுகு கறித்ததனுற்
சோதி யுருவுற் றதுவெங்கோன்
நவபுண் ணியமான் மியமெல்லாம்
நாடி யறிகு வாமென்றார். (52)

985. அங்கண் உறுமா னவர்களெலாம்
அதனை யொருவர்க் கொருவருரைத்(து)
எங்கும் படர்ந்தே அதிசயப்பட்
டிருந்தார் அதனால் நீவிரும்வெண்

திங்கள் புனைசெஞ் சடிலஅண்ணல்
சிவபுண் ணியங்கள் புரிதிரென
எங்கள் முனிவா! பாதகருக்
கியாது சிவபுண் ணியம்புகலே. (53)

986. என்று வினயத் துடனிவர்கள்
இயம்பும் மொழிகேட் டருமுனிவன்
நன்று புகன்றீர் என்றறைவான்
நான்கு புருடர் களும் நீவிர்
சென்று கருணை யமுதேசன்
சிறப்ப ரேசற் சுற்றிமடி
என்றும் அறவே வலம்புரிமின்
எங்கோ மானை மகிழ்வித்தே. (54)

987. ஒருத்தி சம்பு அருகலகிட்
டுடன்கோ மயத்தால் மெழுக்கிடுக,
ஒருத்தி அமலற் கபிடேக
உதகம் வடித்து முன்கொணர்க,
ஒருத்தி இறைவற் குயர்வனத்தில்
உறுநாண் மலர்கொய் துடன்வருக,
ஒருத்தி கந்த மூலபலம்
உமைபா கனுக்குக் கொண்டணைக; (55)

988. என்றிப் படியே இவரையங்கங்
கேவி விரைந்த தின்த்திலெம்மான்
மன்றற் சரண மலரிணையில்
வழிபா டுவந்து புரிந்தபின்னர்
அன்றைப் பகல்போல் மற்றவைகல்
அணங்க ளுர்க்குச் சாதனங்கள்
ஒன்றற் கெடுத்துக் கொணர்மினென்றே
உரைத்துச் சிவன்சந் நிதியடைந்தான். (56)

---

986. **மடி—சோம்பல்.**

987. **அலகிட்டு—பெருக்கி. உதகம்—நீர்.**

988. **வைகல்—நாள். ஒன்றற்கு—பொருத்தமாக.**

989 உன்ன அரிய சிவமறையோன்
உரைத்த படியே திரவியங்கள்
கன்னல் மொழியார் கொடுவரவே
களிமீ தூர இவருடன்போய்த்
தன்னை யடைந்தார்க் கருள்புரியுஞ்
சம்பு ஆரா தனைதினமும்
இன்ன வகையே புரிந்திடுநாள்
இருபத் தொன்று சென்றனவே. (57)

990. இருபத் திரண்டாம் நாளிவர்கட்
கெல்லாங் கண்கள் தெரிந்தனகா(து)
ஒருமித் தடைத்த செவிடுதிறந்
தோசை தூரங் கேட்டனபுற்
சருமந் தனைமே லுடுத்தபிரான்
தன்னால் வந்த விவையிதனால்
இருமைப் பயனும் உற்றனமென்
றீசன் வலஞ்செய் திறைஞ்சினரால். (58)

991. முறுகு பவளச் சடிலமிசை
முளைக்கும் பிறைபொற் கடுக்கையந்தோட்(டு)
அறுகு மிலைந்த குழகன்மகி
மூால யத்தின் புடைசிறந்த
மறுகு பல்கால் வலம்புரிந்தார்
வைகல் எட்டுத் தணந்தபின்சீர்
துறுகு பொருள்சா துரங்கமுயிர்
தொன்மை போலத் தோற்றியவே. (59)

992. காளைக் குமரர் நால்வரும்பைங்
கழைவிற் குனித்தைங் கணைதொடுத்த
வேளைப் பழிக்கும் எழிலாகி
விரைந்து மதர்த்துக் குழைகிழித்து
வாளைப் பழிக்கும் விழியாரும்
வனப்பாய்க் கூடச் சிவமறையோன்
தாளைத் தொழுதெந் தாய்!நின்னாற்
சாபந் தீர்ந்தேம் சரணமென்றார். (60)

990. புல்—புலி

993. தவமா வலியாற் சிவனுரைத்த
சைவா கமங்கள் எழுநான்கிற்
சிவபே தங்கள் பத்தொடுருத்
திரபே தங்கள் பதினெட்டும்
நவமா யுணர்ந்த சிவமறையோன்
நம்பு மிவரை மிகநோக்கி
இவணீர் சிவபுண் ணியமிழைத்த
இயல்பாற் செவிதண் ணுற்றனவே. (61)

994 நுங்கள் பொருளுற் றனமுநிவன்
நுவன்ற பெருஞ்சா பமுமகன்ற(து)
எங்கள் பெருமான் கருணையினல்
எறிநீர் ஞாலம் அரசுசெய்மின்
பொங்கு சிவபுண் ணியமகிழ்ந்தெப்
போதும் புரிந்திங் கிருமினென்ற
துங்க முநிசொற் கேட்டினேனர்
துகள்தீர் குரவன் அடிபணிந்தார். (62)

995. பின்னர் உவந்து பராபரமாம்
பெம்மான் அமுதே சனைத்துதிசெய்(து)
உன்ன அரிய அபிடேகம்
உண்டி ஒருநான் கறுசுவைபால்
அன்ன விதனை வேத்தியங்கள்
அளித்தெங் கோனு லயச்சுற்றில்
மன்னும் அடவி தடிந்து குரு
மறையோன் பெயர்நற் புரஞ்சமைத்தார். (63)

---

993. சிவாகமங்கள் 28; சிவபேதம்—10; உருத்திரபேதம்—18
28 ஆகமங்களுள் காமிகம்முதலிய பத்தும் விஞ்ஞானகலருட் பரம சிவனது அநுக்ரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய பத்துச் சிவன் களுக்கும் அருளிச்செய்யப் பட்டமையாற் 'சிவபேதம்' எனவும், விசய முதலிய பதினெட்டும் இவ்வாறு பரமசிவன்பால் உபதேசம்பெற்ற அநாதி ருத்திரர் முதலிய பதினெட்டு ருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் "உருத்திரபேதம்" எனவும் சொல்லப் படும்—சைவசமயநெறி—335—உரை.

995. ஆலயச் சுற்று—பிராகாரம்

996. அண்ட முகடு புடையுரிஞ்சி
அளக்கும் கொடிமா மதிலுமணி
மண்ட பமுஞ்சு ளிகையும்யர்
வடமே ருவைநேர் கோபுரமும்
எண்டி சையுமா டகமயமாய்
எடுத்துக் கனக மணித்தேருங்
கண்டு புதிக்கிக் குரவனுக்குங்
கடிது பூரி நிதிகொடுத்தார். (64)

997 அங்கி நுதற்கண் கரந்தகுரு
அருளால் அரச குமரர்புரி
சங்க மெறியும் உடைதிரைப்பார்
தண்டா துவந்து புரந்தனந்தம்
பொங்கு சிவபுண் ணியம்புவியிற்
புரிந்து வணக்கங் கல்விபெறும்
பைங்க னகக்கிண் கிணிமணிக்காற்
பால ரையும்பின் பயந்தனரால். (65)

998. கருங்கட் கனிவாய் மனைவியர்தோள்
கலந்து மகிழ்ந்தங் கிருந்தபின்னோர்
மருங்கு வறிது வதிந்தவைகல்
வரமா முநியாந் துருவாசன்
இரங்குங் கருணை யாலவண்வந்
தெய்த முநிதாள் முனமன்னர்
சிரங்கள் தொழுதெங் களுக்கெந்தாய்!
செவிடு குருடு சேர்ந்ததென்கொல், (66)

999. இறந்த நெடுங்கா லங்கள்வரு
மெதிர்கா லங்கள் நிகழ்காலஞ்
சிறந்த பொருள்க ளனைத்தினையுந்
தெரிய அறிவோய்! செப்புகெனத்
துறந்த முநிவ னிவர்வணங்கிச்
சொன்ன மொழிகேட் டுளத்திலுன்னிப்
பிறந்த துணர்ந்து முன்னிவர்செய்
பெற்றி யனைத்தும் பேசுகின்றான். (67)

அரசகுமாரர்களின் பழைய வரலாறு (துருவாசர் கூறுவது)

1000. பரந்து கமஞ்சூன் வந்தியெட்டிப்
பாய்ந்து நறுமாங் கனிக்கொம்பர்
துரந்து பிடித்து விட்டதுதண்
சுடரிற் றுக்க வமுதுகுக்க
விரந்து பருகு சகோரமெதிர்
இகலுங் கடைசி யர்களிருகண்
கரந்து படர்ந்த தெனமுனியுங்
கழனி யவன தேசம்அம்மா. (68)

1001. கடலிற் பிறந்த மதியிலிரு
கடலுள் ளடங்கிற் றெனமுந்நீர்
மிடலிற் பருகு கார்திசைத்து
வெற்புக் குறித்து மிளிர்மின்னார்
உடலிற் குழல், ஆனனம், கண், முலை
உறழ்ந்த இளைஞர் வியந்துவில்வேள்
அடலிற் கலவிக் குயர்மேடை
யளக்கும் ஆதித் தியநகரம். (69)

1002. அங்க ணொருவன் சிவாலயந்தேர்ந்
தறிந்து வகுக்கும் வணமகிழ்ந்தே
யுங்க ளிடஞ்சேர்ந் திதழியந்தா
ரூருஞ் சடைசேர் சங்கரற்கு
மங்குல் திகழா லயஞ்சமைக்க
மணிபொன் வேண்டு மெனநீவிர்
பொங்கு நிதியந் தருகின்றோம்
போதென் றுரைத்தீர் பொய்யுரையே. (70)

1000. இங்குக் கூறியதைத் "தேமாங்கனி கடுவன் கொள்ள விடுகொம்பொடு தீண்டித், தூமா மழை துறுவன்மிசை சிறு நுண் துளி சிதற" என்னும் தேவாரத்தோடு ஒப்பிடலாம் (சம். தேவா I—10—2).

1001 மதியில் இருகடல்—முகத்தில் இருகண்கள். ஆனனம்—முகம். மதி, கடல், கார், வெற்பு முறையே முகம், கண், கூந்தல், முலை இவைகளுக்கு உவமை. திசைத்து—திகைத்து. " இவள் சிந்தைத் துழாய்த் திசைக்கின்றதே " திருவாய்மொழி 4—6—1

1003, நாளை நாளை யென்றுபல்கால்
நடந்து வருந்து மவன்றனக்கு
வேளை குறித்துப் போவென்றே
மீண்டு மவன்வந் திடுமெல்லை
காளை வடிவாய் நிறைசெல்வங்
கதித்த தாலே அவன்வருந்துந்
தாளை விழித்து நோக்காமற்
சாற்று வதுங்கே ளாதிருந்தீர் ; (71)

1004, தரும முதவிக் கருணையதாய்ச்
சாற்று மிலர்பா லெமக்கேது
கரும மெனவுங் களைநீத்துக்
கனல்வெம் பொறிக்கட் பேருழுவைச்
சரும வுடைமுக் கட்பெருமான்
தயங்கா லயத்துற் றனனீவிர்
துரும நிறைநா வாய்செலுத்தித்
துஞ்சி னீர்பெள வத்திடையே; (72)

1005. எரிகுஞ் சியும்வெண் பிறையெயிறு
மிறைக்குங் கடுவார் சுழல்விழியு
முரியும் புருவக் கடைதுடிப்பு
முடுகிப் பாசங் கொடுகாலன்
வரியும் பகனீர் முன்னுரைத்த
வசனத் தால்வெம் பொறிசிதறிச்
சொரியும் படையா லுயிர்பருகுஞ்
சூல மெறியா துமைவிடுத்தான். (73)

1006. நீவிர் சிவப்புண் ணியந்தனக்கு
நிதியந் தருகின் றேமென்று
நாவி லுறைபொய் யாகிலுமே
நவின்ற பலத்தா லரியணையின்
மேவி மதிவெண் குடைநிழற்ற
வெண்ணல் பலசா மரையிரட்ட
வோவி லெறுழா லெறிதிகிரி
யுருட்டி யுலகெல் லாம்புரந்தீர். (74)

1004. சாற்றுமிலர்—சொல்கின்ற சொல்இல்லாதவர். துருமம்—மரம்.

1005. வரியும்—வரிதல்—கட்டுதல்.

எழுசீர் விருத்தம்

1007. வெறிகமழ் கடுக்கை நறவுகொப் பளிக்கும்
வேணிய னுலய மெடுக்கு
மறிவினுக் குரைத்த பொன்கொடா ததனு
லரும்பொரு ளனைத்துமோர் கணத்தில்
வறிதுநீ ருன தவனைநோக் காது
வழிந்ததாற் குருடுமற் றவன்சொற்
சிறிதுமுட் செவிகொ ளாததா லெல்லேச்
செவிடுநுங் கட்கடைந் தனவே. (75)

1008. திங்களங் கண்ணி வனைசெழும் பவளச்
செஞ்சடா முடியமு தேசன்
பொங்குள மகிழுங் கருணையால் மீளப்
புண்டரீ கங்கள்போல் விழியும்
எங்கணு மதிதூ ரங்கள்கேட் டுணரும்
இருசெவித் துணையுமுன் மரபோர்
தங்களி னுலக மொருகுடை நிழற்றுந்
தன்னிக ரரசுமுற் றனவே. (76)

அறுசீர் விருத்தம்.

1009. என்று கருணைத் துருவாச
னியம்பு மொழிகேட் டுளமகிழ்ந்து
வென்றி யரச குமரரவன்
விரைமென் மலர்த்தாள் முனமிறைஞ்சிக்
கொன்றை கமழ்செஞ் சடையிறையாங்
குரவ! நினதாச் சிரமத்தி
னென்று பெறவே யெழுந்தருளென்
றுரைத்தங் கவனை யனுப்பினரால். (77)

அத்தியாயம் 41.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

சற்புத்தி மன்னன் மகள் சரித்திரம்.

ஜம்பு தேசத்தில், மாயாநகரத்தில், சற்புத்தி என்னும் அரசன் வீமன் முதலிய எட்டுப் பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றான். தனது தேசத்தை ஒன்பது பங்கிட்டுத் தம்மக்களுக்கு ஈந்து, தான் காட்டுக்குச் சென்று தவம் புரிந்து வீட்டின்பம் பெற்றான்.

சற்புத்தி மன்னன் மகளுக்கு ஏழு முனிவர்கள் சிவதருமம் உரைத்தது.

பல தருமங்களைப் புரிந்து அரசாண்டு வந்த சற்புத்தி மன்னன் மகளைப் பார்க்க முனிவர்கள் வந்தார்கள். அவர்கள் அவளைப் பார்த்து "தவக் கொடியே! உன்னைப்போலச் சிவபுண்ணியம் செய்யும் ஒரு பெண் இவ்வுலகில் இல்லை" என்றார்கள். அவள் 'முனிவர்களே! அடியேன் சிவதருமம் இன்னது என்று அறிகிலேன்; அதைச் செய்து வீடு பெற்றவர் யார்; தயைசெய்து கூறவேண்டும்' என வேண்டினள். உடனே ஒவ்வொரு முனிவராக அவளுக்குப் பின்வருமாறு சிவதரும சரித்திரங்களைக் கூறலாயினர்.

1. கவுதம முனிவர் கூறுவது.

சுந்தரி கதை

பாஞ்சால தேசத்தில், சோபன நகரத்தில், மாதவன் என்னும் அந்தணனுடைய அழகிய மகள் சுந்தரி என்பவள்; அவள் கரி நகரத்து அந்தணன் புட்கரன் என்பவனை மணந்தாள்; வினைப்பயனால் அவள் அயல் வீட்டு அந்தணன் ஒருவனைக் களவிற் புணர்ந்தாள். மனைவியின் செய்கையை அறிந்த கணவன் அவளை நையப் புடைத்தான். அவள் கணவனை விடமிட்டுக் கொன்று, சோரத் தொழிலிற் பிறந்த குழந்தைகளையும் கொன்றாள். இதனை அறிந்த உறவினர் அவளை ஊரை விட்டுத் துரத்தினர். தேசந்தோறும் இவ்வாறே அவள் சோர புருஷர்களொடு கூடுவதும் பிறக்கும் மகவுகளைக் கொல்வதுமாகத் திரிந்து, சோர புருஷனும் ஒரு வேதியனைக் காட்டிற்கு அழைத்துச் சென்று அங்கே அவன் தூங்கும்போது அவன் தலையைப் பருங்கல்லால் உடைத்து அவனைக்கொன்று அவன் பொருள்களைக் கவர்ந்தாள். இதை அறிந்த அரசன் அவள் மூக்கையும் முலையையும் அரிந்து அவளைத் துரத்தி விட்டான். அவளும் முடம் மொண்டிகள் கூட்டத்தில் வசித்து வந்தாள். அப்போது ஒரு மொண்டி அவளைப் புடைக்க அவள் இறந்தாள். இவளை நரகில் யமபடர்கள் தண்டிக்கும்பொழுது சிவகணங்கள் வந்து அவளை

விமானத்தில் ஏற்றிக் கயிலையில் விட்டார்கள். அவளும் உமாதேவியின் தோழியரோடு இனிது வாழ்ந்தாள். இந்நிகழ்ச்சியை யறிந்த யமன் சித்திர குத்தனை அழைத்து இவள் செய்த தருமம் யாது என வினவினன். அவனும் இவள் ஒரு தருமச்செயலும் செய்யவில்லை என்றான். அப்போது அங்கே நாரதமுனிவர் வர அவரை யமன் ஏதேனும் விசேஷமுண்டா என வினவினன். அவர் 'நான் கயிலையிற்கண்ட விசேஷம் ஒன்று உண்டு. அங்கே சிவகணங்கள் ஒரு பெண்மணியை விமானத்தில் ஏற்றிவந்தார்கள். அவள் கொடும் பாவங்கள் பல செய்தவள். அவள் ஒருவன் தலையை உடைத்த பருங்கல்லை வழியிற் கண்டவர்கள் சிவாலயத் திருப்பணிக்கு உபயோகப்படும்படி ஆலயத் திற் சேர்த்தார்கள், அந்தச் சிவபுண்ணியத்தால் அவளது பாவங்கள் ஒழிந்து தூய தேகம் பெற்று அவள் கயிலை சேரப்பெற்றாள்' என்றார். இதைக் கேட்ட யமன் சித்திரகுத்தனை நோக்கி இந்தச் சிவபுண்ணியச்செயல் அவள் அறிந்து செய்ததன்று; அறியாமற் செய்ததற்கே இவ்வளவு பலனென்றால் அறிந்து செய்யும் சிவபுண்ணியச் செயல்களின் பலனை சம்பு ஒருவரே அறிவர் என்றான்.

அத்தியாயம் 41.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

அறுசீர் விருத்தம்.

சற்புத்தி மன்னன் மகள் சரித்திரம்.

1010. கன்னற் பழித்த மொழிமடவார்
கற்றைக் குழற்கா டவிழ்த்தெறிநீர்
தன்னிற் குடைய எழுஞ்சுரும்பு
தாதுண் டுலவு தடத்துமலர்ப்
புன்னைத் தருநீ ழலினுமிளம்
புளினத் தினும்வெண் தூவிமட
அன்னப் பெடைபார்ப் பிற்குணர்த்தி
யணைக்குஞ் சம்பு தேயமதில். (1)

1011. நெருங்கு மிருட்சீத் தெழுந்தகதிர்
நிரப்பும் பருதித் தேரிடறி
மருங்கு திகழ்பொற் குடுமிமணி
மாடத் தொளிரும் வயிரத்தூண்

1010. தடத்தும்— குளத்திலும்; புளினம்—மணல்மேடு

அரங்கிற் பவள வாய்க்கிளிக்கா
ரமுதா டகவள் ளத்தருத்தி
யிரங்கு மிதழ்ச்சொற் பயிற்று மின்னு
ரெறிபந் தெறிமா யாநகரம். (2)

1012. அந்த நகர்சேர் சற்புத்தி
யரசன் வீம னுறியரா
மைந்த ரிருநால் வரைப்பயந்தோர்
வனசத் திருவாம் புதல்வியையுஞ்
சிந்தை மகிழ ஈன்றபின்னர்த்
தேச மொன்பான் கூறுக்கி
மைந்தர் தமக்கு மகளுக்கு
மகிழ்ச்சி பெருகக் கொடுத்தனனால். (3)

1013. பின்னர் வனஞ்சேர்ந் தரியதவம்
பெரிது மிழைத்தார் குலதடினி
மன்னுஞ் சடில நாயகன்றன்
மலர்த்தாள் நீழல் வீடடைந்தான்
கன்னல் வரிவிற் குமரரும்பைங்
கலச முலைசேர் கன்னியும்பார்
தன்னை மகிழப் புரந்தனர்பின்
தயவாய்த் தருமம் பலவிழைத்தார். (4)

சற்புத்தி மன்னன் மகளுக்கு ஏழு முனிவர்கள் சிவதருமம் உரைத்தது.

1014. ஓங்கு தருமம் பலபுரிந்த
வுழைமா னேக்கி தனைக்காண்பான்
தேங்கு பரமா னந்தவெள்ளத்
தெளிவிற் றிளைக்கு முனிவரவள்
தாங்கு கொடிமா மனைவதிந்து
தருமம் புரியுந் தையலைக்கண்(டு)
ஈங்கு மகிழ்ந்தே நன்மொழியா
லெய்தி யதுவோ வென்றுபின்னும், (5)

1013. ஆர்—ஆத்தி: குலதடினி—கங்கைநதி.

1015. மன்றில் நடித்த குழகனுளம்
மகிழுஞ் சிவபுண் ணியமனைத்தும்
வென்றி பெறவே யிரவுபகல்
விரைந்து நடத்துங் தவக்கொடியே!
நன்றி யொருமை பெறநினைப்போல்
நாரி யர்களிவ் வுலகின்மனம்
ஒன்றி யரிய சிவதருமம்
உவந்து புரிவோ ரிலையம்மா. (6)

1016. என்று கருணை யுடன்மொழிந்த
இருள்தீர் முனிவ ருரைகேட்டுக்
குன்று நிகர்மா தவக்கொடியின்
கூறு மடியேன் சிவதருமம்
ஒன்றும் அறிகி லேன்முனிவீர்
ஓங்கு பரமாஞ் சிவதருமம்
என்று மொழிந்தீ ரிதுபுரிந்தே
யெவர்வீ டடைந்தா ரியம்புதிரால். (7)

1017. திங்களணிசெஞ் சடைக்கடவுட்
சிவபுண் ணியங்க ளனைத்தினையும்
பொங்கு விருப்பாற் புரிந்ததவப்
பொன்னங் கொம்பர் மொழிந்தசொற்கேட்
டங்கண் முனிவர் நனந்தலையில்
அரிய முனியாங் கவுதமன்பார்
எங்கும் புனித மாக்கு கதை
யெடுத்து வரத்தா லியம்பலுற்றான். (8)

1. கவுதமமுனிவர் கூறியது (சுந்தரிகதை)

கோலைக் கல் சிவன்பணிக்கு ஆயது

1018. வானை பகடு குதித்தெழுந்து
வரிவண் டுளரு மடற்றாழைத்
தூளைப் புடைத்துக் கடைசியர்மேற்
றூவிச் சவர மெனக்கமுகம்

1017. நனந்தலையில்—பெருங்கூட்டத்தின் இடையே.

1018. சவரம்—சாமரை.

பாளைத் திரளிற் ருக்கியுடுப்
பரந்த தெனமுத் தெறிசாலித்
தாளைத் துகைத்து மடுவுகள்பாஞ்
சால தேசந் தனின்மாதோ, (9)

1019. நிலவு கொழிக்கு மதிக்கவிகை
நிழற்றக் கமுகம் பாளை புடைக்
குலவி யிரட்டக் குயில்காளங்
குறிக்க முரச மெனச் சலதி
பலவு மதிர்க்க மலர்க்கணைவேள்
பவனி கடவு தென்றற்றேர்
உலவு கனக மாடமறு
கோங்கி வளர்சோ பனநகரம், (10)

1020. மருவு மறையோன் மாதவன்தேன்
வழியுங் கமல மலர்ப்பொகுட்டுத்
திருவு மிவட்கண் டதிசயிக்கச்
சிறந்த எழில்கூர் சிறுவிபெற்றே
யுருவங் குறித்துச் சுந்தரியென்
றொருபேர் தரித்தா னிவளெழிலாற்
பருவங் குறித்துக் கலியாணம்
பண்ண ஒருவ னினைத்தனனால். (11)

1021. மருப்பிற் கடைந்த யாழ்முறுக்கு
மணிமா டகக்கட் கம்மியர்கை
யிருப்புக் குறட்டுக் காலலவன்
எடுத்த வளைமண் டூகமெட்டி
விருப்பிற் பிடித்த நீர்ப்பாம்பை
விழுந்து கொத்தி யெடுத்தகொக்குத்
திருப்புக் கழுத்து நிலையேற்றந்
திகழும் பணைசூழ் கரிநகரம். (12)

1020. சிறுவி—சிறுமி.

1021. கம்மியர்கை இரும்புக்குறட்டுக் கால் அலவன் (அலவன்—நண்டு)—"கொல்லன் முறிகொடிற்றன்ன கவைத்தாள் அலவன்"—பெரும்பாண். 207—8. மண்டூகம்—தவளை.

1022. பொருந்து மறையோன் மலர்க்கணைகள்
பூட்டு கழைவிற் குனித்தசெங்கை
திருந்து மதவேள் நிகர்வனப்புச்
செறிந்த வடிவாம் புட்கரன்வந்
திரந்து பலகாற் கேட்கவளர்
எரிமுன் புதல்வி தனைக்கொடுத்தான
முருந்து தரளந் தவளநிகர்
மூரல் மனைவி யுடனிருந்தான், (13)

1023. கடைந்த பணிச்செப் பெனத்திரண்ட
கலச முலைச்செவ் விதழ்சுரும்பு
குடைந்த மலர்த்தா ரளகவஞ்சி
கொடிய வினைமு னிழைத்ததுவந்
தடைந்த பலத்தா லயன்மனையி
லருமா மறையிற் கருமமிடை
மிடைந்து தணந்த வேதியனை
விரும்பிக் களவிற் புணர்ந்தனளால். (14)

1024. அந்தக் களவு தனைச்சிலநாள்
அகன்ற பகல்மற் றிவள்கொழுநன்
தொந்தப் படச்சோ ரத்தறிந்து
துணைவி மலர்ச்சூட் டகக்கரங்கள்
பந்தப் படவே பிணித்திவள்செய்
பாவங் குறித்துப் பருவரலால்
நிந்தித் தடித்தா னதனையவள்
நினைத்துச் சிலநாள் கழித்தபின்னர், (15)

1025, கொடுங்கார் விடமிட் டுயிர்த்துணையாங்
கொழுநற் கொன்றுங் கைம்மையதாய்
நெடுங்கா லஞ்சோ ரத்தயலோர்
ஞெமுங்கப் புல்கிக் கருப்பமகட்
டடங்கா ததனுன் மருந்துகுடித்
ததற்குங் கருப்பம் விழாததுகண்
டொடுங்கா துதித்த மைந்தர்களா
ருயிருங் குறைத்தா ளொண்ணுதலே. (16)

1026. விரும்பு கிளைஞ ரிவள்களவில்
விளைந்த சரித மறிந்து மனந்
திரும்பி முனிந்து துரத்தினர்பின்
தேசந் தேசந் தொறும்பயத்தாற்
குரும்பை முலைசேர்ந் தொருசோரற்
கூடிப் பயந்த சேய்தனக்கு
நிரம்பு மதிபத் தளவில்விடம்
நிறைய வருத்தி யுயிர்வதைத்தாள். (17)

1027. பின்னுங் களவிற் பலரையும்பின்
பிடித்துத் தழீஇவேட் கையின்முயங்கி
மன்னுங் கொடிய வருவிடத்தால்
வதைத்துந் தனங்கள் கவர்ந்துபொருள்
துன்னுந் தனிவே தியற்புணர்ந்து
தொடர்ந்து விட்மிட் டவன்மரியான்
என்னும் படிகண் டொருபகற்கா
னிடையே யழைத்துக் கொடுசென்றாள். (18)

1028. மதவேள் கலையின் படிபுணர்ந்து
மறையோன் துயிலும் பொழுதொருகற்
கதமாய்க் கொடுவந் தவன்தலையிற்
கடிது புடைத்துக் கொன்றவன்பல்
விதமாந் தனங்கள் கொணர்ந்து செலும்
வேலை யரச னறிந்திவள்மூக்
கிதமாய்க் கடிது கொய்துமுலை
யீர்த்திட் டிவ்ளைத் துரத்திவிட்டான். (19)

1029. அங்கு லறல்சை வலம்பழித்துக்
கருகி நெய்த்த குழற்கோதை
பொங்கு புகழ்க்கா வலன்மூக்குப்
பொருக்கென் றரிந்த போதுமுன்போய்ப்
பங்கு வடிவா னவர்குழுவிற்
பரிந்து மகிழ்ந்தா ளொருகையிலான்
எங்கு நடந்தா யெனப்புடைத்தான்
இரத்தம் பிலிற்ற இறந்தனளால். (20)

1029. பங்கு—முடம்; பங்கு வடிவு ஆனவர்.

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras

1030. பிறைவா ளெயிறு நக்கியிவட்
பிணித்தந் தகன்முன் தூதர்விட்டுக்
கறையார் திரிசூ லச்செங்கோற்
கடவு ளேவக் கொடுங்கோர
இறையா மளற்றிற் புகுத்தியடித்
தெற்ற அரந்தை படுமிவனை
மறையா தரிக்குஞ் சிவகணங்கள்
மானத் தேற்றி வைத்தபின்னர், (21)

1031. வஞ்ச மிழைத்துச் செருப்புரியும்
மறலி கொடுந்தூ தரைச்சிறிதுந்
தஞ்ச மறவே துரத்தியருட்
சம்பு வளருங் கயிலைவெற்பில்
அஞ்ச லெனவே கொடுபோய்ச்சென்
றண்ண லயல்சன் னிதிவிடுத்தார்
வஞ்சி யுமையாள் கருணையினால்
மகிழ்தோ ழியரோ டினிதிருந்தாள். (22)

1032. இந்த வரலாற் றினைத்தூதர்
இயம னருகு சென்றொடுங்கி
விந்தை யிறைவன் சிவகணங்கள்
விரைந்து படையாற் புடைத்தெமது
சிந்தை கலங்கத் துரத்தினரென்
செய்வோ மென்று முறையிடக்கேட்
டந்த கனுஞ்சித் திரகுத்தன்
அறைதி யிவள்செய் தருமமென்றான்; (23)

1033. செங்கோ லிறைவன் மொழிகேட்டுத்
தேர்ந்து ளுணர்சித் திரகுத்தன்
பொங்கார் வங்க ளுடனறைவான்
பொம்மல் முலைக்கோர் புண்ணியமும்
இங்கா னதுமற் றிலையெந்தாய்
என்னும் பகல்நா ரதமுனிவன்
அங்கா தரவி னடைந்தனன்மற்
றவனைக் கால னடிபணிந்தே, (24)

1030. கோர இறையாம் அளறு—தலையான கோர நரகம். அளறு—நரகம்.

1034. ஆடும் பெருமான் சதிக்கேற்ப
அறிந்து மகதி தழீஇக்கானம்
பாடும் பெரியோ யெங்கினுமிப்
பதிவந் தனைநீ யங்கங்கு
நேடுங் கருத்தாற் கேட்டதுமுன்
நிருமித் துன்கண் கண்டதுஞ்சீர்
கூடும் பரிவா யுரைத்தியென்ற
கூற்றன் மொழிகேட் டிருடிசொல்வான். (25)

1035. அண்டம் பலவும் அழிபோது(ம்)
அளத்தற் கரிய வடிவெடுத்துக்
கொண்டு வெளிப்பட் டதுவாகுங்
குடுமி வரையாங் கயிலையினு
மண்டு வியப்பா லடைந்தனனவ்
வரையி லொருவஞ் சியைத்தூதர்
கொண்டு விருப்பாற் கண்ணுதல்முன்
குறுகி விடுத்தார் மண்டபத்தில். (26)

1036. பொருந்தி யொருவர்க் கொருவர்சொல்வார்
பூவை மதவே ளிங்கணையால்
வருந்தி நெடுநாட் கொடும் பாவம்
வரையற் றிழைத்துஞ் சிவதருமம்
திருந்தி விளைத்த சிவபலத்தால்
தேடிச் சிரத்திற் புடைத்தகல்லைப்
பரிந்து கொடுசென் றதர்படர்வோர்
பரனு லயத்தி லமைத்தனரால்; (27)

1037. அந்தச் சிவபுண் ணியபலத்தால்
அரும்பா வங்க ளனைத்தும்விட்டே
கந்தக் குழலாள் கைலையிலெங்
கடவுள் திருமுன் கடிதடைந்து
தொந்தப் படவே மகிழ்ந்தனள்மெய்
தூய வடிவா யென்றவர்கள்
[முந்தச் சொன்ன இறும்] பூது
மொழிவான் புகுந்து ளேனென்றான். (28)

1034. எங்கினும்—எங்கிருந்து.

கலிநிலைத்துறை

1038. நாரத மாமுநி யிப்படி யென்று நடாத்துஞ்சொல்
வாரமோ டந்தக னுமிறை கேட்டு மருங்கெய்தி
நேர அணைந்திடு சித்திர குத்தனை நேர் நோக்கி
யாரமு தீன்றது போலோ ரின்சொ லறைந்தானல் (29)

அறுசீர் விருத்தம்

1039. சந்து சுகந்த விதங்கள் திமிர்ந்திப
தந்தமடுந் தனமார்
சுந்தரி மைந்த ரனந்தரை வந்து
துணர்ந்து புணர்தநியாள்
புந்தி யறிந்து செயுந்தொழி லன்று
பொருந்திய முன்செய்தா
லிந்த வருந்தவ ருங்கொ டடைந்தனள்
எந்தை சிவன்பதமே. (30)

1040 மங்கையொர் பங்க ருந்தரு மங்கள்
வணங்கி மகிழ்ந்து செய்வோர்
செங்கை மனஞ்சொல் புரிந்த பலன்கள்
தெரிந்து பகர்ந்திடவே
பங்கயன் வண்டு முரன்றமு துண்டெழு
பைந்துள வன்சுரரே
சங்கை புரிந்து மயங்குவர்
கண்டறி சம்புவை யன்றியுமே (31)

1039. மைந்தர் அனந்தரை—ஆடவர்பலரை; துணர்ந்து—தொகுதியாக. புணர்தநியாள் — புணருங்காலத்தினள்; செய்தால் — செய்ததால். அருந்தவருங் கொண்டுபோக—சிவன்பதம் அடைந்தாள்.

1040. செங்கை, மனம், சொல்—(மனம் வாக்கு காயம்).

அத்தியாயம் 42.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

2. அங்கிரா முநிவர் சொன்னது.

கோரன் கதை.

(கொலைத்தடி சிவன் பணிக்கு ஆயது)

பின்பு அங்கிராமுநிவர் சொல்கிறார்:—

மாதே! வங்க தேசத்தில் மாசுத்தன் என்னும் அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்று அங்கே புலியடிக்க இறந்தான். அவன் மனைவி தன் தந்தையின் வீடு சேர்ந்தாள். இவள் தன் மைந்தனுடன் சிவாலயம் ஒன்று எடுத்துத் தன் பெயரால் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்துப் பூசித்து வந்தாள். ஒரு நாள் அவள் மைந்தன் தாயைப் பார்த்து 'என் அப்ப எங்கே' எனக் கேட்டான். அப்போது இந்திரன் அவன் தந்தை மாசுத்தனைக் கொண்டு வந்து விடுத்து மகனையும் மனைவியையும் அவன் தழுவும்படி விட்டு உலகின் ஆட்சியையும் உதவிச் சென்றான். மாசுத்தன் நாட்டில் உள்ள கள்வர்களை அழித்துக் கள்வர் தலைவனும் கோரனைச் சிறையிலிட்டுப் புடைத்துக் கொன்றான். அப்போது சிவகணங்கள் கோரனை மணிவிமானத்தேற்றிக் கயிலையிற் கொண்டு போய் விட்டனர். மணி விமானம் வந்த காட்சியை அரசன் கண்டு அற்புதம் உற்றான். அப்போது கற்கன் என்னும் முநிவர் அங்கே வர, அரசன் அவரை என்னே இந்த அற்புதக் காட்சி என வினவ, அவர் ஞான திருஷ்டியால் கண்டு இந்தக் கள்வன் கையிலிருந்த பெரியதடி ஒரு சிவாலயத் திருப்பணிக்கு வேண்டிய மரத்துண்டுகளுடன் கொண்டு போகப் பட்டு உபயோகமாயிற்று. அந்தச் சிவபுண்ணியத்தால் இவன் பாபங்கள் ஒழிந்தன. இவனுக்கு மணி விமானமும் கயிலைவாசமும் கிடைத்தன. இவன் இனிச் சிவனடி கூடுவன் என்றார். அதைக் கேட்ட அரசன் அன்று முதல் பல சிவபுண்ணியச் செயல்களைச் செய்தான். இந்திரன் வந்து அரசனுக்கு ஒப் பற்ற வாள் ஒன்று கொடுத்துச் சென்றான். சிவபுண்ணியத்தால் அரசன் வீட் டின்பத்துக்கு உரியவனானான்—எனக் கூறி முடித்தார்.

3. வசிட்ட முநிவர் சொன்னது.

விபுதன் கதை.

[யானை அவனை வணங்கியது]

பின்னர் வசிட்ட முநிவர் கூறுகின்றார்:—ஈசனுக்கு உரிய சிவதருமஞ் செய்யும் மாதே! குஞ்சரபுரத்தில் சந்திராதித்தன் என்னும் மறையவனுடைய மகன் விபுதன் பலபாவங்களைச் செய்ய, அரசன் அவனை நகரைவிட்டு ஓட்டி னான். விபுதன் காட்டிலே ஆறலை கள்வனாயிருந்து வழிப் போவாரை

டித்து அவர்கள் நிதியைக் கவர்ந்து வந்தான். அரசன் இதை அறிந்து அவனைப் பிடித்து வரச்செய்து அவனை ஒரு மத ஆனையின் முன் எறிவித்தான். அந்த மதயானை விபுதனை ஒன்றும் செய்யாமல் வலம் வந்து தன் பிடரியின்மேல் ஏற்றிக்கொண்டது. அரசன் ஆச்சரியப்பட்டு நிற்க, அந்த மதக்களிறு 'இவன் சிறுவனாயிருந்தபொழுது சிவாலயத்தில் பணி நடக்கும்போது செங்கல் எடுத்துக் கொடுத்தான். அந்த பலத்தால் இவன் புண்ணியனானான். இவனை யான் ஊறுபடுத்த முடியாது. இவன் யாவராலும் தொழப்படுவான்' என்றது. இதைக் கேட்ட அரசன் மிக்க பக்தியினால் அவனை விடுவித்தான். அவன் தேசமெல்லாம் திரிந்து மீண்டு வந்தான். அப்போது அரசன் அவனுக்கு நிதிகள் நிரம்பக் கொடுத்தான். மாதே! அன்று முதல் அவன் திருட்டைவிட்டு, மனைவியுடன் போகங்களை அனுபவித்து ஈற்றில் விமானத்தில் சிவலோகம் சென்றான்—எனக் கூறி முடித்தார்.

அத்தியாயம் 42.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி.

2. அங்கிரா முனிவர் கூறுவது

கோரன் கதை (கோலத்தடி சிவன்பணிக்கு ஆயது)

அறுசீர் விருத்தம்.

1041. துஞ்ச மேயென வந்த பேர்மலை சங்கரகதா னறவே
நெஞ்ச மெகொள விஞ்சு போதநி ரம்பவே யருள்வோர்
செஞ்ச டாடவி யந்த ணாளர் சிறந்தபே ரவைமீ
தஞ்ச லோர்கதை வஞ்சி கேளென அங்கிரா மறைவான். (1)

1042. ஏண்டி சாமுக மண்டு சாகை யிருண்ட சோலையிலேழ்
கொண்டல் தாழ மருண்ட தோகைகொ ளஞ்சதா நடமே
கண்டு வானரம் நன்ப லாமுள கங்கை மோதிடவே
வண்டு பாடிட மந்தி காணிய வங்க தேசமதே. (2)

எண்சீர் விருத்தம்.

1043. அங்கண்மகிழ் நிருபன்மா சுத்த னோர்நாள்
அடுமிருக வேட்டையினா லடைந்தான் காட்டிற்
பொங்குபொறி விழிப்பிலவாய் வரித்தோல் வேங்கைப்
புலியவனைப் பாய்ந்து கொன்ற தமைச்சன் கள்வர்

1042. மயிலாட, ஆண்குரங்கு பலாப்பழத்தை முழவாக (மத்தளமாக) வைத்து மோத, வண்டுபாட, பெண்குரங்கு கண்டு (களிக்க). வானரம்—இங்கு ஆண்குரங்கு.

தங்களுடன் பொருதிறந்தான் அரச னில்லாள்
தருகருப்பம் பொறையுயிர்த்து மைந்த ேைடு
துங்கவடி வேற்றந்தை மனையி னுந்து
துணிவொடடைக் தனள்பன்னாட் கழித்த பின்னர், (3)

1044. ஐமந்தனுட னிவள்சிவா லயமெ டுத்து
வடிவொருநான் கொருவியரு வுருவ மாக
விந்துவுட னுதமாய்ச் சிவமா மூர்த்தி
மிகுமூர்த்தத் துருச்சேர்க்கக் கரும மாகும்
ஐந்துமுக மீரைந்து கரம்ப ளிங்கா
மக்கமெண்ணுன் இலக்கணஞ்சேர் சிவலிங் கந்தான்
புந்திமகிழ்ந் தவன்பெயரால் தாபித் தென்றும்
பூசைபுரிந் தந்தத்திற் போற்றி செய்தே. (4)

1045. பரவிமகிழ்ந் திறைஞ்சிநித்தம் பரம மான
பத்தியுடன் தன்மனையிற் படரா நின்ருள்
ஒருபொழுது மைந்த னன்னை தன்னை நோக்கி
யுவந்தெனியேன் தந்தை யெங்கே யென்று கேட்டான்
சுரர்பரவு மகவான்சா துரங்க சேனை
சூழவிவன் தந்தையைத்தான் கொடுவந் துள்ளங்
கருதியுணர் புதல்வனொடு மனைவி யோடுங்
கடிது தழீஇக் கொளவிடுத்தெவ் வுலகு மீந்தான். (5)

1046. மூருகுகமழ் நிறைமலர்கற் பகஞ்சி றந்த
மூதுலகிற் சிவனுணை யால டைந்தான்
செருகுமலர்க் கருங்குழலாய்! அரச னுந்தன்
தேசமகிழ் புதல்வனொடு மனைவி யோடும்
பெருகுமகிழ்ச் சியிலடைந்து செங்கோ லோச்சிப்
பெருந்திடுகன் வரையெல்லாம் வதைத்துப் பின்னுர்
திருகுசினம் புழுங்குகள்வ ரிறையாங் கோரன்
செக்கைவரிந் தக்கணம்லெஞ் சிறையி விட்டான். (6)

1047. கொலைபுரியு மிவன்மனையை யிடித்துந் தீராக்
கோபமுடன் தினம்படரைக் கொண்டி வன்றன்
நிலைகுலையப் புடைப்பித்தா னங்க னுற்ருேர்
நிருபனய லடைந்தெந்தாய் நிட்டு ரஞ்செய்

புலையனிவன் தனைவதைத்தி யென்று ரைத்தார்
பொருக்கெனவே தடிந்தனனப் போதீ சன்கா
தலையறிந்த தூதர்மணி மானத் தேற்றிச்
சம்புவளர் கயிலைவெற்பிற் சார்ந்து வைத்தார். (7)

1048. கனைகழற்கால் நிருபனதி சயித்து நோக்குங்
காலையிற்றாழ் சடைமுநியாங் கற்கண் வந்தான்
வினயமுடன் நரபால னவன்தாள் முன்னர்
வீழ்ந்திறைஞ்சி யிவையென்கொல் விளம்பு கென்னத்
தனையுணரு முநிகணப்போ திருந்தி வன்செய்
தருமமதே தென்றுணர்ந்து சாற்று வான்மற்
றினையனெடுத் திடுபெருங்கைத் தடியைத் தாரு
இடைசிவா லயத்தொடொக்க எடுத்தாய் மாதோ. (8)

1049. எடுத்துரைக்க அரிதாகு மப்ப லத்தால்
எண்ணரிய கொடும்பாவ மெல்லாம் நீத்து
விடுத்துமணித் திப்பியவி மானத் தேற்றி
விமலனுறை யுத்தமமாங் கைலை வெற்பில்
அடுத்திருந்து பின்னர் மகிழ் சிவன்பொற் பாதம்
அடைகுவனென் றனனன்று முதலாய் வேந்தன்
கடுத்தனையுண் டிருண்டகண்டன் தரும மெல்லாங்
காதலித்துப் புரிந்தனனக் கணத்தி லம்மா. (9)

1050. எறிகுலிசப் படையோன்சா துரங்கத் தோடே
யெய்திமிக விறலொடுதுன் னலர்கள் வீழத்,
தொழிலினுயிர் பருகுவடி வாளும் நல்கித்
தொக்கமர ருடன்துறக்க மடைந்தான் பின்னர்
வெறிகமழுந் தொடையரசன் கடற்பார் முற்றும்
விரைந்துதிகி ரிப்படையொன் றுருட்டி யார்க்கும்
அறிவரிய சிவதரும மனைத்துஞ் செய்தே
யந்தத்தி லுயர்வீடு மடைகு வானால், (10)

1051. கோரனெடுந் திரிதண்டு சிவா லயத்திற்
கூடமரத் துடனடைந்த தருமந் தன்னால்
வாரமுடன் சிவபதமுற் றிருந்தா னென்று
மங்கலமாஞ் சிவதருமம் புரிமா துக்குள்

1048. தடியை மரங்களுடனே உபயோகப்படுத்தினாய்: தாரு—மரத்துண்டு.

1050. தொழிலின்—விரைவில் (சொழிலின்)

1051. உள் ஈரம்—உள்ளத்திற் கருணை,

ஈரமுடன் அருமுனிவ னறைந்தான் பின்னும்
இருடியர்புங் கவனுகும் வசிட்டன் தேர்ந்து
மாரனைவென் றருளீசன் தருமஞ் செய்வோர்
மகிழ்ந்துணரென் றோர்காதை வகுத்து ரைத்தான். (11)

3. வசிட்ட முனிவர் கூறுவது
விபுதன் கதை.
யானை அவனை வணங்கியது.

1052. ஆயிரஞ்செங் கதிர்விரிக்கு மிரவி தூண்டும்
ஆழியந்தேர் புடைபூட்டுப் புரவி வானிற்
பாயுமணிக் குரமிடறும் புரிசை சூழப்
பருமணிவிட் டிமைத்தொளிர்கு ளிகையின் பாங்கர்
சேயுயர்விண் முகடளக்கும் பொழிலில் தாவுந்
திங்கள்நிரம் பியகலையின் கவி கை கொட்டல்
தூயமணி மறுகுசிறு பறைசி றூர்கள்
தொனிதத்து மானுங்குஞ் சரபுரத்தின், (12)

1053. சந்திரா தித்தனெனு மறையோன் பெற்ற
தனயன்மகிழ் விபுதன்மிகு கொடும்பா வங்கள்
அந்தமிலா திழைத்தனனக் கொடியோன் தன்னை
யரசனறிந் தடங்காவெங் கொடும்பா வத்தால்
நிந்தைமொழிந் தனனகரி னும்போ வென்று
நீத்தனன்வெங் கானிலவ னடைந்து மார்க்கம்
வந்தவர்கள் கலங்கவடித் தாற லைத்து
மற்றவர்தன் னிதியமெல்லாம் வாங்கிக் கொண்டான். (13)

1054. இடர்புரிந்திப் படிச்சிலநாட் டிரிந்த காலை
யெறிதிறிப் படையரசன் படரை யேவித்
தொடர்பிடித்துக் கொண்டவனை யிக்க ணத்திற்
றுண்ணெனவே விடுமினெனக் கொண்டு வந்தார்
கடவிகட கரடகவுட் களிற்றின் முன்னர்க்
களிக்கவெறி வித்தனன்கைத் தந்தி நோக்கித்
திடமொடவன் முடியிடறி யெறிந்த தில்லைச்
சென்றுவலஞ் செய்தெருத்தஞ் சேர்த்திற் றன்றே. (14)

1052. திங்கள் நிரம்பிய கலை—கலை நிரம்பிய திங்கள்- கவி கை கொட்டல்—குரங்குகள் நிலவின்மேற் கொட்டுதல் சிறூர்கள் பறை கொட்டுதலை ஒக்கும். மானும்=நிகர்க்கும்.

1055. புரவலன்கண் டதிசயித்து மதவே ழுந்தான்
பொருக்கெனவே யெருத்தத்தி லிருத்தித் தேராக்
கரவடனை வதைத்ததிலை யென்று நோக்குங்
காலையர சனைமதவெங் களிறு நோக்கிப்
பரவியுரைத் ததுமுநிவன் சிறுவ ஞன
பருவத்தில் விளையாடுஞ் சிறுவ ரோடும்
விரவியம லற்குறையுள் செங்கல் தன்னால்
விரைந்தெடுத்தா னப்பலத்தான் மிக்கோ னம்மா. (15)

1056. அருந்தருமம் புரிந்தவிவ னென்னு லிப்போ
தடப்படுவா னேவன்றி யரவிந் தத்தில்
இருந்ததிசை முகனாலு மடப் ப டான்மற்
றெல்லோருந் தொழப்படுவா னென்று வேழம்
பொருந்தவுரைத் ததுகேட்டுக் குரிசில் மீளப்
பொருக்கெனவே யதிசயப்பட் டிவனை யுள்ளந்
திருந்துமிகு பத்தியினல் விட்டா னன்னோன்
தேசநெடு நாட்சென்று திரிந்து வந்தான். (16)

1057. வந்தவனைப் புரவலன்கண் டுளம கிழ்ந்து
வாழ்த்திவெகு தனங்களெலாம் வழங்கி யேவிச்
சிந்தைமகிழ்ந் தனுப்பினன்பொற் கொடியே! அன்னோன்
திருட்டனைத்து மன்றுமுதல் தீர்ந்து நீத்துக்
கந்தமலர்க் குழல்மனைவி யுடனெ வர்க்குங்
கருதரிய போகமெலா மருந்திப் பின்னர்
செந்திருவுள் ளங்கவர்திப் பிய[வி]மானஞ்
[சேர்ந்துசிவ லோ]கத்திற் சென்றான் மாதோ. (17)

அத்தியாயம் 43.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

4. காசிப முநிவர் கூறுவது.

போகாங்கன் கதை.

அந்தப் புண்ணிய மாதைப் பார்த்துக் காசிபர் கூறுகின்றார்:

அம்மையே! கடலரசன் நவமணிகளையுங் கொண்டு இறைவரை வழிபடும் வேதாரணியத்தில் உள்ள மணி கன்னிகையில், உச்சியம் பொழுதில், கங்கையும் வந்து முழுகிப் பவித்திரமடைவாள். அத்தகைய தலத்திலே

போகாங்கன் என்பான் அளவற்ற பாவங்களைப் புரிந்து இறந்தான். அவனைக் காலதூதர் கடிதிற்கொண்டு சென்று நரகில் அமிழ்த்திக் கடுந்துன்பத்தி லாழ்த்தினர். அப்போது கறைமிடற்றண்ணலாரின் தூதர்கள் வந்து அந்தப் போகாங்கனை அழகிய ஒளிவிடும் மணி விமானத்தில் ஏற்றிப் பிறைமுடிப் பெம்மான் திருமுன் கொண்டு விடுத்தனர்.

சிவபெருமான் தூதுவரைக் காலன் தூதர் வணங்கிப், 'போகாங்கன் செய்த புண்ணியமேது? என்று பணிவுடன் வினவினர். சிவதூதுவர் "இவன் மகன் கனகன் என்பான் மழலைமொழிப் பருவத்தில், வேதாரணியக் கடற்கரையிலே மணலாற் சிவலிங்கம் அமைத்து விளையாடினான். அந்த அளவறு சிவபுண்ணியத்தால், இவன் நரகிலிருந்து விடுதலை பெற்றுச் சிவபதம் அடைந்தான்" என்றுரைத்தனர்.

அறியா மதலை உணர்வின்றிச் செய்த சிவபுண்ணியத்திற்கே இத்தகைய நற்பலன் எனின், அறிந்து செய்யும் சிவபுண்ணியத்தின் பலனை அளவிட்டுரைக்க முடியுமோ?

5. ஜமதக்கினி முநிவர் சாற்றியது.

துராசாரன், துர்க்குணன் கதை.

காசிபர் கூறி முடித்த பின்னர் ஜமதக்கினி சாற்றுகின்றார்:

பாகனைய மொழியாய்! சந்திர நகரத்தின் அரசனான விசுத்தனுக்கு ஒரு மந்திரி யிருந்தான். அம்மந்திரியின் மக்கள் மூவரில் இருவர் கொடும் பாவிகள். அவர்கள் துராசாரன், துர்க்குணன் என்றழைக்கப்பட்டனர். அமைச்சன் தன் மக்களின் தீச்செயலையுணர்ந்து, அவர்கட்கென இருமனைகளைக் கொடுத்துப் பிரித்துவிட்டான். அவர்கள் இருவரும் சில நாட்கள் வரையிற் கொடும்பாவச் செயல்களைப் புரிந்தவாறே அங்கிருந்தனர். பிறகு, களவின் பொருட்டு வெளிப்பட்டுச் செல்கையில் ஒரு நாள் நண்பகலிலே வெயிலின் வெம்மையால் வாடித் தவிக்கும்போது, ஒரந்தணனைக் கண்டனர். அவனைப்பற்றி அடித்து மரத்திற் கட்டிவிட்டு, அவன் கொண்டு வந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்தனர்; அதிற் சிறிது சுண்ணாம்புக்கல்லும் சில அப்பங்களும் இருந்தன. அப்பத்தை மட்டும் இவர்கள் எடுத்துத் தின்று பசி தணிந்து சுண்ணாம்புக்கல்லை அங்கே எறிந்து விட்டார்கள்.

இவ்வாறு இவர்கள் அளவற்ற தீயதொழில் புரிந்து திரியும் நாட்களில் ஒருநாள், அரசன் இவர்களைப்பற்றி முடிதடிந்து விட்டான். காலதூதர் இக்கயவர்களைக் கட்டிச் சென்று யமன் முன் விடுத்தனர். யமன் சித்திரகுத்தனை நோக்கினான். சித்திரகுத்தன் 'அண்ணலே! இவர்கள் இயற்றியவை யாவும் எழுதற்கரிய பாவச்செயல்களே; எனினும், இவர்கள் ஒரு பிராமணனைத் துன்புறுத்திப் பெற்ற மூட்டையில் இருந்து எடுத்து எறிந்த

சுண்ணாம்புக் கற்கள் வழிப்போக்கரால் விச்சுவநாதர் மண்டபத்திற் சேர்க்கப் பெற்றன. அந்தச் சிவபுண்ணியத்தால் இவர்கள் பாவம் நீங்கப்பெற்றார்' என்றான்; அப்பொழுது சிவகணங்கள் விமானத்துடன் அங்குவர மறலி அவர்களை நடுக்கத்துடன் வணங்கி, 'ஐயன்மீர்! என் தூதுவர் அறிவிலாமையால் இவர்களை இங்குக் கொணர்ந்தனர்; திருவுளமிரங்கி மன்னித்தருள்க!' எனவேண்டினான். சிவகணங்களும் காலதூதுவரை மன்னித்துவிட்டு, அவ்விருவரையும் நூறுநூறு சிவகணங்கள் சுமக்கும் இரு பொன் விமானங்களில் ஏற்றிக் கொண்டு சென்று, சிவபெருமான் திருமுன் விடுத்தனர்.

6. கவுசிக முனிவர் கூறியது

சதாவிந்தன் கதை.

ஜமதக்கினி கூறியபின்னர், கவுசிகர் கூறுவார்:.

தண்ணிய நறுமலர்க் கூந்தலாய்! நான் ஒரு முறை எமகூட கிரியிலிருந்த நான்முகனை வணங்கி யிருந்தேன். என்னுடன் பல முனிவர்கள் வீற்றிருந்தனர். அப்போது சிவகணங்கள் புடைசூழச் சதாவிந்தன் என்பவர் எழுந்தருளினார். அவர் வருகையை அறிந்த பிரமன் விரைந்தெழுந்து கைகூப்பிப் பணிவுடன் வணங்கிநின்றான். நாங்களும் அங்ஙனமே வணங்கி நின்றோம். ஆனால், சதாவிந்தர் சிறிதும் பிரமனை நோக்காது சென்றுவிட்டார். நாங்கள் வியந்து அவர் யாரெனப் பிரமனைப் பணிவுடன் வினவினோம்; அதற்குப் பிரமன் கூறிய கதை.

'சாமந்த நகரில், வறியவனான சதாவிந்தன் என்போன் தன் எருமைக் கடாவைப் பலவிடங்களிலும் ஓட்டிச் சென்று விலை கூறினான். ஒருவரும் வாங்கவில்லை. திரும்பக் கொண்டுவந்து மனையிற் கட்டிவிட்டுச் சோர்ந்து கிடந்தான். அவனை ஒருதேள் கொட்ட அவன் இறந்தான். அவனுடைய எருமைக் கடா கயிற்றை அறுத்துக் கொண்டு வெளிப்பட்டுச் சென்று சிவபெருமான் திருக் கோயிற் பணிக்கு வண்டியிழுக்கும் பகடுகளுடன் கலந்திருந்தது. வண்டிக்காரர்கள் அதனையும் வண்டியிற் பூட்டித் திருக்கோயிற் பணிக்குக் கல்லடித்தனர். அப்புண்ணியத்தாற் சதாவிந்தன் பாபம் ஒழிந்தவனாய் நானுந் திருமாலும் வணங்கும் பேறு பெற்றனன். சிவபுண்ணியத்தின் பெருமை செப்பற்கரியது.'

7. பரத்துவாச முனிவர் பகர்ந்தது.

சித்திரன் கதை

இங்ஙனம் கவுசிகர் கூறிய பின்னர், பரத்துவாசர் பகர்வார்;

பொற் கொடியே! முன்னொரு காலத்தில் ஓரிடைச் சிறுவன் ஒரு கல்லைச் சம்புலிங்கம் என வைத்துத் தீர்த்தம், மலர், நறுமணப் பொடி, ஆடை, மணி, தூபம், தீபம், அன்னம், வெற்றிலை, பாக்கு, கண்ணாடி, குடை, வெண்

சாமரம், நிருத்தமிடுவோர், கீதம் இசைப்போர், பலவகை இயங்கள் வாசிப்போர் என்னும் பதினாறு உபசாரங்களும் மண்ணினால் அமைத்து அருச்சனை புரிந்தான்.

இச் சிறுவனின் பேரன்பைச் சிவபிரான் அறிந்து மகிழ்ந்து, குன்றாத செம் பொன்னும் வாழ்வும் அருள் புரிந்து, அச்சிறுவன் வழிபட்ட லிங்கத்தை ரத்ந லிங்கமாக்கியும் அவன் இடத்தைச் சோதி மாமணிக் கோயிலாகவும் ஆக்கித் தாமும் வெளிவந்து காட்சி நல்கினார். அச் சிறுவன் விரைந்து பணிந்து பலவாறு போற்றினான். கண்ணுதற் பெருமான், 'கிண்கிணிச் சிற்றடிக் குழந்தாய்! இன்றுமுதல் உன் பெயர் சீதரன் என நிலைபெற்று வழங்கும். நின் குலத்திலே நந்தகோபன் என்பானிடம் திருமால் திருமகனாக வருவான்' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். இவ்வற்புதத்தைக் கேட்ட பலரும் வந்து சீதரனை வணங்கிப் போற்றினர். அரசர்கள் பலரும் வந்து வணங்கி வாழ்த்தினர். அந்தணாளர்களும் அமரர்களும் அவனைத் தழுவி ஆசி கூறினர். பிறகு, சீதரன் பல்லாண்டு எல்லாப் போகமும்பெற்று வாழ்ந்து இறுதியில் நித்யமான திருக்கயிலையைச் சேர்ந்தான்.

ஆதலால், சிவ புண்ணியமான்மியம் அரிய பாவங்களையெல்லாம் போக்கும் என்று அறிக. சிவ புண்ணியம் செய்வோர் அடையும் பேற்றைச் சிவபெருமானே அறிந்துரைக்க வல்லார்.

இவ்வாறு பரத்துவாசர் செப்பினார். அப்பெண்ணணங்கு அம்முனிவர்கள் எழுவரையும் பன்முறை வணங்கிப் போற்றினாள்; அவர்களும் ஆசி கூறிச் சென்றனர். பின்னர், மெய்த்தவம்புரிந்த அப்பெண்மணி தன் திரண்ட செல்வத்தைக்கொண்டு, ஆங்காங்கே சிவபெருமானுக்குத் திருக்கோயிலும், திருக்கோயில் வழிபாட்டுக்குரிய நிதியும், பொன் மண்டபங்களும், கோபுரங்களும், மேடைகளும், மலர் வாவிகளும், கிணறுகளும் அமைத்துத் திருத்தேர் விழா முதலியன செய்தாள். இவ்வாறு நீண்டகாலம் சிவஞானத்துடன் திருப்பணி புரிந்து வாழ்ந்து சிவலோக வாழ்வு பெற்றுப் பேரின்பம் அடைந்தாள்.

அத்தியாயம் 43.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி.

4. காசிப முனிவர் கூறுவது.

போகாங்கன் கதை

அறுசீர் விருத்தம்

1058. திங்களங் கண்ணிவனை யும்பவள வீர்ஞ்சடைச்
செல்வன்மகிழ் புண்ணியமெலாம்
எங்கணும் பெருமகிழ் விழைத்தருள் தவக்கொடியை
யிருவிழி களிப்பநோக்கிப்

புங்கவரை யுந்தயித் தியர்முதலி னோரையும்
    பூத்த[கா சிப]னவையறு
[சங்கை]யறு பாவங்கள் தீர்க்குமாக் காதையினைத்
    தகுதியாற் சாற்றினனரோ. (1)

1059. செறிகுரற் சுரிசங்க மீன்றவெண் டரளஞ்
    செழும்பவள வைடூரியம்
எறிகதிர்ப் பதுமரா கம்புருட ராகமற்
    றிந்த்ரநீ லம்மரகதங்
குறிவெயிற் கற்றைகால் வச்சிரம் புரையொருவு
    கோமேத கம்பொன்மறையே
மறிதிரைக் கரமெடுத் துததிரா சன்றூய
    வண்படும்வே தார ணியமே. (2)

1060. கங்கைமா நதியுச்சி யம்போது தொறும் வந்து
    காமிய மெலாம்பெறுகவே
பொங்குநீர் பெருகுமணி கன்னிகையில் மூழ்குமப்
    புனிதவே தாரணியம(து)
எங்குமா பாதக னெனுங்குரிசில் போகாங்கள்
    எண்ணரிய பாதகமெலாம்
அங்கடா ததுசெய் திறந்தனன் காலர்கொண்
    டளறிடை யடித்தி டர்செய்தார். (3)

1061. கறைமிடற் றிறைதூதர் வந்துவிரி சுடர்மணிக்
    கதிர்விமா னத்தி லேற்றிப்
பிறைமுடிக் குழகன்மகிழ் சன்னிதி விடுத்தனர்
    பிறங்குசிவ தூதர் தம்மை
யறைகழற் காலதூ தர்கள்பணிந் துளம்வெருவி
    யங்கமிகு கம்பி தமதாய்க்
குறையிரந் தவன்முனஞ் செய்தபுண் ணியமேது
    கூறுமி னெமக்கென்றனர். (4)

1062. நிரையிதழ் முறுக்குவரி செம்பொற் கடுக்கையணி
    நின்மலன் தூதர் மொழிவார்
புரைபுரியு மிவனுதவு கனகனும் பெயருடைய
    புதல்வனமிழ் தனைய மழலை

1059. உததி ராசன்—வருணன்; தூய் அவண் படும்—அருச்சித்து அங்கு வழி படும்.

உரைசொல்பரு வத்துவிளை யாட்டின்மண லாற்சிவனை
உண்டாக்கி னன்னந்தநீள்
வரையறு பலத்தினால் அவனந்த
அளறொரீஇ வந்துசிவ பதமடைந்தான். (5)

1063 என்றுபர மேசன் கணங்கள் சொலக்கேட்ட
இமயமது தர்கள் பயந்து
நன்றிது வெனத்திரும் பித்தங்கள் பதியின்மிசை
நண்ணினர் தவக்கோதையே
ஒன்றுமறி யாமதலை சிவதருமம் அன்றெலாம்
ஊகித்தறிந்து செய்தோர்
முன்றிகழ் பிதிர்க்கள்கதி யெவரறிவர் என்றபின்
முனிசமதக் கினிகதை சொல்வான். (6)

5. ஜமதக்கினி முனி சொன்ன கதை (துராசாரன், துர்க்குணன் கதை)

1064. பாகடுசொல் வஞ்சியிர விடைகணவ னொடுமலர்ப்
பாயலிற் கலவி யின்மடற்
பூகமிட றெழுகுரற் கிறியிகுளை பகல்முனம்
பூவைக் குரைத்த வாயைத்
தாக கிளி யாலடைக் கத்தோழி மூரலாற்
சந்த்ரகாந் தக்க லமுதம்
ஆகவுகு நீருண்ட கிளியருகு மணிமேடை
அணிகொள்சந் திரந கரமே. (7)

1065. அங்ககரி லிறை விசுத் தற்கோ ரமைச்சனுண்
டவனீன்ற புதல்வர் மூவர்
தன்னிலிரு வர்கள்கொடும் பாவிக ளவர்க்குளோர்
தனயன் துராசா ரன்மற்(று)
அன்னியன் துர்க்குணன் என்றறிந் தீன்றருள்
அமைச்சன் புறம்பாயிவர்க்
கென்னஇரு மனையெடுத் திவர்களைக் கொடுபோ
யிருத்தநொந் தவர டைந்தார். (8)

1063. சிவதருமமன்றெலாம்—சிவதருமமாத்திரம் அல்ல, எல்லா தருமங்களையும்.

1065. இவர்க்கென்ன—இவர்களுக்கென்று.

1066. பருவரலி னோடுசில நாளிருந் தேகொடும்
பாதகந் தனைநாடியே
ஒருவிப் படர்ந்துகள வின்பொருட் டாலிச்சை
யுடன்வேண்டு நெறிசென்றபோ(து)
இருவரும் வெள்ளிடை வெயிற்றுக்க வியர்வெழுந்
திடருறும் போது நெறியில்
ஒருமறைய வன்கடிது தோட்கோப்பி னோடுவந்
துற்றவனை யெதிர்நோக்கினர். (9)

1067. சென்றுமறை யவனரு கடைந்தொரு தடக்கையாற்
சிக்கென அறைந்து பற்றித்
தொன்றுமுறை யறத்தூரப் போயவன் சுமையிலுள்
ளதுகளைச் சோதிக்கவே
துன்றுசுண் ணும்புக்க லும்மப்ப
முங்கண்டு சுண்ணும்பு தனையெறிந்தே
ஒன்றிய விருப்பொடப் பந்தின்று வேதியனை
ஒருமரத் திற்பி ணித்தார். (10)

1068. இருவரு மகிழ்ந்திச்சை யொடுகளவி லேதினம்
இப்படிபன் னாள்தி ரிந்து
வெருவரலி லாதா றலைக்கும் பகற்கண்ட
வேந்திளிவர் முடித டிந்தான்
கருவரைப் பகடுகைக் குங்கால தூதரிக்
கயவரை நெருங்கப் பிணித்(து)
ஒருகணப் பொழுதிலிய மன்சபை விடுத்தபோ
துடன்மறலி நோக்கி யறைவான். (11)

1069. இருவினைப் பயனில்வரு பயனுணர்ந் துள்ளபடி
யெழுதுசித் திரகுத்த! பார்த்(து)
ஒருமையுட னிவர்கள்புரி புண்ணியம் அனைத்தையும்
உரைத்தியென வேக ணக்கிற்
கருதுமுழு வதுநோக்கி எந்தைகேள் பாதகக்
கயவர்க் கனுத்து ணையுமே
தருமமிலை யிவர்வனத் தெற்றியசுண் ணும்பினைச்
சரிதைபடர் வோரெ டுத்தார். (12)

1066. தோட்கோப்பு—கட்டுசோறு.

1069. சரிதை—வழி.

1070. ஆருயி ரனைத்தும் புரிந்தபா வச்சலதி
யன்றுதறி யக்கணத்தில்
வாரமொடு தமதுரு வழுங்குவிச் சுவநாதர்
மண்டபத் திற்சேர்த்தனர்
சேரவரும் அப்புண்ணி யத்தினுற் பாவங்கள்
தீர்ந்தன ரெனும்பொழுதுவெங்
கோரமொடு சங்கரன் தூதர்நூ ருருநூறு
கொணர்விமா னத்த னுகினர். (13)

1071. தருமரா சனுமுள் நடுங்கிவரு சிவதூதர்
தமைநோக்கி உடனெ ழுந்தே
வெருவியிவர் முறைபணிந் தெந்தைமீர்! கேண்மினே
வினையினேன் தூதுவரெலாம்
ஒருசிறிதும் அறியாது செய்த அபராதங்கள்
ஒல்லைநீ விர்கள் பொறுத்தே
கருணைபுரி மின்னிவர்கள் செய்தபுண் ணியமெனது
காலர்கள் அறிந்தி லரமா. (14)

1072. என்றுபல கூற்றுறை யிரந்துதாள் முனம்வீழ்ந்
திறைஞ்சிமீ ளவுமி றைஞ்சி
நின்றனன் பின்னரிய மன்செயப ராதங்கள்
நினையா துடன்பொறுத்து
வென்றிபெற இருவரையும் ஒளிவிசிறு தமனிய
விமானத்தி லேற்றி யம்பொற்
கொன்றைமலர் செருகுசடை யிசர்முன் விடுத்தனர்
குறித்திவர் மகிழ்ந்தி ருந்தார். (15)

6. கவுசிகர் சொன்னது

சதாவிந்தன் கதை

1073. கண்ணுதற் கடவுள்புண் ணியமான்மி யங்களக்
கண்ணுத லறிந்திடுமெனப்
பண்ணவன் உரைத்தபின் புண்ணிய வருங்கதை
பரிந்துகவு சிகனுரைப்பான்.

1070. கோரம்—விரைவு.

1071. முறை—முறைப்படி. அமா—அம்மா.

தண்ணருங் குழலே! முன் ஞளேம கூடா
சலத்திருக் குஞ்ச துமுகப்
புண்ணியனை எவ்வுயிர்க் குங்குரவ னைத்தொழுது
போற்றிசய என்றடைந்தேன், (16)

1074. பங்கய மலர்ப்பொகுட் டிறையையிரு டிகளுடன்
பன்முறை பணிந்தி ருந்தேன்
அங்கணுறை யுங்கணஞ் செறிகுழு வுடன்சூழ
வணிசதா விந்த னிறைநேர்
புங்கவன் அடைந்தனன் சதுமுகன் கண்டெதிர்
பொருக்கென வெழுந்தொடுங்கிச்
செங்கைகள் குவித்துநின் றனலிவனை எண்ணுது
சிறிதுநோக் காதகன்ருன். (17)

1075. சம்புமணி யாலயா டகமேரு வரையினிற்
சார்ந்தன னவன் போனபின்
அம்புய மலர்ப்பொகுட் டிறையிருந் தனனவன்
அருளினுங் களுமி ருந்தோம்
இம்பர்விதி ஏன்நீ எழுந்திறைஞ் சிலையதை
எண்ணுமல் நோக்காமலே
பம்புவிற லாலகன் றவனுர்கொல் என்றேன்
பகர்ந்தனன் மலர்க்குரிசிலே; (18)

1076. பாசடைப் பணைபொதுளு நறுமுடப் பலவினிற்
பருமுட் குடக்க னியில்வீழ்
தேசுடைச் சுளைபறித் துக்குரங் கிருகையால்
தெத்தையென வொக்க டிக்க
வீசுடற் பணிகொத்தி நிறைபசுந் தோகையை
விரித்துச் சதிக்கேற்கவே
தூசுடைக் கணிகையென மயில்நடிக் குஞ்சோலை
சூழ்ந்தசா மந்தநகரே. (19)

1077. சாற்றுமந் நகரிற் சதாவிந் தேனும் பெயர்
தரித்தபுக ழவன்வ றுமையால்
ஆற்றலும் ஒடுங்கிக் கவைக்குளப் படிமயிட
மதுவொன்று கொடுபுறப்பட்(டு)

1075. ஆலை—சாலை.

ஏற்றவிலை வாங்குவோம் என்றுசுற் றினன் விலைக்
கிதையொருவ ருங்கொளாமல்
வேற்றுமுக மாயினர் அவன்பகடு கொடுமையின்
மீண்டுபின் னும்பிணித்தான்; (20)

வேறு (சந்தவிருத்த வகை).

1078. திக்காரு மின்றியிடர் பட்டோனை வந்தொரு
சினத்தே ளெறிந்து யிர்கொள
மைக்கோல வெம்பகடும் அப்போ தகன்றபின்
மணிப்பாசம் வன்பிலறவே
சக்ரேசர் பண்டிமயி டத்தோடு நின்றதிருள்
சற்றேவிடிந்த பகலாள்
மிக்கோர்கள் பண்டியி னடித்தே கருங்கல்நெறி
விட்டா ரறிந்திதையுமே. (21)

1079. கருமபக டனைத்தையும் விரைந்துவிடு வித்தலை
கடைந்தவெவ் விடத்தை நுகர்வோன்
விரும்புசன திக்குமு னெருங்குற விடுத்தபின்
மிகுந்ததொர் பகட்டை யிதுவார்
தரும்பக டெனக்கடி தறிந்தயல் விடுத்தனர்
தளர்ந்தறிவு மற்ற தொருநாள்
உரம்பெற வெடுத்தகல் நெடுஞ்சரி
தரித்ததை யுறுஞ்சக டிறக்கினர்களே. (22)

1080. அக்கல்விம லக்கடவுள் மிக்கநிலை யத்துற
அடுத்ததரு மக்கு றையினால்
திக்கொருவ ரற்றிடு விருச்சிக முறைப்பவுயிர்
செற்றவன் இயற்ற வருபா
வக்குவ டனைத்துமுத றிப்பெருமை பெற்றனன்
வழுத்திடு மெமக்கி றையுமாய்ச்
சக்க [ரமெடுத்] துவலம் வைத்துநிரு தப்படை
சயித்தகட வுட்கு மிறையே. (23)

1081. என்றுகமழ் கந்தமக ரந்தவர விந்தம
திருந்தமறை யந்த ணனெனோ (டு)
ஒன்றுபடு சிந்தையின் உவந்திவை பகர்ந்தனன்
ஒசிந்தஇடை அந்தரி யொர்பால்

1080. நிலையத்துற...பாவக்குவடே...உதறி.

1081. நந்தி—சிவபெருமான்.

என்றுமகிழ் நந்திதரு மந்தனை அறைந்திட
இருந்துமுன் அறிந்தி லனியான்
துன்றுதவ சிந்தைமிகு பைந்தொடி! உணர்ந்துகொள்
தொழுந்தருமம் என்ற னனரோ. (24)

வேறு

7. பரத்துவாசர் சொன்ன கதை.

1082. குறித்தவி சன்கழல் நினைத்தெனு ளுங்கதி
குறிக்கொணு நன்த ருமமே
பொறித்தவா ரங்கொள பலத்தினு லும்புவி
புரக்கவே நின்று செய்மினே!
செறித்தபே ரன்புடன் உரைத்தல்கேள் என்றயல்
செழித்தபா வங்கள் தமையே
பறித்துவீ டிம்பரின் அளிக்குமோர் நன்கதை
பரத்துவா சன்பு கலுவான், (25)

சீதரன் கதை.

எண்சீர் விருத்தம்.

1083. தாயி னேடொரு கோபாலன் சேய்முனஞ்
சம்பு லிங்க மெனவொரு கல்லையுந்
தோய நாண்மலர் கந்தங் கலைமணி
தூப தீப மனம்பா கடைபொடி
நேய ஆடிக விகைவெண் சாமரம்
நிருத்தங் கீதம் பலவிய மெண்ணிரண்(டு)
ஆய நல்லுப சாரங் கணமுத
லானதும் மண்ணி னுல்வைத் தருச்சித்தான். (26)

1084, பத்தி யால்விளை யாட்டினுல் இப்படிப்
பண்ணும் பூசை பரமேசன் கண்டுமுன்
சித்தி யாகிக் கருணையி னுற்குன்ருச்
செல்வன் வாழ்வுசெம் பொற்குவை நல்கியே

1082. செய்மினே! —செய்கின்ற மின்னே (மின்போன்றவளே!)

1083. தோயம்—நீர்; கலை—ஆடை; அனம்—அன்னம்; பாகு அடை—பாக்கு வெற்றிலை; ஆடி—கண்ணுடி-பதினுறு உபசாரங்கள், கணம்-தண்டுலபிச்சை.

முத்தி யாவர்க்கும் நல்குஞ் சிவலிங்க
முழும ணித்திரு மேனிய தாக்கியே
சத்தி யாமவன் இல்லையுந் திப்பியச்
சோதி மாமணி யாலயம் ஆக்கினன். (27)

1085. அங்க ணத்தினில் இப்படி யேபுரிந்
தம்பு யப்பொகுட் டாசனன் வெங்கறை
மிக்க நற்புயங் கத்தவி சிற்றுயில்
விண்டு நேடியுங் காணரி தாகிய
முக்கண் நித்த னவன்முன் கருணையான்
முந்தி யேவெளிப் பட்டனன் நேர்கண்டு
திக்கெ னும்படி வீழ்ந்து வணங்கித்
திரும்ப வும்வணங் கித்துதி செய்தனன். (28)

1086. இந்த நற்செயல் கேட்டுவிண் ணித்திலம்
எற்றி வீசு திரைக்கடற் பாரெலாம்
மந்த ராசலத் திண்புய மேற்கொளும்
மன்னர் யாவரும் வந்து அதிசயித்(து)
இந்து சேகரன் பாதார விந்தமுன்
இறைஞ்சி யேத்தினர் செஞ்சடை மாமுடி
யந்த ணாள ரமரர் கலுழ்ச்சியாய்
அங்க முந்தழீஇ யாசியுஞ் சொற்றனர். (29)

1087. செய்ய கண்ணுதற் றேவுரைக் கும்மணிச்
செம்பொற் கிண்கிணிச் சிற்றடி மைந்தனீ
வைய முய்யவே சீதர னென்றுபேர்
மன்னி நின்று முதலாய் மருவுதி
துய்ய நின்குல மீது பசுநிரை
சூழ வாழ்நந்த கோபனும் வந்தனன்
தையல் பால்வரி வண்டுமு பைந்துழாய்த்
தாம வண்ணன் தனயனும் ஆகுவான். (30)

1088. என்று ரைத்து நுதற்கட் குழகனும்
இம்ப ரியாவருங் காண மறைந்தனன்
பின்றை மற்றிவன் தண்டா மகிழ்ச்சியாய்ப்
பெட்பி னேடுபல் போகம் அருந்தினன்

1085. கறை—விஷம். புயங்கம்—பாம்பு.

1086. கலுழ்ச்சி—மகிழ்ச்சி.

மன்றல் வீசு மலர்க்கற்ப காடவி
மல்கு பூந்திரு வைபவஞ் சேர்வெள்ளிக்
குன்ற மாய்ப்பர மாய்நித் தியமதாய்க்
கோல மாங்கயி லாயங் குறுகினான், (31)

1089. ஆத லாலரும் பாவம் அனைத்தையும்
அகற்றி டுஞ்சிவ புண்ணிய மான்மியங்
காத லோடெவ ராகிலுஞ் செய்கின்றோர்
காட்சி யாமவர் புண்ணிய வைபவம்
ஏதெ னக்கண் டெடுத்துரை செய்வதற்
கீச னேயறி வன்னுண்மை யென்றுரேழ்
மாத வக்கிழ வோர்சிவ புண்ணிய
மான்மி யஞ்சொல வஞ்சிகேட் டேத்தியே. (32)

1090. செங்கை கூப்புபு நின்றனள் நற்றவச்
சீல ராமேழ் முனிவரும் போற்றிய
மங்கை தன்னையே நோக்கியா சிசொல்லி
வார மாய்ச்சிவ புண்ணியம் நீபுரி
கங்கை வேணிக் கடவுள் கருணையெக்
காலும் நிற்குள தாகுக வென்றவள்
சங்கை தீர வுரைத்துப் பொருந்தெனத்
தத்தம் ஆச்சிர மங்களுற் றாரரோ. (33)

1091. பின்னர் மெய்த்தவக் கோதைதன் தேசமே
பின்னு கன்றன ருச்சனைக் கென்றுளம்
உன்னி யாவையுங் கற்பித் தமலனுக்
கோங்கும் ஆலயம் பூரியங் கெங்கெலாம்
மன்ன வேயெடுத் தாடக மண்டபம்
வச்சி ரமணிக் கோபுர மேடைகள்
பொன்னி தழ்மரை வாவிகள் கூபங்கள்
பொங்கு நீர்த்தடா கங்களுண் டாக்கினாள்; (34)

1092. கண்ண கன்புவி யெங்குமங் கங்கெலாங்
கற்றை யஞ்சடை கோமானுக் கோங்கிய
விண்ண ளந்த கொடுஞ்சியந் தேர்முதல்
வேண்டும் பல்வித மான விழாவமைத்(து)

1091. பூரி—மிகுதி.

உண்மை ஒழிந்திடு பத்தியி னாற்புரிந்
தோவில் பாசபந் தக்கட்டின் வேரறப்
பண்ணு கின்ற சிவஞான முற்றென்றும்
பல்வி தப்பெரும் போகம் அருந்தினாள்; (35)

1093. நறவு கொப்பளிக் கும்பொற் றகடவிழ்
நாண்ம லர்க்கடுக் கைச்சடை யோனுல(கு)
உறவ தின்துபின் மிக்க மகிழ்ச்சியோ
டும்பர் மாமுனி [வோர்]கணஞ் சூழ்வே
திறன்மு றாஅதி ரப்பாரி சாதப்பொற்
செழும லர்க்கன கமாரி பொழியச்சென்(று)
அறவு ருக்கொளி சன்சன்னி திபண்ணுள்
ஆர்ந்து பேரின்ப வாரியின் மூழ்கினாள். (36)

அத்தியாயம் 44.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

சூதமுனிவர் சொல்கிறார்:

முனிவர்களே! சிவபுண்ணியச் செயல் பாவங்கள் அனைத்தையும் ஒழிக்கும் கதையொன்றைக் கேளுங்கள்:

சோமதன் கதை (வாழைக்குலை திருடியது)

வீரட்டமெனும் நாட்டில், சிமந்தம் என்னும் நகரில் வாள்வித்தை வல்ல ஆசானுடைய மகன் சோமதன் என்பவன் கணிகையரைமருவிக் காலங் கழித்தான். சில ஆண்டுகளுக்குப்பின் அவன் புட்கர நகரை அடைந்து, வாழைக்குலையொன்றை இரவில் திருடித் தலைமீது சுமந்து போம்போது, காவலர் கண்டு அவனைப்பிடித்து மன்னவன் முன் விடுத்தனர். அரசன் இவனை நன்றாக அடிப்பித்துக் கையை அறுத்துவிட்டுத் துரத்திவிட்டான்.

ஆயினும், திருட்டெண்ணம் விலகாத சோமதன் மறுமுறை அரசன் அரண்மனைத் தோட்டத்திலேயே வாழைக்குலை திருடியபோது அகப்பட்டு முழுங்கைவரை கைகளும் முழங்கால்வரை கால்களும் வெட்டப்பட்டு உயிர் விட்டான்.

உடனே கால தூதர்கள் அவனைக் கட்டிக்கொண்டு சென்று இயமன் முன் விடுத்தனர். இயமன் "இவன் கொடும்பாவம் புரிந்தனெனினும், ஒரு முறை அரண்மனைத் தோட்டத்தில் திருடிய வாழைக்குலையைத் தன்னைத்

1093. கடுக்கை—கொன்றை; மூழ்கினாள்—சற்புத்தி மன்னன்மகள் மூழ்கினாள் (1014—1017 பாடல்களைப் பார்க்க).

தூரத்திவந்த காவலர்க்கஞ்சி, ஆடகேசர் ஆலயத்திலே எறிந்துவிட்டு ஓடினன். அந்தப் பழக்குலை ஆடகேசருக்குச் செய்யும் அபிடேகத்திற்குப் பயன் பட்டது. அதனல் இவன் செய்த பாவமனைத்தும் பறந்தது. இவனை விட்டு விடுங்கள்" என்று தூதவர்க் குரைத்தான். அந்தகன் தூதரும் அவ்வாறே அவனை விட்டு விட்டனர். அவன் உயிர் பெற்றவுடன் இயமபுரியில் நிகழ்ந்ததை இயம்பினன். அதைக்கேட்ட யாவரும் வியப்பெய்தினர். (பின்னர் அவன் உயிர் நீங்க) சிவகணங்கள் விமானத்துடன்வந்து அவனை அதில் ஏற்றிச்சென்று சிவபெருமான் திருமுன் விடுத்தனர்; அவன் மீளாப் பெருவீடெய்தினன்.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

அத்தியாயம் 44.

எழுசீர் விருத்தம்

1094. விரிசுடர்க் கற்றை வெண்ணிலா இமைத்த
வெண்பொடி பழுத்ததூய் மேனிப்
புரிசடை முடிக்கண் டிகைமணி மார்பப்
புண்ணியச் சூதமா முநிவன்
திரிமலம் அகற்றுந் துறவிர்காள்! உரைக்கேன்
சிவதரு மங்கள்கேட் டவர்க்கும்
அரியபா வங்கள் அனைத்தையும் ஒழிக்கும்
அருங்கதை கேண்மினென் றறைவான். (1)

சோமதன் கதை

1095. விரிந்தநீ லங்கண் மேய்ந்துதன் கடைவாய்
வீழ்கவே மேதிகன் றுள்ளிச்
சொரிந்தபால் தேங்கும் வாவியிற் கமலத்
தூவியன் னச்செழும் பார்ப்புப்
பிரிந்தநீ ரறப்பால் பருகியே யீன்ற
பேடிரை வாய்பெயத் தெவிட்டி
திரிந்துலா விக்கண் படுத்திடும் பணைசூழ்ச்
சீர்த்திவீ ரட்டமாந் தேசம். (2)

1095. பார்ப்பை யீன்றபேடு; பார்ப்பின் வாயில் இரைபெய்ய. பணை—வயல்; நீர்நிலை.

1096. குணதிசை யுதித்தே வேர்விழு மிருட்காற்
கொள்ளைசித் துலகொளி பரப்பும்
மணமலர் வனச நாயக ரிருவர்
வட்டமா மதியிரு புறத்தும்
அணவின ரெனக்கண் டதிசயித் திராகும்
அங்கனுற் றதென்ன இளைஞர்
எணமினு னனங்கா திருகுழை முடியொத்
திருந்தசீ மந்தமா நகரே. (3)

1097. அங்கண்வாட் குரவன் அரும்படை விஞ்சை
அறிந்தவன் அவற் கொரு தனயன்
துங்கமாம் புயச்சோ மதன்கணி கையர்பொற்
சுணங்குபூத் தழகுவார்ந் தொழுகுங்
கொங்கைமேற் றழுவிக் கனிந்தமு துகுக்குங்
கொவ்வைவா யிதழ்முறை பருகி
இங்கிதம் பெருகிச் சிறிதுநாட் கழித்தங்
கிருந்தபின் அந்நகர் தணைந்தான். (4)

1098. பாயிளங் கதிர்கால் நுழைகலாப் பராரைப்
பைந்தழை யிருள்படப் பொதுளுஞ்
செய்யர் பொழில்சேர் கச்சப அகடு
திங்களென் றும்பல்தோ டலர
ஆயிர இதழ்த்தா மரைமதுப் பருகும்
அளிகளவ் வாம்பல்கண் படுக்குந்
தாயநீர் வாவி கமழ்ளற் பழனஞ்
சூழ்ந்திடும் புட்கர நகரில். (5)

1099, சொழமட்ற் பருஉத்தாட் சுருள்விரி குருத்துச்
சேண்முக டளவுநெட் டிலைக்கால்
முழுமுதூற் கதலிக் குலைதலை சாய
மூசுதங் கத்தக டிழைத்துப்

1096. அணவுதல்—அணுகுதல்; வட்டமாமதி—முகம்; எண—எண்ண; மின் ஆனனம்—மின்னார் ஆனனம். ஆனனம்—மதிக்கும், இருகுழை—இரண்டு சூரியர்க்கும், (பின்னல்) முடி ராகுக்கும் உவமை.

1098 'இருள்படப் பொதுளிய பராரை மராஅம்'' —திருமுரு.
கச்சப அகடு திங்களென்று—''அள்ளற்காராமை அகடு வான் மதியம் எய்க்க'; ''—சம். தேவா III—199-1. அளல்—அள்ளல்—சேறு.

1099. கழுது—பேய்,

பழுதறப் பொதிந்த தெனுங்கன தாற்றிற்
பழுத்தலைங் கனிக்குலை தடிந்து
கழுதொடு கழுது கையறை யிருள்கூர்
கங்குலிற் களவினுற் கொணர்ந்தான், (6)

அறுசீர் விருத்தம்

1100. சிரத்திற் பொறுத்து வழிவிலக்கித்
திரும்பி நடக்கும் போது கண்டு
துரத்திப் படருங் காவன் மைந்தர்
தொடர்ந்து முடுகிப் போய்ப்பிடித்துக்
கரத்திற் பிணித்துச் சுமையுடன்பொற்
கதிர்மா முடிமன் னவரவைமுன்
உரத்திற் செலவிட் டனரிவனை
உறுக்கி நிருபன் புடைப்பித்தான், (7)

எழுசீர் விருத்தம்

1101. சோரரியா வரையும் வேரறக் களைந்து
தொல்லுல கன்னைபோற் பரிக்கும்
வீரவேற் றடக்கைப் புரவலன் சோரன்
விறற்பெருந் தடக்கையோன் றறுத்துத்
தூரவே துரத்தி விட்டனன் பின்னுந்
தொல்வினை பிடர்பிடித் துந்த
வாரமாய் மீள வந்திராப் பகலாய்
வன்கள வேபுரிந் தனனல், (8)

1102. கரும்புபூங் கணுவிற் காய்த்துமேற் பழுத்துக்
கனிந்தமு தொழுகியெவ் வுயிர்க்கும்
விரும்புசெந் தேறல் போன்மெனத் தருக்கள்
வினைபலம் வெடித்துவீ ழுருவிச்
சுரும்புவாய் மடுத்துப் பருகுபிங் காரத்
தோப்பிறை மந்திர புரத்தில்
அரம்பைநாட் பழங்கள் அனுதினந் திருடி
அயல்படர் காலையோர் போதில், (9)

1102. மந்திரம்—அரண்மனை.

1103. கோக்கரித் திடிபோற் குமுறியார்ப் பரித்துக்
கொண்டுகா வற்செய்வோர் கண்டு
சிக்கெனப் பிணித்துக் குரிசில்பே ரவையிற்
சேர்த்தனர் அரசனும் நோக்கி
மிக்கள வருக்குங் கள்வனும் இவனை
விறற் கைகள் முழங்கைமட் டிருதாள்
ஒக்கநீண் முழங்கால் மட்டுமே தடிமின்
ஒல்லையென் றுரைத்திடத் தடிந்தார். (10)

1104. படருழந் துடலம் பதைபதை பதைத்துப்
பறந்தலை மற்றநா ளுயிர்விட்
டிடருறும் இவனை மறலிதூ துவர்கொண்
டெற்றியே புடைத்துடன் கொடுபோய்க்
கடவுளாம் இயமன் அருகுவிட் டனரிக்
கள்வன்வெம் பாவமுள் தேர்ந்து
நடுவனுந் தருமன் தூதரை நோக்கி
நன்மொழி கருணையால் உரைத்தான். (11)

1105. எடுத்துரைக் கரிய பாவமத் தனையும்
இக்கய வன்தினம் இழைத்தே
அடுத்தொரு போது புரவலன் கதலி
அடவியிற் சென்றரம் பைத்தா(று)
ஒடித்திருங் களவில் திரும்பியோர் வழியில்
ஓடினன் அவனையே கண்டு
கடித்தவா ளெயிறு நக்கியே தொடர்ந்து
காவலர் துரத்தியே படர்ந்தார், (12)

1106, கயவனுண் ணடுங்கிக் கடிதுபோம் பொழுதக்
கனியெலாம் பயத்தினுல் நெற்றி
நயனனும் ஆட கேசனு லயத்தில்
நண்ணவே முன்செய்புண் ணியத்தால்
அயலெறிந் தகன்றுன் மற்றைநாட் காலை
அங்கணுற் ருேரர சனுக்கிச்
செயலையுங் கள்வன் கனிகளா லயத்திற்
சேரவெற் றியதையும் உரைத்தார். (13)

1103. களவருக்குங் கள்வன்—கள்வர்க்குங் கள்வன்,

1107 அரசனுங் கதலிக் கனிபராத் பரனும்
ஆடகே சனுக்கபி டேகம்
பரவியே புரிமின் என்றுரைத் தனனப்
பலங்களி யா வையுமபி டேகத்
திரவியத் தோடு பண்ணினர் அந்தச்
சிவதரு மத்தினல் அனந்தம்
விரவுபா வங்கள் அகன்றன நீவிர்
விரைந்துவிட் டிருமினென் றுரைத்தான். (14)

1108. அந்தகன் புரியா ணையைத்தலை மேற்கொண்
டக்கணம் அவனைமுன் பிணித்த
பந்தம்விட் டொல்லை அனுப்பினர் அவன்கண்
படுத்துணர்ந் ததுவென எழுந்து
புந்தியுண் மகிழ்ந்து தன்செயல் அனைத்தும்
புகன்றனன் கேட்டுமன் னவரும்
மைந்தரும் உள்ளம் அதிசயித் தனரவ்
வைகல்வந் தனர்சிவ கணத்தோர். (15)

1109. அள்ளிலைச் சூலம் ஏந்தியா ணையினல்
அணிவிமா னத்திவன் றனையங்(கு)
உள்ளவர் எவருங் கண்டதி சயிக்க
உவப்புடன் ஏற்றியே கொடுபோய்ப்
புள்ளிமான் அதள்சேர் அண்ணல்முன் விடுத்தார்
பொங்குளம் மகிழ்ந்தவன் நெடுநாள்
விள்ளரும் வேட்கை யால்வழிந் தனன்பின்
மீண்டிடா முத்தியும் அடைந்தான். (16)

அத்தியாயம் 45.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

சூதமுனிவர் கூறுகின்றார்:—

மாதவம் புரியும் பல முனிவர்கள் கந்தமாதன வெற்பை அடைந்தனர்; அங்கே கண்ணுவமுனிவர் வர அவரை முனிவர்கள் வணங்கித் தாங்கள் சென்ற இடங்களில் ஏதேனும் அதிசயம் உண்டோ எனக், கண்ணுவர் உரைக்கின்றார்.

கண்ணுவர் உரைத்த கதை, கார்க்கவன்—வயிணவன் கதை
(நெய்விளக்கு ஏற்றிய தருமம்)

மாளவதேயத்தில் கலியாணபுரம் என்ற நகரில் வணிகர்குலத்தில் கார்க்கவன், வயிணவன் என இரண்டு கொடும்பாவிகள் இருந்தனர். அந்த வஞ்சர்கள் பகற்போதிலே வணிகருடன் கூடிச்சென்று பொருளீட்டிவந்து இரவில் வளநிதி உடையோரை வீட்டுக்கு அழைத்துவந்து, உபசாரம் செய்து, வஞ்சகமாக அவர்களைக் கொன்று அவருடைய பொருள்களை எல்லாம் கைப்பற்றுவர்; வனத்திற்சென்று வழிபறி செய்து ஒன்றும் அறியாதவர்போலப் பகலில் மற்ற வணிகருடன் கலந்திருப்பர். ஒருநாள் ஓரிடைச்சி வீட்டில் பொருள் மிக உடைய இடையர் பலர் இருப்பதை உணர்ந்து, இக்கள்வா இருவரும் அங்குப்போய் இடையர்கள் தூங்கும்போது அவர்கள்மீது மயக்கப் பொடி தூவி அவர்கள் கையிலிருந்த பொருள்களையும் இடைச்சி வீட்டில் இருந்த பொருள்களையும் கவர்ந்துகொண்டு, பொருளைப் பங்கிடுவதற்காகக் காட்டுக்குள் வெகுதூரஞ் சென்று, அங்கே பூஜையின்றிக் கிடந்த ஒரு சிவன் கோயிலை அடைந்து, இடைச்சி வீட்டிலிருந்து கொண்டுவந்த ஓர் அகலில் நெய்விட்டுத் திரியிட்டு அங்கு ஏற்றிவைத்துப் பொருளைப் பங்கிட்டுக்கொண்டு ஊர் சேர்ந்தனர்.

பொழுது விடிந்ததும் இடையர்கள் மயக்கம் தெளிந்து விழித்துக் கொண்டு, களவுபோனதை அறிந்து கூக்குரலிட்டனர். ஊர்க்காவலர் வந்து கள்வர்களின் அடிச்சுவடு பற்றித் தொடர்ந்து சென்று கள்வர்களைக் கண்டுபிடித்து மன்னவன்முன் விட்டனர். அரசன் கள்வர் இருவரையும் கொலைசெய்யப் பணித்தான். அவர்கள் அங்ஙனம் கொலையுண்டதும் சிவகணங்கள் விமானத்துடன் வந்து அவ்விருவரையும் ஏற்றிக்கொண்டு போய்ச் சிவபிரானது சந்நிதியில் விட்டனர். இடைச்சி வீட்டில் திருடிய நெய்யாற் சிவன் கோயிலில் விளக்கேற்றிவைத்த சிவதருமமே அவர்களைச் சிவலோகத்திற் சேர்த்தது.

இவ்வாறு கண்ணுவர் கூறியதைக்கேட்ட முனிவர்கள் வியந்து சிவ பெருமானது திருவடியை வாழ்த்தினர்.

வாமதேவ முனிவர் கூறிய கதை—கண்டகன் கதை
(குளத்திற் சேறு எடுத்த தருமம்)

அப்போது வாமதேவ முனிவர் மெய்சிலிர்ப்பக் கூறுகின்றார்:

குண்டல தேயத்தில் கபித்தம் என்னும் நகரில் கொடியவனான கண்டகன் என்பவன் நாட்டிலும் நகரிலும் களவுபுரிந்து வந்தான். அவ்வாறு ஈட்டிய பொருளை யெல்லாம் மச்சேச்சுரம் என்னுந் திருக்கோயிலைச் சார்ந்த திருக்குளத்திற் சேற்றில் ஒளித்து வைத்திருந்தான்.

ஒரு நாள் அப்பொருளை எடுத்துவரச்சென்று, வைத்த இடந் தெரியாமையால், அக்குளத்தின் சேற்றை யெல்லாம் வெளியில் கொணர்ந்து போட்டுத் தேடி, இறுதியிற் பொருள் கிடைக்க எடுத்துச் சென்று நெடுநாள் மகிழ்ச்சியுடன் அனுபவித்தான். அவன் இறந்தபின் சிவகணங்கள் அவனை விமானத்தி லேற்றிச் சிவலோகத்திற் சேர்த்தனர். அவன் சிவலோகம் சென்றபொழுது அரம்பை மாதர் அட்டமங்கலங்கள் ஏந்தி, பலவித உபசாரங்களுடன் அவனை அழைத்துச் சென்றனர். சிவலோகம் அலங்கரிக்கப்பட்டு அவனை எதிர் கொண்டது. இதைக்கண்ட நான் இவன் யார் என்று சிவகணங்களைக் கேட்டேன்; கணங்கள் இவன் சிவன் கோயிற் குளத்தின் சேற்றை வெளியேற்றிய சிவதருமஞ் செய்தவன் என்றார்கள். அறிந்தோ அறியாமலோ செய்யும் சிவ புண்ணியத்தால் எத்தகைய பாவங்களும் விலகும்; சிவலோகமும் சித்திக்கும்.

சதானந்தர் சாற்றுவது.

சோபனன் கதை. (சிவ பூசைக்கு மலர் அளித்த தருமம்.)

பின்பு, சதானந்தர் ஒரு கதை கூறுகின்றார்:.

காம்பிலிய நாட்டில் குந்தாபுரம் என்னும் நகரில் தீராவறுமையனான சோபனன் என்னும் மறையவன் இல்லந்தோறும் பிச்சை எடுத்து வயிறு வளர்த்து வந்தான். அவனை முகுந்தேசனும் சிவ பெருமானை வழிபடும் சைவ மறையவர் ஒருவர் ஒரு தண்ணீர்ப் பந்தலில் மழைக்குத் தங்கியிருந்தபோது கண்டார். அவரை அம் மறையவன் வணங்கித் தன் வறிய நிலையை உணர்த்தினான். அவர் மிகவும் இரங்கி, "அஞ்சாதே, திக்கற்றவர்க்கு முக்கட்பெருமான் செல்வம் அருள்வார். நீ இன்று தொட்டு ஒரு நந்தவனம் அமைத்து அங்கு மலரும் மலர்களை வைகறையில் எடுத்து வைத்து முகுந்தேசப் பெருமானுக்கு நல்கி வருக; யாம் அம்மலர்களால் அருச்சனை புரிவோம். அவ்வாறு புரியின் சிவபெருமானது அருள் கிடைக்கும்; இம்மையில் அளவற்ற செல்வமும் மறுமையில் அழியாச் சிவபதமும் எளிதில் எய்தும்" என்று இனிய மொழிகளால் இயம்பினார்.

சோபனன் அவ்வாறே நந்தவனம் அமைத்து, காலையில் மலர் கொய்து முகுந்தேசன் அருச்சனைக்குப் பயன்பெற நல்கினான். அம்மலர்களால் அரனடி அருச்சிக்கப் பெற்ற அன்றைப் பகலே இந்திரன் சோபனனிடம் வந்து, சிறந்த தேவாமுதத்தை அவனுக்கு ஈந்து. 'அன்ப! நீ இவ்வுலகிலே நெடுநாள் இம்மைப் போகங்களெலாம் இனிதே நுகர்ந்து, இறுதியில் இந்திரலோகம் வருக!' என மகிழ்வுடன் வாழ்த்திச் சென்றான்.

சோபனன் வியந்து, விமலனடியை மனத்திலே வாழ்த்தி, வாவியில் முழுகித் தூயனாகி மேலும் மலர் கொய்து சென்று தேசிகர் கையில் நல்கினான்,

அவரும் அம்மலர்களை அத்திவண்ணர் செஞ்சடைமுடிமீது அணிவித்தார். அப்போது மங்கைபங்கர் சோபனன்முன் எழுந்தருளி இரங்கி நோக்கி, "மைந்தனே! மலர்வனம் அமைத்து மலர்கொய்து எமக்கு நல்கினை. யாமும் அவற்றை முடிமீது மகிழ்வுடன் ஏற்றோம். உள்ளன்புடன் உவந்து செய்த இத்திருப்பணியின் பயனாக இவ்வுலகிலே ஈடற்ற நலம்பெற்று வாழ்ந்து, மறுமையில் நீயே இந்திரபதவிபெற்று, வானவர் வழிபட இந்திரபோக மெல்லாம் இனிதே நுகர்ந்து, பேரின்ப வீடும் பெறுவாய்" என்று திருவாய் மலர்ந்தருளிக் குபேரனை விளித்து, 'நீ இவனுடன் எப்போதும் இருந்து, வேண்டும் பொருளுதவுக!' என்று ஆணைதந்து மறைந்தருளினார்.

அருமை புணர்ந்த சோபனன் சைவதேசிகர் அடியில் வீழ்ந்து வணங்கி, மலர்தூவி வாழ்த்தி, 'சற்குருவே! தங்களின் தரிசனத்தாலே கடையேன் கடைத்தேறினேன்; இறைவரருள் பெற்றேன்' என்று நன்றியறிதலுடன் நவின்றான். பின்னர் அளவற்ற பெரும் போகம் துய்த்து, இறுதியில் இந்திரத்துவமும் சிவனடி நீழல் வாழ்வும் பெற்றான்.

அத்தியாயம் 45.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

அறுசீர் விருத்தம்

1110. சூதனங் குரைப்பான் மேன்மை
தொழுதகு தவத்தீர் கேண்மின்
ஆதரம் பெருக வேறோர்
அருங்கதை யுரைக்கேன் முன்னர்
மாதவக் கிழமை பூண்டு
வருமுனி வரர்பல் லோர்கள்
போதமுற் றருந்த வங்கள்
புரிந்தன ரிருந்து யோகின். (1)

1111. புலியின்வெம் பறழு மானின்
புனிற்றிளங் கன்றுங் கூடி
மலிகுரற் குமுறும் பேழ்வாய்
மடங்கலின் முலைக ளுண்ணும்
எலிவெயி லுருப்ப நோக்கி
யெழுந்தராப் படம்வி ரித்துக்
கலிகடி குடைநி ழற்றுங்
கந்தமா தனவெற் பார்ந்தார். (2)

1112. அப்பொழு தங்க ணுற்ற
லரியகண் ணுவன டைந்தான்
மெய்ப்பொருள் முனிவ ரன்பு
மீதூர வெழுந்தி றைஞ்சிச்
செப்பரும் ஆச னத்திற்
சேர்த்துபு முனியெங் கெங்குற்(று)
இப்பதி வதிந்தாய் கண்ட
இறும்பூதே தியம்பு கென்றார். (3)

கண்ணுவர் உரைத்தது

கார்க்கவன், வயிணவன் கதை; நெய்விளக்கேற்றியது.

1113. ஆற்றருந் தவத்தோர் சொற்கேட்
டரியகண் ணுவனு ரைப்பான்
ஏற்றமாம் பிரம லோகத்
தினுமிங்கு படர்ந்தேன் அங்கண்
தேற்றமிக் குளவி யப்பாற்
சிறந்தன கண்டேன் உண்மை
சாற்றுகின் றனன்சோம் பின்றிச்
சடாமுடி தவத்தீர்! கேண்மின்! (4)

1114. கருமயிர்ப் படிவச் செங்கட்
கவிழ்தலைக் கரடி புற்றும்
பருவரை யகழ்ந்து நோக்கிப்
பஃறலைப் பாந்த ளீன்ற
குருமணிப் பதும ராகங்
கொழுங்கனல் எனத்தி கைத்து
மருளுறும் பொழில்சூழ் சீர்த்தி
மாளவ தேயம் அம்மா. (5)

1115. கொண்டல்கண் படுக்குஞ் செம்பொற்
கொடுமுடிப் புரிசை வீதி
வண்டலம் பாவை தன்னை
மகிழ்குழ மகவுக் கென்று

1113, லோகத்தினும்—லோகத்திருந்து.

1115. வண்டல்—மகளிர் விளையாட்டு,

விண்டலம் வந்து வேட்கும்
வியன்பரத் தியர்சி ருர்பாற்
கண்டலம் போது வீசுங்
கலியாண நகர மீதில். (6)

1116. வணிகர்தங் குலஞ்சொற் கார்க்க
வனும் வயி ணவனும் வீரந்
திணிதடந் தோளர் மூர்க்கர்
தீயவெம் பாவ மிக்கோர்
துணியும்வஞ் சகர்தி வாவிற்
சூழ்நாய்க ருடனே கூடி
மணிநிதி கொண்டு விற்று
வல்லிருள் மனையில் வந்தார். (7)

1117. பொருள்மிக வுடையோர் தம்மைப்
பொருக்கென மனைய ழைத்துத்
தெருளுப சார மெல்லாஞ்
செய்தபின் போது போக்கி
அருள்சிறி தேனும் இன்றி
யங்கண்வந் தவரை யெல்லாம்
மருளும்வஞ் சனையான் மாய்த்து
மற்றவர் பொருள்கைக் கொண்டார். (8)

1118. வனமடுத் திடுவா சத்தர்
வழிவரு வோரை யெல்லாம்
அனவர தமும் பறித்தே
அடித்துயிர் வதைத்து மீளத்
தனபதி வணிக ரோடு
தழீஇப்பகல் அறியார் போல
இனமுடன் இருந்தார் பாவம்
இத்துணை யெண்ணற் பாற்றே. (9)

1119. ஒருபகல் இருவ ருஞ்சேர்ந்
துளத்திலொன் றுன்னிச் செல்வர்
வருவதிங் கிடைச்சி வீட்டில்
வைப்பெலாம் அங்கே யென்றே

1116. திவா—பகற்பொழுது.
1119. கனவு—தூக்கம்,

ஒருமையோ டிருளில் அங்கண்
உற்றவர் கனவு சோதித்(து)
அருமருட் பொடிகள் தூவி
அவர்பொருள் அனைத்துங் கொண்டார். (10)

1120. வஞ்சகர் இடைச்சி வீட்டில்
வதிந்திடு பொருள்க ளுங்கொண்(டு)
அஞ்சிடார் நெடுந்தூ ரஞ்சென்
றுரணி யத்திற் பூசை
எஞ்சல்சேர் சம்பு மேவி
யிருக்குமா லயத்திற் சென்று
புஞ்சமா நிதிபு குந்து
பொருக்கெனக் கொளநி னைந்தார் (11)

1121. வடுத்தனைப் பழித்து நீண்ட
மதர்விழி யிடைச்சி யில்லில்
எடுத்தநெய் யிடிஞ்சில் வாக்கி
இருந்திரி முறுக்கித் தோய்த்தே
அடுத்தபே ரடவிச் செந்தீ
யதனிடைக் கொளுத்தி வைத்துப்
படுத்திடு பொருள்ப குந்து
பற்றிமுன் னகரஞ் சேர்ந்தார். (12)

1122. இருள்புலர்ந் திட்ட காலை
இரவிவந் துதித்த போது
மருளகன் றுணர்கோ பாலர்
வல்லிருட் கள்வர் வந்து
பொருள்கவர்ந் தகன்ற ரென்றப்
போதுகூக் குரலி டக்கூஉய்த்
தெருளுமூர் காப்பார் கச்சை
சேர்த்துவாள் பரிசை கொண்டார். (13)

1123. அல்லினும் பைஞ்ஞீ லஞ்சேர்
அதரினும் படர்ந்த பாறைக்
கல்லினும் அறலி னும்நீள்
கயத்தினுஞ் செறிபைந் தோட்டுப்

1120. எஞ்சல்—அற்று ஒழிகை; புஞ்சம்—குவியல்.
1121. இடிஞ்சல்—விளக்குத் தகழி.

புல்லினு மழையி னும்மெய்
புறத்தினும் விலக்கி மீளச்
செல்லினும் அடியெ டுத்துச்
சென்றவர் பிணித்துக் கொள்வார். (14)

1124. கதுமென இடைச்சி முன்றிற்
கடியடைந் தடிகள் பார்த்துப்
புதுமைபெற் றிடுத டத்தைப்
பொருக்கெனச் சுவடு நோக்கி
இதுவிது வென்று பற்றி
யெடுத்துநெய் யெறும்பிற் சென்றே
விதுவினை யிராகு பற்று
மேன்மையிற் கள்வர்க் கண்டார். (15)

1125. வரிந்திடு வடக்க யிற்றால்
வணிகர்திண் புயத்தை வீக்கிப்
பிரிந்திடா வகைபு றத்திற்
பிடித்துவாள் விதிர்த்திட் டோங்கித்
தெரிந்துநன் னீதிச் செங்கோல்
செலுத்திடு நிருபன் முன்னர்
பரிந்துவிட் டேர்காப் போரிப்
பாதகர் செயலு ரைத்தார். (16)

1126. கேட்டலும் புழுங்கி வேந்தன்
கிளைத்திடு களைகள் மாக்கட்(கு)
ஈட்டிய தெனக்கு றித்தே
யிருவர்சென் னியுந்த டிந்து
வாட்டிறற் படைமுன் வீசி
வாங்குமுன் விமானந் தன்னிற்
றேட்டிருங் கடுக்கை யண்ணல்
தூதர்வந் தேற்றிச் சென்றார். (17)

1127. படரிருட் கற்றை சீக்கும்
பாய்கதிர் கனலோ கத்தின்
மடலவிழ் கமலப் புத்தேள்
வண்டுழாய் மார்பன் தேடித்

1124. தடம்—வழி. விது—நிலா.

1126. களை—குற்றம்.

தொடரவும் வெளிப்ப டாத
சோதிசன் னிதிமுன் வைத்தார்
விடலருங் கருணை யெம்மான்
விரும்பவீற் றிருந்தார் மாதோ, (18)

1128. சூரியகந் தரத்தர் முன்னர்
களவுகொண் டிடுநெய் தன்னில்
திரியது கொளுத்தி வைத்த
தீபத்தால் இவர்கள் ஈட்டும்
அரியபா வங்க ளெல்லாம்
அகன்றன எவர்க்கும் எட்டா
வரியுழு வைத்தோ லாடை
வள்ளல்சன் னிதியி லுற்றார். (19)

1129. என்றகண் ணுவர்சொற் கேட்டே
இந்தியஞ் சேர்பு லன்கள்
வென்றிடுந் துறவோ ரியாரும்
வியந்துளங் களித்துச் செம்பொற்
கொன்றயஞ் சடில எம்மான்
கோதில்புண் ணியங்கள் தேர்ந்து
நன்றெனு அதிச யித்து
ஞானவா னந்தத் துற்றார். (20)

வாமதேவர் கூறுவது.

கண்டகன் திருக்குளத்திற் சேறெடுத்த கதை.

1130. அப்பகல் வாம தேவன்
அருமுநி யிதனைக் கேட்டுத்
துப்புர வளத்தான் மிக்க
தொழுதகு தவத்தோர் யார்க்கும்
ஒப்பரும் உளம்வி யப்ப
உடல்மயிர் பொடிக்கக் கண்ணீர்
மைப்புய லெனப்பி லிற்ற
மகிழ்ந்தொரு காதை சொல்வான். (21)

1131. **மா**துளை கமுகு புன்னை
மாழைகோங் கில்லம் பூவை
மேதகு நாவல் அத்தி
மெல்லிதழ்க் கடுக்கை யொன்பான்
பேதமா மணிபொன் தாங்கிப்
பிறங்குபார் மடந்தை மாயோன்
கோதில்பைங் குழைக்கென் றேந்துங்
குண்டல தேய மம்மா. (22)

1132, **த**னியிறை நிவேத னத்திற்
சாரங்கொண் டவைக ளெல்லாம்
புனிதமாக் கியதித் தன்மை
போன்மெனச் செய்து பின்னும்
மனிதரூழ் திரண்ட தாக
வருமென வேழ முண்ட
கனிவிளாக் காட்டு சோலை
கபித்தமா நகர மாதோ. (23)

1133. **அ**ந்நகர் மருவுந் தீயோன்
அரியபா தகங்கள் செய்யும்
பின்னவன் **கண்டகன்** வான்
பிறையணி சிகர மேடை
நன்னக ரினும்பே ரான
நாட்டினும் ஊரி னுஞ்சென்(று)
உன்னருங் களவிற் பன்னுள்
உறுபொருள் ஈட்டி னுல். (24)

1134. **அ**ப்பொருள் அனைத்துங் கொண்டே
அண்ணல் **மச் சேச்சுரன்** முன்
செப்புறு கமல வாவிச்
சேற்றினுட் கல்லி வைத்துத்
தப்பியிச் சையினுற் சென்று
தனித்துடன் மற்றை நாள்வந்(து)
எப்புறம் என்று காணு
தெடுத்துப்போய்ச் சேறு பார்த்தான்; (25)

1131. மாழை—மாமரம்; இல்லம்—தேற்றுமரம்; பூவை—காயாமரம்; மாதுளை முதலிய பத்தும் நவமணிகளையும் பொன்னையும் தாங்கும்.

1133. கபித்தம்—விளா

Govt. Oriental Mss. Library,
Trip...

1135. வைத்திடு தலங்கா ணாமல்
மறந்தெங்கும் பார்த்துச் சேற்றைக்
கைத்தலங் கொடுபோய்த் தூரக்
கடிதெற்றிப் பார்த்துங் காணா(து)
எத்தலம் என்று மீள
எங்குஞ்சோ தித்துக் கண்டு
சித்தமுள் மகிழக் கொண்டு
சென்றுபோய் நெடுநாள் துய்த்தான். (26)

1136. இறந்தனன் அவனைக் கங்கை
ஈர்ஞ்சடை வள்ளல் தூதர்
சிறந்திடு விமானத் தேற்றிச்
சிவலோகங் கொடுபோய் வைத்தார்
அறந்திகழ் சிவதூ தர்க்கண்
டார்கொலின் னவனென் றேனுக்(கு)
உறுந்தவ சிவத டாகத்
துறுபங்கம் எடுத்தோன் என்றார். (27)

1137. அறிந்திவன் சேறெ டுத்தே
அகற்றிய தன்று பொன்றாற்
செறிந்திடு சிவத டத்திற்
சேறுக ளெடுத்துத் தூர
எறிந்திடு தருமந் தன்னால்
ஈட்டுபா வந்தீர்ந் திங்கு
மறிந்திடா வகையெங் கோமான்
மகிழுல கடைந்தான் மாதோ. (28)

1138. கண்டவை அனைத்தும் தன்னுள்
கரந்துகொண் டெதிரே காட்ட
மண்டல வடிவ மான
வச்சிர ஆடி முற்றுங்

1136. பங்கம்—சேறு.

1138-40. கண்ணாடி, பூரணகும்பம், ரிஷபம், இரட்டை வெண்சாமரம், லக்ஷ்மி உரு, ஸ்வஸ்திகம், வலம்புரிச் சங்கம், தீபம்—இவை ஆகமப்படி அட்ட மங்கலம். இவற்றை உடைய அரம்பைமாதர் ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சுமுகி, சுந்தரி, காமினி, காமவர்த்தனி,

கொண்டவா ரமுதச் செம்பொற்
 கும்பமெய்த் தரும மேனி
விண்டுரு வெடுத்த மூரல்
 வியன்மழ விடையு மம்மா, (29)

1139. விரிசுடர்க் கற்றை காலும்
 வெண்ணிலாப் பரந்து வீசிச்
சொரிதரு மணிக்காம் பேற்ற
 தூயிணைச் சாம ரங்கள்
வரியளி முறுக்க விழ்த்த
 மரைமலர்ச் செய்யாள் நன்கு
பிரிவறு சுவத்தி கஞ்சீர்
 பெறுவலம் புரிவெண் சங்கம். (30)

1140. ஆணவக் கிழங்கு வேரோ
 டறுத்திருட் பிழம்பு சீத்துச்
சேணவக் கதிர்வி ரிக்குஞ்
 சிவஞான தீபம் புத்தேள்
மாணவக் குறிதீர்த் தட்ட
 மங்கலம் ஏந்திச் செம்பொன்
தூணவ மணிப்பு றத்திற்
 சூழ்ந்தனர் அரம்பை மாதர். (31)

1141. ஆற்றரும் பாத கங்கள்
 அனந்தகோ டிகள்செய் தாலும்
காற்றெதிர் பூளை போலக்
 கணத்தினில் தொலைத்து விண்ணோர்
போற்றிடுஞ் சிவலோ கத்திற்
 பொருக்கென வைக்கும் எங்கோன்
ஏற்றநல் தருமம் வாரும்
 எனத்துவ சங்க ளாமே. (32)

1142. அண்டகோ ளகைமு கட்டை
 அளந்திடும் மணிவி தானத்(து)
எண்டிசா முகமும் பூகம்
 இருங்கமை கதலி செந்தேன்

1142. தண்டை ஆள்—கண்டு (கற்கண்டு) போன்ற.

விண்டபூந் தாமம் ஆரம்
வேர்மருக் கொழுந்து நாலக்
கண்டையாள் கீதஞ் சின்னங்
கனகதுந் துபி கறங்க, (33)

1143. பொங்கழல் உலைமு கத்திற்
புடைசுழன் றுருகி ஓடும்
தங்கமுற் றங்கள் நீள்கொத்
தளங்கள்பன் னீர்கத் தூரி
குங்குமக் குழம்பு நீவி
குளிர்கருப் பூரக் கோலம்
எங்கணும் பொறித்துத் தூமம்
இட்டுவிஞ் சையர்கள் ஏத்த, (34)

1144. துலங்குபொற் பதும ராகம்
சுத்திசெய் வதுபோ லெல்லாத்
தலங்களுக் குயர்வி யப்பாம்
சம்புவாழ் சிவலோ கத்தை
அலங்கரித் தனரி வன்வந்
தடைவதற் காக என்று
நலங்கிளர் எந்தை தூதர்
நவிறல்கேட் டிவண்வந் தேனல். (35)

1145. ஆருயிர்த் தொகைக்கெ லாம்வந்
தஞ்சலென் றருள்பெம் மான்சீர்
கூருநல் தரும மேன்மை
குறிப்பதற் கெளிதோ என்று
தேருமுள் ளத்தி னோடு
செப்பினேன் துறவீர்! என்ன
ஒருநற் சதானந் தன்கேட்
டோர்கதை உரைக்க லுற்றான், (36)

வேறு

சதானந்தர் சொன்னது

சோபனன் கதை.

சிவ பூசைக்கு மலர் அளித்தல்

1146. பொங்கர்குளிர் நிழல்பரப்பத் தழைகுழைக்குந்
தனஞ்செறிதண் பொதும்பர்க் காவில்
தங்குகவைக் குளப்படிசெங் குன்றிவிழிக்
கருங்கேழல் தனிப்போ ரேறு
திங்கள்மருப் பாலகழ்ந்த குழிமீள
அம்மருப்பிற் செறிவெண் முத்தங்
கங்குலிருள் துரக்கவுகுத் திடுமெழிற்காம்
பீலியமாங் கவின்கொள் தேயம். (37)

1147. பருவரைத்தாட் குமரிமணிக் குடக்காய்த்திண்
முடத்தெங்கிற் பழங்கள் சிந்தப்
பொருகயவாய்ப் பெருவாளைப் பகடுகளித்
திளங்கமுகைப் புடைத்துச் சாடிக்
குருமணிமா வடுச்சிதறி மாதளைவித்
திருத்துமின்னார் குயங்க ளங்கண்
பொருவிலெயி றெனப்பகைதீர்ந் திருகண்மருட்
டுங்குந்தா புரம தாமால். (38)

1148. அந்தநகர்ச் சோபனன்நான் மறையவன்தீ
ராவறுமை யதனால் என்றும்
நொந்துபெரு வீதிமணிக் கடைதோறும்
அங்கங்கு நுழைந்து போகிச்
சிந்தைதளர்ந் திடவெள்வாய் திறந்து பிச்சை
இடுமினெனத் திரிந்து வாங்கி
வந்துநுகர்ந் தில்லு மற்றுத் தண்ணீர்ப்பந்
தரிற்றனிபோய் வதிந்தான் மாதோ. (39)

1146. தனம்—சந்தனம்.

1147. தெங்கின்பழம்—குயம்; கமுகு—களம்; மாவடு—கண்; மாதுளை வித்து—எயிறு (பல்).

1149. அங்கண்வழி யிடைப்பட்டு முகுந்தேசன்
சரணமலர் அருச்சிப் போர்கள்
மங்கலசை வாகமங்தேர் மறையவர்தங்
குலோத்துங்கர் மலர்க டுக்கைக்
கொங்கலர்தார்க் கிரீசனந்தா னத்துநித்தோ
ராமடுத்த கோளபுட்பர்
தங்கிமுன்வள் ளுறைசிதறிக் குழறிமழை
விடாதுபெயச் சார்ந்தி ருந்தார். (40)

1150. அக்காலை தரித்திரனுஞ் சோபனன்கண்
டெழுந்துமிக்கோர் அடியி றைஞ்சி
இக்கால மளவும்விப வங்களெனக்
கடைந்ததிலை இப்ப டித்தாய்ப்
புக்காவி அனுதினமும் வருத்தினவென்
றவன்சொலவப் போது கேட்டுத்
திக்காரும் அற்றவற்குச் சம்புவுண்டே
இருமையுந்தான் சிறக்க நல்கும். (41)

1151. என்றுகரு ணைக்கடலாஞ் சிவமறையோர்
சிறிதுளத்தில் இரங்கிச் சொல்வார்
துன்றமரர் மணிமகுடம் பட்டுரிஞ்சிப்
பழுந்தழும்பு துலங்கு பொற்றாள்
மன்றினடித் திடுமெங்கோன் அருச்சனைக்கு
நந்தவனம் அமைத்து நாட்பூச்
சென்றுகொடு இன்று முதல் அம்மலரால்
அருச்சனையாம் செய்யின் றேமால். (42)

1152. அத்தினம்பைங் கடல்விடமுண் டுலகமுண்டோன்
ஆதியருக் கருளுங் கோமான்
சித்தமகிழ் கருணையினல் அரியசெல்வம்
உனக்குவந்து சேரும் என்னப்
புத்தமுதம் அனையசொற்கேட் டப்படியென்
றவன்வெளியிற் புறப்பட் டன்பாய்க்
கொத்தலர்பூ நந்தவனம் அமைத்துலவை
பைந்தழைகள் குழைத்த பின்னர், (43)

1149. கோளபுட்பம்— ஒரு ஸ்தலம்.

1153. சுரும்புசிறை விரித்துவல மிடஞ்சுழல்வீ
அறுபதத்தால் துகைப்பச் செவ்வி
அரும்பு முறுக் கவிழவுடைந் துமிழ்செந்தேன்
கலுழிபிலிற் றருவி தூற்றி
இரும்பணைமஞ் சரிபொதுளும் இணர்கெழுமி
வெடிக்கவிரைந் தெடுத்துத் தென்னங்
குரும்பைமுலை உமைகொழுநன் கழல்தொழுதே
சிகர்கரத்திற் கொடுத்து நின்றான். (44)

1154. குரவருங்கிண் கிணிமணிவாய்க் கொண்டநறு
மலர்வாங்கிக் கூற்றன் மாயப்
பரவிவழி பாடுசெய்மார்க் கண்டற்கு
வெளிப்படுமப் பதத்தில் தூவி
இரவகல அருச்சிக்க அப்பகல் கூன்
முகப்பிறையீ ரிரும ருப்போர்
கரவுரற்கால் தவளஇப் எருத்திறைவந்
தமுதினைமிக் கவற்கு நல்கி. (45)

1155. மறையவனைக் கருணையுடன் பொதுவற நோக்
கிப்புகல்வான் மறிநீர்ப் பாரிற்
குறைவறப்போ கங்களெல்லாம் நெடுநாள்துய்த்
தந்தத்திற் கொத்த லர்ந்து
நறைகமழ்செந் தேறல்மலர்க் கற்பகப்பைந்
தருவளர்பொன் னகரில் வாவென்(று)
அறைகலுழ்ச்சி யுடனுரைத்திந் திரன்மீளத்
தன்துறக்கம் அடைந்தான் மாதோ. (46)

1156. பின்னர்விரைந் திம்மறையோன் புனல்மூழ்கிப்
பவித்திரனாய்ப் பெருகு காதல்
தன்னொடுபன் மலரெடுத்துச் சிவமறையோ
னுங்குரவன் தடக்கை யீந்தான்
பன்னருஞ்சீர் சற்குரவன் அம்மலர்கள்
வாங்கி யெங்கோன் பவித்தி ரஞ்சேர்
சென்னிமிசை அருச்சித்தான் அவ்வேலை
பகவான்முன் சிறந்து தோன்றி, (47)

1154. இரவு—வறுமை.

1155. கலுழ்ச்சி—மகிழ்ச்சி.

1157. இந்தமறை யவனைமகிழ்ந் தருள்கொழிப்பச்
சிறுதுவிழித் திரங்கி நோக்கி
மைந்தவிசைந் தெழுந்துபுட்ப வனமுநீ
யெமக்குவைத்து வளர்த்தன் பால்நீ
கொந்தலர்பன் மலர்தெரிந்து செம்மலரும்
பானுட்பூக் கொய்தெ டுத்து
வந்தெமக்கு நல்கினையம் மலர்களியாம்
மணிமுடியால் வாங்கி னோமால், (48)

1158. அத்தரும மேன்மையினுல் ஒப்பரும்போ
கங்களிம்பர் அருந்தி யிற்றில்
சித்தமிகு மகிழ்ச்சியினுல் நீயேயிந்
திரத்துவமாய்த் தேவ ரெல்லாம்
நித்தியமும் வழிபடச்செல் வம்பெருகு
சிவலோகம் நீய டைந்து
மெத்துபோ கம்மனைத்தும் நுகர்ந்து பே
ரின்பவழி வீடுஞ் சேர்வாய். (49)

1159. உண்மையிது என்றுரைத்துப் புடைபணிகு
பேரனைப் பார்த் தோங்கி வன்சொல்
வண்மைபெறக் கேட்டுமிகு பொருளிவனுக்
குதவியிவன் வசனங் கேட்டு
நுண்மையுடன் அனுதினமும் இருத்தியென்று
கமமறைகள் நுவன்ற பெம்மான்
திண்மைவிற லுடனுரைத்துக் கணதிபர்க
ளுடன்மறைந்து சென்ருன் மாதே. (50)

1160. அருமறைதேர் சோபனன்பின் சிவதருமி
யாங்குரவன் அடியில் வீழ்ந்து
மருமலர்தூய் வழிபட்டுப் பத்தியுடன்
மகிழ்ச்சியிலோர் வசனஞ் சொல்வான்
கருணைமிகு சற்குரவ! உனதுதரி
சனந்தன்னுற் கடையே னுக்கிங்(கு)
இருமையடைந் துய்ந்தேன்பூ வனத்தாலீ
சனும்வெளிப்பட் டிரங்கி னனே. (51)

1161. என்றுரைத்துச் சற்குரவன் அனுமதியாய்
அகண்டி-தமாம் இரும்போ கங்கள்
அன்றுமுத லாய்த்துய்த்திந் திரத்துவமும்
பின்னரடைந் தனேகங் காலம்
துன்றிரும்போ கங்கள்நுகர்ந் தந்தத்திற்
சிவலோகச் சூழல் சேர்ந்தே
என்றுமகிழ்ந் தேபின்னர் எங்கோமான்
அடியிணைக்கீழ் எய்தி னுனல். (52)

அத்தியாயம் 46.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

நூற்றுவர் கதிபெற்ற கதை

அத்திரி முனிவர் கூறுகின்றார்:

சோதிடம் என்னும் நாட்டைச் சருவசித்து என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு நூற்றொரு மக்கள் பிறந்தனர். அவர்களில் தருமன் என்பான் மட்டுஞ் சிறந்த நற்பண்புடையோன். மற்றையோர் பிரமகத்தியுங் கொலையுங் களவும் பிறவும் புரியுங் கொடியோர். அவர்கள் செய்யும் கொடிய பாவச் செயல்களைக் கண்டு மன்னன் வெறுப்புக்கொண்டு, அரக்கன் ஒருவனை விளித்து நூற்றுவரையுந் தின்றுவிடப் பணித்தான். அவன் ஒப்புக் கொண்டு, நெருங்கி நோக்கியபோது, அவர்களின் கொடுஞ்செயல் தெரிந்து அருவருத்து மனம் நடுங்கி, உண்ண மனமின்றிக் கைகளையுங் கால் களையும் பற்றியெடுத்துக் கடலில் விழ வீசியெறிந்தான். ஆனால், அவர் கள் வானவழியே சிதறிச் சென்று சிவபுண்ணியம் நிறைந்த நகரங்களில் விழுந்தார்கள். காசி, கேதாரம், சீபருப்பதம், காளத்தி, காஞ்சி, திருவண்ணு மலை, முதுகுன்றம், சிதம்பரம், திருவிடைமருதூர், திருக்குடந்தை, மற்றும் இவைபோன்ற புண்ணிய நகரங்களிலே விழுந்த சிவபுண்ணிய பலத்தால், விழுந்தபோதே இறந்த அவர்களைச் சிவ கணங்கள் திப்பிய மானத்தில் ஏற்றிக் கொண்டு சிவலோகத்தி லுய்த்தனர். நான் சத்தியலோகத்தில் இருடிகளுடன் இருக்கும்போது சிவகணங்கள் இவ்வியத்தகு கதையைக் கூறியருளினர்.

இவ்வாறு அத்திரிமுனிவர் கூறியதைக் கேட்ட முனிவார் சிவபுண்ணியக் கதைகளை ஒருவர்க்கொருவர் பேசி மகிழ்ந்தனர்.

1161. அனுமதியாய்—உபதேசத்தால்.

சித்ரபானு கதை

கள்வனை முதலை வந்தனை செய்தது

சூதமாமுனிவர் கூறுகிறார்:—

சவுராட்டிர நாட்டில் வளம் பொருந்தியது கனக நகரம். அங்கே ஒரு கொடிய கள்வன் அரண்மனைப் புரோகிதன் வீட்டிலே புகுந்து பொருளனைத்துங் கவர்ந்து வரும்போது மறையவன் ஒருவன் கண்டு கூவினான். கள்வன் அவனை வாளால் தடிந்து வெளிவந்தான். அந்தணனது கூக்குரலைக் கேட்டு மன்னவன் ஓடிவந்தான். ஊர் காப்போர் கள்வனைப் பற்றி அரசன் முன் விட்டனர். அரசன் அக் கள்வனை ஓடையில் இருக்கும் பெரிய முதலையினிடம் விடுங்கள் என்று கட்டளையிட்டான். காவலர் கொண்டு போய் விட முதலை இவனைத் தலைமீது சுமந்து கரைமீது விட்டது. காவலர் வியந்து வேந்தனிடம் கொண்டுபோயினர். வேந்தன் கேட்டுச் சினந்து கொலையாளிகளைக் கூப்பிட்டு வாளால் வெட்டியெறியப் பணித்தான். வாள்வெட்டும் அவனை ஊறுபடுத்த இல்லை. இதைக்கண்டு வியந்த மன்னவன் தன் அரண்மனைக்குக் கள்வனை அழைத்துப்போய், அரசியிடமிருந்த திரிகால ஞானமுள்ள கிளியை விளித்து அந்தக் கள்ளனது வரலாற்றை வினவினான்.

கிளி கூறுகிறது:

இந்தக் கள்ளன் பெயர் சித்திரபானு. இவன் குசபுரம் என்னும் நகரத்தினன். தந்தையின் பெயர் விட்கம்பன். வணிகனாகிய இவன் எப்போதும் பரத்தையருடன் கூடிக்குலவிப் பொருளனைத்தும் இழந்தான். எனவே, பொருள்பெறத் திருட்டுத்தொழிலில் இறங்கித் தீயிட்டுக் கொள்ளையடித்தான். இவனிட்ட தீயாற் பலர் இறந்தனர்.

ஒருமுறை இவன் புயங்கபுரம் என்னும் நகரில் தீயிட்டுப் பல பசுக்களைக் கவர்ந்து வந்தான். அப்போது கன்றையுடைய ஒருபசு தீயினாற் கால் வெந்து நடக்கமாட்டாமல் தவித்தது. அதனை வழியில் இருந்த அமலேசர் திருக்கோயிலில் விட்டுவிட்டு வந்துவிட்டான். திருக்கோயிற் பணியாளர் அதற்குச் சூல முத்திரையிட்டுக் கோயிலுக்காக்கினர். அப்பசு பொழிந்த நறும்பால் அமலேசனுக்கு அபிடேகத்திற்குப் பயன்பெற்றது. இக்கள்வன் மற்றப் பசுக்களை ஒரு நகரத்தில் விற்றுவிட்டு அங்கே பரத்தையருடன் இருந்தான். இப்போது புரோகிதன் இல்லத்தில் திருடி உன்னிடம் அகப்பட்டான்.

பசுவின் பால் இறைவரின் அபிடேகத்திற்குப் பயன்பெற்ற காரணத்தால் இவன் முதலையாலும் உன் ஆயுதங்களாலும் கொல்லமுடியாத சிவபுண்ணியம் பெற்றான். இவன் இனி எவ்வகை யிடையூறும் இன்றி இம்மைப்பயன்களைத் துய்த்து மறுமையிலே சிவபெருமான் திருவடி நிழலை அடைவான்,

இவ்வாறு கிளி கூறியதைக்கேட்ட அரசன் வியந்து, சித்திரபானுவை அரியணையி லமர்த்திச் சிறப்புச்செய்து நானாவகைப் பொருள்களும் அளித்துத் திருமணமும் செய்வித்துப் பெரும்போக வாழ்வில் அமர்த்தினான்.

கிளி கூறிய கபிலன் கதை

கிளி மற்றும் ஒரு கதை கூறுகிறது:

நான் ஒருமுறை வைகுந்தஞ் சென்று திருமகளின் கையில் இருந்தேன்; அப்போது இந்திராணி திருமகளை வேண்டி என்னை அவளிடமிருந்து வாங்கினாள். அந்தச் சமயத்தில் திருமால் பணிப்பெண்களை நோக்கி வைகுந்தத்தை அலங்கரிக்கப் பணித்தார். திருமகள் ஏனென்று வினவத் திருமால்—

'சாருவரியென்னும் நகரத்திற் கபிலன் எனும் வேதியன் களவுத்தொழில் புரிந்துவந்தான். ஒருநாள் ஒரு மறையவனுடைய கறவைப் பசுவைத் திருடி வந்தான். திருடியதைப் பசுவுக்குரியோன் அறிந்து வருவதைக்கண்ட கபிலன் பசுவை அயலூரிற் கொண்டுபோய் ஒருவன் வீட்டிலே கட்டிவைத்தான். அவ்விரவு அவ்வீட்டுக்குரிய சிவனடியான் அப்பசுவின் பாலை 'உன் உபயமாக இருக்கட்டும்' என்று கூறி இவன் அனுமதியைப்பெற்று உபயோகித்தான். மறுநாள் அப்பசுவுடன் தன்னூர்வந்த கபிலனைப் பசுவுக்குரியோன் கண்டு பற்றி மன்னன்முன் விட்டான். மன்னன் கபிலனுடைய கண்களைப் பறிப்பித்தான். அந்நோய் தாளாமற் கபிலன் இறந்தான். பசுவின்பாலைச் சிவனடியார்க்குத் தந்த புண்ணியத்தால் கபிலன் சிவலோகத்திற்குக் கொண்டுவரப் படுகிறான். இவன் திருக்கயிலைக்குச் செல்லும் வழியாகையால் நமது வைகுந்தத்தை அலங்கரிக்கக் கட்டளையிட்டேன்''—எனக்கூறினர்.

இவ்வாறு திருமால் செப்பியதை நான்கேட்டேன். சிவபுண்ணியத்தின் பெருமை செப்புந் தரமன்று.

இங்ஙனம் கிளி கூறியதைக் கேட்ட அரசன் தானும் சிவபுண்ணியம் புரிந்து சிவபெருமான் திருவடிநீழலை அடைந்தான்.

அத்தியாயம் 46

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

அத்திரி முனிவர் சொன்ன நூற்றுவர் கதிபெற்ற கதை.

எண்சீர் விருத்தம்

1162. தொழுதகுமெய்த் தவம்புரியுந் துறவீர்காள் என்றே
சூதனுரைத் திடுமீட்டுங் கொடியவிரும் பாவம்
முழுதுமொரு கணத்திலகற் றிடுமீசன் தரும
முதன்மையிருங் கதையதனை முனிவரர்தங் கோமான்

பழுதகல விரித்துரைத்துத் திரிபுரத்தை யெரித்த
பண்ணவன்பொற் பதமுளத்தில் வைத்தசதா னந்தன்
பொழுதுநலம் பெற்றதெனா இருந்தனன்தா பதர்தம்
புங்கவனும் அத்திரியோர் காதையெடுத் துரைப்பான். (1)

1163. வளங்கெழுமைபைங் கதிரரைக்கேழ் நிறைகணுவெண் தரளம்
மல்கிவெளி முகடளவ வளர்ந்தெழுநீ டமையிற்
களங்கெழுபன் னிறமிமைக்கும் மரகதப்பைந் தோகை
கதிர்மணிச்செஞ் சிகைப்பொற்றூள் கட்டழகாம் மஞ்ஞை
உளங்கெழுநன் மகிழ்ச்சியுடன் வதிந்திறகர் விரித்தே
உளர்த்திவலம் இடஞ்சுழல நடிப்பதுசிந் தூரம்
குளங்கெழுமைபைங் குழற்கழாய்க் கூத்திகம்பத் திருந்து
குனித்திடன்மா னுஞ்சோதி டத்தேயம் புரப்போன். (2)

1164. ஏறிதிகிரிப் படைதிசைகள் தொறுமுருட்டித் தரளம்
எற்றுதிரை கடற்புடவி பொதுவறக்காத் தருளும்
அறிஞர்பதி சருவசித்தெனும்பெயரும் உடையோன்
அவன்தனக்கு விறல்தனையர் நூற்றொருவர் அவர்க்குள்
வெறிகமழ்பைந் தொடைப்புயன்நல் தருமனொரு புதல்வன்
மிக்கவர்கள் பிரமகத்தி கொலைகளவு தகைகள்
செறியுணவு பிறனில்விழை மனமுடைய கொடியர்
தினமளத்தற் கரும்பாவஞ் செய்திடும்வஞ் சகரே. (3)

1165. கனைகழற்காற் குரிசில்மத லையர்புரிதுர்ச் சரிதங்
கண்டுவெகுண் டோரிராக் கதனைவிளித் தித்தீ
வினையரிரும் புதல்வர்தமைத் தின்றிடுகென் றுரைத்தான்
விறலரக்கன் அனுமதித்து விரைந்தவரை நோக்கி
இனையர்கொடும் பாதகரென் றருவருத்துள் நடுங்கி
இறுகஇவர் பதங்களையும் கரங்களையும் பிடித்திட்(டு)
அனைவரையும் மறிதிரைத்தெண் கடலில்விழ எறிந்தான்
ஆகாச வழியங்கங் கந்நிலத்தில் விழுந்தார். (4)

1163. கதிர்—ஒளி; வெளி—வான்; அமை—மூங்கில்; சிந்தூரம்—குங்குமப் பொட்டு; குளம்—நெற்றி; கழாய்—மூங்கில்; கழைக்கூத்து—மூங்கில் உச்சியில் நின்று ஆடும் கூத்து. மயில் நடித்தல்—(திருவாரூர் நான்மணிமாலை—செய்யுள் 41—பார்க்க). மானும்—நிகர்க்கும்.

1164. மிக்கவர்கள்—மற்றவர்கள்.

1166. கருதரிய பாதகஞ்செய் திறந்தவுயிர்க் கெல்லாங்
கண்ணுதலின் வடிவுநல்குங் காசியினும் எவர்க்கும்
பருதியெனப் பவித்திரஞ்செய் கேதாரத் தினுஞ்சேண்
பார்த்தவர்க்கு வீடருள்சீ பருப்பதநற் றலத்தும்
சுருதிமுறை பரவுசிவ லோகநல்கு சீலத்
தொன்மைவளர் தென்கயிலைப் புறத்தினுமே நம்பன்
தருதயையாற் கலிகடிந்து வீடுநல்குங் காஞ்சித்
தலத்தினும்புண் ணியவடிவண் ணாமலைவெற் பினிலும் (5)

1167. திருமகிழ்ந்து மங்கலமாந் திருமுதுகுன் றினுந்தண்
சிற்சத்தி அமுதுகனிந் தூற்றிருந்து கான்றுள்
அருவிசுழித் துக்குழித்துப் பெருக்காறாய் உவட்டா
தமிழ்த்துமொழி பெருந்தாரை அருஞ்சுவையுண் டூங்காப்
பெருமகிழ்ச்சி யோங்குபர மானந்தத் தழுந்திப்
பெறுமுயிர்க்கெல் லாமுதவப் பரஞ்சோதி வடிவாய்
ஒருபதமேல் தூக்கியொரு பதநடிக்குஞ் செம்பொன்
ஒக்கொளிபே ரம்பலமாஞ் சிதம்பரநற் றலத்தும், (6)

1168. புண்ணியமெய் வடிவெடுத்த இடைமருதூ ரினுஞ்செம்
பொற்கடுக்கை அண்ணமல்கிழ் திருக்குடந்தை யினும்பார்
எண்ணியவிப் படிமுதலாம் புண்ணியமா நகரம்
எல்லையின்மற் றிவர் விழுந்த மாத்திரத்தில் இறந்தார்
நண்ணியநல் தலத்திலிறந் திடுதரும பலத்தால்
நம்பனருள் ஆணைதலை மேற்கொண்டு பாவம்
பண்ணியவிக் கொடியவருந் திப்பியமா னங்கள்
பரமகிழ்ந்து மகிழ்ச்சியினுற் பணிவரங்கே றினரால். (7)

1169. இந்தவர லாறுசென்று சத்தியலோ கத்தில்
இருடிகளாற் சூழப்பட் டிருக்குமெலை நோக்கி
அந்தமுமா தியுமில்லாச் சம்புவடி யவராய்
அரியமிடல் கெழுவிசயம் அடைந்தவராங் கணைக்கன்
புந்திமகிழ்ந் துரைத்தனர்கள் இப்படியன் னியரப்
புவனத்தில் இருந்தவர்கள் அரியவிரு டியர்கள்
எந்தைசிவ புண்ணியஞ்செய் தவருடைய தரும
இன்கதைகள் எடுத்தொருவர்க் கொருவருரைத் தனரே. ()

1166. தென் கயிலை—காளத்தி.

1170. என்றுதொழும் முனிவர்தமை நோக்கியே யுரைத்தே
இருந்தபின்னர்ப் புராணிகோத் தமனுகுஞ் சூதன்
சென்றளவித் துணையென்னு தொழிவறவிட் டிமைக்குஞ்
சேணில்விளங் கவிரொளியாஞ் சம்புமகிழ்ந் திடவே
தோன்றுதொடர் புண்ணியமாஞ் சிவகதையை மீளச்
சுருதியுப நிடதமுணர் இருடிகள்புங் கவர்கட்(கு)
ஒன்றுபடு கருத்திெனுடு தேர்ந்துமற வாதிங்
குற்றுரெல் லாங்கேண்மின் என்றுவிரித் துரைத்தான்.()

சித்திரபானு கதை

(முதலே வந்தனை செய்தது)

1171. கருங்கேழல் மருப்பினகழ்ந் திடுகுழியிற் பகுவாய்க்
கட்செவிபாந் தட்பதும ராகநடு ஈன்று
மருங்கார மண்டலமிட் டுப்படமேல் விரித்து
வளர்ந்திடச்சந் தனச்சோலை மலர்த்தேறல் பிலிற்றப்
பெருங்காசை மலர்சொரிய வேயுமிழ்வெண் டரளம்
பெய்யநறுங் குருந்தமலர் பிறழ்ந்துபொழிந் திடவே
இருங்கோல முசுப்பலவின் சுளைதெவிட்டி எறிய
இடிகடுக்குஞ் சவுராட்டி ரத்தேய மாமால். (10)

1172. பொங்குகத மொரிகெழுமு தழற்பிழம்பில் எழுந்த
புலிங்கமலிர் ஒளிவிசிறு புதியவுலை முகத்தில்
தங்கமுனைந் துறுகனகஞ் சிறிதுமற வுருகித்
தழலில்வலம் இடஞ்சுழலத் தயங்குமப ரஞ்சி
எங்கும்நிறை புரிசைமணி மேடைமுகச் சாலை
இந்திரா மந்திரமேற் றளநெடிய கொடுங்கை
திங்கள்நுழை மங்கலசா லரமணிச் சூளிகைமேல்
சிகரமுயர் கோபுரமுந் திகழ்கனக நகரே. (11)

1173. அந்நகரில் மருவுமொரு கரவடன்மா பாவி
அடுகயவன் ஒருபகற்போர் அரசன்மனு நீதி
தன்னில்வரச் செய்தபுரோ கிதன்மனையில் இவன்போய்த்
தனமனைத்துங் கொணர்ந்துபுறப் பட்டனனவ் வேல்லை

1170. அளவு—இத்துணை—என்னுது.

1171. "எனக் கிளைத்த இன பவள மாமணிகள்"—சங்கோய்—15. காசை—காயாமரம்.

முன்னரொரு மறையவன்கண் டெழுந்தெதிர்கூப் பிட்டான்
முனிந்துகய வன்மறையோன் றனைவாளால் வதைத்தான்
அன்னபகல் பேரொலிகேட் டரசனடைந் தனனூர்
அயல்காப்போர் கள்வனைக்கொண் டரசன்முன்விட் டனரே. ()

1174. கருங்கழல்வீக் கியமன்னன் வஞ்சகனைப் பார்த்தூர்
காப்பீர்கா ளிக்கணமிக் கள்வனைநீர் கொடுபோய்
மருங்குதிக ழோடையின்மாக் கனையெடுத்து விழுங்கும்
வள்ளுகிர்க்காற் பிறையெயிற்று வரித்தண்டைப் பகுவாய்
நெருங்குபிணர்ப் புறச்சொறிவன் றலைக்கருங்கட் பெருத்த
நெட்டுடற்போ ரிடங்கர்முன்ன ரெறிமினென விடுத்தார்
அருங்கொடிய முதலையிவன் றனைச்சிரத்திற் கொடுவந்
தடுத்தகரை விட்டதனை அனைவருங்கண் டனரே.(13)

1175. அதிசயப்பட் டனரங்க ணுற்றவரெல் லோரும்
அரசனறிந் துடன்றுபினும் அடங்காவெஞ் சினத்தால்
எதிர்வருதன் உழையோரை விளித்திவனை வாளால்
எண்ணில்பெரும் படையதனால் ஈர்த்துவதைத் திடுமென்(று)
அதிகமுனி வாலுரைத்தான் கொடும்படரப் படியே
ஆயுதபே தங்களால் அட்டிடவும் இறவா
விதியைமுடி யரசன்கண் டதிசயித்திட் டிவன்பால்
வெட்டுவிலக் குண்டுசோ தித்திடுமென் றுரைத்தான்.(14)

1176. வஞ்சகனைப் பிடித்தவர்கள் கச்சையைச்சோ தித்து
மலர்க்கரஅங் குலிகளிற்சேர் மணியுகிர்சோ தித்துங்
குஞ்சிமுடி வகிர்ந்துசோ தித்துமணி வாயிற்
கொடிறுண்ணுச் சோதித்து மற்றுமெய்சோ தித்து
மிஞ்சுமருந் தோர்சிறிதும் இலையெனக்கேட் டரசன்
வியந்திவனைக் கொடுபொன்மே டையிலிறக்கி மாதை
அஞ்சலென விளிக்கத்தன் மனைவிகரத் திருந்தே
அடைவின்முக்கா லமுமுணரும் அஞ்சுகமுன் விடுத்தான்.(15)

1177. வள்ளுகிர்ச்சில் லரிப்பொறிதாட் குருவிந்த மணிக்கண்
மரகதப்பைஞ் சிறகர்நெடு வால்தனிமூ வரைத்தார்
கொள்ளுகதிர்ச் செம்பவளங் கடைந்தொப்பம் பிடித்த
கூர்முனைச்செக் கேழ்வளைவாய்ப் புழைமுகப் பொற் றுண்டத்

1174. தண்டை—வால்; இடங்கர்—முதலை.

1176. கொடிறு—கன்னம். உண்ணு—உள்நா. சுகம்—கிளி.

தெள்ளுமொழி மழலையற வடித்துப்பே சியநாச்
சித்திரமெய்ப் பஞ்சவனக் குழைமயிர்ப்புன் தலைப்பூக்
கிள்ளையர சே! கற்ப தருப்பிறந்த கிளியே!
கிஞ்சுகவாய் அயிராணி மகிழ்ந்தருளுஞ் சுகமே! (16)

1178. குடுமிவரை யிருசிறகர் தடிந்துலகு காத்த
குலிசன் உளம் மகிழ்சுவா கதமே! கேட் கின்றேன்
நடுவெனவோ ருரைசிறிது பகர்தி கொடும் பாவம்
நாளுமிழைத் திடுமிவனை நான்நாளு விதத்தால்
அடுவதனைத் தும்பழுதா னதுமுதலைக் கெறிய
அதுவுமெடுத் தேகொடுவந் தருங்கரைவிட் டதுபின்
தொடுகழற்காற் படர்வடிவாள் முதலியவெம் படைகள்
துரத்தவுமாய்ந் திலனேது சொல்லுதிகா ரணமே (17)

1179. என்னுமர சன்மகிழ வன்னியுரைக் கின்ற
தெறிதிரைநீர்ப் பரவையிடை யிருநிலத்தில் விறல்கூர்
ஒன்னலர்பொன் மணிமகுட முடிகள்பல நெரிஞ்சும்
ஒளிவிசிறு மணிக்கனகக் கனைகழற்கால் திரண்ட
மின்னவிர்செம் பொற்சிகர வடிவரையிற் பணைத்து
விறல்கெழுதிண் தோட்பொழிபொன் மழையோட்டுர் தடக்கை
மன்னவர்தங் குலதிலக! கேண்மதியான் உரைக்கேன்
வாய்மைபெற இவன்முன்னர் செயும்வரலாற் றினையே

1180. இரவலர்கள் விழையுந்தி பெறவருகென் றழைப்ப
தெனநுடங்கு கொடிமாட மிலங்குமணி மறுகில்
அரமகளிர் அனையவனி தையருணக்கு நெற்கண்
டதுகொறிக்க வருங்கோழி யகலவெறி குழைகள்
உருளனவே தபதியர்தஞ் சிறுவர்வினை யாட்டில்
உண்டாக்குங் கொடிஞ்சிமணி தேரச்சிற் பூட்டிச்
சுரபதிகல் லகனிலத்து மணியொடுபொன் னுரையத்
தோன்றல்பல வுருட்டுவளந் துலங்குகுசபுரமே (19)

1178. சுவாகதம்—கிளி.

1179. வன்னி—கிளி.

1180. கோழி யகல எறிகுழைகள்—'கோழிமே லெறிந்த ஒண்குழை'—சிந்தா.
89. தபதி—சிற்பி; சுரபதி. கல்—இந்திர நீலக்கல். தோன்றல்பல—குழந்தைகள் பலர்.

1181. அங்கண்மரு வியவணிகன் விட்கம்பன் தனயன்
ஆகியசித் திரபானு அனுதினமுங் கமழ்செங்
குங்குமப்பைங் குழம்புமொழுக் கெறிந்திடுசெவ் விளநீர்க்
குவிமுலைகூர் பரத்தியர்தங் கொவ்வையித ழருந்திப்
பொங்குதன மனைத்தும்போய் வறியவனாய்த் திருடிப்
பொருக்கெனவங் கங்காரம் எரிகொளுத்திச் சுட்டே
எங்கணும்பார்த் துள்ளிருக்கும் பொருள்திருடி நகர்விற்
றெழில்திகழுங் கணிகையருக் கீந்தலரோ டிருந்தான் (20)

1182. இப்படியே கொடியபர வஞ்சகன்செந் தீயால்
எண்ணில்பனை கடப்பசுக்கள் இறந்தனவோர் அனந்தஞ்
செப்பனைய முலைமின்னார் இறந்தவர்கள் அனந்தந்
தெள்ளுமறை நாற்றுறைபோய் உபநிடதம் விரிக்கும்
ஒப்பரிய பொருளுணர்ந்த வைதிகமா மறையோர்
உறையுளுட னேயிறந்த பேரனந்தர் பாவந்
தப்பறஇப் படிதன்னால் வந்ததுமென் றைமல்
லைதயலரோ டின்பமுற்றுத் தொடர்ந்துபடர் தனனால் (21)

1183. சுடர்மணிப்பொற் பஃறலையா யிரம்விரித்துச் சேடன்
சுமக்குநன்றி குறித்துவரா ழிப்புவிமா துயர்கள்
இடரகலப் பயந்தஅர சந்தருக்கீழ் விரிஞ்சன்
இடைமலர்ப்பைந் துளபன்மிசை யிதழியந்தார்க் குழகன்
படர்சடையின் அரசிலையின் வடிவெடுத்துப் பொதுளும்
பாந்தளனந் தஞ்சுமந்த பான்மையினாற் புயங்கந்
தொடைமலர்ச்சந் தன்வடியில் தரித்தனனாற் புலவோர்
சொற்றபெயர் புகழ்செல்வந் திகழ்புயங்க புரமே.(22)

1184. அந்தநக ரனைத்துஞ்செங் கதழெரியாற் சுட்டே
அழுதுபொழி செருத்தல்மடி அடங்காது பெருத்துச்
சிந்துகுடப் பால்தலையில் இளங்கொற்றிக் கறவைத்
தேனுவனை கங்கொண்டு திரள்வழியே நடந்து

---

81. ஆரம்—தோட்டம்.

93. அரசமரம்—"மூலதோ பிரம ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே, அக்ரத: சிவரூபாய, விருக்ஷ ராஜாயதே நம: [விரத சூடாமணி].

4. செருத்தல்—மாட்டுமடி. கொற்றி—பசுவின் இளங்கன்று.

வந்துபகல் ஒருபசுவின் கால்வெந்து நடக்க
மாட்டாமல் அமலேசன் மணிக்கோயில் அருகே
நொந்துபடுத் திடஇவன்கண் டெழுப்பவெழா ததனை
நோக்கியம லேசனுக்கென் றுவந்துரைத்து நடந்தான்.

1185. மற்றஇளங் கொற்றியாம் பசுக்களெல்லாங் கொடுபோய்
மணிமாட நிறைநகரின் மகிழ்ந்துவிற்றங் கிருந்தான்
கொற்றவ! நின் புரோகிதனில் இப்போது திருடிக்
கோரநின்பா லகர் பிணித்துக்கொடுவரநின் கரத்தில்
உற்றனன்மற் றிவனல்லா தொருபசுகண் டுதற்கென்
றுபகரிக்கப் பட்டதங்கண் உற்றோர்கால் வெந்த
பெற்றம்அம லேசனுக்கென் றேகாத்துச் சூலம்
பிரியாமுத் திரைபொறித்துக் கோயிலில்விட் டனரே.

அறுசீர் விருத்தம்

1186. அந்தச் சுரபி பொ ழிந்றும்பால்
அமலே சனுக்கிங் கபிடேகக்
கந்தத் திரவி யங்களுடன்
கலந்தே ஆட்டப் பட்டஇப்போ(து)
எந்தைக் குதவு புண்ணியத்தால்
இவன்பால் நீ செய் தண்டமெலாம்
நிந்தைப் படவீண் போனதுன்றல்
நித்த மிவன்போற் றிடப்படுவோன். (25)

1187. சுரந்து பொழிவெங் கடுப் பிலிற்றுந்
துளைமுள் ளெயிற்றுப் படவரவம்
பரந்து கடியா துலறியசெம்
பங்கிச் சுழல்கட் குழிவயிற்றுக்
கரந்த பரடு புடைநீளக்
கணைக்காற் கூளி நிசாசரர்கள்
துரந்து வருத்தம் புரிவதில்லை
தொல்லை யிரும்போ கங்கள் துய்ப்பான். (26)

1185. பாலகர்—காவலாளர்.

1187. "வெண்பற் குழிவயிற்றுப் பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு பரடுயர் நீள் கணைக்காலோர் பேய்" —மூத்த திருப்பதிகம் 1. பரடு—கால்கணு,

1188. அந்த முறுநாள் கிராமயமாம்
அண்ணல் சிவலோ கத்திலெய்திச்
சிந்தை மகிழ அப்பகவின்
செய்ய மயிரோவ் வொன்றினுக்குக்
கந்த மலரோன் வீற்றிருக்குங்
கற்ப மதுவோர் ஆயி ரம்வாழ்ந்(து)
எந்தை மலர்த்தாள் அடைகுவனென்
றியம்புங் கிளிசொல் கேட்டனனால். (27)

1189. வியந்து மகிழ்ந்து கனைகழற்கால்
வேந்தன் மதவெங் கரிதிகைத்துப்
பயந்து நடுங்க மத்தகமேற்
பாயு மரியா சனத்திவனை
நயந்து விரைந்தேற் றுபுகனக
நாறு விதமா மணிகள்தனக்(கு)
இயைந்த துதவிக் கலியாணம்
இயற்றி யிரும்போ கமுமளித்தான். (28)

கிளி கூறிய கபிலன் கதை.

1190. செய்ய மலர்க்கண் ணிணைகுளிரச்
சிறந்த கிளியை நோக்கினன்பின்
பைய அரசன் தனைக்கிளிதான்
பார்த்தோர் காதை மீளவுமே
ஐய மகல வுரைத்தது நான்
அம்போ ருகஆ லயத்திருவின்
கையி லிருந்தேன் புண்டரிகக்
கண்ணன் உலகிற் கடிதடைந்தே. (29)

1191. கருகி மதர்த்துக் குழைகிழித்த
கயற்கண் பிறழிந் திராணியென்பூ(டு)
உருகி நிறைகற் பகமலர்தூய்
உவந்து வழிபட் டளிமுரன்று
பருகி நறவு கொப்பளிக்கும்
பங்கே ருகப்பொற் பொகுட்டணங்கைப்
பெருகு விருப்பான் மகிழ்ச்சிசெய்து
பெற்று ளவள்கை யிலுமெனையே. (30)

1190—91. இந்திராணி கடிதடைந்தே வழிபட்டு,

1192. அன்ன பகற்கட் செவிப்பகுவாய்
ஆலில் துயில்வோன் சிலதியரை
உன்னி விரைந்து நோக்கியெம
தொளிரும் உலகம் இப்பொழுது
பொன்னும் மணியுங் குயிற்றியது
புதுமை பெறவே அலங்கரிமின்
என்னும் அமையம் இந்திரைசங்
கேந்தும் இறையைக் கேட்டனளால். (31)

1193. கோங்கு கமழ்பைந் துழாய்க்கருடக்
கொடியோய்! இப்போ திவ்வுலகம்
எங்கு மலங்கா ரம் புரிவ
தேது கார ணம் என்னப்
பங்க யனையுந் தியிற்பயந்தோன்
பவள இதழ்கோ மளகலசக்
கொங்கை வனச மலர்த்திருவைக்
குறித்து நோக்கிக் கூறலுற்றான். (32)

1194. தெங்கின் பழஞ்சிற் றடுப்பாக்கிச்
செய்ய பவளக் கொடிதழலாய்
அங்கண் புகுத்தி வளைகுழிசி
ஆக்கிப் பனிநீர் வாக்கி முத்தம்
பொங்கும் அரிசி உலைப்பெய்து
போத வடித்து மலர்க்கறியாச்
சங்க அகங்கைச் சிறுவியர்கள்
தருக்குஞ் சாரு வரிநகரம், (33)

1195. அந்த நகர்வே தியன்கபிலன்
அல்லும் பகலுங் களவுகொடு
வந்து நுகர்வோன் ஒருமறையோன்
மனையில் ஒருசே தாக்கொணர்ந்து
சிந்தை மகிழ்தன் மனைவதிந்து
செருத்தல் கறந்து பயம் பருகிப்
புந்தி களித்தங் கிருந்தனன்பின்
புனிற்று வுடையோன் கேட்டடைந்தான். (34)

1194. குழிசி—பானை.
1195. பயம்—பால்.

1196. அன்ன பகல்வஞ் சகன்கேளா
அயலூ ரடையப் பசுக்கொடுபோய்
மன்னு மனைவாழ் வோன்முன்றில்
மருங்கிற் பிணித்து வைத்தயல்போய்த்
தன்னை மறைத்தவ் விரவிருந்து
தபனோ தயத்திற் பசுக்கொடுவந்(து)
இன்ன லறவே அதர்படரும்
இவனை அவன்கண் டெதிர்த்தனனால். (35)

கலிநிலைத்துறை.

1197. பெற்றமொ டந்தண னைக்கயி றாடு பிணித்தேபோய்க்
கொற்றவன்முன்பு விடுத்திவன் முன்செய் கொடுஞ்சோரஞ்
சொற்றனன் அங்கண் உருத்து வெகுண்டர சுஞ்சோரற்
பற்றிவி ரைந்திரு கண்கள் குடைந்து பறிப்பித்தான். ()

1198. வஞ்சகன் வெந்துய ரங்கொ டுளைந்துயிர் மாய்ந்திட்டான்
அஞ்சலெ னுஞ்சிவ கிங்கரர் அங்கண் அடைந்தாவி
துஞ்சு மவன்றனை மான மதிற்புடை சூழ்ந்தேற்றித்
தஞ்சமெ னுஞ்சிவ லோகம் உறும்படி சார்கின்றார். (37)

1199. வண்டளி யுண்டெழு முண்டக வொண்டொடி மாதேகேள்
அண்டரு மெண்டிரி புண்டர முண்டக னுருமால்
எண்டிசை தண்டொடை மண்டெழில் கொண்ட தெலாநேரே
கண்டிட விண்டிதழ் மண்டன முண்டது காண்மாதோ()

அறுசீர் விருத்தம்.

1200. மரகதப்பா சடைச்சிறுமுட் டாட்கலுழித்
தேறல்பொழி மரைப்பொகுட்டுப்
புரமணிப்பீ டிகைச்சுணங்கு பூத்தழகு
கனிந்தொழுகு பொம்மற் கொங்கைக்
குரவமலர்க் கருங்குழலாய்! ...தகனு
கிலுமவன்முன் குயிற்றுஞ் செய்ய
வரநிறைபுண் ணியங்கேண்மோ பசுக்களவிற்
கொணர்ந்தயலூர் வதிந்தான் மன்னோ. (39)

1199. அளி—தேன், மது—"அத்தேன் அளியுண் களியால்"—சம், தேவா, II—72—5. முண்டகம்—நெற்றி.

1201. அங்ககரிற் சிவனடியார் தம்மனையிற்
கொணர்ந்துகரு தன்னோன் தானும்
இன்னலுடன் மறைந்திருக்க அம்மனையோன்
அருகுவந்தே இப்போ தைப்பால்
உன்னுபய மாயெனக்கு உதவெனவே
அவன்கொடுக்க உகந்தே தேரான்
மன்னுபுகழ்ப் புண்ணியத்தாற் பவந்தொலைத்து
வான்கயிலை மருவப் பெற்றான். (40)

1202. ஆகையினால் இவ்வழிக்கொண் டவன்கயிலை
ஏகுகின்றான் அதனா லிப்போ
வேகமுடன் இவ்வுலகம் அலங்கரியென்
றேயுரைத்தோம் மின்னே! என்று
மோகமுடன் அரிபுகன்றான் என்றுகிளி
அரசனுக்கு மொழியக் கேட்டான்
ஆகமுடன் நின்றுசிவ புண்ணியஞ்செய்
தன்னோனும் அரன்தாள் பெற்றான். (41)

அத்தியாயம் 47.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி

விகர்த்தனன், பார்த்தன்—கதை

இந்திரன் இடபயோகிக்குக் கூறியது

சூத முனிவர் சொல்கிறார்:

இடபயோகி யென்பவர் ஒரு நாள் இந்திரனைக் காணப் பொன்னுலகு சென்றார். அவரைச் சயந்தன் உபசரித்து வணங்க, அவர், 'உன் தந்தை எங்கே?' என வினவினார். சயந்தன், 'விகர்த்தனன் பார்த்தன் என்னும் இருவர் சிவலோகத்திற்குத் திப்பிய விமானத்திலே சிவதூதர்களால் அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவர்களைப் பார்த்து வரச் சென்றுளார்' என்றுரைத்தான். இவ்வாறு உரைத்துக் கொண்டிருக்கும்போது இந்திரன் வந்து இடபயோகிக்கு வந்தனை வழிபாடு செய்தான். இந்திரன் சென்று வந்த வரலாற்றை இடபயோகி வினவ, இந்திரன் இயம்புகின்றான்:

1202. இப்போ—இப்போது; ஆகம்—மனம்.

கரணகுஞ்சரம் என்ற நாட்டிற் கரவீரட்டம் என்ற நகரத்தின் அரசகுமார னை விகர்த்தனனும் மந்திரி மகனை பார்த்தனும் பெற்றோர் மொழி கேளா மல், நகரைவிட்டு வேற்றூர்களுக்குப் போய்க் களவாடுதல் முதலிய தீய வழி யில் நடந்து கிடைத்த பொருளைப் பரத்தையர்க்களித்துக் காலங் கழித்தனர்.

ஒருநாள் காமநகரம் என்னும் நகரத்திலே ஒரு வீட்டை இடித்துக் கொள்ளையடித்துப் பெரும் பெட்டியொன்றை யெடுத்துக்கொண்டு வெளி வந்தனர். நீண்டதூரம் சுமந்து நொந்து ஓரிடத்தில் இறக்கிப் பார்த்தபோது மணியும் பொன்னும் இருந்தவையுடன் அரிசியும் எழுதாத ஓலைக்கட்டொன் றும் இருந்தன. ஓலைக் கட்டையெடுத்து வெளியே எறிந்தபோது கொஞ்சம் அரிசியும் சிந்திவிட்டது. இந்நிலையிலே அவ்வழியே வந்த சைவ அந்தணன் ஒருவனைப்பற்றி, 'இப்பெட்டியைத் தூக்கிக் கொண்டுவா' என்று துன்புறுத் தினர். அவன், 'ஐயன்மீர்! நானோ களைத்திருக்கிறேன். இந்த அரிசியிற் கொஞ் சம் அளித்தால் உதவியாயிருக்கும்' என்றான். 'அதோ சிந்திக் கிடக்கும் அரிசியை வாரிக்கொண்டு, இப்பெட்டியை எடுத்துவா' என்று விகர்த்தனன் விளம்பினான். அந்தணன் அரிசியை வாரிக்கொண்டு ஓலைக்கட்டையும் எடுத்து ஒரு மூட்டையாய்க் கட்டி வைத்துக்கொண்டு, பெட்டியுடன் அவர் களைப் பின் தொடர்ந்து சென்றான். அவர்கள் அயல் நகரடைந்து ஒரு பரத் தையின் வீட்டிலே தங்கிப் பகலெல்லாம் சூதாடி யிருந்துவிட்டு, இரவு வந்ததும் அவளை அனுபவித்து இருவரும் போரிட்டு இறந்தனர்.

அந்தச் சைவ அந்தணன் அவர்களிடமிருந்து பெற்ற அரிசியைத் தன் வீட்டிற் சமைத்துண்டான். சிவனடியாருடன் கூடி அவ்வோலையிலே சைவபுராணம் எழுதிப் படித்தான். அந்தச் சிவபுண்ணியத்தாலே அரம்பையர் ஆடிப் பாடச் சிவ கணங்களாலே சுமக்கப்படும் திப்பிய விமானத்திலே இறந்த இருவரும் சிவபிரான் திருமுன் சென்றனர். நான் அவர்களைக் கண்டும் சிவ பிரானைத் தரிசித்தும் வந்தேன். அவர்கள் சிவசாரூப்பியமுடன் விளங்கு கின்றனர்.

அதிகண்டன் கதை

இடபயோகி கூறுவது

இவ்வாறு இந்திரன் கூறியதைக் கேட்ட இடபயோகி கூறுகிறார்:

குடகு தேயத்தில் சவுபாக்கிய நகரத்தில் அதிகண்டன் என்ற மறைச் சிறுவன் தனக்கொத்த சிறுவருடன் தெருவில் விளையாடும் போது ஒரு கண்டிகை மணியைக் கண்டெடுத்தான். அதனைத் தன் நண்பனான ஒரு சிவ பக்தன் மகனுக் களித்தான். அச்சிறுவன் தன் தந்தையினிடம் கொண்டு கொடுத்தான். சிவ பக்தன் அந்த அக்கமணியைத் தன் கழுத்திலே அப்போதே அணிந்து கொண்டான். அக்க மணியைக் கண்டெடுத்த அதிகண்டன் முதுமை

யடைந்து இறந்தபோது, சிவ கணத்தவர் அவனை ஒளிமிகும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு, வழியில் நான்முகனும் திருமாலும் வழுத்துமாறு கயிலைக்கு அழைத்துச் சென்றனர். இவ்வாறு அதிகண்டன் எங்கும் பரவிய ஒளியுடன் சிவலோகஞ் சேர்ந்தான்.

இங்ஙனம் இடபயோகி கூறி இந்திரனை வியப்பில் ஆழ்த்திவிட்டுத் திருக் கயிலையை அடைந்தார்.

அத்தியாயம் 47.

சிவதரும மான்மியம்—தொடர்ச்சி.

விகர்த்தனன், பார்த்திபன் கதை.

இந்திரன் இடப யோகிக்குக் கூறுவது.

1203. * இன்னு மோர்கதை யீசன் திருவருள்
மன்னு தொண்டர் கதிபுகு மாண்பது
பன்னு நான்மறை யீர்பகர் வோமெனத்
துன்ன ருந்தவச் சூத னியம்புவான். (1)

1204. * இடப யோகி யெனுஞ்சிவ யோகிதண்
புடைப டர்ந்தெழு கற்பகப் பொன்னகர்
மடல்கொள் நாண்மலர்க் கற்பக மாலிகை
அடல்கொள் வேந்தனைக் காண்பதற் கண்மினுன். (2)

1205. * இவனெ ஈர்ந்திடும் எல்லை யிருஞ்சினைக்
கவர்த டம்பணைக் கற்பக மன்னவன்
அவணி ருந்திலன் ஆங்கவன் ஈன்றருள்
குவவு திண்டோட் குமரன் எதிர்ந்தனன். (3)

1206. * சென்ற யோகி செழுமலர்ச் சேவடி
யொன்றி வாழ்த்தி யுளமெக் குருகினன்
அன்று செய்வன யாவையுஞ் செய்துபொற்
குன்றெ னும்புயன் கோயில்கொண் டெய்தினன். (4)

1207. * சீய மேந்து செழுமணி யாசன
மீயு யர்த்தி வெருக்கொடு மென்மலர்
வாய்பு தைத்து மருங்குநின் றனரோ
ஆய வன்றனை அன்புற நோக்கினன். (5)

---

* இந்த ஐந்து பாடல்களும் கோனேரியப்ப நாவலரது உபதேச காண்டத்திற் காணக் கிடக்கின்றன.

அறுசீர் விருத்தம்

1208. மன்றல் கமழ்தண் மலர்த்தாரு
வழங்குந் திப்பி யாம்பந்தர்
துன்ற நிலவு கலைப்புறமேல்
தூக்கி யொடுக்கி யுடல்வளைத்து
நின்ற சயந்தன் தனை முனிவன்
நெடிது நோக்கி நின்தாதை
சென்ற இடமே துரைத்தியெனச்
செப்புஞ் சயந்தன் முறை பணிந்தே; (6)

1209. கழைவிற் குனித்த கடவுளைச்செங்
கண்ணுற் சிறிது விழித்தெரித்து
விழைவிற் றுணைவிக் காயங்கம்
மீட்டும் உதவு பரன்தூதர்
குழைவிற் கடிது விகர்த்தனனுங்
குரிசி லொடுபார்த் திபற்கொண்டே
இழைவிற் பிறழ்மா னத்தேற்றி
எம்மான் உலகின் ஏகினுர். (7)

1210. மகிழ்ந்து படரும் விகர்த்தனனை
வல்லே காண்பான் என்தந்தை
புகழ்ந்து வியந்து நடந்தனனிப்
போதென் றுரைக்கும் அவ்வேலை
அகழ்ந்து கொழுதி வரிச்சிறகர்
அளிசூழ் அளகக் கருங்கயற்கண்
திகழ்ந்த புளகக் குவிமுலையிந்
திராணி கொழுநன் அடைந்தனனுல்; (8)

1211. வந்த குலிசப் படையோனை
மகிழ்ந்து முனிவன் நோக்கியெங்நன்
இந்த அமயம் படர்ந்தனையென்
றியம்ப மகவான் வணங்கியைந்து

1208. திப்பியாம் – திவ்யமான. கலைப்புறம் மேல் தூக்கி—ஆடையின் புறத்தை மேலே தூக்கி.

1209. துணைவிக்காய்—(அவன்) மனைவி ரக்ஷிக்காக. குழைவில்—மனக்குழைவுடன்; அன்புடன்.

விந்தை செறியிந் நியஞ்செயித்தோய்!
  விகர்த்த னன்பார்த் திபன்றமையே
சிந்தை மகிழுஞ் சிவதூதர்
  சிவலோ கத்திற் கொடுசென்றூர் (9)

1212. செம்பொன் மணிமா னத்தின்முழாச்
  சின்னந் துவைக்கும் விழாக்காண்பான்
உம்ப ரோடியான் சென்றனன்வந்
  துனைக்காண் பதுவே யன்றிமற்றும்
இம்ப ரிடம்வே றடைவதுண்டோ
  என்ன இருடி இயம்பும், மன்னு!
சம்பு விடுதூ துவரவன்செய்
  தருமமென்சாற் றினரெனலும். (10)

விகர்த்தனன் பார்த்திபன் கதை

இந்திரன் சொன்னது

1213. கருவி முகில்கண் படுக்குமலர்க்
  காவின் நறுமாங் கனித்தேறல்
அருவி பெருக்கா றெடுத்தோட
  அமிழ்ந்து முசுவக் கரைகாவில்
மருவி யதுமா னதிதடத்து
  வதிந்து வீரா சனத்துறவோர்
பொருவில் சமாதி யிருந்தநிலை
  போலுங் காண குஞ்சரமே. (11)

1214. அண்ட முகடு வளர்புரிசை
  அமரும் பொறியல் லினுங்கூனல்
துண்ட மதிவிற் பிடித்ததனிற்
  சுடர்கீற் றிணைநா ளுஏற்றி

---

213. மானதி—மால்நதி—பெரியநதி. முசு—மருவியது தவவோர் சமாதி நிலைக்கு ஒப்பு.

214. புரிசை—மதில்; பொறி—யந்திரம்; அல்லினும்—இராக்காலத்தினும்; ......மதிவில்—மதிவில்லாக, சுடர்க்கீற்று நாளுக, உடுக்கள்—உண்டையாக; நென்னூர் (பகைவர்) முடிகளை உருட்டும்,

உண்டை யெனப்பல் லுடுக்களைவைத்
தொன்னூர் முடிகள் தெறித்துருட்டிச்
சண்ட னெனனின் றடும்வீர
தண்டாக் **காவீ ரட்டமம்மா.** (12)

1215. **அந்த** நகரம் அரியவிறல்
அரசன் குமரன் **விகர்த்த**னெனும்
பந்த முறுமந் திரிமகனும்
பார்த்திப னுங்கூ டிப்படர்ந்து
தந்தை யர்கள்சொன் மறுத்துநகர்
தணந்தன் னியதே சத்தடைந்தே
எந்த இடமுங் கவறெறிசூ
திழைப்பார் பலவஞ் சகம்புரிவார். (13)

1216. **சந்து** நடப்பார் படிறுரைப்பார்
தவறு செயுங்கன் மம்புரிவார்
நிந்தை யெவர்க்குங் கட்டுரைப்பார்
நீங்கா அனந்த சோரருடன்
புந்தி களித்துக் களவுகொள்வார்
பொன்னங் குழைகள் கிழித்துமதர்த்(து)
உந்துங் கயற்க ணார்க்குடைமை
உதவிப் புகழ்வார் அவ்வேலை; (14)

1217. **முருந்து** நகைத்தண் ணிலவெழப்புன்
மூரல் விளக்குங் குயில்மொழியார்
திருந்து தரள வடநெருக்குஞ்
சிகரா சலமென் முலைசுமந்து
வருந்த நடந்த திளைஞர்கண்டு
மலர்கொட் டியபஞ் சடைதூவிப்
பொருந்த அழைத்து மலர்ப்பாயல்
புணர்வோர் **காம மாநகரம்.** (15)

1218. **எழுத** அரிய மறையவர்போர்
இகல்வேல் அரசர் மணிவணிகர்
உழுது விதைக்கும் மல்லல்வளம்
உறுவே ளாளர் சங்கரர்கள்

1217. தூவி—மெல்லிறகு,

பழுதில் பொருளீட் டியமணிப்பொற்
பன்மா டத்தில் உளங்களித்தெப்
பொழுதுங் கலைதேர்ந் தறமனைத்தும்
புரிவோர் காம மாநகரம். (16)

1219. இன்ன வளங்கூர் நகரைவிரைந்
திகல்வெஞ் சோர ருடனிடித்துப்
பொன்னும் மணியும் பலபொருளும்
பொருக்கென் றெடுத்தந் நகர்ப்புறம்போய்
மன்னும் நெறியின் மிகுந்தசுமை
வருந்தி இறக்கி இளைப்பாறித்
தன்னில் எதிர்நேர் வருமறையோன்
தனைப்பார்த் தழைத்தொன் றுரைத்தனரால். (17)

1220. வருந்தி நடந்து கனத்தசுமை
மணிப்பெட் டியுஞ்சோ றித்ததனில்
இருந்த பணிபொன் முதலியவை
எல்லாம் முன்போல் வைத்தவையுள்
பொருந்தும் அரிசி சிறிதும் லிபி
பொறியா ஏட்டுப் பொத்தகமும்
தெரிந்து கடிந்து பெட்டிமுன்போற்
சிறக்க மூடி எடுத்துகென்றார். (18)

1221. என்ற பகல்வெண் ணீறுருவம்
இலங்க வுத்தூ ளனம்புரிந்து
துன்றும் மணிக்கண் டிகையணிந்து
சோதிச் சிவலிங் கம்வழிபட்(டு)
என்றும் புனித மாய்ப்பரனைந்
தெழுத்தும் உணர்ந்த சிவபத்தன்
கன்று பசியில் உணவின்றிக்
கலங்கி வருந்தித் தளர்ந்தனனால். (19)

1222. பையுள் உறவெள் ளிடைவெயிலிற்
படர்ந்து நெடுந்தா ரையினடந்து
மெய்யில் அரும்பி அரும்பியெழும்
வியர்வு பொடிப்பச் சுடுபொடியின்

1220. எடுத்து கென்றார்—எடுத்துக்கொள்க என்றார்.
1222. தாரை—வழி.

நொய்ய அடிகள் பெயர்த்தகடு
நுடங்க எரிவெம் பசியுடற்ற
கைய றவிற் சோர்ந் தெற்கரிசி
கடிது நீவிர் கொடுத்திடிலே. (20)

1223. அளத்தற் கரிய பலஞ்சுருங்கா
தணையும் என்ற மறையவன் சொல்
உளத்திற் கருதிப் பார்த்திபனென்(று)
உரைக்கும் அரிசி யிற்சூழல்
தளத்திற் சிறிது விழுந்ததெலாந்
தடக்கை யார வரன்றியொல்லை
வளத்திற் கொடுபோய் மற்றையவை
விழுங்கேன் நீபோ என்றுரைத்தான். (21)

1224. கரந்து படரும் விகர்த்தனனக்
கிளை மொழிவான் மறையோய் நீ
இரந்து படரா வகைபெட்டி
யெடுத்தி அலேகந் தனைக்கொணர்ந்தே
அரந்தை அகல்வான் செல்லுதியென்
றவ்வூற் பெட்டி தனையெடுத்து
விரைந்து படர்ந்தார் மறையவனும்
விரும்பி அலேகங் கொடுசென்றான் (22)

1225. விருது பகர்ந்தே இரவுப்பகல்
விறலோ ரிருவர் கடுஞ்சூது
பொருது நிகழ்ல லாதுபகற்
போது கழித்துத் தழைகுழைத்த
மருது வளர்பைங் கிளிமொழிச்செவ்
வரியா விழிஞர் உயிர்பருகக்
கருது விழிவார் அறுத்தெறிந்த
கலச முலையாட் புணர்ந்தனரால். (23)

1226. இருவர் ஒருவர்க் கொருவர்படை
எறிந்து மரித்தார் அம்மறையோன்
ஒருவி அரிசி பெர்த்தகங்கொண்
டுறையுள் அடைந்தட் டவைநுகர்ந்து

1224. செல்லுதி—நட. அலேகம்—வெற்றேடு. சென்றான்—நடந்தான்.
1226. முறை—தூல்.

பொருவில் அடியா ரொடுசைவ
புராண முறைதீட் டிப்படித்த
பெருமை யதனுற் சிவதூதர்
பிறங்கு விமானங் கொடுவந்தார். (24)

1227. பொன்னஞ் சுணங்கு விரித்தொளிரும்
பொம்மன் முலைவெற் பிணைச்சுமந்து
மின்னஞ் சிடநொந் திடவரும்பொன்
வியனுட் டரம்பை மார்நடிக்கச்
சின்னந் துவைக்கத் துந்துபியெண்
திசையுஞ் செவிடு படக்கறங்க
நன்னெஞ் சிளகக் கின்னரரியாழ்
நரம்பார்த் துளர்த்திப் பாடிடவே; (25)

1228. விரிக்குஞ் சுடர்மா மணியிழைக்கும்
விமான மேவு பீடிகையிற்
பரிக்கும் படிமற் றிருவரையும்
பரிவின் ஏற்றிக் கொடுசென்றே
அரிக்கும் கமலக் கடவுளுக்கும்
அளத்தற் கரிய பெரும்புகழ்சஞ்
சரிக்குஞ் சிவலோ கத்திருத்தத்
தனிமா முதல்சன் னிதியிருந்தார். (26)

1229. மறையின் துறைபோ கிக்களித்து
மகிழும் இடப யோகீச !
முறையின் வதிந்த இருவரையும்
முழுது நோக்கிக் கூனுமுடற்
பிறையும் அரவு முடித்தசடைப்
பெம்மான் மலர்த்தாள் தொழுதேற்றிக்
குறையும் இரந்தே அவர்கள்விடை
கொண்டே யிவண்மீண் டடைந்தனனல். (27)

1230. அங்கண் இருவோ ருந்நுதற்கண்
அமலன் சிவசா ரூப்பியம்பெற்(று)
எங்குங் கமழ்தே றற்கலுழி
இதழ்க்கோ கனகன் ஆதியராம்

1229. இருவர்—விகர்த்தனன், பார்த்திபன்,

புங்க வர்களைத் திசைப்பவெம்மான்
பொருவி லாணை யாலின்பம்
தங்கும் அவண்சேர்ந் தனரென்றே
சாற்றி மகவான் பினுமுரைக்கும். (28)

1231. ஏழுத அரிய மறைகள்முறை
இட்டுந் தொடர்ந்தும் காண்பரிதாய்
முழுது நிறைந்த சிற்பரனும்
முதல்வன் சிவபுண் ணியமனைத்தும்
பழுது தவிர எவற்குமிவை
பகர்வ தரிதாம் என்றிடவப்
பொழுது வாம தேவமுனி
பொருவில் காதை ஒன்றுரைப்பான். (29)

இடபயோகி கூறலது—அதிகண்டன் கதை

1232. திகழும் பரமா காசநடுச்
சேருஞ் சிவலோ கத்தயன்மால்
புகழுங் கணங்கள் சூழவுறை
புனித வுமையோர் பாகனைமற்(று)
இகழும் முடிவொன் றில்லானை
எய்திப் பின்னர் அயனெடுநான்
மகிழும் பரமா னந்தமுடன்
வல்லை காமம் அனுபவித்தே. (30)

1233. வேண்டும் உருவங் கொடுபுவன
மீது சுலவி அதனாடை
பூண்ட வுருவம் எடுத்ததனுற்
பொருக்கென் றெஞ்ஞான் றும்விதியின்
ஆண்டு மன்ன மன்னமன்னன
மருந்து கின்றேன் ஆகுகென்று
மீண்டவ் வுலகந் தொறுமடைவின்
வியப்பால் இறங்கிப் புவியடைந்தேன். (3

1231. வாமதேவமுனி—இது 'இடபயோகிமுனி' என்றிருத்தல் வேண்
செய்யுள் 1204, 1241—பார்க்க. 1233-அடி3-விளக்க இல்லை.

1234. மன்றற் கடுக்கை கமழ்சடில
வள்ளல் அருளால் இமையம் ஒரீஇத்
தென்றற் குழவிக் கன்றுதவழ்
சிமய மலைசேர் வான்புலன்கள்
வென்றக் கரமைந் துணர்முனிகா
விரிநீர் கரகம் வீழ்ந்திடவே
குன்றக் குறவர் வியப்பவரு
குடக தேயம் அதிலம்மா. (32)

1235. சிங்கக் குருளை இளைஞர்பொருஞ்
சேவற் சிறகர் எழுகாற்றால்
வங்கக் கடற்பாய் முகிலுடைந்து
மறுக அதனில் எழுமின்கள்
தங்கக் கலசக் கொங்கையராய்த்
தரையில் அடைந்த இளைஞருறீஇத்
துங்கத் துணங்கை புரியுமலர்ச்
சோலைச் **சவுபாக் கியநகரம்** ; (33)

1236. மருவும் மறையோன் **அதிகண்டன்**
அகண்ட வொலியே மல்குதலாற்
பொருவில் பெயரால் தனக்கொத்த
புதல்வ ருடனே விளையாடும்
பருவ மரசர் வீதியிலோர்
பகலெண் ணரிய புண்ணியமாம்
பெருமை திகழோ ரக்கமணி
பெட்பி னுற்கண் டெடுத்தனனால். (31)

1237. கருணை பெருகித் தனதுநட்பாங்
கடவு ளான சிவபத்தன்
அருளும் மதலை அக்கமணி
அளித்தான் அவன்கண் டிகைபெற்றுத்
தெருளும் உணர்வால் தன்மனையிற்
சென்று கண்டி மாலைபுனை
தரும தந்தைக் கீந்துதரி
சனஞ்செய் வித்தான் அவனருளால். (35)

1234. சிமயம்—உச்சி. தென்றல்...மலை—பொதியமலை. சிமயமலை சேர்வானாகிய முனி. அக்கரம் ஐந்து—பஞ்சாக்ஷரம்; கரகம் வீழ்ந்திட காவிரி நீர்வரு குடக தேயம்.

1237. மதலை—மதலைக்கு.

1238. அக்க மணிகண் டத்தின்விரைந்
தணிந்தான் பின்னர் அதிகண்டன்
புக்க பருவ முதுமைவந்த
போது விமான மவர்க்கெல்லாம்
மிக்க காதல் தருமங்கள்
விரைந்து கேட்க விரித்தனனல்
நக்கன் மணிமான் மியங்கள் தொல்லை
நம்பன் அருளாற் கணங்கள் வந்தார். (36)

1239. பரவி யுள்ள மகிழ்சாமி
பத்தர்க் கிளமைப் பருவத்தில்
விரைவி னெடுகண் டிகையளித்த
மிக்க பலத்தால் அதிகண்டன்
வரமெய் கொணர்ந்த மானத்தின்
மருவக் கடவன் என்றேற்றி
அரவு மிலைந்த குடிலசடை
அண்ணல் உலகத் தினினினைந்தார். (37)

1240. அங்கண் அயல்கோ சரிகடொறும்
அம்போ ருகப்பொற் பொகுட்டினடுத்
தங்கு மரைப்புத் தேள்வழுத்தத்
தண்ணந் துளவப் புயல்வழுத்தத்
துங்க மலர்த்தா ருவிற்கடவுள்
தொழுது வழுத்தத் திசையனைத்தும்
பொங்கும் ஒளிமா னத்தினெல்லைப்
பொருவில் சிவலோ கத்தடைந்தான். (38)

1241. என்று முனிவர் புங்கவனும்
இடப யோகி மலர்த்தேறல்
மன்றல் கமழ்பைந் தருநீழல்
மகவான் பொருட்டுச் சிவதருமம்
ஒன்று படுமான் மியமுரைத்திட்
டொல்லை கயிலா யத்தடைந்தான்
வென்ற புலன்மா முனிவிருளம்
விழைபுண் ணியமே துரைமினென்றான். (39)

1239. சாமி பத்தர்—சிவனடியார்.

1240. கோ—வான்; சரி—வழி.

அத்தியாயம் 48.

சிவபுராண மான்மியம்

சிவபுண்ணிய மகிமையைக் கேட்ட முனிவர் யாவரும் சிவபெருமான் பொன்மலர்த்தாளை உள்ளத்தே வழுத்தி மகிழ்ந்தனர். பிறகு, சூத முனிவரை நோக்கி, 'முக்கட் பெருமான் மான்மியத்தை விரித்துரைக்கும் புராணங்களைப் படிப்போரும் கேட்போரும் அடையும் பலன் என்ன? அவர்கள் அடைந்த பலனைக் கூறும் கதைகளைக் கட்டுரைத்தல் வேண்டும்' என்று வேண்டினர்.

சூதர் சொல்லத் தொடங்கினர் :

சிவபுராணக் கேட்போர்க்கும் படிப்போர்க்கும் உண்டாம் பலனைக் கட்டுரைத்தல் எளிதன்று. சிவபிரான் உமையம்மையிடம், 'நம் புராணம் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அன்பின் மிகுதியால் உரை குழறும்; விழிநீர் ததும்பும், மெய் புளகிக்கும்! இவை அடையாளம்' என்றருளியுள்ளார். மேலும் சிவபுராணம் கேட்பதனால் உண்டாம் பலன் வேறெதனாலும் கிடைக்காது; படிப்போரும் கேட்போரும் இறுதியில் வீடடைகுவர்.

சிவபுராணத்தை மனம் ஒன்றிக் கேட்டல் வேண்டும். என் ஆசிரியர் வியாசர் எனக்குக் கூறியவற்றைக் கூறுவேன்.

சிதேந்திரியர் சீமுகன் மக்கள் எண்மரைக் கடையேற்றியது

சாலுவ தேசத்திற் காமதண்டம் என்னும் நகரில், இந்திரியங்களை அடக்கி ஆண்ட சிதேந்திரியன் என்னும் துறவியொருவர் இருந்தார். அவர் கலைகள் அனைத்தையும் கங்கைச்சடையோன் அருளாற் கரைகண்டவர். உலகத்தவரைச் சிவதருமத்தையுரைத்து உய்வித்தார்.

ஒரு நாள் அந்நகரிலே பிச்சையுண்டு வாழும் மறையவர் குலத்தவனான சீமுகன் மக்கள் எண்மர் சிதேந்திரியனை வணங்க அவர் அவர்களை அன்புடன் நோக்கி 'நீவிர் வேண்டுவன யாவை?' என வினவினர். எண்மரிற் சாந்தன் என்பவன் அழகிய மங்கையை மணக்க விரும்பினன். அனுசாந்தன் உலகைப் புரக்கும் உயர்ந்த மைந்தரைப் பெற விரும்பினன். சர்மன் அழகிய மெய்யை அவாவினன். விசர்மன் வேதாகமங்களைக் கற்றுணர ஆசைப்பட்டான். சித்தன் வளப்பமுள்ள மனையும் திரண்ட செல்வமும் கிடைக்க விரும்பினன். பிரசித்தன் பரத்தை உணரும் யோக நிலையை நாடி நின்றான். காரணன் மெய்யுடன் சிவலோகம் புக விரும்பினன். அகாரணன் எப்போதும் சிவனது திருவடியைச் சிந்தனை செய்யும் பேற்றினை விழைந்தான்.

சிதேந்திரியர் கூறிய நெறி :

இவர்தம் விருப்பதைக் கேட்ட சிதேந்திரியர் "அன்பர்களே! நீங்கள் நந்தவனம் வைத்தலாதிய சிவ தருமங்களைச் செய்யுங்கள்" என்றார்; அதற்கு

அவ் வெண்மரும் "நாங்கள் ஏழைகள், எங்களால் இயலாது' என்றனர். 'அப்படியானால் நீங்கள் சிவபுராணம் கேட்டால் நீங்கள் எண்ணியவை எல்லாம் கைகூடும். அருகிலுள்ள இருடிமாபுரம் என்னும் நகரில் சுலிசித்து என்னும் புராணிகர் உள்ளார். அவர் பொருள் விழையாத பெரியோர். அவரிடம் சென்று சிவபுராணம் கேளுங்கள்; அவர் புராணமும் சொல்வர், உணவும் உதவுவர்' என்றார். அப்படியே எண்மரும் இருடிபுரத்திற்குச் சென்று சுலிசித்தர் கழல்களை வணங்கி அவரிடம் சிவபுராணங்களைக் கேட்டு வந்தனர். அப்படிக் கேட்டதின் பலனால் அவர்களது வறுமை நோய் விலகிற்று; அவரவர் விரும்பியவாறே, சாந்தன் அழகிய மங்கையையும், அனுசாந்தன் மங்கைகளையும், சர்மன் பொன்அனைய மேனியையும், விசர்மன் வேதாகமங்களையும், சித்தன் செல்வத்தையும், பிரசித்தன் யோகநிலையையும், காரணன் மெய்யுடன் சிவபதத்தையும், அகாரணன் எப்போதும் சிவன் திருவடியைச் சிந்திக்கும் பேற்றையும் அடையப்பெற்று மகிழ்ந்தார்கள்.

முனிவர்களே! சிவபுராணத்தை அறிந்தவர்களின் உலகப்பற்று எரிமுன் பஞ்சுபோல அழியும்; அவர்களுக்கு வீடுபேறும் கூடும். விலங்குகளும், பறவைகளும், புல்லும், புதரும், மரங்களும் கூடச் சிவபதமடைந்தன; எனின், விதிப்படிப் படிப்போரும் கேட்போரும் பயனடைதலைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? சிவமும் உமையம்மையும் வந்து அவர்கள் செவியில் வீற்றிருப்பார்கள். படிப்போர் நாவிலே பரமன் நடனம் புரிவார். சிவபுராணம் படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் உணவு முதலியன நல்கினோர்க்கு எண்ணமெல்லாம் கைகூடும். சிவபுராணத்தை ஏட்டினும் காகிதத்தினும் வரைந்தவர்கள் எழுத்தொன்றினுக்கு ஓர் கற்பமாகச் சிவலோகத்தே வீற்றிருப்பர்.

சிவபுராண வழிபாடு

சிவாலயத்திலே உபசாரத்துடன் சிவ புராணம் எழுதிய திருமுறையை வைத்துத் தூபதீப நைவேத்தியம் புரிந்து அருச்சிப்பவர் உயர்ந்த சிவத்தலங்களிலே கோடி லிங்க வழிபாடு செய்த பலனைப் பெறுவர். அவர்கள் இம்மையிலே இன்பந் துய்த்து, விமானத்திலே சித்தருலகெலாம் சென்று வேண்டுமளவு நலம் நுகர்ந்து, இந்திரன் முதலாய எட்டுத்திக்குப் பாலகருலகும், பிரமன் உலகும், திருமால் உலகும், குமார பதமும், உமை யுலகும், பசுவுலகும் சென்று வாழ்ந்து அரனார் திருவடி நீழலில் வாழ்வர். மனமின்றிக் கேட்போரும் உரைப்போரும் உள்ளத்திலே நினையாதவரும் நரகிலே வீழ்ந்திடுவர். சிவபுராணத்தின் பெயரைச் செப்புவோரும் நின்மலராவர். அவர்கள் சேது முதலிய தூய நீராடின பலன்களையும், வேள்விபல இயற்றிய பலன்களையும் பெற்று வானவரால் விரும்பப் பெறுவர். ஆகையால், முனிவர்களே! சிவபுராணம் கேட்டல் வேண்டும்.

அத்தியாயம் 48.

சிவபுராண மான்மியம்

அறுசீர் விருத்தம்

1242. முழுது முணர்ந்து திகழ்சூத
முனிவ! சிவபுண் ணியந்தெளிந்திப்
பொழுதுன் அருளாற் கேட்டனம்பைம்
பொன்னந் திகிரி திசைகடொறும்
விழுது விடல்போன் மெனவொளிரும்
வேணி அமலன் விரித்துரைக்கத்
தொழுது யாங்கேட் டுடன்கண்ட
தொன்மைத் தன்மை தனைப்போலும். (1)

சிவபுராணம் படித்தல் கேட்டலின் சிறப்பு

1243. முனிவ! அடியேம் உய்ந்தனமால்
முக்கண் எந்தை மான்மியங்கள்
புனித வியப்பால் விரித்துரைக்கும்
புராண மியாவர் படிக்கின்றோர்
இனிது விருப்பாற் கேட்கின்றோர்
எய்து பலன்மற் றவர்க்கேது
துனியில் கருத்தால் உண்மைபெறத்
துகடீர் காதை சொல்லுகென்றார். (2)

1244. பிறையும் அரவும் முடித்தசடைப்
பெம்மான் மலர்த்தாள் உளத்திருத்தி
மறையின் முடிவாம் பொருளுணர்ந்து
மகிழுஞ் சூத முனியுரைப்பான்
பொறையும் உணர்வும் நிறைமுனிவீர்!
புகழ்ந்து நீரிப் புராணகதை
அறையு மவர்க்குங் கேட்பவர்க்கும்
அரிய பலனே தென்றனிரால். (3)

1245. இன்ன படியென் றவர்கள்பலன்
இயம்ப அரிதீ சற்குமன்றே.
முன்னம் இறைவன் உமைக்கறைந்தான்
'முதல்வி யே! நம் அடியவர்க்கு

மன்னும் எமது கதைகேட்கில்
வசனங் குளறும் விழிபிலிற்றுந்
தன்னில் உடம்பு புளகமெழுந்
தண்டா அடையா ளங்கள்' என்றார். (4)

1246. அரந்தை கொடுக்குங் காமாதி
ஆறுட் பகையும் ஒரீஇக்கருணை
புரந்து புவிகாத் தருள்முனிவீர்!
புராணக் கதைகேட் பதுவன்றி
நரந்தம் மார்வந் திமிர்ந்தபொம்மல்
நகிலத் துவர்வாய் உமைகேள்வன்
திருந்த மகிழச் செயும்பூசை
சிறிதும் இலையீ துண்மையம்மா. (5)

1247. ஓங்கு சுருதி தனிலுமனு
உரைக்கும் மிருதி தனிலுமெந்தை
ஈங்கு புகலும் புராணமதற்
கிணையாந் தருமம் இலையில்லை
தேங்கு கடற்பார் மிசையெங்கோன்
செய்யும் புராணம் படிக்கின்றோர்
ஆங்கு வியப்பாற் கேட்கின்றோர்
அனைவோ ரும்வீ டடைகுவரால். (6)

1248. என்றும் முனி[வீர்! உண்மையினால்]
எல்லாக் கருமம் அனைத்துமொரீஇக்
கொன்றை கமழ்செஞ் சடிலமுக்கட்
குழகன் புராணம் வியந்துளத்தில்
நன்றி யுறக்கேட் டிடவேண்டும்
நவிறல் வேண்டும் இதனிலுண்மை
ஒன்று படுகா தையைமறைகள்
உணர்ந்து புலவர் உரைத்தனரால். (7)

1249. அந்தக் கதைகள் அனைத்தினையும்
அறவோன் கருணைப் பராசரன்றன்
சிந்தைக் கியைசத் தியவதியாந்
தேவி தவத்தாற் பொறையுயிர்த்த

1246. நரந்தம்—கஸ்தூரி.
1247. மிருதி—ஸ்மிருதி; இலை—இல்லை.

சொந்தக் குமரன் **வியாசன்**மலர்த்
　　துணைத்தாள் மலர்கள் தூஉய்முறையே
வந்தித் தவனுற் கேட்டனனுள்
　　மகிழ்ந்து நுங்கட் கறைகுவனுல். (8)

சிதேந்திரியர் சீமுகன் மக்களைக் கடையேற்றியது.

1250. மங்குல் தவழ்கோ டாவுலவை
　　மரீஇவான் தூங்குங் குடம்பைசெறி
பங்க மொளிர்மின் மினிவிளக்காய்ப்
　　பாயல் தழுவு பெடைக்கயல்சேர்
தெங்கிற் கடுவ னெடுமந்தி
　　திகைத்துக் குளிர்ந்துள் நடுங்கலுரைத்
தங்கத் தணைக்குஞ் சேவல்நகைத்
　　தரசு புரிசா **லுவதேசம்** ; (9)

1251. அண்ட முகடு கிழித்தெழுபொன்
　　அசலம் உயர்மே டையிற்பாயல்
கண்டு நிகர்மென் மொழிமடவார்
　　கன்னற் சிலைவேள் மகிணர்தழீஇக்
கொண்ட கலவிக் கிடைவருத்துங்
　　கொங்கைத் தரள வடங்கள்பறித்(து)
உண்டை யெனவெற் றியபலவும்
　　உடுக்கள் நிகர்சீர்க் **காமகண்டம்**. (10)

1252. புத்தே ளுலகம உறழ்ந்திடுமப்
　　புவன மிசைபன் மகங்கடொறும்
முத்தீ வளர்க்கும் அருமறையோர்
　　முறிதெண் திரைப்பார் புரக்குமன்னர்
கொத்தார் மணிகள் தெரிந்தவிளங்
　　கோக்கள் கொழுவின் மிகுதிசெந்நெல்
எய்த்தோர் முதலாய்த் தொழுகுலத்தோர்
　　ஈரும் புதல்வர்க் குதவுழவோர். (11)

1252. நான்கு வருணத்தார்களும் கூறப்படுகின்றனர். இளங்கோக்கள்—பூவைசியர். புதல்வர்—குடிகள்.

1253. வருணு சிரம தப்பாற்பின்
மருவு குலஞ்சேர் அநுலோமர்
பிரதி லோமர் மற்றுமுள்ள
பெயர்கள் ஈசன் மாவிரதம்
ஒருமை கூறும் அருந்துறவோர்
ஓது கின்றோர் அதிதியர்கள்
இரவ லோர்கள் அந்தகர்மெய்
இளைத்தோர் எவர்க்கும் இடமாமால். (12)

1254. ஒன்று படுசிந் தையராகி
உறையும் அனந்த கோடியரைத்
தொன்று தொடர்பற் றன்னையர்கள்
தோற்றும் புதல்வர் பரிப்பதுபோல்
என்று மிகவைத் தருளிடத்தில்
இகலிந் தியங்கள் அனைத்தையுமே
வென்ற படியாற் சிதேந்திரிய
மிக்கோன் எனும்பேர் மேவினனல். (13)

1255. செங்கற் கரைத்து வடித்தபழுஞ்
சேறு தோய்த்த துகில்வீக்கி
அங்கைத் தலத்தின் மணித்தழைதண்
டமுதந் தெளிநீர் அருக்கரகம்
தங்கத் தரித்துச் சிவவிரதந்
தண்டா திழைக்குஞ் சிவபத்தன்
கங்கைச் சடையோன் பதம்பணிந்து
கலைகள் அனைத்துங் கரைகண்டோன். (14)

1256. வீங்கு கேள்வி நுணங்கறிவு
மிக்க துறவி யாமவனைத்
தேங்கு கடற்பார் பரவுமுத்தீச்
செல்வர் முதலோர் வழுத்துபுநின்
றீங்குன் அருளால் இதமகிதம்
இயம்பு கெனக்கேட் டனரவனல்
ஓங்கு தருமம் வளர்ந்திடக்கண்
டுவந்து பின்னு மருச்சித்தார். (15)

1255. செங்கல்—செங்காவி.

1257. அங்கண் ஒருவன் மறையவருக்
கதிபன் மகிழ்சீ முகனெனும்பேர்
துங்கன் எழுதாக் கேள்வியருந்
துறைபோய் மிருதி யாகமமா(று)
அங்கம் அனந்த சாத்திரங்கள்
அறிந்தோன் புனிதன் ஆசாரங்
கங்குல் பகலாய் நடத்துகின்றோன்
கருணை மைந்தர் எண்மரம்மா. (16)

1258. சாந்தன் நிகரில் அனுசாந்தன்
சர்மன் விசர்மன் சித்தனருள்
ஆய்ந்தப்ர சித்தன் காரணனே
டகார ணன்மற் றிவர்மறைநூல்
ஏய்ந்த சகல சாத்திரமற்
றெல்லாம் உணர்ந்தோர் பிதாவுடனே
வாய்ந்த பலிமுட் டிகளெடுத்து
மாந்தித் தனவா துயிர்பரித்தார். (17)

1259. ஒருபோ தழல்வே தியன்புதல்வர்
உள்ள மதனில் இதமகிதம்
வெருவா துவந்து கேட்கவுன்னி
விமல னுகுஞ் சிதேந்திரியன்
அருகா தரவின் அடைந்திறைஞ்சி
அணைவோர் கனுமஞ் சலிபுரிந்தே
ஒருவா துணர்ந்தே காந்தமதாய்
ஓங்கு மவர்ச்சூழ்ந் திருந்தனரால். (18)

1260. கற்றோர்க் கரசாந் துறவிசொல்வான்
கருணை மறையோன் புதல்வரெனப்
பெற்றோர் நீவிர் சுருதிவழி
பிரம சரிய மாவிரதம்
உற்றோர் நுங்கட் குரைத்திர்சுகம்
உளவோ என்கொல் அடைந்ததென
மற்றோர் வினயத் துடன்முனியை
வணங்கி யெதிர்நோக் குபுரைப்பார். (19)

எண்மரும் விரும்பிய கூறல்

எழுசீர் விருத்தம்

1261. இருண்ட கொண்டைகுழை தண்டு கெண்டைவிழி
எம்து ளாவிகவர் குமுதவாய்
உருண்ட தண்டரளம் ஒண்டி ரண்டமுலை
யொல்கு நூலிடைகண் மல்குதாள்
தெருண்ட ஒண்டொடியை வண்டு கிண்டுதொடை
திகழ வேட்டினிது மகிழவே
மருண்டு கொண்டதுயர் விண்டு ளின்பமுற
வாய்ந்த னன்னிகரில் சாந்தனே. (20)

1262. ஓங்கி ருங்கலைகள் ஆய்ந்து ளங்தெளிய
ஓர்ந்து ணர்ந்தறியும் வாஞ்சையும்
தீங்க கன்றுநிறை சாந்த மும்படிறு
தீர்ந்து வந்தசொலும் மூண்டமால்
நீங்கு சிந்தனையும் வாய்ந்தி ரங்குமலை
நீண்ட சிந்துவுழை சூழ்ந்தபார்
தாங்கு மைந்தர்பலர் வேண்டு மென்றுமுடி
தாழ்ந்த னன்பினனு சாந்தனே. (21)

1263. பொங்கு வெம்பிணிக ளங்க மெங்குமிகு
பூசல் செய்துலக ரேசநீள்
கங்கு லும்பகலும் நுங்கு செந்துழறு
கால்கள் கொண்டுவிழ மால்கொடே
துங்க பங்கமுற இங்கு டன்றததி
தூரமாக இடர் தீரவே
தங்க நன்கழகு தந்தி டென்றனன்மெய்
தர்ம மேகருது சர்மனே. (22)

1264. இருக்கு வேதமுத லான நாலுமுறை
இனம தாமிருதி மனுவு நேர்
பெருக்கு கூர்மமுத லான மேதகு
பிரானை ஒதிய புராணமும்
விரிக்கு மீசன்மகிழ் காமி காதிபல
மேன்மை யாகமமும் நீடுசா
கரக்கு லோதயம தாக வோதவிழை
கர்ம நேடினன்வி சர்மனே. (23)

1265. திங்கள் தங்குமறு வுங்க லங்கியொரு
திக்கி லோடிட வொதுக்கிவான்
எங்க ணுங்குலவு துங்க வெண்கொடி
இருக்கு மாமனை பெருக்கவே
பங்க யங்குலவு மங்கை தங்கநிதி
பற்ற ருதுதினம் முற்றிமா
மங்க லங்களர என்றி றைஞ்சிமுடி
வைத்த னன்பரவு சித்தனே. (24)

வேறு

1266. அடையுந் தலைமிசை நடுநின் றுடல்செவி
அச்சோர் விடயமு னச்சாதே
இடைபிங் கலைவளி தடைகுண் டலினி
இடத்தோர் சுழுனை அடுத்தேறி
மிடையுங் கனல்மதி யிடைமண் டலமுமிழ்
மிக்கோ ரமுத கலைக்கூறுந்
தடையும் பருகிமெய் விடயம் பரமுணர்
சற்றே கருதும்பர சித்தோனே. (25)

வேறு

1267. அந்த ரந்திகழ் பதங்கன் இந்துவோடு
ஆரல் மாலரசு சேர்புகர்
மந்த னைந்துபைய தொந்த பந்தமுனி
வார மார்துருவ னோருமேல்
உந்து மெண்பத மிகந்து யர்ந்தசிவம்
ஓவி லாதபதம் மேவவே
புந்தி தந்தனன் இருந்த மேனிகொடு
பூரணன் கருது காரணன். (26)

1268. மண்ட லங்கள்நவ கண்ட மெண்டிசையில்
வாரி தீயுதக வாரியே
மொண்டு கொண்டுதர முண்ட கொண்டலெழ
மோதி வீசிய சமீரன்வே

1267. பதங்கன்—சூரியன்; இந்து—சந்திரன்; ஆரல்—செவ்வாய்; மால்—புதன்; அரசு—வியாழன்; புகர்—வெள்ளி; மந்தன்—சனி.

1268. சமீரன்—வாயு.

தண்டம் அண்டபதி ரண்ட விண்டபகல்
தானும் ஈசனிரு தாளினேர்
அண்டர் எண்தவிர மீண்டு சிந்தைசெயும்
ஆர ணன்புகல காரணன். (27)

வேறு

1269. எந்தை கேளடி யோங்கள் வாஞ்சைகள்
ஏகமல்ல அநேகமாய்
முந்தை நாளில்வெவ் வேறதாயின
முறைமை யெந்த விதத்தினும்
சிந்தை கூரவ ருஞ்சொ லென்றிரு
செங்கை கூப்பிநின் றோர்கள்பால்
தந்தை தாயனை யான்தெரிந்துபின்
சாற்றி னனொரு வாய்மையே. (28)

1270. நீவிர் எண்மர்கள் வேத பாரகர்
நேடி யேசிவ தருமமாந்
தாவி லாதவுத் தியானம் ஆதிகள்
தாமி ழைக்குவ மனைதென
ஓவி லத்தரு மத்தி னாலும
துளம்நி னைந்தவெல் லாம்வரும்
பூவி லென்றனன் அவனை நோக்குபு
புகல்வர் பூசுரர் புதல்வரே. (29)

1271. ஆற்ற ருந்தவ முநிவ! கேண்மதி
அடிய ராமனை வோரும் நீ
சாற்று புண்ணிய மேபு ரிந்திடத்
தக்க பேரலம் பிடிமையால்
ஏற்ற மானவர் முட்டி மாத்திரம்
இனிதெ டுத்துயிர் போற்றுவோர்
மாற்றமேது தி ரும்பு கிள்ளவும்
வல்ல ரல்லரீ டில்லரே. (30)

1272. வேத பாரகர் சொற்கள் கேட்டுளம்
விழைசி தேந்திரி யன்சொல்வான்
போத மேபெறும் நீவி ரீசர்
புராண காதைகள் கேண்மினீர்

1270. உத்தியானம்—நந்தவனம். இழைக்குவ—மன்—ஐதென—இழைக்க வேண்டியவை—நிலையாக—அழகாக.

ஆத ரம்பெரு கப்பு ரிந்திடும்
　　அந்த நற்றரு மத்தினாற்
கோடி லாதவை பெறுகு வீருளம்
　　கொள்ளும் என்றனன் வள்ளலே. (31)

1273. என்ற ருந்தவன் ஓது சொற்குறித்
　　தெந்தை நீ சொல்வ துஞ் செய்கோம்
நன்று நம்பர் புராணம் ஓதின
　　நற்ற வர்க்கணு வாகிலும்
ஒன்று பட்டுத வப்பி னுந்தமி
　　யோர்கள் சாத்திர புராண நூல்
நின்று கேட்பதன் ஏது செய்குவம்
　　நேர்வரும்பல னியாதுமே. (32)

சிதேந்திரியர் எண்மருக்கும் கூறுவது

1274. அந்த ணீரனை வோர்க ளும்பெரி
　　தாத ரங்களி கூரவே
[முந்தி வேட்கையி] னீவிர் செய்தவம்
　　முற்று மேவெளிப் பட்டதால்
எந்தை மான்மிய மேன்மை கேண்மின்
　　இயம்பு கேனெதிர் நீளிடை
அந்த மாநகர் மீதி லோர்புடை
　　அகர மல்கிய தாமரோ. (33)

1275. விளைந்த பைங்கழை வேள னையரொடு
　　விரக மாதர்மெல் அணையின் மேற்
குழைந்தி டுங்கல விக்கண் வேர்வு
　　கொழித் தெழுந்தது புலரவே
நுழைந்த சந்திர காந்த சாளரம்
　　நூழை பாய்நில வோடுலாய்
இழைந்த தென்றல்வி ராவி மல்கிய
　　இருடி மாபுர நகரமே. (34)

---

* இது 34. என்று ஓலையில் எண்ணிடப் பட்டுள்ளது; இதன்முன் ஒரு செய்யுள் விடுபட்டிருக்கலாம்.

1274. அகரம்—ஊர்.

1276. அன்ன மாநகர் மீதி லேயிருக்
காதி வேத மனைத்துமே
பன்னு மாவிர தியன ருஞ்சிவ
பத்தன் மாகலி சித்தன்வாழ்
நன்ன கர்க்கண் அடைந்த வேதியர்
நாடும் அன்னவ னுக்குநேர்
என்ன மேவினர்க் கீசன் மான்மியம்
என்றும் ஓதுவன் நன்றரோ. (35)

1277 அளகை வாழ்பதி அனைய வாழ்வுடை
அண்ணல் பாகம் அனந்தமாய்
வளம தானவன் வண்டு கிண்டிட
மலர விழ்ந்துமிழ் நறவமார்
துளவ மால்தொழு பரன ருச்சனை
தொழுது செய்பவன் நோய்யிலோர்
பிளவ தேனும் விரும்பிடாத
பிரான்சி வாச்சிர மியனரோ. (36)

அறுசீர் விருத்தம்

1278. விடமு மிழ்ந்தபல் உரக கங்கண
விமலர் தொண்டர்கள் பால்
உடன்ம கிழ்ந்தறு சுவைய னந்தினம்
உதவு சிந்தையன்நீர்
மடம கன்றிட அவன்மு கந்தனில்
வருசி வன்கதைகேட்(டு)
இடர்த விர்ந்திடும் உளம் நினைந்தன
எளிது வந்திடுமே. (37)

கலிசித்தினிடம் புராணங் கேட்டல்

1279. என்றி யம்பிய மொழியு ணர்ந்தவர்
இருடி வண்புரமீ(து)
ஒன்றி நன்கலி சித்தி ரும்பதம்
உறைய வீழ்ந்திடநேர்

1277. அளகைவாழ் பதி—குபேரன். பாகம் அனந்தமாய்—பலவகையாய்.

1279. அருந் தவர்—பெரிய தவத்தினர்.

சென்றி றைஞ்சி மகிழ்ந்தி ருந்தனர்
சிவபு ராணமெலாம்
அன்று நண்பகல் முதல ருந்தவர்
அறிஞர் முன்சொலுமே. (38)

1280. சிந்தை யன்பு கொணர்ந்தி ருங்கலி
சித்தி யம்பிடவே
வந்த டைந்திடும் அந்த ணாளர்
வணங்கு வோருடனே
பந்த தொந்த பவந்த ணந்திடு
பண்பி லெண்பெயரும்
புந்தி யுங்களி கொண்டு சித்தி
புனைந் திறைஞ்சினரே. (39)

1281. அங்கண் நன்பல் விதங்கள் முன்செ
யருங்கன் மங்களெலாம்
பொங்கு ளங்கள் விழைந்து ணர்ந்து
புகழ்ந்து கேட்டுடனே
அங்க மும்புள கங்கள் கொண்டிட
அஞ்சொ லுங்குழற
கங்கை யஞ்சடி லன்ப தங்கள்
கரைந்து சிந்தைசெய்தார். (40)

1282. மடிய கன்றிட நிமலம் என்றொரு
மதியும் அந்திபகல்
அடிமை யென்றிறை கதைசொல் அந்தணன்
அடியின் அஞ்சிரமே
படிவ ணங்கிமுன் வழிப டந்தணர்
பவச தம்பெறுநோய்
கடித கன்றன; நிறையும் அம்புலி
கலைகு றைந்தனபோல். (41)

எண்மரும் விரும்பிய பேறுதல்

1283. தரும நன்குவை பிறைவ ளர்ந்தது
சமனெ னும்படியே
பெருமை கொண்டிட அனைவ ருங்கதி
பெறவி ழைந்ததெலாம்

1280. எண்பெயர்—எண்மர்.

1282. பவசதம் பெறுநோய்—நூற்றுக்கணக்கான பிறவி நோய்.

ஒருமை கொண்டுற வுடன டைந்தனர்
உறுபெ ரும்பிணியோன்
கருமை வெம்பிணி உடல்த ணந்தொளிர்
கனக மொன்றினனே. (42)

எழுசீர் விருத்தம்.

1284. ஒருவ னஞ்சன விழிம டந்தையை
உடன்ம ணந்திட விழையவே
கருதி அங்கணோர் மறைய வன்பல
கலைதெரிந்தவன் மகிழவே
தரும ருந்ததி அனைய மங்கையர்
தருண கொங்கையர் அவனைநால்
வரும ணந்திட இவர்கள் தந்தைபெண்
மணிகள் அம்பொனும் உதவினன். (43)

1285. கொழுநன் வஞ்சிய ரொடு கவர்ந்திடு
குறைவ ரும்பொருள் கொடுசெலாம்
உழுது வண்டுல விதழி யம்புலி
உறுபொ லங்கிரி முடியினோர்
விழுது விண்டது நிகர்பொ னின்சடை
விமலன் நன்கதை ஒருமையால்
தொழுது ணர்ந்தவர் பெறுப லன்பல
சொலவ னந்தம தரியதே. (44)

1286. மறைய றிந்திடும் எனவு ணர்ந்துபன்
மணிநி றைந்தபொன் மனையிலே
குறைவ ருஞ்செல்வ முடன்ம கிழ்ந்துநல்
குரவ கன்றனன், ஒருவன்நீர்
அறைச தங்கைகொள் சரண மைந்தர்கள்
அளவில் சிந்தையன் அரசனால்
நிறைத னங்கொடு குழைய டர்ந்தகண்
ணியைம ணந்தனன் மருவினன். (45)

1284. அருந்ததி அனைய மங்கையர்; கொங்கையர் நால்வரும் அவனை மணந்திட

1286. நல்குரவு—வறுமை.

1287. சுடர்வி டும்பொனின் மணிகொள் கிண்கிணி
தொடர்ப தஞ்சிறு மழலைநீர்
அடல்சொன் மைந்தர்கள் பலப யந்துளம்
அமலன் நன்கதை விழுமமே
படர்பெ ரும்புகழ் தனையு கந்திசை
பரவி னன்; பினும் ஒருவன்மால்
இடர றுங்கல்வி மிகவி ழைந்தவன்
இறைவ மூங்கிட மருவினான், (46)

1288. முருக விழ்ந்தலர் தவள பங்கய
முதல்வி வந்தவன் முகமுனே
பெருகு வண்கல்வி அருளி நின்றனள் ;
பினுமொர் அந்தணன் உலகெலாம்
அருக ருந்திறை கொளவி ழைந்தவன்
அயலி றந்ததொல் அரசுபால்
பருகு மைந்தர்கள் அறவெண் மந்திரி
பலர்நெ ருங்கிய குழுவினர். (47)

1289. பொறிய விழ்ந்துமிழ் விழியி லங்கிய
புகர்மு கந்தனை உணர்வினால்
அறிவு றும்படி முகப டங்கடி
தயல ணிந்தெதிர் விடமுனேர்
நெறிந டந்தனன் அவனை அன்பொடு
நிறைபெரும்பிடர் கொடுசெல்போ(து)
அறிஞர் கண்டுபொன் முடிபு னைந்திட
அரசி ருந்துல கருளினான். (48)

1290. பினுமொ ரந்தணன் இடவ லஞ்சிறை
பெய்பரும் வந்தடை படவியோ
இனிலி ருந்தொளிர் குலிச வங்கமொ
டெளிதில் எங்கணும் மகிழவே

1288. அருகுதல்—குறைதல். அற—இல்லாதுபோக.

1289. புகர்முகம்—யானை.

1290. குலிச அங்கம்—வஜ்ரதேகம். அங்குலி—விரல்.

மனநி றைந்திடு படிம ணந்துமன்
மருவொ ரங்குலி நுனிகொடே
அனுதி னம்புவி சுழல நின்றுபின்
அயலு டம்புகள் புகுவனே. (49)

1291. ஒருவன் விஞ்சிய சிவப தந்தன
துருவு டன்செல விழைகுவோன்
இருமை யுந்தரு பரசி வன்கதை
இவள வென்றிட அரியதாம்
முருக விழ்ந்தில கிதழி யஞ்சடை
முதல்வர் தம்பதம் மருவியே
கருத ருந்தன துருவு டன்பர
கதிய டைந்தில னெனரோ. (50)

கலிவிருத்தம்

1292. என்றுபொடி கண்டிகை யிலங்கவரு சூதன்
துன்றுசடி லம்பல துலங்குமுநி வோர்பால்
ஒன்றுபட நஞ்சமுன் முண்டபர மேசன்
தொன்றுபடு நன்கதை சுகம்பெற மொழிந்தான். (51)

1293. அந்தணிர்! சிவன்கதை அறிந்திவர்கள் சோரப்
பந்தபசு பாசமெரி பஞ்சென அகன்றூர்
புந்திமகிழ் மாநிதிமெய்ப் போகமும் அருந்தி
அந்தமுறு நாளினல் அருங்கதி அடைந்தார். (52)

1294. விஞ்சுதுற வோர்களும் விரும்பிமிகு பூத
புஞ்சவிறை இங்கித புராணகதை கேளா
அஞ்சமெனும் வீடுபின் அடைந்தனர தன்றித
தஞ்சமென அங்கியர்கள் தாழ்ந்துதுதி செய்தோர். (53)

1295. அங்கணர் புராணமுன் அநேகருணர்ந் தேவீட்(டு)
இங்கிதம் அடைந்தனர்கள் எண்ணில் பசுபுட்கள்
தங்குமிரு கங்களிறை தன்கதைகள் கேளா
மங்கல சிவன்பதம் வதிந்தன மகிழ்ந்தே. (54)

1295. இறை தன் கதை—சிவகதை.

1296. மாதவிர தவ்வமறை வாழ்த்தி யிவை யெல்லாம்
ஓதினமெய் ; சிந்தனை ஒழிந்திடுமின் ; எங்கே
ஆதிகதை சாற்றினர் அவண்குழுமு புற்றா(று)
ஏதமற எந்தைபதம் எய்தின செறிந்தே. (55)

1297. ஈசனும் உமைக்கிதை இயம்பினன் விரித்தே
பூசனைசெய் தேசிவ புராணமெவ ரென்?வெம்
பாசமற நூல்விதி படிப்பவர்கள் கேட்போர்க்(கு)
ஏசில்கதி உண்டென இயம்பலரி தன்றே. (56)

1298. போற்றினர்கள் கண்ணுதல் புராணகதை எங்கே
சாற்றினர்கள் கேட்குநர்கள் தங்கள்முனம் ஈசன்
தோற்றியருள் வன்செவிகள் தூரமிசை கேட்போர்க்(கு)
ஆற்றலுமை யோடரன் அணைந்துசெவி வாழும். (57)

1299. பத்தியுட னேகதை படிப்பவர்கள் நாவின்
நித்தன்விளை யாடுமன்றி நேடியொரு காலோர்
சுத்தகதை கேட்பவரைச் சொல்பவரைப் போற்றும்
முத்தருளம் வேண்டுவன முற்றும்டைந் தாரால். (58)

1300. போதமொ டரன்கதை புகன்றருள்செய் தோர்க்கும்
ஆதிகதை கேட்பவர்க்கும் அன்னமுத லாய
ஏதமற நல்கினிமை யோரிருடி யர்க்கே
மேதகு முளத்தின்மிக வேநிறையும் மாதோ. (59)

1301. பூவுலகி லேசிவ புராணமொழி வோர்க்கும்
ஆவலொடு கேட்பவர்க்கும் ஆதரவின் நல்குந்
தாவில்பொருள் யாவுமகிழ் தற்பரனுக் காகும்
ஓவிலதற் கையமிலை உண்மையிஃ தாமால். (60)

1302. ஏகன்மகிழ் நன்கதைசெப் பேட்டின்முறை மீதிற்
காகித மதிற்சிலர் கதிக்கவரைந் தோர்கள்
ஓகையொடு தீட்டுமெழுத் தொன்றினுக்கோர் கற்பம்
ஆகவிறை யின்புரம் அடைந்திடுவர் அம்மா. (61)

1296. மாதவிர்—மாதவர்களே. புல்—தூறு—ஏதம்—அற.

1300. உள்ளத்தில் நிறையும் (குளிரும்).

1303. ஆதியடி யார்சுருதி அந்தணர் தமக்கே
சோதிகதை தீட்டிநல்கு தூயவர்தங் கோடி
சாதிகொடு வாழ்ந்தபினர் தங்கமணி மானம்
வீதிகொ டரன்புரம் விரைந்தடைகு வாரால். (62)

1304. நம்பன்முறை சேர்பொருட்டு நாதனிலை யத்தில்
அம்புயன் மடந்தைமகிழ் ஆலயம் எடுத்தே
கம்பலம் விரித்தெழினி கால்புடை வளைத்தே
உம்பர்நிலஞ் சாந்துகள்செய் தோவியம் வரைந்தே, (63)

1305. அங்கண்முறை பீடமிசை ஆர்வமொ டிருத்தி
மங்கல சினந்தவில்பன் மத்தள முழங்க
குங்குலுநெய் தூபநறுங் கோணை யொளிர் தீபம்
எங்கணும் எடுத்தமுதம் ஏந்திநிவே தித்தே, (64)

1306. ஏத்தியருச் சிப்பவர் இலிங்கமொரு கோடி
மாத்தலம் இருந்துபல மன்னிமிகு போகஞ்
சீர்த்திபெறு பாரின்மிசை தேவரசு ரர்க்கே
ஆர்த்தரிய போகமும் அருந்திமகிழ்ந் தம்மா. (65)

1307. கொஞ்சொலிய கிண்கிணி குழீஇயமணி அம்பொற்
செஞ்சுடர் விமானமிசைச் சித்தர்முத லோர்வாழ்
புஞ்சவுல கங்கடொறும் போகிமிகு போகம்
எஞ்சலற மாந்தியிமை யோர்களொடுஞ் சென்றே. (66)

1308. இந்திர னுலோகமுதல் எண்வகைய பாலர்
தந்தமுல கெய்தியவர் தங்களொடு போகி
அந்தணன் இரும்பதி அடைந்துவிதி கற்பஞ்
சிந்தைமகிழ் போகபலன் சேரவும் நுகர்ந்தே, (67)

1304. அம்புயன் மடந்தை—பிரமன் மனைவி—கலைமகள். உம்பர்நிலம்—மேல்தளம்.

1305. முறை—நூல். சினம்—சின்னம், காளம். கோணை—அழிவின்மை.—கோணை ஒளிர் தீபம்—தூங்காவிளக்கு; நந்தா விளக்கு.

1308. தந்தம்—தத்தம்; அந்தணன்—பிரமன். விதிகற்பம்—பிரமகற்பம்—(பிரமனது வாழ்நாள்).

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O.

1309. ஆரண விரிஞ்சனுடன் ஆழிவளை ஏந்தும்
நாரணன்வை குந்தமெய்தி நாடொறும் முகுந்தன்
பூரண சுகம்பெறுபல் போகமும் அருந்தி
வாரண பதாகை யெந்தை வாழ்பதம் அடைந்தே. (68)

1310. சென்றுமை பொருந்துலகுந் தேனுவுல கும்பொற்
குன்றவிலி சேருலகுங் கூடியரன் முன்னர்
நின்றுபல போகமும் நினைந்தபடி துய்த்தே
மன்றல்கமழ் தாளிணையில் வாழ்ந்திடுவர் மாதோ. (69)

1311. அருந்தவ முதுக்குறைவிர்! ஆகையினல் வாய்மை
பொருந்துகட வுட்சிவ புராணமவை கேட்கத்
திருந்திட வுரைக்கவிவை தீட்டியன்பர்க் கீக
வரைந்துதவு வோரிடத்தும் வாங்கியே படிக்க ; (70)

1312. புந்திமகிழ் வின்றியே புராணமுரைப் போர்கள்
அந்தமுரை யாதவர் அவாவறவே கேட்போர்
சிந்தையில்கொ ளாதவர்கள் சேர நிரயத்தின்
முந்தியடைந் தாழ்ந்தளறு மூழ்குவர்கள் மாதோ. (71)

எழுசீர் விருத்தம்

1313. மனந்த னிற்பிறை வேணி யன்பதம்
வைத்துவாழ்சிவ பத்தரே
தினந்தி னங்கடன் என்ற வாவொடு
சிவபு ராணம் உரைத்திட
அனந்த மாகிய பத்தி யாற்பட
அரவ சைத்தவன் அடியரே
நனந்த லைக்கண் இருந்து கேட்கவே
நாளும் இப்படிச் செய்கவே. (72)

1314. தெண்டி ரைப்புவி யோர்க்கு மேதகு
சிவபு ராணம் இகம்பரம்
உண்டெ னத்தரும் ஈது போதுமற்
றேதும் அன்னிய சாத்திரங்

1309. எந்தை—முருகவேள்.

கொண்டு பெற்றிடல் என்செ லாததோ
 ரும்பதிக் கொருபூதரைக்
கண்டு செல்வழி யேதெ னச்சில
 கடிது கேட்பதென் கருதியே. (73)

வேறு

1315. காதலொடு யாவர்சிலர் கண்ணுதல் புராணம்
போதமுறக் கேட்கிலர் புகன்றிலர்க ளியாரும்
மேதகு பரம்பரைய வேடமுள ரேனும்
பாதகர் சிவத்துரோகர் பற்றறு தவத்தீர்! (74)

1316. என்று மகிழ் சூதன்முன் இயம்பமுனி வோர்க்குப்
பொன்றலற மேவிய புராணமுரைப் போர்கள்
நன்றெனவே கேட்பவர்கள் நாடுமிவர் கட்கே
யொன்றுபல் புராண முரைத் தோர்பலனுண் டாமால் ()

1317. இத்துணை சொலும்பெயர் இயம்புபவர் எல்லாம்
நித்திய அருத்தமுளர் நின்மலர்க ளாமால்
அத்தனடி யாரெனினும் அன்னியர்க ளேனுஞ்
சுத்தருல கங்கள்தொழு தூயவர்க ளன்றே. (76)

1318. சேதுமுத லானபல தீர்த்தமடை யச்சென்(று)
ஆதரவின் மூழ்கினவன் அன்றியும் மகங்கள்
மேதக இழைத்தவன் விண்ணோர்க்கு விருப்புற்றோன்
ஆதியுல கங்களுக்கும் அன்புபெறு வானல். (77)

1319. கண்ணுதல் துழாய்மவுலி கஞ்சனிமை யோர்வாழ்த்(து)
அண்ணல், முனி வீர்! அவன்மற் றுகையின்மெய் வீடு
நண்ணுநெறி யான்புரா ணஞ்செவியிற் பானம்
பண்ணினரில் வாழ்ந்து பரன்கதிசேர் வாரால். (78)

1314. ஒரும் பதிக்கு ஒருபூதரை கண்டு செல்வழி ஏதென:...கேட்பதேன்? பூதர்—மக்கள். தெரிந்த ஊருக்கு ஒருவரை வழிகேட்பானேன்? செல்லாதபதி—போக வேண்டாத ஊர்; ஒரும் பதி—வழிதெரிந்த ஊர்.

1318. மகம்—வேள்வி.

அத்தியாயம் 49.

சிவத்துரோக நரக வேதனை.

சிவத் துரோகம் எது? அதற்குச் சாந்தி எது என முனிவர்கள் கேட்கச் சூதர் சொல்லுகின்றார்.

சிவன், அம்பிகை, முருகவேள், விநாயகர், குரு, தொண்டர் - இந்த அறுவரை அவமதிப்பவன், அவர்தம் பொருளையோ, சொல்லையோ காவல் செய்யாதவன், அவனுக்கு உதவியாயிருப்பவன், சிவத்துரோகியாவன்.

சூரசித்து, வீரசித்து, கோரசித்து கதை:

வங்க தேயத்தில். ராஜகிரிப்புரம் என்னும் நகரில் கிலகன என்னும் அரசனுக்குப் பாவசித்து, சூரசித்து, வீரசித்து, கோரசிதது என நான்கு பிள்ளைகள் இருந்தனர். இவர்கள் தந்தையின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள். ஒரு முறை சிவாசாரியர் ஒருவர் அரசன் முன்னர் வந்து "அரசே! உன்புதல்வர்கள் சிவத்துரோகம் புரிந்தார்கள்' என்றார். அரசன் அவர்கள் செய்த குற்றம் யாதென வினவ, சிவாசாரியர் 'வீரசித்து சிவ பிராற்குரிய இருநூறு செங்கற்களை எடுத்துக் கொண்டுவந்து தன் வீட்டில் ஆலயம் ஒன்று வகுத்துள்ளான். நாங்கள் நேரில் தடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை; கோரசித்து சிவனுக்குரிய மாமரம் ஒன்றை வெட்டி எடுத்து யாகசாலைக்கு உபயோகித்தான்; நாங்கள் இது அபசாரம் என்று சொல்ல, யாகத்துக்குத் தான் கொண்டு வந்தேன், பாவம் ஏதும் இல்லை என்று சொலவி விட்டான்; சூரசித்து நாங்கள் சொல்லியும் கேளாது கோயில் நந்தவனத்து மலரைப் பறித்துத் தன் மனைவிக்குச் சூட்டினான்; இவர்கள் மூவரும் சிவத் துரோகிகள்'; இம்மூவர்கள் செய்த சிவத் துரோகச் செயலைப் பொறுக்க முடியாமல் கோயில் காரியம் பார்க்கும் வீரப்ரதாபன், மரம் வைத்து வளர்க்கும் மார்த்தாண்டன், நந்தவனத்துக் காவலாளி விக்கிரமன் மூவரும் உயிர் விட்டனர். அவர்கள் செய்த பாவச் செயலை உன்னிடம் கூறும் பொருட்டு நான் உயிர் விடாதிருந்தேன்" எனக் கூறி முடித்தார். இதைக் கேட்ட அரசன் பதைத்துப் பாவசித்தை அழைத்துக் குற்றவாளிகளாம் பிள்ளைகள் மூவரையும் அவர்களுக்கு உதவி புரிந்த ஏவலாளரையும் கொணர்க எனக் கூறி, அவர்கள் வந்ததும் அவர்களை வாள் கொடு வெட்டி வீழ்த்திக் கோயிலை இடித்துச் செங்கற்களைச் சிவலாயத்துக்கு மீட்டுத் தந்தான். வேள்விச் சாலையில் இருந்த மரங்களைக் கோயிலுக்குச் சேர்ப்பித்தான். தனது பொக்கிஷ சாலையில் இருந்த நவரத்னாதி பொருள்களைச் சிவாலயத்துக்குச் சேர்ப்பித்தான். இந்த சாந்திகள் போதா என வருந்தி, சிவத் தொண்டு செய்த மூவர் இறந்தனரே, அவர் பொருட்டு எங்கள் உயிர் மாய்த்தலே சாந்தியாகும் எனத் தீர்மானித்துத் தீ வளர்த்துத் தன் மனைவி ரத்னவல்லி,

மகன் பாபசித்து என்பவர்களுடன் கை கோத்து அந்தத் தீயில் வீழ்ந்தான். அப்போது அந்தக் கோர நெருப்புத் தண்ணெனக் குளிர நீரிடை நின்றது போல மூவரும் மாயாது நின்றனர்; இறந்துபோன வீரப்ரதாபன், மார்த்தாண்டன், விக்ரமன் உயிர்பெற் றெழுந்தனர். வானவர் பூமழை பெய்தனர்; தேவ துந்துபி முழங்கிற்று. சிவபிரான் காட்சிதந்து 'அரச! உனக்கு நிகர் ஒருவரும் இல்லை. நீ சற்புத்திரர்களைப் பெற்றுச் சிவதருமம் செய்து கொண்டு வாழ்வாயாக. ஈற்றில் சிவாசுந்த நிலையைக் கூடுவாயாக'- எனக் கூறி மறைந்தார். உடனே திருமால் அங்குவந்து பொன்வியானம் ஒன்றை அரசனுக்கு அளித்து மறைந்தார்: இந்திரன் வந்து யானைக் கன்று ஒன்றை அரசனுக்கு அளித்து ஆசி கூறிச் சென்றான். இங்ஙனம் அரசன் தன் மனைவி மக்களுடன் போகங்களைத் துய்த்து ஆட்சி செய்து ஈற்றில் வீட்டின்பம் பெற்றான்.

அத்தியாயம் 49.

சிவத்துரோக நரக வேதனை

எழுசீர் விருத்தம்

1320. சூதன் சொலமுநி வோர்வந் தனைசெய்து
துகள்தீர் முநிவர! எமையாள்வான்
நீதந் தருளிய வேதந் தெளிபொருள்
நிகரோ புகலரி தெனும்ஞானம்
போதந் தருமிதி காசம் தரும
புராணம் பலவிதி முறைகேளா
ஏதங் கெடஅடி யோமுய்ந் தனம்:ஐயம்
இலை கேண் மதியெம் துரைமாதோ. (1)

வேறு

1321. நீடும் எந்தை சிவத்து ரோகம்
நிகர்க்கும் என்றனை நீவழக்
கோட றைந்த சிவத்து ரோகம்
உரைத்தி சாந்தி யதற்கென
ஈட னந்தம் இயற்றி னுந்தொலை
வில்லை யோபுகல் என்றவர்க்(கு)
ஆட லங்கணற் போற்றி யாவும்
அறிந்த சூதன் இயம்புவான். (2)

சிவத்துரோகிகள் இவரிவர் என்பது

1322. ஈசன் அம்பிகை யெந்தை வேலன்
இபான னன்குருத் தொண்டர்தம்
ஆசில் அன்னபொ ருள்சொல் கண்டறி
யாது போல இருந்தவன்
நாசம் என்று விசாரி யாதவன்
நாளும் ஏவல் செயாதவன்
தேசு றும்பொருள் கொண்ட வன்கொல்
சிவத்து ரோகியென் பாமரோ. (3)

1323. ஏற்றும் இப்படி யோடி வைத்தபொன்
தாலி யம்துகில் செய்யபூண்
போற்றும் ஆலயம் விடு செய்மரம்
பூம்பொ ழில்லலர் வாவிநீர்
ஏற்ற மாங்கிணை றார்க டாகம்
இயம்பும் ஆதிய பல்பொருள்
சீற்ற மாக அழித்த வன்சில
நாளி லேயவை செற்றவன். (4)

1324. அழிக்கும் ஈற்றில் இருந்த வன்பின்
அடுத்த றிந்தது கண்டவன்
ஒழிக்கு மற்றது கேட்ட வன்னவ
னோட டுத்துமெய் தொட்டவன்
பழிக்கும் அன்னவன் ஒரு சொற்பரி
பாலனஞ் செய்ப வன்னிவர்
செழிக்கும் நற்றவ ராகி னுங்கொல்
சிவத்து ரோகி யெனச்சொல்வார். (5)

1325. சய்பு ஆதிய வாறு பேர்சிவ
தானம் சான்மறை கற்பசீ(று)
இம்பர் கண்டிகை யீசன் ஆகமம்
ஏத்து சைவ புராண நூல்

1322. இப ஆனனன்—விநாயகர். ஆசு—குற்றம். நாசம் என்று—வீண் என்று நினைத்து.

1323. கடாகம்—கொப்பரை

1325. சய்பு ஆதிய ஆறுபேர்—ஈசன், அம்பிகை, வேலர், விநாயகர், குரு, தொண்டர், (செய்யுள் 1322 பார்க்க). இம்புவியின் உருவெடுத்த ஈசன்—சிவன்; இம்பர்—இடம்.

உம்பர் எண்சிவ சாத்தி ரஞ்சிவம்
உறுபொ ருட்க ளிகழ்ந்துளோர்
சிம்பு ளீசன் எனுதை மூடர்
சிவத்துரோகி யெனச் சொல்வார். (6)

1326. நிந்தை செய்பவன் அருகி ருக்குதல்
நெறிகள் கேட்குதல் நோக்குதல்
முந்த மெய்பரி சித்தல் மற்றவன்
மொழிக ளோடுபின் மொழிகுதல்
தொந்தம் ஆயவன் சொன்ம ருது
தொடர்ந்து கேட்குதல் அவைகள் போற்
சிந்தை செய்திடில் இவையு முற்றுஞ்
சிவத்து ரோகம் எனச் சொல்வார். (7)

1327. அருகி ருப்பவன் ஆதி யாகிய
அறுவ கைத்தொழில் செய்பவர்
பருகும் எச்சில் நுகர்ந்த வன்னெதிர்
பார்த்த வன்பரி சித்தவன்
உருகும் இச்சையி லவனு ரைத்த
துரைத்த வன் உவந் தவர்கள்போல்
திருகு வெஞ்சின மிக்க தீய
சிவத்து ரோகி யெனச் சொல்வார். (8)

1328. சிறுவ ரைப்பொழு திவைக ளாதி
சிவத்து ரோகமுன் செய்தவர்
வறுமை யுற்று நடுங்கி நொந்துவெள்
வாய்தி றந்து பலிக்குநேர்
உறுக டைத்தலை தொறுந டந்திடர்
உற்ற பின்னள ரிற்சமன்
கறுவி யெற்றி வருத்து கின்றனன்
காதை யிற்சில கூறுவாம். (9)

சூரசித்து, வீரசித்து, கோரசித்து கதை

1329. செங்கண் மேதிகன் றுள்ளி நான்கு
செருத்த மேசொரி பான்மடுப்
பொங்க ஞெண்டு வரால்க ருங்கயல்
புற்பு தங்கெளி றுமைவெண்

1327. அறுவகைத்தொழில்...செய்யுள்1326-ல் கூறப்பட்டவை.

சங்கம் வாரிச மென்பொ குட்டனங்
　தாந்த றீஇயவை பாரரு
மங்கை யாமென நான்மு கன்மகிழ்
　வங்கதேயம தாகுமால்.　(10)

1330. பாந்தள் வெம்பில வாயை வெள்ளெலி
　பார்த்து நல்லளை யென்றுளே
போந்து கண்படை கொள்ள வேங்கை
　புனிற்றி எங்கட மான்பறழ்
மோந்து வால்குழைத் தங்க மண்புகு
　முலைகொ டுத்துள் அணைக்கவே
காந்தள் கையெனச் சாறு பொன் சொரி
　கருணை ராச கிரிப்புரம்.　(11)

1331. அங்கண் மேவிய குருசில் கீலகற்
　கறுக சூரர்க ளாகிய
துங்க மைந்தர்கள் பாவ சித்தோடு
　சூர சித்துடன் வீரசித்(து)
எங்கும் அச்சுறு கோர சித்தெனும்
　இவர்கள் நால்வர்கள் பலபடை
செங்கை யேந்திய வயவர் நற்றவஞ்
　சிவனை நோக்குபு செய்தனர்.　(12)

1332. ஆற்றல் மிக்குயர் சகல ஒன்னலர்
　அட்ட நம்பன் அருட்கணூற்
கூற்றும் உள்ளம் நடுங்க வேபெறு
　கொற்ற மேவியெண் திக்கினுங்
காற்றும் அங்கியும் என்ன வேசயங்
　கண்டு ராசசூ யம்மகம்
போற்றி வாழ்பவர் தந்தை சொற்களைப்
　போது மேகட வாதவர்.　(13)

1333. கன்ன லஞ்சிலை மைந்தர் தந்தை
　களிற்றெ ருத்திறை கீலக
மன்னன் மிக்ககோ கரண மேவி
　வதிந்து நற்சிவ நிசி விண்ணோர்

உன்ன ருங்கட லுட்ப டிந்துளம்
ஓர்ந்து மாவிர தம்முடித்(து)
இன்னல் அற்றறு திங்கள் மேவி
யிருந்து தன்பதி யெய்தினன், (14)

1334. மைந்தர் வந்து வணங்கி யேத்தஅம்
மைந்த ரோடுதன் கோயில்புக்(கு)
அந்த ரஞ்சுடர் மணிகு யிற்றரி
யாச னத்திருந் தேபடர்
விந்தை மைந்தர்கள் தத்தம் இல்செல
விடைகொ டுத்தர சில்புகச்
சிந்தை செய்பகற் சைவ அந்தணர்
சீலர் வேதியர் புங்கவர். (15)

1335. ஆர்த்த சிந்தையுட் சிவசி பாகவ
மனுதி னம்புரி வேதியர்
கீர்த்தி யெங்கணும் மல்கி ராச
கிரீசர் பூசனை செய்பவர்
கூர்த்த பேரறி வாளர் கேலகக்
குரிசில் காணிய வரலுமன்
பார்த்து நீவிர் வரத்து நன்மைகொல்
பகர்மின் என்று பினுஞ்சொல்வான் ; (16)

1336. புரந கைத்தெரி யூட்டு கண்ணுதல்
பூசை யிற்பெரு வேட்கையாய்
இரவு நன்பக லுஞ்செய் நுங்களுக்
கென்று மேகுறை வின்றியே
பரன ருச்சனை யாக மப்படிப்
பண்டு போல் நடக் கின்றதோ
புரைய றப்பகர் வீரெ னச்சிவ
பூசு ரேச ரியம்புவார். (17)

1337, குரிசில்! பூசைநின் பெருமை யாற்களி
கூர வேநடக் கின்றதால்
முருகு லாஞ்சடை யீசர் பேரருள்
முன்னர் போன்மகிழ் கின்றது;

1335, வரத்து—வருகை,

பொருவி லாத சிவத்து ரோகமுன்
புதல்வர் செய்தனர் எனமன்னன்
உரைசெய் மின்னவர் செய்த தேதென
ஓதி னூர்சிவ வேதியர்; (18)

1338. வீர சித்திரு நூறு செங்கல்
விரைந்து கொண்டுதன் இல்லிடை
வார முற்றருள் ஈச னலயம்
வாஞ்சை கூர வகுத்தனன்
ஈரம் அற்ற சிவத்து ரோகமி
தென்று நாங்கள் அடுத்தனம்
கோரம் முற்றதி காரி தன்னெடு
கோவில் கட்டிய ஓவியர்; (19)

1339. கூடி மற்றனை வோரு மிப்பொருள்
கொற்ற வன்பொருள் அரசனே
நாடி முற்றும் எடுத்தி டத்தகும்
நண்ணு பாவம தென்கொலென்(று)
ஓடி யுற்றிடு செங்கல் யாவும்
உவந்தெ டுத்திங்ஙன் வந்தனர்
தேடி மற்றறி விக்க வேண்டியச்
செங்க லோடுவந் தெய்தினேம்; (20)

1340. தீண்டி நற்படை வீர சித்தொடு
செங்கல் நின்னுழை யோரையா
கொண்டு வந்தனர் என்றி ரந்துமுன்
கூறி னேமறி யாதுபோற்
பண்டை வல்வினை யாலெ னுதெமைப்
பார்த்தி லன்துய ரோடுநஞ்(சு)
உண்ட கெண்டைய தென்ன அம்புபட்
டுளறு மானென மீண்டனம்; (21)

1341. கண்டி ருந்திட வந்த பாவமெக்
காலம் எந்த விதத்தினுல்
விண்டு போய்ப்பரி சுத்தி யாமென
வெய்து றும்முள மன்றியுங்

1341. சூதம்—மாமரம்.

துண்ட வெண்பிறை வேணி யோனெடுஞ்
சூதம் ஒன்று தடிந்து போய்
மண்டு காதலிற் கோர சித்து
மகஞ்செய் சாலை வகுத்தனன்; (22)

1342. அந்த வேலையிற் கோர சித்துடன்
ஆல யத்தின் நனந்தலைக்
கொந்த லர்ந்துயர் சூதம் என்கொல்
குறைத்த னைக்கொடும் பாவமீ(து)
எந்த நாளறும் எனுமெ மக்கவன்
ஈசன் இட்டி யெடுக்கவே
வந்த தாலுமக் கேது பாவம்
மருது போமின் எனச் சொன்னான்; (23)

1343. சூர சித்துநென் னற்ப கற்பல
துணர்ம லர்த்தொகை கொணர்கெனத்
தார கற்குரைத் தேவ வம்மொழி
சம்ம தித்தெழு பாதகன்
மார னைக்கண் அழற்க ளித்தருள்
வள்ளல் நந்த வனத்தலர்
சேர அப்பகற் கொய்த ளித்திடத்
தேவி யோடும் முடித்தனன்; (24)

1344. கொன்றை யஞ்சடை முக்க ணுயகர்
கோட ரத்தரு நாண்மலர்
என்று கேட்டிலன் நன்றெ னக்கவர்ந்
திந்தி னத்தினும் அம்மலர்
தன்று ணைக்கரம் மீதெ டுத்துயர்
தமனி யக்கொடி மாமனைச்
சென்றி ருந்தவன் இவர்கள் மூவர்
சிவத்து ரோகிகள் என்றரோ ; (25)

1342. இட்டி—யாகம்.

1343. தாரகன்—சூரசித்தின் ஏவலாளன்.

1344. கோடரம்—சோலை.

1345. ஆற்ற ருந்தவம் அலகில் மெய்த்துற
　　வாகி யேசிவ காரியம்
போற்று வீர ப்ரதாப னுருயிர்
　　போக்கி னன், வனம் வைத்துநீர்
ஊற்றி யென்றும் வளர்த்து நாண்மலர்
　　உதவு கின்றமார்த் தாண்டனுஞ்
சீற்ற மோடுயிர் நீத்த னன் ; முரி
　　தெண்டி ரைப்புவி பாலனே ! (26)

1346. கொங்க லர்ந்துமிழ் நறவ மேகமழ்
　　குளிர்ம லர்த்தரு வனமெலாங்
கங்குல் நன்பகல் உலவு கேசரி
　　காவல் செய்து புரக்குநாள்
திங்க ளஞ்சடை யண்ணல் தாள்மலர்
　　சிந்தை செய்திடு விக்ரமன்
அங்கண் ஆருயிர் நீத்த னன்; இவர்
　　அறிஞர் மூவரும் மாய்ந்தனர். (27)

1347. கொற்ற எந்த சிவத்து ரோகங்
　　குறித்தும் எம்முயிர் நீத்திடச்
சற்று மேவலி யந்த பாதகம்;
　　தஞ்சம் நீயென வந்தடைந்(து)
உற்ற பாவம் உரைத்த னம்மென
　　ஒளிறு வாட்படை நிருபனும்
அற்ற மோடிரு குண்ட லச்செவி
　　யங்கை யாற்புதைத் தானரோ. (28)

1348. பாவ சித்தெனும் மகவ ழைத்து வெம்
　　பாத கச்சிறு வோர்களாம்
மூவ ரைப்பட ரொடுதொ ழிற்செயும்
　　முதல்வ ரைக்கொணர் கெனவிடுத்(து)
ஏவ இப்படிக் கொடுமுன் விட்டிட
　　எற்று வாள்கொடெல் லோரையுஞ்
சாவ எற்றியில் விற்சி வாலயச்
　　சாலை முற்றும் இடித்தனன்; (29)

1346. கேசரி—சிங்கம்போன்றவன்.

1347. அந்த பாதகம் வலி—அந்த பாதகம் வன்மையது. அற்றம்—சோர்வு.

1349. செங்கல் முற்றும் எடுத்து வேள்வியிற்
திரள்ம ரங்கள் எடுத்துநீள்
சங்க ராலயம் நவம்வ குத்தபின்
தனது கோசஇல் வாசல்கள்
எங்க ணுந்திறந் தவ்வு ழிக்கண்
இருந்த பன்மணிக் குவைகளுந்
தங்க ராசிக ளுங்க வர்ந்த போல்
தக்க வற்குலங் கூட்டியே. (30)

1350. முண்ட மாலை மணிக்கி ரீடம்
முளைத்தெ ழுங்கதிர் மாமணி
கொண்டி ழைத்த மதாணி யங்கதங்
குண்ட லங்கட கம்பல்பூ
அண்டர் நாயக னுக்க ளித்தபி
டேக மன்னம்நி வேதனம்
மண்டு காதலிற் செய்து சாந்தி
வருந்தி டாது புரிந்தனன். (31)

1351. அந்த மற்ற சிவத்து ரோகம்
அதற்கும் இப்படிச் சாந்திசெய்(து)
எந்தை காரிய மாக வேயுயிர்
யாவர் தாஞ்சிலர் நீத்தனர்
தொந்த மானவப் பாத கப்பெருந்
தொகுதி நீத்திடு சாந்திகள்
சிந்தை செய்தனன் எனதி னாலெனச்
செஞ்சி லைக்கர மன்னனே. (32)

1352. ஒல்லை யாவி குறைப்ப தன்றிமற்
றுத்த ரம்புகல் சாந்திமற்
றில்லை யென்று தெளிந்து குண்டம்
எடுத்து வ்ன்னி வளர்த்ததின்

1349. கோச இல்—பொக்கிஷசாலை. கவர்ந்தபோல்—கவர்ந்ததுபோல—கவர்ந்ததற்கு ஈடாக. தக்கவன் குலம்—இறைவன் கோயில்; குலம்—கோயில்.

1351. எனதினால்—எதனால் (சாந்திகள் செய்யலாமெனச் சிந்தித்தான்).

1352. செல்லைவெல் கரம்—செல்—மேகம்—"புயலிலங்கும் கொடை" சம்—தேவா II. 113—2.

Govt. Oriental Mss. Library
Triplicane P.O.

மல்லை வெல்புயப் பாப சித்தொடு
மனையி ரத்தின வல்லியை
செல்லை வெல்கரம் பற்றி யீசனைச்
சிந்தை செய்து விழுந்தனன். (33)

1353. அந்த எல்லையிற் கொழுந்து விட்டெரி
யழல்கு ளிர்ந்துசெஞ் சந்தனச்
சிந்து விற்புனல் எனநின் றூர்கள்
சிவத்து ரோகமுன் கண்டுயிர்
விந்தை யால்விடு வீர மாவ்ருதன்
வினய மானமார்த் தண்டன் மெய்ச்
சிந்தை விக்ரமன் வரவு நோக்கினன்
தேவர் பூமழை பெய்தனர். (34)

1354. கொண்ட லேழ்புனல் உண்ட வோசை
கொழித்து முத்தெறி முரிதிரை
மண்டு பேரொலி யம்பு ராசி
மறித்து வாய்விடும் ஓசை வென்(று)
எண்டி சாமுகஞ் செவிடு பட்டிட
இடிமு ழக்கம் ஒதுங்கவோன்
அண்ட ரார்த்திடு தேவ துந்துபி
யளவி லாது முழங்கவே; (35)

1355. பொருவி லாவிறல் விருது ராவண
புங்க வன்புய தருநெரிந்(து)
உருவில் ஓர்புறம் நெறுநெ றென்றிட
உத்த மாங்கம் அனைத்தினும்
வெருவு கண்கள் பிதுங்க மற்பொரு
வெள்ளி யங்கிரி நிகர்க்குதத்(து)
அருள்சி னங்கொழு மழவி டைப்புறம்
அண்ணல் மாதொடு தோன்றினன். (36)

1356. சிகர பூதர அகடு ரத்தெழு
சிற்ற டிப்பில வாய்க் கணம்
மகர தோரணம் இடபம் ஆதியெண்
மங்க லங்கொடு புடைவரப்

1355. குதத்து அருள்விடை, சினவிடை, கொழுமழவிடை. குதம்—மலவாயில்.

1356. பிலவாய்க்கணம்—பூதகணம்.

பகரு மாமொழி கருணை கூர்தரப்
பார்த்தி பன்தனை நோக்கியே
தகர வார்குழல் பங்க னின்செயல்
சகல பார்அதி சயித்ததே. (37)

1357. பொருதி ரைக்கடல் உலக மீதுனைப்
போல மற்றொரு வருமிலை
கருது நஞ்செயல் எமது பாற்புரி
காத லிற்றிசை யெங்குமே
யொருத லித்திதி ரியையு ருட்டி
உவந்து சற்கும ரற்பயந்(து)
இருத னைத்தினும் எமது புண்ணியம்
இச்சை யோடு செய்தேற்றியே; (38)

1358. பொம்மல் வெம்முலை மனைவி யோடுசற்
புதல்வ ரோடுபல் பேரரோ(டு)
இம்மை யிற்பல போக நாகர்
எனக்க ளித்துவந் துண்டபின்
அம்மை யெம்முடைச் சச்சி தானந்த
ஆழி யிற்படி கென்றுடன்
தம்மை யேகரந் தெங்கு மாயொளி
தருவி யாபக மாயினான். (39)

1359. தென்றி சைப்பெரு மானை யோர்மறைச்
சிறுவன் அன்பினுக் காயுதைத்(து)
அன்று தொட்டடி யார்க்கு முன்வரும்
அண்ணல் வந்து மறைந்தபின்
மன்ற லந்துள வக்க ருங்கடல்
வண்ணன் வந்து மகிழ்ந்தொளிர்
பொன்த யங்கு விமானம் ஏறல்
பொருட்டு நல்கி மறைந்தனன். (40)

1360 குன்றி ருஞ்சிற கீர்த்து வில்லுமிழ்
குலிசன் வந்துபொற் கிம்புரி
துன்று வெண்பிறை யினைம ருப்பெதிர்
சொரிம தக்கவுட் குஞ்சரக்

1359. தென்திசைப் பெருமான்—எமன். சிறுவன்—மார்க்கண்டன்.

1360. பாவகம்—கருத்து: இறைமகன்—அரசன்.

கன்று பாவகத் திறைம கற்குநன்
கருணை யாற்கொடுத் தவன் மொழி
யென்று மேயுரைத் தாசி கூறி
எழுந்து பொன்னுல கெய்தினன். (41)

1361. இன்ன ணங்கட வுளர்த மால்வரம்
எய்தி யுண்மகிழ்ந் திச்சையாய்
மன்ன னில்லிடை மனைவி யோடுநன்
மைந்த ரோடு வதிந்துசீர்
துன்னு போகம் நுகர்ந்து கல்வி
துலங்கு மைந்தர் பெற் றளவிலா
உன்ன ருஞ்சிவ புண்ணி யம்புரிந்
தும்பர் வீடும் அடைந்தனன். (42)

அத்தியாயம் 50

சிவத்துரோகிகள் நரக வேதனை—தொடர்ச்சி

சிவாலயத் திருப்பணிக்காக உள்ள சுண்ணாம்பு, செங்கல் இவைகளில் அணுத்துணை எடுத்தவனும் சிவத்துரோகி யாவான்; அவன் மாபாவி; அந்தப் பாவத்துக்குச் சாந்தி கிடையாது. வீரசித்தின் ஏவலாளன் பாரியும் அவனுடன் சென்ற ஆள்களும் சிவாலயத்துச் செங்கல்லையும் சுண்ணாம்பையும் எடுத்து வந்த பாவத்தால் கொலை யுண்ட பின்னர் நரகில் வீழ்த்தப் பட்டு இன்றளவும் வருந்துகின்றனர். சிவாலய நந்தவனத்து மரத்தைக் கோரசித்தின் சொற்படி வெட்டுவித்த சக்கரன் என்னும் அதிகாரியும் அவன் ஏவிய ஆள்களும் நரகில் இன்றளவும் படாதபாடு படுகின்றனர். சூரசித்தின் சொற்படி நந்தவன மலரைப் பறித்து வந்தார்கள் தீக்கணன் முதலான ஆள்கள். அம்மலர்களை தன் மனைவிக்குச் சூட்டி மகிழ்ந்தான் சூரசித்து. அவனும் அவன் மனைவியும் இன்றளவும் நரகில் பெருவேதனை படுகின்றார்கள்.

வாழைக்குலை கவர்ந்த துரோகம்

அங்க தேசத்து அரசன் விதாதா நீதியுடன் ஆண்டு வந்தான். அவன் சபையில் நாரத முனிவர் வர அவரை அரசன் தக்க உபசாரத்துடன் வரவேற்றான். நாரதர் அரசனைப் பார்த்து "அரசே! நான் இந்திர சபைக்குச் சென்றேன். அங்கே இருந்த உன் தந்தை 'என் மகனிடம் தாங்கள் போய் இரவும் பகலும் புண்ணியச் செயல் செய்பவர்க்குச் சுவர்க்க இன்பம் கிடைக்கும்' எனச் சொல்லுங்கள் என என்னை வேண்டினன்" என்றார். பின்னும் நாரதர் அரச சபையிலிருந்த புரோகிதன் அசிதன், ஏன்பவனைப் பார்த்து" உன் தந்தை யமபட்டணத்

இல் காலதூதர்களால் வேதனைப் படுகின்றான். அவன் 'என் மகன் அசிதனிடம் தாங்கள் சென்று என் வேதனையை எடுத்துச் சொல்லுங்கள். நான் அரசினிடமிருந்து சேகரித்த பொருள்களில் ஒரு சிறிதேனும் எடுத்து என் மகன் தருமம் புரியவில்லை; அவன் வீட்டில் அந்தப்புரத்தில் வயிரத் தூணின் அடியில் தனங்கள் புதைத்து வைத்துள்ளேன். அந்த நிதிகளை எடுத்துப் பலவகைய தான தருமங்கள் செய்யும்படிச் சொல்லுங்கள்' என என்னிடம் சொல்லி அனுப்பினான்'' எனக் கூறிப் பொன்னுலகுக்குப் போயினார். நாரதர் சென்ற பின்பு விதாதாவும் அசிதனும் தான தருமங்களைச் செய்து வந்தார்கள். கங்கைமுதலிய புண்ணிய நதிக் கரைகளிலும் புண்ணிய ஸ்தலங்களிலும் கோதானம் பூதானம் முதலிய தானங்கள் மறையோர்க்குச் செய்தார்கள், அதன் பயனாக நரகில் உழன்ற அசிதன் தந்தை சுவர்க்கஇன்பம் பெற்றான். ஒருமுறை நருமதை யாற்றங்கரையில் மறையோர்க்கு அன்னதானம் செய்ய, அந்தணர்களிற் சிலர் வாழைப்பழம் வேண்டுமென விரும்பினர். பழம் எங்கும் கிடையாதுபோக, அசிதன் வருந்தி அங்கிருந்த புரோகிதனை எப்படியாகிலும் பழம் கொண்டுவருக என வேண்ட, அங்கிருந்த சுதீர்த்தன் என்னும் அந்தணன் மேற்கேஉள்ள வீமேச்சரம் என்னும் ஆலயத்தைச் சார்ந்த வாழைத் தோட்டத்தில் வேண்டிய வாழைப்பழம் கிடைக்கும் என்றான். புரோகிதனும் உடனே ஆள்களை நிரம்பப் பொருளுடன் அனுப்பிப் பழம் கொணர்க என்றான். அவர்கள் அந்தக் கோயிலுக்குச் சென்று கேட்கச் சிவாசாரியர்கள் 'பழம் சிவன் சொத்து, யாருக்கும் நாங்கள் கொடோம்' என்றார்கள். அவர்கள் அந்தக் கோயில் அதிகாரி நிருத்தனிடம் இதைச்கூற அவன் அதிகவிலைபெற்று வாழைக் குலையைக் கொடுத்தனுப்பினான். அந்தணர்கள் பழங்களை மகிழ்ச்சியுடன் உண்டார்கள். விரதபங்கம் வாராததைக் கேட்ட அரசன் மகிழ்ந்து அசிதனுக்கும் புரோகிதனுக்கும், கோயலதிகாரிக்கும் ஆடை வீடு முதலிய பரிசு அளித்தான். இங்ஙனம் நிகழ, சிவாசாரியர்கள் அரசனிடம் வந்து ''அரசே! நாங்கள் சிவாலயத்துப் பழங்களைக் கொடுக்க மறுத்தோம்; அசிதனும், புரோகிதனும், கோயில் அதிகாரியும் ஈசனுக்கு நிவேதனத்துக்கும் அபிஷேகத்துக்கும் உரிய பழங்களை எடுத்துச் சென்றார்கள். இது சிவத் துரோகம்'' என்றார்கள். இதைக் கேட்ட அரசன் 'உண்டான விலைக்குமேலே பணம் கொடுத்துள்ளார்கள். என் வெற்றுரை; இனி இப்படி நடவாது, போம்' என்றான். அருச்சகர்கள் இந்த அரசனும் சிவத் துரோகியே என அறிந்து தமதிடத்துக்குச் சென்றார்கள். இந்தத் துரோகத்தால் அரசன் தந்தை சுவர்க்கத்திலிருந்து நரகத்துக்குத் தள்ளப்பட்டான். அரசனும் க்ஷய ரோகத்தால் இறந்தான். இன்றளவும் நரகில் இடர்ப்படுகின்றான். அவன் நகரத்தை வேற்றரசர்கள் கைக்கொண்டு அசிதனுடைய இரண்டு கண்களையும் பிடுங்கி ஊரைவிட்டு ஓட்டினர். அவன் வேதனைப் பட்டு இறந்து நரகவேதனை அடைந்துள்ளான்; அவன் தந்தையும் கடு நரகம் சேர்ந்தான்; வீமேச்சரத்தில் பழம் கிடைக்கும் என்ற அந்தணனும், அவன் சுற்றத்தாரும், இன்னும் நரகில்

வதைக்கப் படுகின்றனர். கோயில் அதிகாரி பாம்பு கடிக்க இறந்து நரகில் துன்புறுகின்றான். வாழைப் பழத்தை உண்ட அர்தணர் பெரு வயிறு (மகோதர) நோயால் இறந்து நரகில் வேதனைப்பட்டு அரற்றுகின்றனர். வாழைக்குலையை வெட்டின அந்தணன் கையிற் பிளவை கண்டு மாய்ந்து, யமபடரால் நரகில் வேதனைப் படுகின்றான். இந்தத் துரோகத்துக்கு உடனிருந்து உதவிய ஏவலாளர் யாவரும் இன்றும் நரகில் வேதனைப் படுகின்றனர்.

அத்தியாயம் 50.

சிவத்துரோக மான்மியம்—தொடர்ச்சி

1362. திங்களங் கண்ணி மிலைந்தசெஞ் சடையோன்
சிவாலயத் திருப்பணிப் பொருட்டா
யங்கண்வந் தடைந்த சுதையிலிட் டிகையில்
அணுத்துணை யாகினு மெடுத்தோன்
இங்கெடுத் துரைக்கப் படாதமா பாவி
யெனுஞ்சிவத் துரோகமற் றவற்குச்
சங்கமாய் வருகன் மம்பல விதிநிச்
சயிக்கினுஞ் சாந்திமற் றிலையே. (1)

1363. கனைகழற் சரணக் குரிசில்கீ லகன்தன்
கான்முளை வீரசித் தேவும்
நினைவுமுன் தொழில்செய் பாரியை விளித்து
நின்பட ரோடுநீ சென்று
வினையறுத் தருள்கண் ணுதல்பொருட் டாக
வேண்டியீட் டியசுதை செங்கல்
தனையிங்ன் கொணர்ந்து கதுமென வடைந்து
தருகென வுரைத்தனன் மாதோ. (2)

1364. அவனுரைப் படிசெங் கற்சுதை கொடுவந்
தளித்தபா ரியுமவன் பட்டும்
இவண்மிகு மபரா தந்தனக் கப்போ
தேற்றதண் டங்கள்பெற் றனர்பின்

1363. ஏவும் நினைவுமுன் தொழில்செய்—வேலையிட நினைப்பதற்கு முன்னேயே வேலைசெய்யும்; பாரி—வீரசித்தின் ஏவலாளன்.

1364. இவண்—இவ்வுலகில்.

அவமதித் திடுகூற் றுவன்படர் இழுத்தே
யமிழ்த்திட அளற்றி னுட்படிந்தார்
உவமையற் றிடுதீ நரகமுற் றினுஞ்சென்
றுடற்றுகின் றனர்களிப் போதும். (3)

1365. வள்ளுகி ருழுவைச் சருமனு ராமம்
மரந்தடி கென்றுபா றுவணப்
புள்ளுறை வடிவேற் கிலகன் பயந்த
போரிறை கோரசித் துரைமேற்
கொள்ளதி காரி யானசக்கரற்குக்
கூறமற் றவன்சன முதலாம்
உள்ளுநர்க் குரைக்க விப்படித் தருக்கொண்
டொல்லையீங் தனர்களியா வருமே. (4)

1366. பிறையெயிற் றகல்வாய் மறலிதூ துவர்கள்
பிணித்திவர் தங்களைக் கொடுபோய்ச்
சிறைபடு நிரயத் தலம்வர அமிழ்த்த
செவிவிழி நாசிவாய் தாலு
முறைமுறை நெடுவாற் புழுவிரைந் தரிக்க
மூச்சற நெருப்புடற் கழுகு
குறைவறப் பிடுங்கப் பதைத்துவா யரற்றிக்
குழறுகின் றனர்களிப் போதும். (5)

1367. தொடுகணை கழற்காற் கிலகன் பயந்த
சூரசித் தூழ்வினைப் பயனுற்
படுகொலை புரியுந் தீக்கணன் முதலாம்
படர்தமை விளித்துநன் மலர்கள்
கொடுவர வேண்டும் என அவர் கொணர்ந்து
கொடுத்தநன் மலர்கள்வாங் குபுமா
வடுவகிர் விழிமெல் லியலுடன் நிசியின்
மலரணை மிசைமுடித் தனனால். (6)

1368. முடித்திடு மனைவி யுடன்மலர் மிலைந்து
முகமலர் சூரசித் துளைந்து
துடித்திட மயிட முகைத்தெழு மறலி
தூதுவர் கொடியபா சத்தாற்

1365. உழுவைச்சருமன்—புலித்தோலுடையன்—சிவன், பாறு—பருந்து.

1366. அலம்—துன்பம்.

பிடித்திழுத் தடித்து நெரித்துடற் றுகைத்துப்
பிதிர்த்தள றணைத்தும் வீழ்த் தரவங்
கடித்திடச் செருக இரத்தமுட் குடிக்கக்
கஞற்றுகின் றனர்களிப் போதும். (7)

1369. எடுத்துரைக் கரிய கொடியபா வஞ்செய்
இவர்களெல் லோருமென் றரிதாய்த்
தொடுத்திடு கற்ப கோடிநா ளுருகுஞ்
சுடுநிர யத்தில்வெங் காலர்
கடுத்திடத் துகைத்துச் செக்கிலிட் டரைத்துக்
கதமெரி மிசைவறுத் தளறு
படுத்திடத் தடவக் கரையொரு காலும்
படர்ந்தணை குவதிலை மாதோ. (8)

1370. விரவிய சகல தேவருக் குஞ்செய்
மிகுதுரோ கங்களத் தனைக்கும்
குரவர்பே ரருளாற் புராணமீ ரொன்பான்
கூர்த்துணர் அறிஞராற் கால
வரவுணர் கருணை முனிவரால் எழுதா
மறையின்மா மிருதியால் எடுத்துப்
பரவுசாந் திகளுண் டென்றுநிச் சயித்துப்
பட்டிடு முண்மையீ தம்மா. (9)

1371. விதிமுறை புகல்சாத் திரத்தில்வே தத்தின்
மிகுபுரா ணத்திலெஞ் ஞான்றும்
பதிபசு பாச மும்முத லுணர்ந்து
பற்றறு முனிவரால் தெளிந்து
மதியக டுரிஞ்சும் இதழியஞ் சடில
வள்ளல்பாற் செயுந்துரோ கத்திற்
பொதியுமொன் றினுக்கா யினுஞ்செயுஞ் சாந்தி
புகன்றிடச் சிறிதுமற் றிலையே. (10)

1372. தேறலூற் றிருக்குங் கடுக்கையஞ் சடிலத்
தேவன்பாற் செயுஞ்சிவத் துரோகி
பாறுடல் பிடுங்கக் கோரமா நரகிற்
பதைபதைத் துயிர்த்துநொந் தனந்த

1368. கஞற்றுதல்—நெருக்குதல்.

1372. ஈறில் ஐந்து—அழிவிலா ஐந்தெழுத்து—பஞ்சாக்ஷரம்.

நூறுகற் பங்கள் இடருழந் தெரியின்
நுதிவறுக் கப்படா நின்முன்
றிலைந் தோர்ந்து சிவத்துரோ கத்துக்
கிணையிலைத் தவறுகூர்த் திடுமால் (11)

1373. தடவரை நெடுந்தாட் டிரளுடற் றிணியுட்
டண்டுமொய்த் தெங்கணும் பொதிந்த
மடல்விரி சுருணைட் டிலைமுழு முதற்செவ்
வாழையங் கவிழ்தலைக் கூனற்
றொடர்குலைப் பெருந்தாற் றுருள்மணிச் சிவப்புத்
துறுகுபொற் றகட்ட நற் கனிகள்
படவர வசைத்தோர்க் கென்றவை கவர்ந்த
பாதகர் காதைகூ றுதுமால். (12)

வாழைக்குலை கவர்ந்த துரோகம்

1374. அரிகுரற் பகுவாய்ச் சுரிமுகச் சங்கம்
அகடுளைந் தீன்றவெண் முத்தம்
விரிபொகுட் டருகு நறவுகொப் பளிக்கும்
வெண்மலர்ச் சததளக் கமலச்
சரியுடற் கருக்க ணறைகமழ் பழனத்
தலைகிடக் கின்றன வுடுவும்
பிரிவறு மதியுங் ககனமுங் கடுக்கும்
பெருவள அங்கதே யமதாம். (13)

1375. பெருவளஞ் சிறக்கும் அத்தலக் குரிசில்
பிறைமருப் பிருகவுட் கரடத்
திருகுவெஞ் சினக்கைக் களிறுகைத் தமரர்
தேவெனப் பொலி விதாதா நல்
லொருசொல்வா சகன்பல் படையயில்
உரவோன் உடற்றுமா தீரனெவ் வுலகும
பருவர லறக்காத் தருளியே பொறுக்கும்
பரிமளச் சந்தணி புயத்தோன். (14)

1376. கடவுளர் குரவன் மகபதி யவையிற்
கருணையால் வதிந்தது கடுப்பத்
தடவரை மணிப்பொற் புயவிதா தாவின்
தமனியச் சவைதனில் அணிகள்

1373. தறுகு—செருக்கு.

சுடர்விடு மகதி நாரதன் கண்டி
துலங்கு வெண் ணீற்றுடன் வரக்கண்(டு)
உடனெழுந் திறைஞ்சி யளவில்பத் தியினால்
ஒளிர்மணி யாசனங் கொடுத்தான். (15)

1377. மடங்கலா சனத்தி விருந்தமா முனியை
மலர்க்கரங் கூப்புபு வினயத்(து)
அடங்கிடா மகிழ்ச்சி யுடன்புர வலனின்
றயனருள் குமரனே போற்றி
யிடங்கொள்கண் குளிர நின்தெரி சனங்கண்
டெளியமெல் லோருமுய்ந் தனமால்
முடங்குவெவ் வினைகள் தீரநீ யொருசொல்
மொழிந்திட வேண்டுமென் றுரைத்தான். (16)

1378. ஆற்றருந் துறவோய்! இவ்வணடைந் ததுவென்
டடியனேன் செயும்பணி விடைகள்
சாற்றுதி யென்னும் அரசனை நோக்கித்
தாபதன் உரைத்திடும் மலர்த்தேன்
ஊற்றிருந் தொழுகுந் தொடைமணிப் புயத்தோய்!
உன்னுடன் மொழிகுவ தன்றி
வேற்றுள கருமம் என்கொல்நின் தந்தை
விளம்பிய துரைக்கவந் தனனால். (17)

1379. சுடர்மணி குயிற்றும் இந்திரன் அவையாஞ்
சுதன்மையுற் றனனவன் மகிழ்ந்தென்
னுடன்மொழிந் தனனென் முகத்தினாற் றன்சொல்
உரைத்திட வேண்டுமென் றனன்நீ
இடரகற் றிடுபுண் ணியங்களைப் பகலும்
இரவுமே புரிதிபுண் ணியத்தால்
திடமுறத் துறக்க மானவர்க் கெய்துந்
தெளிகென நாரதன் உரைத்தான். (18)

1380. அடுத்திடு புரோகி தனையும்நேர் விளித்தே
அறைந்திடும் உனதுநற் றந்தை
கடுத்திடும் மறலி சங்கிய மணியிற்
காலதூ துவர்கள்வா தையிலுட்

1379. சுதன்மை—இந்திரனது சபாமண்டபம். உற்றனன்—சென்றேன். அவன்—விதாதாவின் தந்தை.

1380. சங்கியமணி—யமனது நகரம். செய்யுள் 1710 பார்க்க.

படுத்திடக் கலுழ்ந்தென் னுடனுரைத் தனன்முன்
பணிந்தெழுந் தென்னைநோக் குபுமால்
விடுத்திடு முநிவ! பார்மிசை விதாதா
விறலர சவையடைந் திடிலே, (19)

1381. **அ**ங்கனென் புதல்வன் ஆழியொன் றுருட்டி
யவனிகாத் தருளுமவ் வரசன்
இங்கிதம் உரைக்கும் புரோகிதன் **அசிதன்**
எனும்பெயர் வினயனங் குற்றுன்
புங்கவ முநிவ! நீயவண் அடைந்த
போதுநான் உரைப்பதத் தனையுஞ்
செங்கையில் இருக்கும் நெல்லிபோல் அறியச்
செப்புதி யெனுமவற் குறித்தே. (20)

1382, **அ**ரந்தையுற் றிடுநீ புகன்றசொல் லனைத்தும்
அவனியிற் கனைகழற் குரிசில்
பொருந்திய சவையிற் சென்றிடும் பகலுன்
புதல்வனுக் குண்மையாய் ஒல்லை
திருந்தமற் றவனுக் கேற்கநின் மொழிகள்
செப்புகேன் உளந்தளர்ந் தினிநீ
வருந்தலென் றுரைக்கும் என்றனை நோக்கி
மறையவன் பின்னரும் உரைப்பான். (21)

1383. **மு**நிவ! கேண் மதிகொற் றவன்பல தானம்
முகமலர்ந் துதவுமேல் வையில்யான்
நலிபெரு மகிழ்ச்சி யாற்பரி தானம்
நாடொறும் வாங்கியீட் டியபொன்
தனிலொரு சிறிதா யினுமெடுத் தந்தோ
தருமமே புரிந்திலன் எனது
துனிவுறும் இதயம் புதல்வனும் அறியான்
தொகுத்திடும் அளப்பரு நிதியே. (22)

1384. **பொ**ருவில்பன் மணிகள் குயிற்றிய அந்தப்
புரத்திடைப் பழவயி ரத்தூண்
அருகத னடியிற் புதைத்திடுந் தனங்கள்
அன்னியர்க் கறைந்திலன் அந்தோ

1382. சவை—சபை.

1383. பரிதானம்—லஞ்சம்.

இருநிலத் திதுமுன் செய்தகா ரியங்கள்
இனிச்செயுங் கருமமே தென்றே
பருவர லுறுமெ னச்சம னயல்கைப்
பற்றுவன் தூதுவர் விடுத்தே. (23)

1385. இரவுநன் பகலும் பிறையெயி றதுக்கி
யிருபுரு வங்களும் நெறித்து
விரவிய வடவைப் பொறிகடை விழியில்
வீற்றுவீற் றெங்கணுஞ் சொரியக்
கரமுறு படைகொண் டளற்றிடை யமிழ்த்திக்
காலதூ துவர்வதைக் கின்றூர்
குரவ! நின் மலர்த்தாள் தொழுதுபோற் றினனென்
குறையுரைப் போர்கள்வே றிலையால். (24)

1386. கருணையங் கடவு ளானமா முனிவ!
கருணைநோக் கத்தில்வீழ்ந் தரற்றிப்
பருவர லுறுசிற் றடியனேற் குன்றன்
பாதமே கதியலால் வேறே(து)
அருளுதி யெனது குமாரனை விளித்துள்
அன்பினுல் அன்றுநான் புதைத்த
இருணிதி யெடுத்துப் புண்ணியம் புரிகென்
றிக்கணம் இயம்புதி விரைந்தே. (25)

1387. தேற்றுகோ தானம் நல்லபூ தானந்
திலதானஞ் செம்பொன்மா தானஞ்
சாற்றுமாச் சியதா னங்கலைத் தானந்
தானிய தானம்வே ழத்தில்
ஏற்றமாங் குளதா னம் வெள்ளி தானம்
இலவண தானமீ தன்பே
போற்றுகன் னிகாதா னுதிமா தானம்
புனிதர்பால் நல்கெனப் புகறி. (26)

1388. பைங்குவ ளைத்தாள் தின்றுதேக் கெறிந்து
பருங்குலை கவிழ்தலைக் கதலி
பொங்குதண் ணீழல் மணிக்குளப் புத்தாட்
புனிற்றுமோட் டெருமைகண் படுக்குங்

1387. ஆச்சியம்—நெய்; வேழம்—கரும்பு; குளம்—வெல்லம்.

கங்கைநன் னதியா தியபெருந் தீர்த்தக்
கரைகளா யிரமறை யோர்கட்(கு)
இங்கிதப் பருப்புச் சருக்கரை கசிநெய்
யின்னமு தருளென இசைத்தி. (27)

1389. அந்தநற் றரும பலத்தினுற் கூற்றன்
அடுபடைத் தூதுவர் பிணிக்கும்
பந்தம்விட் டரந்தை தணந்துபொன் னுலகம்
படர்குவேன் அப்படிப் பகர்தி
கொந்தலர் கடுக்கை வேணியன் மகிழக்
கூறுநா ரதமுநி பேச
வெய்ந்தனன் நினைக்கண் டடியனேன் போற்றி
யுரைத்தவெல் லாமவற் குரைத்தி. (28)

1390. என்னலுங் குரிசில் உரைபுரோ கிதனுந்
தியம்பிய வுரைகள்யான் கேளாப்
பொன்னுல கொரீஇயிக் கடிபுவி யடைந்தேன்
பொதுவறப் புவிபுரந் தருளும்
மன்னவ! எவையும் உணர்புரோ கித! என்
வசனமெய் நுங்கள்தந் தையர்கள்
சொன்னவை மறுமல் இக்கணம் நீவிர்
துகளறத் தருமமே புரிமின், (29)

1391. என்றுரைத் திசைக்கும் நாரத முநிவன்
இச்சையிற் பொன்னுல கடைந்தான்
நன்றென அரச ருழுவையே றிவுளி
நடத்துபொற் கனைகழல் விதாதா
தன்றுணை யுறுதி புகல்புரோ கிதனுந்
தடவரை மணிப்புய அசிதன்
ஒன்றுபட் டிவர்கள் நாரதன் மொழிகேட்
டுளமகி சயித்துடன் மகிழ்ந்தார். (30)

1392. இருவருந் தமது தந்தையர் மொழிகள்
ஏத்துபு வணங்கியப் படியே
பொருவருங் கலுழ்ச்சி யுள்ளமீ தூரப்
புண்ணியம் அனந்தம் ஆற்றினர்கள்

1391. உழுவைஏறு—ஆண்புலி (விதாதா)

தெருளுறும் அசிதன் தூணடிப் புதைத்த
சேமமாங் தனக்குவை யெடுத்துக்
குரிசில்நல் லியநற் றனங்களும் வாங்கிக்
குறைவறப் புண்ணியம் புரிவான். (31)

எண்சீர் விருத்தம்.

1393. கங்கைபா ரதியமுனை நன்மதைபாஞ் சாலி
காவிரிபொன் முகரிபம்பை கம்பைசிகி சரயு
துங்கபத் திரியமுத நதிபாப நாசி
தூதர்ப்ர பைவேக வதிபாரத் துவாசி
சங்கவா கினிகுசைசந் திரபாகை வேணி
சாறுவரிகுண் டலைதாம்ப்ர பரணிசிகை சூரி
பிங்கலைகோ மதிகன்னி கௌசிகைது வாரை
பிணாகினி கௌ தமிகந்த னதிக்கரைகள் தொறுமே.

1394. கருணைவிசு வேசனுளங் கனிந்தருளுங் காசி
காஞ்சிமா யைமதுரை கடல்வண்ணன் துவரை
குருகுலமா ரயோத்திதிகழ் அவந்தியிவை யாதி
கொடியாடு சூளிகைகோ புரச்சிகர மாடம்
மருவுபுரந் தொறுந்தரும கேத்திரங்கள் தொறுநான்
மறையவரா யிரம்பேருக் கறுசுவைநெய் பருப்பு
சுரபிநறும் பால்சீனிச் சருக்கரையின் அடிசில்
தொழுதருச்சித் தவரவரிச் சையினருத்தக் கொடுத்தே. ()

1395. தீனரிரு கட்குருடர் திருவுணரா வறிஞர்
செப்பினளவ வற்றவராய்ச் சேர்ந்தோர்க்கு முதவி
யானபுவி தானமிளஞ் சேதாவுங் கன்றும்
ஆகநிறை கோதானம் பூதானங் கொடுத்துப்
பானல்விழிச் செவ்வரிகள் பரந்துகடை மதர்த்துப்
பருமணிப்பொற் குழைகிழித்துப் பைங்குமிழின் மீளும்
மானமுடைக் கன்னியர்கள் பலகோடி தானம்
மறையவர்க்குச் செந்தழல்முன் வதுவைபுரி வித்தான்.

1393. பாரதி—சரஸ்வதி நதி; வேகவதி—காஞ்சிக்கருகில்உள்ள நதி; வைகை நதியையும் குறிக்கும்; சரயு—அயோத்திக்கு அருகில்உள்ள ஒரு நதி. அமுத நதி—பாலாறு.

1395. பானல்—கருங்குவளை.

1396. வழிவழிகள் தொறுந்தண்ணீர் மணிப்பந்தர் வேய்ந்து
வந்தவர்க்கெ லாஞ்சாதி மணமிகுகற் பூரம்
பொழிமதுப்பா திரியேல மிலாமிச்சை கமழும்
புனிதசீ தளதண்ணீர் பொற்கரகத் துதவி
உழிகடொறு முறுக்கவிழ்மெல் லிதழ்க்குறுந்தேன் பிலிற்றி
யுமிழ்மலர்வல் லரிபொதுளா ராமமிக வைத்துச்
சுழிவிரவு முரிதிரைச்சா கரநிகர்வா விகள்செல்
சூழல்தொறும் அகழ்ந்தகழ்ந்து சோலைகரை வைத்தான்.

1397. செந்தழலோம் பியஅசிதன் ஓர்தினமோர் தீர்த்தத்
தீரத்திற் புண்ணியங்கள் செய்ததனுல் இவன்றன்
தந்தைநர கந்தணந்து திப்பியமாம் அணங்கு
சதநெருங்கு தேவவிமா னத்தின்மிசைச் சார்ந்து
புந்திமகிழ் பொன்னுலகெய் தினனெடுநாள் அங்கண்
பொருவறுமுத் தமசுவர்க்கப் போகமெலாம் அருந்தித்
தொந்தமற்று நாட்கள்புரி புண்ணியத்தால் மேன்மேல்
துறக்கத்தில் அதிகசுகந் துய்த்திருந்தான் மாதோ. (36)

1398. மறையசிதன் அப்படிதீர்த் தக்கரைகள் தோறும்
வதிந்துவதிந் தேநெடுநாட் புண்ணியங்கள் புரிந்து
முறைசிலநாட் கழிந்தபின்னர் நன்மதையை யடைந்தி
முகமலர்ந்து விச்சுவபா தத்துறையின் மூழ்கிக்
குறைவறுதே வர்க்குமிரு டியர்க்குந்தர்ப் பித்துக்
கூறுசந்தி விதிமுடித்துக் குலவுமறை யோர்க்கே
யறையுமருந் தானயனத் தானல்கி யொருநாள்
அறுசுவைநெய் கறிபருப்பின் அடிசில்பகிர்ந் தனனே. (37)

1399. அருமறையோர் தமிற்சிலர்கள் அரம்பைநறுங் கனிகள்
அற்றதனுல் இன்னடிசில் அருந்தாமல் இருந்தார்
பருவரலுற் றனனதனைக் கண்டுபுரோ கிதனைப்
பார்த்துவிளித் தினன்கதலிப் பழமழைப்பித் திடுகென்(று)
அருளியொரு நூறுபழங் குறைந்தனவெவ் விடத்தே
யாகிலுந்தே டிக்கடிதிற் கழைப்பித்துத் தருகென்(று)
உரைசெயவிப் போதுபழம் இங்கிலையந் நியமாம்
ஊர்தேடின் நாளைமற்ற நாள்வருமென் றுரைத்தான். ()

1396. ஆராமம்—நந்தவனம்.

1398. தர்ப்பித்து—தர்ப்பணஞ்செய்து.

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras

1400. பின்னுமுரைப் பானியம மென்கொலரு மறையோர்
பிரியாமல் அருந்துபகற் பெறஅரம்பைக் கனிகள்
என்னவகை யிதற்குதவ இப்போது வருமென்
றியம்பினவன் தனைநோக்கி யெப்படியா கிலுநீ
தன்னைநிகர் வளஞ்சேரும் விந்தியா டவியிற்
தக்கபேர் தமைவிடுத்துந் தருகதலிக் கனியெம்
இன்னலறக் கொணர்மினென வுரைத்துநறுங் கனிகள்
இக்கணமுன் வரவழைப்பித் திடுகவென இசைத்தான்.

1401. அந்தஅம யத்தினலவ் வசிதனைநேர் நோக்கி
அறைகுவனக் கனியிரட்டி யாய்நாளை மறுநாள்
தந்திடுவல் என்னலுமப் புரோகிதனை நோக்கித்
தக்கஅசி தன்மீளச் சாற்றுவன்கா திணையிற்
செந்தளிர்க்கை புதைத்தெனது விரதபங்கம் வராமற்
சித்தமகிழ்ந் தெந்தவகை யாகிலும்நீர் கொணர்ந்தென்
புந்திமகி ழும்படிதந் தருளெளியேற் கிதஞ்சொல்
புரோகிதனே! நின்மலர்த்தாள் போற்றிமிகப் போற்றி (40)

1402. என்றுரைத்த பின்னரசி தன்கரும மனைத்தும்
இதம்புரியும் அவன்புரோ கிதனிதற்கென் செய்கேன்
சென்றுகொடு வரவிடுத்த திசையனைத்தும் இலையே
செய்தென்கொல் எனப்புலம்பிச் சிந்திக்கும் எல்லை
தன்றுணையாய் அருகிருக்கும் விப்பிரசு தீர்த்தன்
சாற்றுவன்மேற் றிசையினின்மஞ் சரிபிலிற்று தேறல்
மன்றல்கமழ் மலர்ச்சோலை சூழ்வீமேச் சரத்தின்
மருங்குசுற்றும் அரம்பைதிரள் வதிந்தனபா ரென்றான்.

1403. அங்கவொரு நூறுபொன்னுக் காயினுமெப் போதும்
அரம்பை தறுங் கனியுளதென் றறைந்தனனக் கணமே
பொங்குளமல் கியமகிழ்ச்சி மீதூர எழுந்து
புரோகிதன்தன் உழையோரைப் பொருக்கெனவே விளித்துச்
செங்கைமிசை நிறையவரும் பணமுதவி வாழைச்
செழுங்கனிவீ மேச்சரத்திற் சென்றுகது மெனக்கொண(டு)
இங்குவரு மின்களென விடுப்பவவ ராங்கண்
எய்தியருச் சகரையடைந் தியம்புவர்கள் மாதோ. (42)

1404. மழவிடையங் கணன்மலர்த்தாள் வழிபடுசித் தாந்த
மறையவர்கள் குலதிலக வரமுனிவீர்! வாழைப்
பழம்விலைக்குத் தருமினீர் சொன்னபடி மருமற்
பணந்தருகின் றேமென்னப் பவளநெடுஞ் சடிலக்
குழகனையா ராதனைசெ யந்தணர்கள் எங்கோன்
கொழுங்கனிபண் ணவர்பொருட்டுங் கொடோமென்று சீற்றம்
எழமுனிந்து போமின்கள் எனக்கனிகேட் டவர்போய்
இறைவனதி காரியருக் கெய்தியிவை யுரைத்தார். (43)

1405. நிருத்தனெனும் பெயரதிகா ரிக்கிசைய அரம்பை
நெக்ககனி நூற்றுரைக்கி ரைந்துபண மாகக்
கருத்தொருமித் துதவியவ ருடன்கூடப் போகிக்
கண்ணுதலை வழிபடுமா கமமறையோர் தம்பால்
விருத்தமறச் சென்றுங்கட் கரம்பைநறுங் கனிகள்
மிகவுளவே யென்றுபண மேற்போட்டோர்வாழை
பெருந்தகவிழ் தலைத்தாற்றுக் கனிகள்கவர்ந் தொல்லை
பெட்பின்மறை யோர்பொருட்டுப்
[பெறவடைந்து கொடுத்தான், (44)

1406. கனியில்லா மறையோர்க்கெல் லாமுதவி யசிதன்
கட்டுரைகேட் கும்புரோ கிதனுநிருத் தப்பேர்த்
துனியதிகா ரியும்நிருபற் கருச்சகர்வந் துடன்று
சொல்லுமுன மசிதனன்ன தானமிகு திகனை
நனிமகிழ்ச்சி யாலுரைத்திவ் வசிதன்வெகு தீர்த்த
நன்கரைக டொறுமிகுபூ ரணவன்ன தானம்
இனியதா னமுமுதலா மெண்ணில்பல தானம்
இருபிறப்பா ளர்க்குதவி யென்றுமகிழ்ந் தனனே.()

1407. மறையவர்கள் பொருட்டுநலம் வளர்வீமேச் சரத்தின்
மணிக்கோயிற் சிவமறையோர் வசமாகத் தெரிந்து
நறைகமழ்வா ழைப்பழம்நூற் றுக்குவிலை யாக
நற்பணம்பத் துதவியவை நன்மதைதீர்த் தத்திற்
குறைவறவந் தணர்க்கன்ன மளித்தனனென் றுரைத்தார்
குரிசிலவை கேட்டார்வங் கொண்டுபுரோ கிதனை
அறையுமதி காரியையும் அனுப்பியசி தனுக்கும்
ஆதரத்தின் உடுவுறைகள் அகமகிழ்ந்தே யளித்தான். (46)

1407. உடுஉறைகள்—உடுப்பனவும் உறையுளும்.

1408. கனைகழற்கால நிருபனல்கும் உடுவுறைகள் வாங்கிக்
கதமெரிவேட் டருளசித னயலடைந்தார் கடுக்கை
நனைகமழ்கோ டீரவீ மேச்சுரனைப் பூசை
நந்தாது புரிந்தசிவ அந்தணர்புங் கவர்கள்
இனையகரு மங்களெலாங் கவலையுளத் தடக்கி
எறிதிகிரிப் படையரசற் கியம்பிவடி வேலோய்
தனையடைந்தோர்க் கருள்வீமேச் சுரன்கனியை நாங்கள்
தகுவிலைக்கா யொருக்காலுஞ் சற்றுமளித் திலமே. (47)

1409. எங்களையும் அவமதித்திட் டசிதபுரோ கிதனின்
எறுழ்வலியால் நிருபவதி காரியுட னடைந்து
சங்கையற முனிந்து பத்துப் பணங்கொடுத்துக் கடுக்கைச்
சடையோனுக் கபிடேகந் தக்கநிவே தனங்கட்
கிங்கிதமாங் கதலிநறுங் கனித்தாற்றைத் தடிந்தே
யீதுசிவத் துரோகமென எண்ணாமல் இவர்கள்
செங்கைகொடு போயினரிந் நாள்வரையு மிந்தச்
செய்கையைவேந் தேநாங்கள் சிறிதுங்கண் டிலமே ( )

1410. ஒளிறுவடி வாட்டடக்கை நிருபனிவை கேளா
உத்தரஞ்சொல் லாதுவறி திருந்துவியப் பன்போற்
பிளிறுமத மாவுரித்தோன் பொருட்டான கனிகள்
பெறுவிலைக்கு மேலதிகப் பணங்கொடுத்தா ரென்றீர்
வெளிறுரைப்ப தேனினியிப் படிவாரா தென்றே
விடைகொடுத்தே வினவுளத்தில் அருச்சகர்நிந் தித்துக்
களிறுகைக்கு மிவன்சிவத் துரோகியென ஓர்ந்து
கரங்குவித்து வீமேசன் கடிநகரி லடைந்தார். (49)

1411. உலம்புனைதோட் புரவலன்பைங் கதலிகொடு வந்த
உழையோரை விடுத்துளத்திற் சங்கையற எழுந்து
பொலம்புனைபன் மணிகுயிற்றந் தப்புரத்தை யடைந்தான்
பொருவிலந்தத் துரோகத்தா லவன்தாதை தனையும்
நலம்புனையிந் திரலோகத் தினினின்று கொடுபோய்
நரகிடையுற் றனரிவனந் நாள் முதலாய்க் கொடிய
அலம்புனைவெங் கயரோகங் கொடுமரித்தான் பாவிக்
கன்றெட்டி யின்றுநர கனைத்துமுழன் றனனே. (50)

1412. திரிபுரி யாஅரசன் மணிமாட நகரம்
நிகரில்படைச் சாமந்த நிருபர்கள்கொண் டிவன்தன்
வீதியொரு புடையிருக்கும் புரோகிதன்கண் ணிரண்டும்
வெடித்துவிழப் பிடுங்கியெற்றி விறற்றேயம் [விட்டுப்
போதியெனத் துரத்தினர்மற் றவனெங்குஞ் சுழன்று
புரைவிழிநோ வால்நாரில் லாவிடத்தின் மரித்தான்
காதியிவன் றனைநரகுய்த் தனரிவன் தாதையையுங்
கனியெடுத்த நாள்முதலாய்க் கடுநரகுய்த்தனரே. ()

1413. ஓங்கெயில்வீ மேச்சுரத்தி லரம்பைநறுங் கனிமிக்
குளதென்ற மறையவன் செத் தொக்கலுடன் [நரகத்(து)
ஏங்கியிடர்ப் படக்கால தூதர்வதைக் கின்றார்
ஏந்தலதி காரிதுனை யெயிற்றரவா லிறந்து
நீங்கரிய அளறிடைகூற் றுவர்வருத்தக் கலுழ்ந்தான்
நித்தர்களா மறையவர்கள் நிறைகனிக ளருந்தித்
தீங்குதரு பெருவயிறு யிறந்துநினை யோடு
தீயநர கிடையரற்றித் திகைத்துழல்கின் றனரே. ()

1414. கூதலிநறுங் கனித்தாறு தடிந்திடுகே சரியாங்
கதமெரியந் தனைனிசைசெங் கைப்பிளவை யதனல்
மதவலிதிண் டோளிற்று மாய்ந்து சுற்றத் துடனே
மறலிபட ராலளற்றில் வருந்துகின்றா ரென்றும்
உதவரசன் புரோகிதன்றன் புரோகிதன்சொன் [னவன்போம்
உழையோர்க ளதிகாரி உண்டவர்கள் அறிந்தோர்
விதவிதமாஞ் சுற்றமுடன் கோடியுகம் நரகில்
வீழ்ந்தின்னும் வருந்துகின்றார் வீடுசந்தி யறவே. (53)

அத்தியாயம் 51.

சிவத்துரோகிகள் நரக வேதனை—தொடர்ச்சி

சிவநிலம் கவர்ந்த துரோகம்

சக்ரபுரம் என்னும் நகரில் சவிதா என்னும் அந்தணனுக்கு மக்கள் மூவர் இருந்தனர். மூத்தமகன் பெயர் சாந்தன். அவன் சிவபத்தியும் அடக்கமும்

1414. சந்தியறவே—சந்தித்தல் (கூடுதல்) இல்லாது.

உடையவன். அவன் தன் பங்கு நிலத்தை அரியீச்சரத்துச் சிவபிரானுக்கு அமுதுக்கு என்று உரிமை செய்து விட்டு வெதிரிகாச்சிரமஞ் சென்று துறவு பூண்டான். பிறகு, அரியீச்சரப் பணியாளர்கள் சாந்தன் நிலத்தைக் கைக் கொண்டனர். சவிதா அவர்களைத் தடுத்து, 'என்மகன் சிறுவன், பித்தன், அவன் துறவியாகிக் காட்டிற்குச் சென்றதால் அவனுக்கு நிலத்தில் உரிமை யில்லை. எங்களுக்கு அவன் எழுதிவைத்தது தெரியாது. ஆகையால், நிலத்தை விடமாட்டேன்' என்று வாதாடினன். இருதிறத்தாரும் அரசனிடம் முறையிட்டனர். அரசன் அந்தணனை நோக்கி. 'எவ்வனமேனும் ஈசனுக்குக்கென உரிமை யாக்கப் பெற்ற நிலமும், கன்னியும், இடபமும் எவராலும் திரும்பப்பெற முடியாது' என்று நிலத்தைச் சிவபெருமான் ஆலயத்தார்க் குரிமையாகத் தீர்ப்புக் கூறினன். அரசன் இறந்த பின் சவிதா மீளவும் அந்த நிலத்தைக் கைக்கொண்டான். அப்பொழுது சாமந்தன் என்னும் வேற்றரசன் அந்நாட்டைக் கைக்கொண்டான். அவன் சவிதாவின் செயலைக் கண்டித்துச் சவிதாவின் பொருள்கள் யாவையுமே அரியீச்சரத் தீசனுக் காக்கினன்.

சவிதா மனமுடைந்து வறுசாய்த் திரிந்து மாகததேசத்தை அடைந்தான். அந்நாட்டரசன் இவனுக்கிரங்கி ஆதரவு செய்தான். அரசவைப் புரோகிதன் விசாந்தன் சினங்கொண்டு சிவத்துரோகியான சவிதாவையும் அவனை ஆதரித்த அரசனையும் வாளால் வீழ்த்தினன். தன்னை எதிர்த்த அரசன் படைகளையும் கொன்று குவித்தான். இச் செயலைக் கண்டு நடுங்கி வணங்கிய அரச குமாரனை சுமித்திரனைத் தெளிவித்து, அவனுக்கு முடிசூட்டி ஆசி கூறினன். சுமித்திரன் விரும்பிய வண்ணம் இறந்து போன படைகள் உயிர் பெற்று எழுமாறு அருளினன். அத்தகைய புரோகிதனை விசாந்தனுக்குச் சிவலோக வாழ்வும் உலகப் பெரும்புகழும் கிடைத்தன.

சவிதாவுக்கும் அவனுக்கு ஆதரவு கூறிய அரசனுக்கும் மீளாப் பெரு நரகு கிடைத்தது.

அத்தியாயம் 51.

சிவத்துரோகிகள் நரகவேதனை—தொடர்ச்சி

எழுசீர் விருத்தம்

1415. அண்ட மீதெழு கொண்டல் சேரிடி
யங்கண் வாய்விடு தந்தியென்(று)
மண்டி சாமுகம் விண்டுபேர
இபங்கை வீசு கடங்கண்மேல்

1415. தந்தி, இபம்—யானை; கடம்—மதம்; யானைமதத்தில் வண்டு இளைத்தல்—"மதந் திவண்ட வண்டு" சிந்தா—2313. இச்செய்யுளின் ஈற்றடி விளங்க இல்லை, சிருக்கலை—விலக்கு.

வண்டு பேடயல் கொண்டு லாவி
வதிந்த தில்லை விலங்கினுல்
திண்ட வாவிதல் கண்ட தான
சிருங்க லாதியுஞ் சேர்வரம். (1)

சிவநிலங் கவர்ந்த துரோகம்

சவிதாவின் கதை

கலிநிலைத்துறை

1416. நோன்மே லூசிப் பம்பர மாடுங் குறியென்ன
மேன்மேல் வானிற் சுற்றிய பொற்றேர் விசையாலோர்
காண்மே லாடு மேடையின் மின்னார் களிமஞ்ஞை
போன்மே ஞகர்மகிழ்பூச் சக்கர புரமாதோ (2)

1417. அங்கண் மேவு மறையோன் சவிதா அருண்மைந்தர்
பொங்குஞ் சாந்தன் வேகுதனி வித்வான் புகல்மூவர்
தங்கு மிவரின் முன்னோன் வினயம் தருமஞ்சேர்
துங்கன் சீலன் மிகுபா கத்தின் துகள்தீர்வோன். (3)

1418. தேரார் வீதி அரியீச் சரஞ்சேர் சிவனுக்கே
ஆரா வின்பத் தாலொரு பக்கம் அமுதுக்கிங்(து)
ஏரார் பூரி நிதியற் றெண்ணுள் இருநான்கிற்
பாரார் வேதிரி காச்சிர மத்திற் படர்குற்றுன். (4)

1419. சாகா சனனு யத்துற வாசான் சரணங்கள்
ஏகா தரவா யிதயத் துன்னி யெந்நாளுந்
மோகா சலநீத் திறையோன் தவமே முயல்வுற்றான
வாகா மீச னிலம்நே டினர்சை வர்களியாரும். (5)

1420. கண்டார் சவிதப் புதல்வன் நிலங்கள் கடிதேகைக்
கொண்டார் பின்னர் சவிதா அங்கண் குறுகிப்போந்
தண்டார் போலக் கலுழ்ந்தே கோபித் தறைகிற்பான்
விண்டார் வம்போ யென்மகன் அக்தோ வெறிகொண்டான். ()

1416. போன்ம்—போலும்.

1418. பூரி—மிகுதி.

1419. சாகாசனன்—இலைக்கறி உண்பவன்; சாகம்—இலைக்கறி; அசனம்—உணவு.

1421. ஊரும் நிதியும் இல்லுந் துறந்தே உன்மத்தப்
பேருங் கொண்டிவ் விடம்விட் டந்தோ பிரிந்தேகான்
சேரு மவனுக் கேதென் றுரைத்தான் சிறிதுண்டோ
ஆரு மிலையோ அவனீங் ததுயாம் அறியோமால். (7)

1422. சேதன மற்றே பித்தா மைந்தன் செய்தன்ம
சாதன வோலை தந்தன னுவித் தகைமைத்தாம்
நூதன மான விநோதம தென்கொல் நுடங்கேற்றுக்
கேதன னுக்கே னும்மொழி தீதாங் கிளக்குங்கால். (8)

1423. பித்தா முணர்வாய் உரிமையும் இன்றிப் பெயர்வோன்சொல்
எத்தா மவனல் லியதோ நல்கிய திலையென்று
சித்தா மிருடிகள் சொல்கின் றனர்நீர் தெளிசிந்தை
வைத்தா மெங்களி தென்பதென் பித்தீர் வறிதேபோம். (9)

1424. என்றே சொல்லி யவனீந் ததனை யிறைக்கீந்த(து)
அன்றே யென்று பலகா லுரைத்திட் டவர்முன்னே
நின்றே முனிந்து நிலத்தை மறித்தான் நிருபன்முன்
சென்றே முறையிட் டொருவர்க் கொருவர் செருச்செய்தார். ()

1425. கோடா நீதிக் குரிசில் மறையோன் கொடுஞ்சொற்கேட்(டு)
ஏடா சீயங் கெதிர்நில் லாதிவ் விடம்விட்டுப்
போடா என்றே பின்னு முரைப்பான் பொறித்தீசற்(கு)
ஈடாய் விட்ட இடபங் கன்னி யெவர்கொள்வார். (11)

1426. எஞ்சின செம்பொன் கொண்டே தாரா விரைதின்று
துஞ்சினர் போலக் கிடவென் றேட்டித் தூரத்தில்
வெஞ்சின மாகத் துரத்தின னன்றே விளைபூமி
பஞ்சின மேவுஞ் சீறடி பாகன் பழனம்மால். (12)

1427. தார்மலி கோனெடு நாள்வாழ்ந் திறந்த தற்காலம்
ஏர்மலி செய்ய மறையோன் கைக்கொண் டிருந்தான்வெம்
போர்மலி வைவேற் சாமந் தரசன் பொருக்கென்னச்
சீர்மலி யந்தத் தேயந் தனதாத் திறைகொண்டான். ()

1426. தாரா—தரப்பட்ட; சீறடி—சிற்றடிப் (பார்வதி)

1427. தற்காலம்—அந்தக் காலம்.

1428. ஆனிய பருவம் நீதிச் செங்கோ லரசன்றன்
பாளிய மஞ்சேர் கோவி லரிப்போன் பகர்ந்தான் ; மன்
மானிய மென்றேன் கொண்டா யென்றம் மறையோன்தன்
தானிய முங்கேழ் போகமு மீசன் தனக்கீந்தான். (14)

1429. எல்லா நிதியும் அபரா தத்துக் கெனவாங்கிக்
கல்லா னீழ லிறைவற் கீந்து கடிதங்கண்
பொல்லா மறையோன் தனைநீத் தனனப் பொழுதேதான்
செல்லா நாளு தேச மனைத்துந் திரிந்தானல். (15)

1430. பூவுறை மாதனை யார்நட மினேஞோர் புடைநோக்கித்
தூவுறை வான்பொன் மழைபெய் தல்போர் சொலவேம்பின்
நாவுறை தோகைகள் கைச்சிற கால நடமாடக்
காவுறை மந்தி மலர்தூ வும்மா கததேசம். (16)

1431. மன்னுக் கோவைக் கண்டுசொன் னுன்றன் வரலாற்றை
இன்னும் நீவெரு வேல்வெரு வேலென் றிறைசொல்லித்
துன்னும் வேத பாரக! இன்று தொட்டெம்பாற்
பன்னும் ஆசி யுரைத்திடு விங்கே பரிந்தென்றான். (17)

1432. வேந்தன் அவையிற் புரோகித னுன விசாந்தன்முன்
போந்த மறையோன் றனைப்பார்த் தங்கண் புகல்வான்நீ
ஆய்ந்த சிவத்து ரோகி யாம்நிற் கையந்தீர்
ஏந்த லிப்போ தேது புகன்று னெனச்சொன்னுன். (18)

1433. ஆத தாயியி னும்மதி கன்னென் றறிஞோரால்
ஓது கின்ற சிவத்து ரோகியை உளமீதில்
ஏது வென்ன வென்றுண ராமல் எதிர்கண்ட
போது வாளால் தடிந்திட வேண்டும் பொருக்கென்ன. (19)

1434. ஆயுங் காலெங் குரிசில் முனம்வந் தஞ்சாத
நீயும் பார சிவத்து ரோகி நினக்கின்னே
மாயுங் காலம் வந்த தெனக்கை வடிவாளாற்
காயுங் கோபத் தெற்றினன் முன்சே கரம்வீழ. (20)

1428. ஆனியம்—நாள். அரிப்போன்—ஆய்பவன். மானியம் என்று என் கொண்டாய்.

1430. பூவுறை மாது—இலக்குமி. கா—சோலை.

1433. ஆததாயி—கொலைஞன், கொடியன்.

1435. தானை வேந்தன் முனிந்து புரோகி தனைநோக்கி
ஏனை யோமறை யோனை வதைத்தா யெனச்சொன்ன
கோனை நீயுஞ் சிவத்து ரோகி குறித்தேன்நீ
வானை மேவா தடுதும் என்றே வதைத்திட்டான். (21)

எழுசீர் விருத்தம்

1436. கொடிய வஞ்சமறை யவனும் வென்றிதிகழ்
குரிசி லுஞ்சிறிது பொழுதிலே
மடிய அங்கணுறு படைக ளெண்டிசையும்
வளைய வந்துசின மருவியே
நெடிய வெம்படைகொ டிரிய வும்படிவ
நெரிய வுங்கைபுடை யறையவும்
முடிய வெம்புமுயிர் தடிய வுங்கருதி
முன்னமே பலரு மன்னினர். (22)

1437. ஒருவ ருக்கொருவர் கறுவி வட்டவிழி
உதிர்க னற்பொறிகள் சிதறவே
பொருப டைத்தலைவர் சிலர்மு டித்தொகைகள்
புரள வெட்டியய லெறியவே
பெருகி ரத்தமுடல் சொரித ரச்சிலர்கள்
பிழிய வட்டகள மிதுவெனத்
திருகு மெய்ச்சினமொ டிபமருப் பிணைகள்
சிலர்ப றித்துதறி யுழறுவார். (23)

1438. சிலர டற்புரவி கலினம் வெட்டிமுடி
சிதறி நட்டமிட வவர்முனே
சிலரு டற்குறைக ளெதிர்கை கொட்டிமுறை
செகசெணச் செகண செகணெனச்
சிலர் களிற்றுரிவை புரைவி ரித்தலகை
செயுந டத்தின்முனம் மகிழவே
சிலர் நகைத்தலற நுதல்வி ழிக்கடவுள்
திருவு ளத்தின்வர மருளுவார். (24)

1439. சுடர்மு டிக்குரிசில் பெறுத வத்தின்வரு
சுதனருட்பெறு சுமித்திரன்
அடல்வி டைக்கடவுள் நிலமெ டுத்தமறை
யவனு மற்றவனை யணுகியே

தொடர்பி ருத்துமிட லவனை வெற்றிமிகு
தொடர்ப டைத்திரளும் அமலனால்
மடிய இத்தனையும் எதிர்கு றித்துவிறல்
மனந டுக்கமுற மறுகினான். (25)

1440. வார முன்புள புரோகி தன்சரண
வாரி சம்பரவி நின்று நால்
ஆர ணஞ்சொல்பக வான்இ யம்புதிமு
னுக வந்தடையும் அந்தணன்
நேரி றந்ததெனை கோவி றந்ததெனை
நீளிரும்படை யிறந்ததென்
கார ணம்புகறி வாய்மை யென்றுபல
கால முன்தொழு திறைஞ்சினான். (26)

1441. வந்து வந்தனை புரிந்திரந்த மன்
மகன்சு மித்திர னியம்பவே
சிந்தை முந்துரை தெளிந்து ணர்ந்தவை
சிறந்த சாந்தனுரை செய்குவான்
நிந்தை யந்தண னறிந்து மெந்தைத
னிலங்க வர்ந்தவ னகந்தைய
னந்த மைந்தம னிகழ்ந்த வன்கொடிய
வாததாயிபட மாய்ந்தனர். (27)

1442. இந்த வாய்மையத னுக்கொ ரையமிலை
யென்ன மன்மக னியம்புவான்
அந்த ணேச! அடி யோம்பு ரிந்தவை
யனைத்து மேபிழை பொறுத்தியால்
முந்த வேவறி திருந்த சேவகர்
முகங்கொ டேவர இயைந்துநீ
சிந்தை செய்தருடி யென்று பூவின் முறை
செம்பொன் மாமுடி வணங்கினான். (28)

1439. மிடலவன்—அரசன்.

1440. எனை—என்னை! என்ன காரணம்.

1441. சாந்தன்—விசாந்தன்; எந்தை—சிவபிரான்; மன்—அரசன்.

1442. வறிதிருந்த சேவகர்—அபசாரம் செய்யாத சேவகப் படைகள்.

1443. அன்ன வன்றனை விசாந்த னேக்கியட
லேறெ னுங்கட லுடைப்புலி
மன்னர் மன்குமர ! குசல னீதிமதி
மானி யம்புமொழி வாய்மையே
முன்னர் நிந்தையப ராதமேசெய்து
முடிந்த நீள்கொடிய தந்தைதான்
இன்னம் வந்துமணி முடிக வித்தர
சிருக்க யான்புரிவ தில்லையே. (29)

1444. தொழுது போற்றிசெய் திரந்தி ரந்துகுறை
சொல்லி வீந்தபடை யாவையும்
பழுதி லாதுயிர் பரித்து மீளவவை
பண்டு போலவருள் கென்றனை
உழுது வண்டுமுர லிதழி யஞ்சடில
உம்பர் கோனருள் இனிக்கணம்
முழுதும் வந்துலவு மெனுமு னம்படைகள்
முந்தி முந்தியெதிர் வந்தவே. (30)

1445. முரிதி ரைப்பரவை உலக னைத்தும்விறல்
மொய்ம்பு கொண்டவிறை மைந்தனேர்
அரிது இத்துவரு படைக ளுற்றுமனம்
அதிச யித்தமல னருளெனுப்
பெரிது பத்திசெய்து தவவு ருக்கொடு
பெறும்பு ரோகிதனை யேத்தினன்
பரிதி யொத்தமலர் மழைசொ ரிந்தமரர்
பணைகள் துந்துமி முழக்கினர். (31)

1446. கங்கை யஞ்சடில அங்கணன் சரண
கமல மேத்திசெய் கணங்கள் சூழ்ந்(து)
எங்க ளுங்குலவு தங்க மானமிசை
யேறி வந்தெமது நந்தியெம்
புங்க வன்கருணை யாற்ற வம்புரி
புரோகி தேசனினை மானமேல்
மங்க லம்பெருக வங்கழைத் தினிது
வருக வென்றெமை யனுப்பினன். (32)

1447. ஆத லாலினிது மான மேறுக
அறஞ்செய் புத்திரர் பவுத்திரர்
தீதி லாக்கிளைஞர் நண்பர் பற்றினர்
சிறந்து நின்னுடையல் சேரவே
பூத லத்தைவிட் வருக வென்றுசுரர்
புகழு மானமிசை யேற்றியே
காத லிற்சுடர் விளக்கு நற்றரும
கயிலை மால்வரை விடுத்தனர், (33)

1448. பாவ மல்குசவி தாவி ளம்பிறை
பகீர திக்குண்முழு குஞ்சடைத்
தேவர் தேவவிறை வற்கெ ணுத்தனது
சேய்மு னல்கிய நிலத்தினை
ஆவ லோடனு பவித்து நல்குர
வடர்க்க வேவறிய னுயுளம்
நோவ லைத்துகடை தோறு முன்றுபலி
நொய்தின் வேட்டுவறி தெய்தினுன். (34)

1449. சிறுவ ருந்தன்மனை வியரு மற்றிவர்
சினக்க மேவுபுதல் வியருமால்
வறுமை மைந்தர்மனை வியர்க ளும்மிடி
மறித்து டன்பிடர் பிடித்துநே
ருறமு ஹுந்தமறு தேச தேசநடு
வுற்ற காலையொரு மறையவன்
கறுவி வாள்கொடு தடிந்த னன்கொடிய
கால தூதர்நர குய்த்தனர். (35)

1450. அனந்த கற்பமள றெங்க ளுந்துயரி
லாழ்ந்து வீழ்ந்தனன தன்றியும்
இனந்து யர்க்கடலு ளெய்து கின்றனனெ
ரேது வின்றியறி ஞோரவை
நனந்த லைக்கணுறு மன்ன னுஞ்சிறிது
நட்பு வைத்தவத னுலேயோ
மனந்தி கைத்துவடி வாளி னுலுயிர்
மடிந்து வெந்நரகில் வீழ்ந்தனன். (36)

1449. மறையவன்—விசார்தன்.

1450. இனம்—இன்னும்.

1451. அனைத்து யிர்க்கும்வரு கார ணங்கொடுமை
யான பாவமள வில்பொருட்(டு)
இனைத்தெ னுதுவரு முண்மை மன்னவனும்
ஈன னுனமறை யோனுமே
தினைத்து ணைப்பொழு தளற்றில் வீழ்ந்துயிர்
திகைத்து யிர்த்தலறி முற்செயல்
நினைத்த ழுங்கிமெலி கின்ற னர்கொடிய
நிரய மீதினிவ்வ் வரையுமே. (37)

அத்தியாயம் 52.

சிவத்துரோகிகள் நரக வேதனை—தொடர்ச்சி

சிவபசுக் கவர்ந்த துரோகம்

பாண்டவர்களில் மூத்தோனான தருமபுத்திரன் சுவர்க்கம் போவதற்கு முன் (பொய் சொன்னதால்) நரகத்தைப் பார்க்க நேர்ந்தது. யமதருமராஜன் தருமபுத்திரனுக்கு நரகத்தைக் காட்டும்போது சிவனது பசுவைக் கவர்ந்து நரகத்தில் இடருறுவோரைக் காட்டி அவர்கள் செய்த பாவத்தைப் பகர்கின்றனன்.

குஞ்சரம் என்ற நாட்டில் வசுதை என்ற நகரத்தில் வாழ்ந்த விப்பிரமணி என்னும் மறையவனுக்கு இந்திரன் அருளால் திவ்யமணி ஒன்று கிடைத்தது. அது நாள்தோறும் ஆயிரம் கழஞ்சு பொன் நல்கும். அப்பொன்னைக் கொண்டு, அவன் அளவிலா அறம் புரிந்து வாழ்ந்தான். ஒருநாள் அவன் ஆயிரம் பசுக்களைத் தானங்கொடுத்தான். அவற்றில், வசந்தேசருக் கென விட்ட கோயிற் பசு ஒன்றும் கலந்து எண்ணிக்கை அதிகமாக இருந்தது. வசந்தேசர் திருக்கோயிலின் அர்ச்சகர்கள் அதை இது கோயிற் பசு என்று தடைசெய்த போது 'ஈசன் எனக்குக் கொடுத்த பசு இது' என்று கூறி அந்த விப்பிரமணி பசுவைக் கொடாது அவர்களைப் போக்கினன். அவர்கள் மதிவிசாலன் என்னும் அரசனிடம் முறையிட்டார்கள். அவன் அவர்கள் முறையீட்டைக் கேட்கவில்லை. அமைச்சன் சுவீரன் விப்பிரமணியின் பிழையை அரசனுக்கு விளக்கி விப்பிரமணியைத் தண்டிக்க வேண்டுமென்றான். இந்திரன் அருள்பெற்றவன் விப்பிரமணி; அவனை நான் ஒன்றும் செய்ய மாட்டேன் என்றான் அரசன். சினங்கொண்ட சுவீரன் அரசனைவிட்டகன்று காட்டிற்குப் போய்விட்டான். அங்கே சுவீரன் உணவின்றி வருந்தாமல் இந்திரன் காமதேனுவைக் கொடுத்து அவனைக் காத்தான். அரசன் அமைச்சனை அழைத்துவர ஏவலாளரை அனுப்பினன். சுவீரன் வராமையால், தானே

1451. இவ்வரையும்—இன்றளவும்.

அவனை வலிதிற் கைப்பற்றிவரப் படையுடன் சென்றான். வழியில் தங்கிய போது, இரவில் அவனுடைய பட்டக் களிறே அவனைக் கொன்றுவிட்டது. பிறகு, மதிவிசாலன் மகன் சித்திரசேனன் அரசனானான். சித்திரசேனன் சுவீரன் மனப்படியே விப்பிரமணியை வதைத்தான். அப்போது இந்திரன் வெளிப்பட்டு அந்த விசேட மணியைச் சித்திரசேனனுக் களித்தான். சித்திர சேனன் பசுவைத் தானமாகப் பெற்ற வசு என்னும் மறையோனையும் கச்ச நாட்டிலிருந்து வரவழைத்துப் பசுவைத் திருக்கோயிலுக்கு அளித்து வசுவின் கண்களைப் பிடுங்கினான். விப்பிரமணியும் மதிவிசாலனும் வசுவும் இப்போது நரகில் வருந்துகின்றனர்.

இயமன் இவ்வாறு கூறியதைக் கேட்ட தரும புத்திரன் வியந்து நரகக் காட்சி முடிந்த பிறகு சுவர்க்கம் அடைந்தான்.

அத்தியாயம் 52.

சிவத்துரோகிகள் நரக வேதனை—தொடர்ச்சி

சிவாலயப் பசுக் கவர்ந்த துரோகம்.

எழுசீர் விருத்தம்

1452. நீறு கண்டிபுனை சூதமா முனிவன்
நெக்கி தழ்ச்சிறு முறுக்குடைந்
தாறு மென்பத மடுத்து மட்டுமு
தருந்தி நன்பெடையொ டளிமுரன்(று)
ஏறு கின்றஇத ழிச்செ ழும்பவள
ஈர்ஞ்ச டைக்கடவுள் மலரடிப்
பேறு கொண்டுரை செயுந்த யாவில்வரு
பெட்பின் மாதவரை நோக்கியே. (1)

1453. அந்த ணீரொருமை யோடு கேண்மின்முன்
அறிந்த வாறுபின ரறைகுவன்
இந்து வேணியம லேச னன்பசுவி
யாவர் பூரியர் நராதமர்
சிந்தை செய்தவை கவர்ந்தி யாதுகதி
சேர்ந்து ளாரவரொர் காதையைப்
புந்தி யாதரவு கூர வோர் சிறிது
புகல்வன் நீர்புனித மாகவே. (2)

1454. பாண்டு மன்னனருள் குமரன் நீதி பொறை
பான்மை வாய்மைதவ மல்குசீர்
வேண்டு செல்வமிகு தயவு சீலமதி
விரத மாதரவு ஞானம்நேர்
ஈண்டு போரில் விறல் வாகை சேர்த்தியுணர்
வீகை மேன்மைகுரு சேவைபார்
ஆண்டு பற்றறல் பவித்தி ரங்கதிகள்
ஆண்மை சேர்தரும புத்திரன். (3)

1455. வீம னாதியபி னவர்க ளாற்சமரில்
வெற்றி மாமுர சதிர்த்தெதிர்(து)
ஏம மானதுரி யோத னாதியரை
இரவி மண்டல நடுச்செல்வான்
சேம மானபடை கொடுத டிந்துகிரி
திரள்பு யத்துமலர் வாகையன்
தாம மார்தரும புத்தி ரன்புவனி
தாங்கு பாரமும் அகற்றினான். (4)

1456. அளவி லாதபெரு மைக்கி டங்கொண்முடி
யண்ணல் பேர்புனை உதிட்டிரன்
துளவ மாலெனவொ ராழி யெண்டிசை
துலங்க மேதினி யுருட்டியே
வளமை யாயரசு செய்த பின்தனது
வடிவ மோடுவிய னுலகின்மஞ்(சு)
உளம காகநெறி செல்லு நாப்பணெதிர்
தோற்றி னான்தரும ராசனே. (5)

1457. தந்தை தாள்மலர்முன் வீழ்ந்தி றைஞ்சியொரு
சார்பி ருந்ததன யன்முகம்
சிந்தை யேமகிழ நோக்கி ஆசிபல
செய்யு மேல்வைகடல் வையமேல்
வந்த தீவினைநல் வினையு ணர்ந்தெழுதி
மருவு சித்திர குத்தன் முதற்
பந்த மாய்வரு கணக்கர் தென்றிசை
பரிக்கும் வேந்தன்மு னுரைப்பரால். (6)

1456. மஞ்சு உள்ள மகா கம் நெறி—மேகம் உலவும் பெரிய வானத்து வழி.

1458. நீதி யால்நடுவ னென கொற்றவ!
நிரந்த ரன்தரும புத்திரன்
பேதி யாதமொழி யானன் னீறியொடு
பெற்ற தாயென உயிர்க்கெலாம்
ஆதி நாண்முத னடாத்து கின்றமுடி
யரசன் விண்ணுலக மதனிலே
கோதி லாதுசெல வேண்டு மாயினுமெய்
கூறுதும் மொருசொல் கேண்மதி. (7)

1459. முன்னம் ஒன்னலரை வென்று வாகைபுனை
மொய்ம்ப னம்புவி நரேந்திரன்
என்னு மன்னவன் வெலற்க ருஞ்சமரில்
இக்க ணம்புகறி யென்றயல்
சொன்ன பின்னமொழி யாலிடைந் தொருபொய்
சொற்ற னன்பரி கரிக்கவே
சின்ன வெந்நரகு கண்டு பாவமது
தீர வேண்டிடு மவற்கரோ. (8)

1460. எழுது கின்றவர் கணக்கி லுள்ளதை
யியம்ப வேதரும ராசன்மெய்
முழுது ணர்ந்தனு மதித்து மைந்தனொடு
முன்ப டர்ந்துபில மூடுசென்(று)
அழுதி ரங்குமவர் தம்மை யுங்கொடிய
அளறு தன்னையு மனைத்தையும்
பழுதி தென்றுமுறை காட்டு மேல்வையவை
பார்த்து மெய்ந்நடு நடுங்கினான். (9)

1461. நந்தை புண்டரிக வதன நோக்கியெதிர்
தன்ற டக்கைமலர் கூப்பியே
எந்தை சிந்துமெரி வாய ளற்றினிடை
யிவர்கள் நொந்துளம் இரங்கியே
சிந்தை வெம்பியெதிர் தம்ப ழுற்றவர்கள்
செய்த தென்கொலென் இவரெல்லாம்
முந்தை யிற்புரி சிவத்து ரோகிகள்
முயற்றி டுஞ்செயலை மொழிகுவாம். (10)

பசு கவர்ந்த கதை : 1462—1480.

1462. தண்டு மாயிறை கடுக்கை யண்ணல்தரு
தனயன் ஆம்பல்நிகர் தந்தியார்த்(து)
எண்டி சாமுக இபந்தி கைக்கவளி
யிருசெ விப்புறமும் விசிறியே
அண்டர் கோன்இபம் நடுங்க வேபனை
அடற்கை மாருதம் விடுத்துவான்
கொண்டல் நீர்புவி பிழிந்து நீழல் பொரு
குஞ்ச ரப்பெரிய தேசமே. (11)

1463. பரிக்கும் எந்தைமயி லோன்கு றிஞ்சியொடு
பாலை முல்லைமரு தம்நெய்தல்
தருக்குள் நன்பொருள் கொணர்ந்து சாந்திவிர
தம்ப தஞ்சுருதி வேள்விநூல்
விரிக்கு மாச்சிரமம் எண்ணில் தானமணி
விசிறு தீர்த்தமிரு நால்வகை
வரிக்கும் யோகமிவை புரிகு வோர்மருவு
வசுதை மாநகரம் ஆகுமால். (12)

1464. அந்த கர்ச்சுருதி வேள்வி விப்ரமணி
அந்தணற்கொருவிண் ணேரிறை
பொன்ன கர்க்குளொரு திப்பி யப்பணி
புகுங்க முஞ்சுறுபொன் னாயிரம்
முன்ன ரிக்குமதை நல்கி நீதரும
முழுது மேபுரிதி யென்றுரைத்(து)
இந்நி லத்தினில் விடுத்த னன்புவியில்
இறலும் நற்றரும மேசெய்தான். (13)

1465. எண்ணி லாத்தரு மங்கள் நித்தியம்
இழைத்தி டும்பகலி லோர்பகல்
வண்ண மானபசு வாயி ரந்தமை
வழங்கு மேல்வைவச க்தேசனும்

1462. தனயன்—ஐயனார் (சாத்தன்). ஆம்பல்—யானை.

1463. இருநால்வகையோகம்—அட்டாங்க யோகம்.

1464. அரிக்கும்—படைக்கும். இறலும்—இறுதிவரையில்.

அண்ண லார்பசு வுடன்கொ டுத்திடவொ
ரானி தற்குள தி கம்மெனக்
கண்ணு ருவயலி னோர்சொ லப்புதிது
கண்டு நல்லதெ னச்சொன்னான். (14)

அறுசீர் விருத்தம்.

1466. மழுவலனேந் தியகடவுள் வசந்தேச
சூலியினை மலர்த்தா ளென்றும்
பழுதின்மலர்த் தூயசைவா கமப்படிபூ
சனைபுரிந்து பரவி யேத்தி
முழுதுணரும் அருச்சகர்வந் தெங்கோமான்
பசுக்கொடுத்தல் முறைமை யோகாண்
வழுவிதுவென் றேமுறையிட் டிளம்புனிற்று
வைத்தகைந்து மறித்தா ரமாதோ. (15)

1467. வடுவகிர்மை விழிக்கனிவாய்ச் சசிகொழுநன்
அளித்தருள்பூண் வழங்கு பொன்போற்
கடுவிடமுண் டிருண்டமணிக் கண்டனுநல்
கினன்சேதா கடிதுமக்கே
விடுவதிலை யெல்லீரும் போமின்கள்
எனப்பகர்ந்தான் விடைசேர் கோமான்
தொடுகழற்கால் அருச்சகர்நொந் தரசனுடன்
இவையனைத்துந் துலங்கச் சொன்னார். (16)

1468. சுடர்மணிச்சூட் டுரகமுடி மிசைக்கிடந்த
புவிபரிக்குந் தொடைசேர் மொய்ம்பன்
கடனெனமற் றிவையுணரா திருந்திடக்கண்
டயலமைச்சன் கட்டு ரைப்பான்
புடவிபரித் திடும்வேந்தே! கண்ணுதலின்
பசுவெனவிப் போது கேட்டும்
மடமையுடை யோர்போலே வறிதிருப்ப
தென்னிவனை வதைக்க வேண்டும் (17)

1469. இம்மறையோன் கொடிய சிவத் துரோகியத
னுலுரைத்தேன் என்ன வேந்தன்
மும்மையுணர் அமைச்சன்மலர் முகநோக்கி
அறைகுவனிம் முத்தீ வேட்டோன்

அம்மமக பதிதனக்கிங் கனுகூலன்
இவனெம்மால் அடப்ப டான்நீ
எம்மருகி ராமலய லேகுகென
அமைச்சன்முனிந் தெழுந்து நேர்வான். (18)

1470. இறைவனந்தோ சிவத்துரோ கிக்கினியன்
அருகிருப்ப தில்லை யென்றே
முறைபுகல்மந் திரிவனத்தின் முகமலர்ந்து
போயினன்பின் முனிந்தே சைவ
மறையவராம் அருச்சகர்கா வலன்சிவத்து
ரோகியென்று மனத்தி கழ்ந்து
கறைமிடற்றோன் ஆலயஞ்சென் றனர்சிலநா
ளிப்படியே கழிந்த பின்னர்; (19)

1471 புரவலனும் மதிவிசா லன்கொடுங்கா
னத்தின்முனம் போகிப் பன்னாள்
மருவுசுவீ ரனையழைத்து வரச்சொன்னான்
அதற்கமைச்சன் மறுத்து வாரா(து)
ஒருமையுட னுற்றனன்பின் சின்னாளி
லேவறுமை யுற்றில் வாழ்க்கை
யிரவுபகற் றரிக்கவறி யாது நொந்த
திமையவருக் கிறைவன் கண்டான். (20)

1472. காமியநல் கியசுரபி யெனுங்காம
தேனுவைமுன் கடிதழைத்து
நேமியங்கை தரித்தவன்போல் நினைத்தவெலாம்
அளித்தருளும் நிமலை யேநீ
பூமியிற்சென் றருங்கானிற் போந்தசுவீ
ரவன்வறுமை பூண்டில் வாழ்க்கை
யாமியல்காத் திடவரிதா யறநொந்தா
னவன்றனைக்காத் தருடி யென்றான். (21)

1473. தருநிழலிந் திரனாணை தலைமேற்கொண்
டருங்கானந் தன்னி லொல்லை
வருதரும தேனுவவன் குடும்பமனைத்
தும்புரக்க மகிழ்ந்து நித்தம்

கருணையுட னன்னுதி கடிதுதவ
வாங்கியொக்கல் களித்துண் டின்ப
மருவுசுவீ ரன்கமழு மருமலர்கா
னகத்திருந்து வாழ்ந்தான் மன்னே. (22)

1474. கரிமுகச்சங் கிரட்டவிறல் தொல்லைவிரு
துகளிரலை துவைப்ப மேரு
கரிபரிதே ரயில்கரவாள் கார்முகமும்
இருவகைய கடற்ப தாதி
பிரிவறக்கொண் டதர்பட்ர்ந்து பிறழ்வடிவால்
விசாலனெல்லை பெருங்கா னத்தின்
சரிநடுவண் அமைச்சனைத்தன் எறும்வலியாற்
கொணர்வேண்டித் தரித்தான் மாதோ. (23)

1475. மறுபகல்மும் மதக்கலுழி வரையருவி
நிகர்கவுட்போர் வன்கை வேழம்
பெறுதொடரோ டாளான பிணிப்பிறுத்து
விசாலன்முடி பிடுங்கி யெற்றி
யுறுநிழலைப் பொருதகன்ற தொல்லையிரும்
படைகள்புரத் தோடிச் சென்று
கறுவியிபம் அரசுசெறல் கழறியவன்
மகற்குமுடி கவித்து நின்றார். (24)

1476. சுடர்மணிப்பொன் முடிசூடுஞ் சித்திரசே
னன்நீதி சொலுஞ்சு வீரன்
அடவியிருக் கின்றனன்மற் றவற்கொடுவம்
மின்னெனவிட் டவர்சொற் கேட்டு
மடமையொடு சிவத்துரோ கம்புரிவிப்
பிரமணியை வதைத்தால் நானவ்
விடம்வருவ னென்றுதன திமையோரை
யவருடன்விட் டேவி னுனல். (25)

1477. மந்திரியே வியதூதர் சொற்களைச்சித்
திரசேனன் மகிழ்ந்து கேட்டுத்
தந்திரமோ டுலகனைத்தும் வாழ்பொருட்டு
விப்ரமணி தன்னைக் கூவிச்

1474. சரி—வழி; மலைச்சாரல்.

1475. இறுத்து—முறித்து.

சுந்தரற்குத் தூதுசென்ற சிவன்பசுவைக்
கொணர்ந்தசிவத் துரோகி நீநின்
கந்தரஞ்சோ ரரைத்தடிதல் கடுப்பஅட
வேண்டுமெனக் கடிது மாய்த்தான். (26)

1478. எறிகுலிசப் படைவலனேந் திந்திரனங்
கண்வெளிப்பட் டிவன்ம ணிப்பூண்
அறிவொடுசெற் றிடுமரச னருட்குமரற்
களித்தபக லமரர் வானில்
வெறிகமழு மலர்மாரி பெய்தனரிந்
திரன்துறக்க மேவி னுன்முன்
மறிமழுவங் கையிற்றரித்தோன் பசுக்கவர்ந்த
வசுகச்ச மாநா டுற்ருன். (27)

1479. ஒருகுடைக்கீ ழரசுபுரி குமரனவன்
சென்றதுகேட் டுமைகோன் பெற்றங்
கருதிவசு கொடுவந்தான் என்றுகச்ச
தேசனுக்குக் கடிது நீர்போய்
ஒருமையுட னுரைத்திரெனத் தூதரைவிட்
டனனவர்போய் உரைக்கக் கேளாக்
குருசில்வசு வுடன்பசுவைக் கொடுத்துத்தன்
தூதுவரைக் கூட்டி விட்டான். (28)

1480. சுருதிமனு நெறிமுறைசெய் குரிசில்கும
ரன்பசுவைத் தொழுது கோடிப்
பருதிநிக ரமலனுக்குக் கொடுத்துவசு
மறையோன்கண் பறித்து விட்டான்
கருதியம தூதரெரி வாய்நரகில்
விப்ரமணி கடுவி சாலன்
வருதிமிர மலவசுவிம் மூவரையும்
விடுத்தளற்றில் வதைக்கின் ருரால். (29)

1481. நடும்றவா வுதிட்டிர!கேண் மோஅவர்கள்
கிளைஞோரும் நரகி லாழ்ந்து
படுதுயரம் புகலரிதென் றுரைத்தருளுந்
தந்தைமொழி பணிந்து கேளாத்

தொடுகழற்ருள் விறற்றரும புத்திரனும்
அதிசயித்துத் துதிசெ யத்தன்
விடுதலைசொ லனுமதியான் மணிமானத்
தொடுதுறக்க மேவி னுனல். (30)

1482. என்றுதிரு நீறுகண்டி வணைசூதன்
மறையவர்ப்பார்த் தியம்புந் தில்லை
மன்றில்நடம் புரிகடவுள் பசுக் கொணர்ந்த
தாலெரிவாய் வளர்தீக் கற்றை
துன்றுகொடு நரகினிலான் கொடுத்தவன்வாங்
கினவனயல் சொலாதி ருந்தோன்
இன்றளவும் வருந்துகின்ருர் இன்னுமொரு
கதைகேண்மின் என்று ரைத்தான். (31)

அத்தியாயம் 53.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவாலயப் பணிப்பெண்ணைக் கவர்ந்த துரோகம்

ஒருகாலத்தில் நான்முகன் அன்னத்தின்மீது அமர்ந்து எமபுரியின் வழியாகப் போகும்போது, ஒருபக்கத்தைக் குறிப்பிட்டு, 'அங்கே செல்லாதே' என்றான். அன்னம் ஏனென்று வினவியபோது அயன் 'அங்கே சிவத்துரோகிகள் வருந்தும் நரகம் உளது அவர்களைப்,பார்க்கலாகாது' என்றான். அங்கே எரிகின்ற வஜ்ரத்தூணிற் கட்டுண்டு கூச்சலிடுகின்றானே அவன் வரலாறு யாது என்று அன்னம் கேட்க அயன் கூறுகின்றான்.

சுத்தன் என்னும் வணிகன் கதை.

சவுராட்டிய நாட்டில், சவுராட்டிர நகரில், வணிகர் மரபில் நிறை செல்வமுடைய சுத்தன் என்பவன் எண்ணிலா அறங்கள் இயற்றி வாழ்ந்தான். அவன் பத்ரகாளியை வழிபடுவோன். ஒருமுறை சுத்தன் மரக்கலத்திற் சென்று திரண்ட பொருள் ஈட்டித் திரும்பும்போது, மரக்கலம் சுழல் காற்றில் கவிழ இருந்தது. வணிகன் கலங்கிக் காளியை வழுத்தினுன் உடனே காளியின் அருளால் அந்த இடர் நீங்கி ஊர்சேர்ந்தான்.

அந்த வணிகன் திருமணம் புரிந்துகொண்டபோது, அளவற்ற தான தருமங்கள் புரிந்தான். சிவாலயப் பணிப்பெண்கள் பலர் அவனிடம் பொருள் பெற்றனர். அவர்களில் சவுரேசர் ஆலயத்தில் பணிசெய்பவளும் மிக அழகு

வாய்த்தவளுமான ஒருத்தியைக்கண்டு மோகித்து அவளைத் தன்னிடமே யிருத்திக்கொண்டான். சிவாலய அதிகாரிகள் வேண்டியும் அவளைவிட மறுத்தான். அவர்கள் அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் அமைச்சனை விளித்து வணிகனைத் தண்டிக்குமாறு பணித்தான். அமைச்சனோ வணிகன் பத்திரகாளியின் உபாசகன்; அவனைத் தண்டித்த லாகாதென மறுத்தான். ஆகவே, அரசன் தானே வணிகனைத் தண்டிக்கச் சென்றான். வணிகன் காளியை வேண்டினான். காளி வெளிப்பட்டுச் சிவத் துரோகியாகிய வணிகனைத் தண்டிக்கலாமென மன்னனுக்குத் தெளிவித்து மறைந்தாள். அரசன் அவ்வணிகனையும், வணிகனுக்குப் பரிவாயிருந்த அமைச்சனையும் தலைகொய்துவிட்டுக் கோயிற் பணிப்பெண்ணைக் கோயிலதிகாரிகளிடம் சேர்ப்பித்தான். வணிகனுடைய மனைவியர்க்கு விடைக்குறி பொறித்து சவுரேசர் ஆலயத்திற் பணிசெய்ய நியமித்தான். அந்த வணிகனும் அமைச்சனும் நரகில் வருந்தி அலறுங் கூச்சலே கேட்கப்படுகிறது'' (எனப் பிரமன் கூறினான்.)

அத்தியாயம் 53.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவலாயப் பணிப்பெண்ணைக் கவர்ந்த துரோகம்

அறுசீர் விருத்தம்

1483. கருணையருட் கடலான சூதமுனி
மகிழ்ந்துரைப்பான் கறைமி டற்றோன்
தருணமலர்ப் பதங்கருதுந் தவமுநிவீர்!
கேண்மினுண்மை சாற்று கின்றேன்
அருணமணிச் சூட்டரவம் அரைக்கசைத்தோன்
விடைக்குறியை அம்பொன் தோளா
பரணமெனப் பொறித்தமலற் குதவியமை
விழியாரைப் பற்றி னோரை. (1)

1483. விடைக்குறியை...பொறித்த......விழியார்—உருத்திர கணிகையர்.

1483. ஆம் செய்யுளின்பின்—''பிரமன் உலகெலாம் காணவேண்டி அன்னத்தின் மேலேறிச் செல்லும்போது, தென்திசை அடைந்தான். அங்கே நரகங்கள் எல்லாவற்றையும் பார்த்து வருந்தி அன்னத்தை நோக்கி இனி இதற்குமேல் போகாதே என்றான்; இதைக்கேட்ட அன்னம் இனி அயலில் உள்ளது யாது என வினவிற்று. அதற்குப் பிரமன் இனிச் சிவத்துரோகிகள் வருந்தும் நரகம் உளது. அதைக் காண்பது அரிது' என்றான்—எனப்பொருள் உள்ள செய்யுள்கள் விடபட்டிருக்கின்றன.

அன்னத்துக்கு அயன் கூறுவது.

1484. பருவரலுற் றிடவருத்து மாறனந்த
மினியங்கண் படரே லென்று
குருகினுக்குப் புகல அன்னங் கோகனகன்
முகநோக்கிக் கூறும் ஏந்தால்!
அருநரகில் அறக்கொடியோர் வருந்துவரென்
றனையெளியேற் கவையு ரைத்தி
இருமைபெற எனஅயன்சொல் வான்சிவத்து
ரோகியருக் கிடம தாமால். (2)

1485. ஆதலினால் இனையர்தமை நோக்காமல்
ஏகுவமென் றயன்சொலப்பின்
ஓதிமங்கேட் கும்நரகத் தெரிதரும்வச்
சிரதம்பத் தொருவன் யாப்புற்(று)
ஏதமுறக் கூப்பிடலே திவன்மாபா
தகமுரைத்தி யென்ன வேதா
மாதுயரப் படுமவன்றன் வரலாற்றின்
காதை சொல்வான் மகிழ்ந்து கேட்டி. (3)

சுத்தன் என்னும் வணிகன் கதை

1486. அந்தணர்மன் னவர்வணிக ரறம்புரிபின்
னவரிவரில் ஆண்பெண் கூடி
வந்தவனு லோமர்பெண் ணுண் வழிபிரதி
லோமர்பின்னும் வருவோ ரியாருந்
தந்தநிலை சேர்வருணச் சிரமம்வழு
வாதேத்தித் தவம்பு ரிந்தே
சிந்தைமகி ழுஞ்சவுராட் டியதேயம்
நகர் சவுராட் டிரம தாமால், (4)

1487. அந்நகர் வருவணிகன் பெயர் சுத்தன்
கட்டறவே அங்கா டிக்கண்
வந்தவர்க்கெல் லாம்பண்டம் விற்கும்விலை
கொடுப்பவன் பொன் மணிமி குத்தோன்
சிந்தைமகிழ்ந் தனுதினமும் தருமமிழைப்
போன்பிறைப்பற் செவ்வாய்ச் செய்ய
கொந்தளமை விழியருட்பத் திரகாளி
மலர்ப்பாதங் குழைந்து போற்றி, (5)

1488. இரவுபகல் வழிபடுவோன் அனைத்துலகும்
இசைபடைத் தோன் எவர்க்கும் நல்லா
தரவிலளத் கற்கரிய தயவுடையோன்
மதலைவினை தனைச்செய் துண்போன்
பரவுபொருள் மிகபடைப்போன் மரக்கலமே
றிக்கடலிற் படர்ந்து தீவில்
விரவுபொரு ளனைத்தையுமம் மதலையிலேற்
றிக்கொணர்ந்து மீளு மேல்வை, (6)

1489. சரிமுகச்சங் கெறிதரங்கஞ் சுழித்துமணி
கொழித்தகடற் சூழல் நாப்பண்
பிரிவறவங் றிடம்வலமாய்ப் பெருங்காற்றுச்
சுழன்றடிப்பப் பிலத்தி னூடு
திரிதருவங் கங்கவிழ்ந்த போதுபயி
ரவிமலர்த்தாள் சிந்தித் தேத்த
இரியுமவன் றன்சேனை யெடுத்தவளக்
கணத்தின் வைத்தாள் எவரும் போற்ற. (7)

1490. இளவரசா கியவணிகன் இருந்தனத்தாற்
கலியாண மெவரும் போற்றி
யுளமகிழச் செய்தனன்பட் டினத்தோர்க்கைந்
துண்டியினுல் உபாய னத்தால்
அளவறநன் மகிழ்ச்சிசெய்தான் பின்னர் கழாய்க்
கூத்தர்குழை அடரும் வேற்கண்
தளவ நகைச் செந்துவர்வாய்ப் பரத்தையர்மா
கதர்சவுரேச் சரத்த லத்தோர், (8)

1491. செஞ்சிலைவேள் நிகரினைனர் தென்றலிளங்
கன்றுதவழ் தெருவிற் சுற்றக்
கொஞ்சுமொழி சிறிதுரைத்துக் குலையவுடை
நெகிழ்த்துடுத்துக் கொங்கை தாங்கி
வஞ்சியிடை துவளவருந் தேவரடி
யாராலகு மலர்க்கை வீசிப்
பஞ்சினுமெல் லடியுயிர்முன் பார்த்து வைத்துள்
அலகிடுஞ்சீர் பணிப்பெண் மின்னூர். (9)

1488. மதலைவினை—கப்பல் வியாபாரம்; மதலை—கப்பல்.

1489. சேனை—கூட்டம்.

1490. இள அரசு—இளங்கோ—வணிகன். உபாயனம்—காணிக்கை,

1492. அனைவருக்கும் வேண்டுவன அளித்தனுப்பிச்
சவுரேசன் ஆலயத்தின்
வனைமலர்ச்சூ டகக்கரத்தால் அலகிடுமோர்
வனிதைபுனை மசையும் வெள்கத்
தனைநிகர்பே ரழகிடபக் குறியாளை
அவ்விரவில் தழீஇப்பு ணர்ந்து
நனைமலர்பைங் குழல்சரிய இடைதுவள
மிடறிரங்க நலனு கர்ந்தான். (10)

1493. மழவிடைமெய்க் குறியாள்கண் படைதணந்து
கதுமெனவே மறுநாட் காலை
விழவுதினந் திகழ்பெம்மான் கோயிலலை
கிடச்செல்ல விரும்பி னுள்முற்
பழவினையி னுல்வணிகன் அவளை நிறீஇத்
தாதியர்கள் பலரில் தேர்ந்து
கழகமல கிடவல்ல பணிமொழியை
அனுப்பினனக் கணத்தின் மாதோ. (11)

1494. ஆலயத்தில் அதிகாரி யாதியர்கள்
வணிகன்மனை யடியாட் பார்த்தவ்
வேலையினில் வணிகனைமுன் விளித்துவிடைக்
குறியாளை விடுதி யந்தோ
மாலயனுக் கரியவண்ணல் கோயிலலை
கிடவுன்றன் மனையில் தாதி
காலையினில் வரவுரிமை யலளென்றார்
அதுகேட்டுங் கலங்கு கில்லான். (12)

1495. கனகமணி மிகுதியகந் தையினுல்விட்
டானில்லை கண்டு மீள
அனகருரைப் பாருனது தாதிகோ
யிற்காகாள் அவளை நீத்தி
பனகமணிக் கலனணியு முன்மனைவி
யன்னியனைப் பரிசி யாளே
சினகரமே வியவடியாள் அப்படியன்
றேவிடுதி சிந்தித் தென்றார். (13)

1496. இம்மொழிகேட் டிருக்கையிலும் அவனைவிடு
வதற்கிசைந்தா னில்லைப் பின்னர்
மும்மையுண ராலயத்தா ரரசனுடன்
உய்த்தனரம் முதல்வன் கேளாச்
செம்மையமைச் சனைவிளித்துச் சிவனடியாள்
தனைவிடுவித் திடுதி யென்ன
அம்மொழிகே ளாவமைச்ச னரசரே
றே! கேளென் றறைய லுற்றான். (11)

1497. வணிகன்மிகு தனமுடையோ னன்றியும்பத்
திரகாளி மலர்த்தாள் போற்றிப்
பணிபவன்தண் டம்புரியப் படுகின்றே
னலன் என்னுற் பனைமென் றோளில்
அணிகொளிட பக்குறியாள் விடுவிக்கப்
படுகின்று ளல்லள் என்றான்
மணிமுடிவேந் தனுமுனிந்து வணிகன்கா
ளியைப்பரவும் வலியோ னேனும், (15)

1498. அறிஞரெடுத் துரைக்கரிய சிவத்துரோ
கியைவதைத்திட் டவனை மீளப்
பொறியுரக கங்கணத்தோன் ஆலயத்தில்
விடுவியென்று புகலக் கேட்டும்
வறிதுபயந் திடபமின்னை விடுவித்தா
னிலையொளிறும் வடிவாள் வேந்தன்
நொறிலின்மிகு சேனையுடன் வணிகன் மனை
போய்முனிந்து நோக்கிச் சொல்வான், (16)

1499. கொடியசலந் தரனுடலங் கூறுசெய்த
சுடராழிக் குழகன் கோயில்
அடியவளை வணிக! விடு கென்றனன்பத்
திரகாளி அரவிந் தத்தாள்
கடிதுவணி கன்துதித்துத் தியானித்தான்
அவ்வேலை காளி தோன்றிப்
படியின்வணி கனைநோக்கி நீசிவத்து
ரோகியெந்தப் படியா மெற்கும், (17)

1498. **நொறில்—விரைவில்.**

1500. **எ**ன்றுபினர்ச் சுடர்வடிவா ளேந்துகுரி
சிலைநோக்கி யிந்த நாய்கன்
துன்றுசிவ பாதகனு கையினாலுன்
னுளத்தேது தோற்றுந் தண்டம்
இன்றுபுரிந் திடுதியென்று மறைந்தனளப்
படியரச னிளங்கோ ஈட்டுங்
குன்றனைய நிதியனைத்துங் கொணர்ந்துவிடைக்
குறியாளைக் கோயில் விட்டான். (18)

1501. **க**ணங்குகனிந் தழுகொழுகு துணைமுலைச்சிற்
றிடைக்கருங்கட் டுவர்வாய்ச் செவ்வி
யணங்கனைய விடைக்குறியாள் புனல்மூழ்கிப்
பவித்திரையாய் ஆல யத்தில்
வணங்கியல கிடச்சென்றாள் பின்னரசன்
வணிகன்முடி வதைத்து நாய்கன்
இணங்குமனை யியர்க்குவிடைக் குறிபொறித்துச்
சவுரேச னிடத்தில் விட்டான். (19)

1502. **அ**ருங்கொடிய பாவமெலாம் அகலவணி
கற்கிதமாம் அமைச்சன் சென்னி
கருங்கழுகு நிணம்பருகுங் கரவாளால்
தடிந்தனனக் கணஞ்சத் தத்தின்
மருங்குகத ழெரிநிரய வச்சிரதம்
பத்துடனே வசிந்து கட்ட
இருங்குரல்விட் டனல்பொறுக்க மாட்டாமல்
அரற்றியழு திரங்கும் ஓசை. (20)

1503. **அ**றைகுரற்பே ரொலியதுநம் மாற்கேட்கப்
பட்டதுபின் அவனுக் கேற்பப்
பொறைபுரிந்து சகாயனு கியவமைச்சன்
அழற்பிழம்பாய்ப் புகையில் லாமல்
நிறைதழலில் அரற்றுமொலி யிதுவாகை
யிற்பார்க்கும் நிலைமைத் தன்றே
சிறைவிரிக்கும் வெண்டுவி அனமே! என்
றுரைத்தயன்றன் தேயத் துற்றான். (21)

1500. **இளங்கோ—பூ வைசியன்—வணிகன்.**

1504. என்றுரைத்த சூதன்மொழி முனிவரர்கேட்
டுளம்நடுங்கி இரங்கி நொந்து
பொன்றுயிர்விட் டகலுமெனப் பதைபதைத்து
மார்க்கண்டர் பொருட்டாய் முன்னங்
கன்றுபகட் டினில்வரு வெங் கூற்றையுதைத்
தருளுமெங்கள் கடவுள் செம்பொன்
மன்றிலுமை காணநடம் புரிமலர்த்தாள்
சரணமென மனத்துட் கொண்டார். (22)

அத்தியாயம் 54.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவாலய எண்ணெய், எலுமிச்சம் பழம் கவர்ந்த துரோகம்

சிறந்த தவமுடைய சதானந்த முனிவர் ஒரு காலத்தில் எமபுரியை அடைந்து, மறலியுடன் நரகங்களைப் பார்வையிட்டனர். அங்குச் சிலர் ஊனிலிருந்து உதிரம் பெருக, உடலெலாம் புழு அரிக்கக், குடர் சரிய, நெடு மூச்சு விட்டு வருந்திக்கிடந்தனர். அவர்களின் நிலைகண்டு நடுங்கிய சதானந்தர் மறலியை நோக்கி அவர்கள் செய்த பாவந்தான் என்ன என்று பரிவுடன் வினவினார். மறலி, 'இவர்கள் செய்த தீவினையை அறியேன். எனக்கு முன் முறைமுறையிருந்த மறலிகளின் காலத்திலேயே இவர்கள் இத்துயருடன் உழல்கின்றனர். இவர்கள் சிவத்துரோகிகள் என்றுமட்டும் அறிவேன்' என்றான். சதானந்தர் வியப்படைந்து பிரமலோகம் சென்று பிரமனை வினவினார். அவரும், 'எனக்கு முன் இருந்த பிரமன் காலத்திய செய்தியாக இருக்கவேண்டும்' என்றார். உடனே, வைகுந்தஞ் சென்று திருமாலை வினவ, அவரும் 'யானறியேன், எனக்கு முந்தியது போலும்' என்றார். பெரு வியப்படைந்த சதானந்தர் திருக்கைலையை அடைந்து சிவபெருமானை வணங்கித் தம் வேண்டுகோளை விண்ணப்பித்துக் கொண்டார். சிவபெருமான் நந்தியை விளித்துச், 'சதானந்தன் விருப்பத்தை நிறைவேற்றுக! எம் அருளால் உனக்கு யாவும் விளங்கும்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நந்தியெம் பெருமான் தம் இருப்பிடத்திற்கு வந்து சதானந்தருடைய ஐயத்தை வினவும்போது, திருமாலும் பிரமனும் சிவபெருமானை வணங்க வந்தவர்கள் தாமும் அந்தச் சிவத்துரோகம் யாதென அறிய விரும்பி நந்தியின் அருள் பெற்று அமர்ந்தனர். நந்தீசர் கூறிய கதை:

விதர்ப்பதேசத் தரசனான விச்சுவசேனன் ஒரு நாள் வேட்டையாடக் கானகம் சென்றான். காட்டில் வேட்டையாடிக் களைத்துச் சித்தீச்சுரம் என்னுஞ் சிவாலயத்தில் இளைப்பாறி யிருந்தபோது தக்கன் என்னும் பணியாளன் எண்ணெயும் எலுமிச்சம் பழமுங்கொண்டு அரசன் மெய்யில் தியிர்ந்தால் களைப்பு நீங்கும் என்று அறிந்து, எங்கும் அலைந்து கிடைக்காததனால், சித்தீச்சுரர் திருக்கோயிலில் தீபத்துக்கு என்றிருந்த எண்ணெயில் இரண்டு உழக்கு எண்ணெயும் அபிடேகத்திற்கு வைத்திருந்த எலுமிச்சம் பழங்களில் நான்கையும் வலிதிற் கொணர்ந்து அரசனுடலில் தேய்த்துச் சோர்வைப் போக்கினான். கோயிலார் வந்து அரசனிடம் தக்கன் செயலைக் கூறினர். அரசன் கேளாதவன் போற் புறக்கணித்துத் தன் நகருக்குப் போனான். கோயிலார் அரசன் பராமுகத்தைக் கண்டு வருந்திச் சென்றார். அரசன் இறந்தபின் அவனை யமதூதர் புடைத்து எரிநரகில் எண்ணெய்க் கொப்பரையில் அமிழ்த்தி எரிக்கின்றார்கள்; தக்கனும் அக்கினி குண்டத்தில் இடர்ப்படுகின்றான். இவர்கள் எவ்வளவோ காலமாக இவ்வாறு நரகில் துன்புறுகின்றனர். இதற்குள் எண்ணிலாத அரி அயன்மார் காலமானார்கள். பிரமனது ஒரு பகற் பொழுதில் பதினான்கு இந்திரர்கள் மாய்வார்கள்—என நந்திசர் சொல்லச் சதானந்தர் அவரைச் சிவசொத்தான பொன் கவர்ந்தார் படும்பாட்டைப் பற்றிச் சொல்லி யருளுங்கள் என வேண்டினர்.

அத்தியாயம்—54

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவாலய எண்ணெய், எலுமிச்சம் பழம் கவர்ந்த துரோகம்.

அறுசீர் விருத்தம்

1505 சூதன்முனி வரர்க்குரைப்பான் மழவிடையோ
ஏறுகவர் சுமடர் தங்கள்
பாதகங்கூ றுதுமெண்ணெய் பண்டுகவர்ந்
தோர்காதை பகிர்துஞ் சைவ
மாதவர்! கேண் மின்முனிவர் புங்கவன்மா
யோகிபெம்மான் மலர்த்தாள் போற்றும்
ஆதரஞ்சேர் சிவபத்தன் அவன்றன்பேர்
சதானந்தன் அமலன் அம்மா. (1)

1505. சுமடர்—அறிவிலிகள்.

Govt. Oriental Mss. Library
Triplicane P.O.

1506. விரிகதிர்ச்செம் மணிச்சூட்டுப் பாந்தள்முடிக்
கிடந்தபுவி விண்சுவர்க்கம்
பரிவொடுநித் தியம்பகர்ந்து பண்ணவன்சீர்
கயிலைசென்று பகவன் பாலில்
தெரிதரமூ வுலகிலுளோர் செய்தவர
லாறுரைப்போன் தேர்ந்தொ ருக்காற்
கரியவுரு மறலிமகிழ்ந் திடு சங்கிய
நகர் சேர்ந்தான் காலன் போற்றி, (2)

1507. வணங்கியபின் மறலியுடன் நரகமனைத்
தும்பார்த்து வருமேல் வைக்கண்
ணிணங்குருதி சொரியநெடும் புழுஅரிக்கக்
குடர்சரிய நெடிது யிர்த்துக்
கணங்களொடு சிலர்வருந்தி ஒருநரகிற்
பதைபதைப்பக் கண்டு யோகி
இணங்கிவரு மறலியைப்பார்த் திவரிழைத்த
பாவமென்கொல் இயம்பு கென்றான், (3)

1508. பிறையெயிற்று மறலிசதா னந்தனைப்பார்த்
துரைக்குமிவர் பெரிதி ழைத்த
குறைவறுபா தகங்களெந்தாய்! அறிகிலேன்
எனக்குமுன்செங் கோல்க ளோச்சி
முறைமுறைவந் தரசுபுரி மறலியராற்
புடைபட்டு முறையோ வென்றே(து)
அறைகுரல்கூப் பிடுகின்றார் சிவத்துரோ
கிகளெனக்கேட் டறிவே னென்றான். (4)

1509. தொழுதகுமெய்த் தவஞ்செய்சதா னந்தனிய
மனைநோக்கிச் சொல்வான் கன்மம்
முழுதுணர்ந்த திவ்வளவோ என்றுலகெல்
லாம்படைக்கும் முளரி யண்ணல்
எழுதுகரு மங்கள்குறித் திருக்குமவை
யடைந்தெதிர்நின் றிறைஞ்சி யேத்திப்
பழுதகலந்தண ! இவர்கள் அளற்றிரங்கும்
பாவமென்கொல் பகர்தி யென்றான். (5)

1506. சங்கிய நகர்—யமபுரி,

1510. மூளரியண்ணல் பரவுசதா னந்தன்மலர்
முகநோக்கி மொழிவான் செந்தீ
அளறிரங்க வருந்துமிவர் சிவத்துரோ
கிகளெனக்கேட் டறிவ தல்லால்
உளவிவர மறிகிலேன் எனக்குமுன்சேர்
திசைமுகத்தோர் உளத்தில் தேர்ந்திவ்
வளவெனக்கண் டறிவர்கொலோ அறிகிலர்கொல்
லோசிறிதும் அறியேன் என்றான். (6)

1511. ஐம்புலன்வென் றருள்சதா னந்தன் விரிஞ்
சனுக்குரைப்பான் அகிலம் எல்லாஞ்
செம்பதுமத் தோய்! உனது படைப்பன்றே
நீயறியாச் செயலே துன்னை
நம்புமெளி யேற்குரைத்தி யென்னமல
ரயன்சதா னந்தற் கோதும்
இம்பரிலென் படைப்பிலுள தேலறிவேன்
என்படைப்பில் இலையீ தென்றான். (7)

1512. அன்றியுமென் படைப்பனைத்தும் புரந்தருள்வோன்
தண்டுழா யலங்கற் கோமான்
இன்றளவும் என்படைப்பு மாயனளிப்
பதுவுமெங்க ளிச்சை யல்ல
நன்றெனவே வியபரிபூ ரணசிவனு
லதிகாரம் நாங்கள் பெற்று
வென்றிபெற நடக்கின்றோ மவன்பாற்றோற்
றினமீது மெய்ம்மை யென்றான். (8)

1513. ஆற்றருமெய்த் தவஞ்செய்சதா னந்தன்வை
குந்தமடைந் தடைவில் எல்லாம்
சாற்றினன்மா யனுமுநியைப் போற்றியுளத்
தறிந்ததெலாந் தகவு ரைத்துப்
போற்றுமெனக் குந்தெரியா தளப்பருநாள்
இவர்நரகிற் புலம்பு கின்றார்
ஏற்றிறையாய் யாவுமுணர் ஈசனே
யறிகுவனென் றியம்பக் கேட்டான். (9)

1514. சுருதியளப் பருங்காலம் அளவையினால்
தனதுமனந் தொடர்ந்து சென்று
கருதியுமித் துணையெனத் தேர்ந் தறிவரிதாய்
வளர்ந்தோங்குங் கயிலை யெய்திப்
பருதியனந் தங்கோடி மதியனந்தங்
கோடிதடம் பரிந்து தோற்றி
வருதிருமே னியதான பெம்மானைக்
கண்டேத்தி வணங்கி நின்றான். (10)

1515. கருணையருட் பெருங்கடலே! கண்மணியே!
உயிர்க்குயிரே! கனியே! தேனே!
தருணமலர்ப் பரிமளமே! சம்புவே!
பூரணமே! சகல வேதப்
பொருணடுவான் தண்டுளவோ னுதியர்க்கு
முற்பகலே பொருந்தித் தீரா
இருணரகிற் சிவத்துரோ கிகளாய்நொந்
திடர்ப்படுவோ ரேது செய்தோர்; (11)

1516. திங்களங்கண் ணிச்சடையோய்! கூற்றுதைத்த
மலர்ப்பதத்தோய்! சிவத்து ரோகஞ்
சங்கையறப் புரிந்திவர்க ளளப்பரிய
கற்பம்பா தலத்திற் செந்தீப்
பொங்களற்றி லிடர்ப்படுகின் றாரேது
முனஞ்செய்தார் புகறி யென்னக்
கங்கைமுடிக் கணுதிபனும் பகவான் நந்
தியை விளித்துக் கட்டு ரைத்தான். (12)

1517. தெறிந்து வருஞ்சதா னந்தமுனி
கேட்டதெலாஞ் செப்பு வாய்நம்
ஆதரத்தால் உனதுளத்தில் அவன்கேட்ட
துரைக்கவரும் அறைக என்றே
காதலினோ டிருவரையுங் கண்ணுதலோன்
அனுப்பினன்பின் கருணை யாலே
மாதவத்தோன் தனைக்கொண்டு நந்திதன
தாலயம் போய் வதிந்து சொல்வான். (13)

1514. தடம்—வரம்பு.

1518. பொருவருமா முனிவா! சொல் உனக்கேது
கேட்கமனம் பொருந்திற் றிப்போ(து)
இருமைபெற அத்தனையும் எனைக்கேட்டி
நீயறிய இயம்பு கின்றேன்
திருவுளத்தி னுலென்றுன் பின்னர்சதா
னந்தனருட் சிலாதன் மைந்தா!
கருணையருட் கடலே! யான் நரகங்கள்
அத்தனையும் கண்ட போதில், (14)

1519. அங்கணதி கோரமாம் ஒருநரகிற்
பாவிகளாய் அரந்தை யுற்றுக்
கங்கமுத லியகறிக்க இடர்ப்படுவோர்
யாரென்று காலன் தன்னைப்
பங்கயப்பொற் பொகுட்டிறையைத் தண்டுளவோன்
தனைக்கேட்ட பகலில் அன்னோர்
எங்களெங்கள் பிறப்பிறப்பின் முன்னர்சிவத்
துரோகிகளாய் இடர்ப்பட் டுள்ளார், (15)

1520. என்றுரைக்க முனங்கேட்டோம் அவர்களின்ன
பாதகங்கள் இழைத்தா ரென்று
குன்றியவ தியுமறியோம் என்றனரெல்
லாமுணர்ந்த குரிசி லே!நீ
கன்றுசினத் தாற்கால தூதர்கொடு
நரகிலெண்ணெய்க் கடத்தின் நாப்பண்
துன்றுதலை கீழாக வமிழ்த்திமுனை
அங்கமெலாம் துளைத்த டித்தார், (16)

1521. கதழெரிவெவ் வழலிலெழக் காய்ந்தஇருப்
புச்சலா கையினுல் உந்தி
விதவிதமாய்க் காய்ந்தசெப்புச் சலாகையினு
லுறுசெவிகள் விழிகள் நாசிப்
புதவுகளந் தொறுநெடுநா வினுங்கொடிய
தலையினுமாய்ப் புடைத்தார் காய்ந்த
பதவிருப்பூ சிகளாலு முரோமகூ
பங்களெலாம் பார்த்த றைந்தார், (17)

1519. கங்கம்—கழுகு. கறிக்க—கடிக்க.

1520. குன்றி அவதியும்—குண்டுமணி அளவும்—சிறிதளவும்.

1521. நாசிப் புதவு—மூக்குத் துவாரம். உரோம கூபம்—மயிர்த்தொளை.

1522. பின்னரும்வெல் வழல்கதுவப் பாரஇருப்
புக்குணில்கள் பிடித்த டித்தே
உன்னரும்வா தைகளனந்தம் புரிகின்றார்
இப்படியே யுலப்பில் காலம்
பன்னருமள் ளற்கனலிற் பதைக்கின்றோர்
தமிலொருத்தன் பாவ மீது
முன்னரிழைத் தானென்று சொல்லுதியென்
றிருவருமாய் மொழியும் எல்லை. (18)

1523. முள்ளரைத்தாள் மரகதப்பா சடைக்கனக
மணிப்பொகுட்டு முளரி யண்ணல்
கள்ளவிழ் நற் றுணர்நெடும்பைங் கதிர்த் துளவப்
புத்தேள்பொற் கடுக்கை யந்தார்
வள்ளல் நளி னச்சரண மருமலர்தூய்
வழிபடுவான் வந்தா ரங்கண்
உள்ளமகிழ் நந்திசதா னந்தனுக்குப்
பாவிகதை யுரைக்கும் போது, (19)

1524. கண்டுபரிந் தங்கணடைந் தெமக்குமிது
கேட்கநல்ல கால மென்றுட்
கொண்டுநந்தி கேசன்மலர்க் கோகனகத்
தாளுளத்திற் குறித்துப் போற்றித்
தெண்டனிட்டு நந்தீச!! சிற்றடியோம்
கேட்கவுநின் திருவுளத்தில்
உண்டுகொலோ எனநந்தி கேசனு
மதியாற்பாங் குற்றார் மாதோ. (20)

1525. ஊற்றிருந்து நறவுவழிந் தொழுகியபொன்
தகட்டிதழி உடலம் சூடும்
கீற்றுமதித் திங்கள்பவ ளங்கிளைத்த
சடைவயிரக் கேயூ ரத்தே
சாற்றியவே தாகமசாத் திரபுரா
ணந்தெளிந்த தக்கோன் தேவர்
போற்றுநந்தி கேசபக வானிவர்கேட்
குங்காதை புகல லுற்றான். (21)

1522. குணில்—குறுந்தடி. அள்ளல்—நரகம்.

1525. சடை...தே-சிவன்.

விச்சுவசேனன் கதை.

சதானந்தர் பிரம விஷ்ணுக்கள் கேட்க நந்தி கூறுவது:

1526. தென்றலிளங் கன்றுதவழ் செய்யபொழில்
விளையாடித் திளைக்கும் வேழக்
கன்றில்முசுக் குருளையுளங் களித்திருந்து
பார்க்கமது கங்கள் செந்தேன்
மன்றன்மலர் சொரிவதயி ராபதக்கன்
றினில்மகவான் மைந்தன் மீது
வென்றிபெற இமையவர்பூ மாரிபொழி
வதுமானூர் விதர்ப்ப **தேயம்.** (22)

1527. அங்கணிருந் தவிராழி திசையுருட்டி
யொருகுடைக்கீழ் அகில மெல்லாந்
துங்கமணிப் புயந்தாங்கும் நீதிசாத்
திரங்களுணர் தோன்றல் மோக
மங்கையர்வேள் தனுவேதங் கைவரும்**விச்
சுவசேனன்** மகிழ்ந்தோர் வைகல்
சிங்கமுத லியமிருக யாத்திரைக்கு
மொய்வனத்திற் சென்றான் மாதோ. (23)

1528. மடங்கல்புலி கரடிகலை வயமாக்காண்
டாமிருகம் மரைமுட் பன்றி
முடங்குவெடி வாற்சுணங்கன் கீரிகரு
மாவூக முசுவல் லூறு
திடங்கொ ளண்ட பேரண்டஞ் சக்கரவா
கம்மசுணஞ் சேவல் வெம்போர்
துடங்குகொண்ட லாத்திவலி சாக்குருவி
தீவிரமாய்ச் சூழ்ந்து செல்ல, (24)

1529. உலறுதலைச் செங்குஞ்சி மறவர்வில்லர்
செருப்படிதொட் டுலவும் வெள்வாய்க்
கொலையெயினர் வரிபுலித்தோற் சல்லடமெய்க்
குப்பாயக் கொடுங்கி ராதர்
வலைமுளைநா ராசமெறி கைக்கெட்டு
வார்தூண்டில் வளைத டிக்கோல்
சிலைபகழி கவணிருப்பு முள்ளெறிகுந்
தங்கரவாள் திகிரி கொண்டார், (25)

1528. கொண்டலாத்தி—ஒரு வகைக் குருவி.

1530. மருங்குபடை யெங்கணுஞ்சூழ்ந் தறைகூறி
நெடுமொழிகூய் வானிற் குந்தம்
பொருங்கைகொடு விசையினு லெறிந்துபிடித்
தார்ப்பரித்துப் புள்ளு மாவும்
நெருங்கியதீ வகம்விடுத்து நீளிடைசெல்
லத்தகைத்து நிருபன் கானிற்
கருங்கழல்வா ளுழவருட னண்ணல் சித்தீச்
சரத்தின்வைகக் கருதி னுனல், (26)

1531. சன்னிதியிற் பொருகளபத் தந்தமணி
கடைந்திழைத்த தமனி யத்திற்
பின்னமறக் குயிற்றியவா ளரிசுமந்த
மஞ்சமிசை பெய்யும் பஞ்சு
நன்னயமாய்ப் பொதிந்தமலர்த் தவிசிருந்த
னன்சரண நாளும் போற்றித்
தன்னிகராய் வருதக்க ணங்கணித்தே
சம்பீரந் தயிலம் நாடி, (27)

1532. பணங்கொடுசென் றணிநகர்தோ றுந்தேடிக்
காணுது பையு ளாய்மீண்(டு)
அணங்குபர வுமைபாகன் ஆலயத்திற்
புகுந்துதீ பாலத் திக்கு
மணங்கமழும் திலதயிலம் வந்ததிலீ
ருழக்கெண்ணெய் வலிதிற் கொண்டே
யிணங்கபிடே கந்தனக்கா மெலுமிச்சம்
பழத்திஞுநான் கெடுத்து வந்தான். (28)

1533. பொருந்துமிவை கொண்டரசன் அங்கமுரத்
துந்திமிர்ந்து புதுநீ ராட்டித்
திருந்திறையைக் கொண்டுபூ வாதிசெம்பொன்
தானமெலாஞ் செய்வித் தான்பின்

1530. தீவகம்—பார்வை விலங்கு; புள்படுக்கும்படி கொண்டுபோகிற புள்.

1531. களபத் தந்தம்—யானையின் தந்தம்; சம்பீரம்—எலுமிச்சம்பழம்.

1532. பையுள்—துன்பம்; தீப ஆலத்தி.

1533. தலத்தார்—கோயிலார்; இடரின்—இடருடன்.

வருந்திமணிக் கோயிலா ரரசனுக்கிவ்
வாறுரைக்க மன்னன் கேட்டும்
இருந்துகே ளாதவன்போல் தன்னகரெய்
தினன்தலத்தார் இடரின் மீண்டார், (29)

1534. சுணங்குகனிந் தழகொழுகு முகிண்முலையார்
விழிவண்டு தொடையி னூடு
பிணங்கிவிச யத்திருவைத் தழிஇயினையென்
றகலவுடன் பிரியா வண்ணங்
குணங்கொடணைக் குந்தெரியல் மணித்திண்டோள்
நிருபனுயிர் குறைந்து வீந்தான்
நிணங்கொள்வடி வேலிறையை நிந்தைசெய்தீ
சன்தலத்தார் நீங்கி னூரால். (30)

1535. அப்போதங் கிருந்தவிற லந்தகன்றன்
படருடனவ் வரசன் றன்னைக்
கைப்போதி லிருந்தநெடும் பாசத்தால்
நரகில்நெடுங் காலம் வீக்கி
மெய்ப்போதம் அறப்புடைத்தான் எரிநரகில்
தயிலகடம் மீத மிழ்த்தி
இப்போதிங் கிருந்தசமன் எரிக்கின்றான்
கட்டமங்தோ இசைக்கற் பாற்றே. (31)

1536. ஒருவனிந்தப் படிநரகில் இடர்ப்படுகின்
றான்சிலர்பின் உறுகண் உற்றே
அருநரகில் இப்படிநின் றெரிகின்றார்
தக்கனுவெந் தனற்குண் டத்திற்
பருவரலுற் றிடுகின்றான் இவர்கள்துயர்ப்
படுநடுவில் படைத்தே காக்கும்
பொருவரிய பிரமர்களும் கண்ணர்களும்
எண்ணிறந்தோர் பொன்றி னூரால். (32)

1537. வனசமலர்ப் பொகுட்டிறைவன் ஒருபகலிற்
பதினான்கு மகவான் பொன்றின்
தினமனைத்தும் இறந்திடுமிந் திரர்தமையெத்
தனையென்று செப்பு வேன்யான்

1536. உறுகண்—துன்பம்,

அனவரதம் இருவர்தமர் பொரநரகத்
தெரிகின்றா ரனைவ ருஞ்சூழ்ந்
தினமனந்த நெடுங்காலந் தொலைவிலா
வருநரகத் தெரியல் வேண்டும். (33)

1538. என்றுரைத்த நந்தீசன் சொற்கேளாச்
சதானந்தர் இதயத் தோர்ந்து
நன்றெனவுட் கொடுமகிழ்ந்து மீளவுநந்
தீசன்முக நளினம் நோக்கி
மன்றல்கமழ் கொன்றையந்தார்க் கோடீரன்
பொன்கவர்ந்தோன் மருவி நாளும்
துன்றுளக்கி யேததனை நந்தீச
பகவானே! சொல்லு கென்றான். (34)

அத்தியாயம் 55.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவனது பொற்பூணூல் கவர்ந்த துரோகம்

கிராதன் கதை.

சதானந்தர் நந்தியை நோக்கி, ‘அங்கே நவத்துவாரங்களிலும் பொன்னை யுருக்கி வார்த்துவிட்டுத் துண்டந் துண்டமாக வெட்டுவது எதற்கு?’ என வினவினார். நந்தி நவில்கிறார் :

கலிங்க நகரிற் சந்திராங்கன் மகனான கிராதன் என்னும் அரசனைக் காணச் சென்ற எச்சேச்சரன் என்னும் மறையவன் சோமேச்சுரர் திருக்கோயிலில் நிர்மாலியமான மலர்மாலை யொன்றைப் பெற்றுச்சென்று அரசனுக்கு அளித்து அரசன் நல்கிய தானத்தைப் பெற்றுத் திரும்பும்போது, திருக்கோயிலில் வழிபாடுசெய்யும் ஆதிசைவர்கள் எச்சேச்சுரன் எடுத்துச் சென்ற நிர்மாலியத்தில் கடவுளின் பொற்பூணூல் தவறிக் கலந்திருந்தது என்று கூறி அதனைத் தரும்படிக் கேட்டார்கள். அவன், ‘நான் அரசனுக்களித்து விட்

1537. இருவர்—அரசனும் தக்கனும்; தமர்—உற்றார்.

1538. துன்றுளக்கியேது—துன்று உள் அக்கி ஏது—பொருந்தும்படி உள்ள அக்கி (தீ—அக்கினி நரகம்) ஏது.

டேன்; நீங்கள் போய்க் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று பராமுகமாச் சொல்லிவிட்டான். அவர்கள் அரசனைக் கேட்க அரசன் அவர்கள் வேண்டுகோளைப் புறக்கணித்தான். அப்போது அரசன் அவையிலிருந்த அவனது குரு வசியகர்ணர் எனும் ஆதிசைவ அந்தணர் 'அரசே! இறைவனது பூணூலை உடனே கொடுத்து விடு; சிவத்துரோகம் கொடுநரகிற் சேர்ப்பிக்கும்' என்று கூறி ஒருகதை சொல்லுகின்றார்.

சிவன் கோயிற் காசு கவர்ந்த துரோகம்

வசு கதை.

'காமபுரம் என்னும் நகரத்தரசன் மகன் வசு என்பவன் ஈசன் திருக்கோயிலில் விளையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு பணம் கண்டெடுத்தான். அதைத் தந்தையிடம் அளித்தான். அப்போது அருச்சகர்கள் வந்து, 'அரசே! குன்றவில்லியார் திருக்கோயிலிற் கிடைத்த பொருள் அவருக்கே உரியது; ஆகையால், நின் சிறுவன் கொடுத்த பணத்தைக் கொடு' என்றனர். அரசன் தன் சிறுவனுடைய 'கன்னிப் பேறுக' அதனை நினைத்து, 'அருச்சகர்காள்! இப்பணம் என் சுபத்துக்குக் காரணமாகும். சலந்தரன் உடலைப் பிளந்த சக்கரத்தைத் திருமாலுக்களித்த சிவபிரானுக்கு இப்பணத்தால் என்ன பயன்? துரும்பு போன்ற இந்த அற்ப பணத்துக்காக வாதாடாமற் போமின்!' என்று சொல்லி அனுப்பிவிட்டு, அப் பணத்தைப் பொக்கிஷத்திற் சேர்த்தான். அன்றைய இரவு அரண்மனையுங் கருவூலமும் வெந்தன. சேமப்பொருளைத் திருடர் கவர்ந்து சென்றனர். அரசனும் இறந்தான். அடுத்த ஊர் அரசன் சாமந்தன் என்பான் அரச குமாரனைக் கொன்றான். இன்றளவும் அரசனும் அவன் மகனும் நரகில் இடர்ப்படுகின்றனர்;

என இக்கதையைக் கூறி, ஆகையாற் பொற்பூணூலை கொடுத்துவிடு' என்றார் வசியகர்ணர் ஆனால், அரசனும் அவன் சபையிலிருந்த புரோகிதனும் அமைச்சனும் அவர் பொன் மொழியைப் புறக்கணித்தனர். அருச்சகர்கள் வருந்திச் சென்று வேறு பூணூல் பொன்னாற்செய்து பரமனுக் கணிந்து வழிபாடு செய்தனர். சிவபெருமானது பொற் பூணூலைக் கவர்ந்த எச்சேச்சுரன் வறியனாகி மடிந்தான். அரசன் குட்டநோயாற் குறைந்திறந்தான். அமைச்சனும் இறந்தான். புரோகிதனும் கண் இழந்து இறந்தான். இந்நால்வரும் இப்போது எரிவாய் நரகத்திடர்ப்படுகின்றனர். இவர்கட்கு எப்போதும் விடுதலை யில்லை. இந்த அரசன் தந்தை பிரம பதத்திலிருந்தவன் மகன் செய்த தீவினையினால் மாளா நகரில் வதையுறுகின்றான்.

சதானந்தர் இதனைக்கேட்டு நடுங்கிப் பரமனைப் போற்றித் தெளிவுற்றார். பின்னர், நந்தீசர், 'அந்த நரகத்தில் அயலே இடர்ப்படுவோரைப் பற்றிப் புகல்வேன்' என்று கூறத் தொடங்கினார்.

அத்தியாயம்—55

சிவத்துரோக நரகவேதனை—தொடர்ச்சி.

சிவாலயப் பொன் கவர்ந்த துரோகம்

எழுசீர் விருத்தம்

1539. அண்ணலுன தின்னருளின் எந்தைதயி
லம்பெறுப வன்கதை யறைந்த னைமுனுள்
எண்ணுமிவ ரைத்தவிர வேறுநர கத்திலிடர்
கொள்ளுபவ ரேது புவியிற்
பண்ணினர்கள் பாவமவர் ஒன்பது துவாரஇடை
பாயவுரு வாம்பொ னைமுகக்
துண்ணிறைய வாக்கியுடல் கண்டமிக வெட்டுவதென்
ஓதுகென நந்தி மொழியும். (1)

1540. அந்தண ரருந்தவ முணர்ந்துசெய் வனந்தனை
அறிந்தெறி ரடைந்துழுவைநீள்
கொந்தலர் மரந்தனின் உரிந்தசரு மம்பல
கொணர்ந்தவ ரிடங்கு றுகிநேர்
வந்துபனி யின்குளிர் வருந்தவரும் என்றவை
வழங்கிமுதி ருங்க ளிகள்தேன்
கந்தமுத கந்தினங் இரந்துதவி அஞ்சலி
கரைந்துசெய் கலிங்க நகரே, (2)

கிராதன் கதை

சிவனது பொன் பூணூல் கவர்ந்த துரோகம்

அறுசீர் விருத்தம்

1541. அங்கண்மரு வியசந்தி ராங்கனெனும்
பெயரரசன் அளித்த செம்மல்
குங்குமதிண் புயவீர கிராதன்ற
னிடத்தின்மணி கொழிக்குந் தெண்ணீர்
வங்கமலி கடற்புடைசூழ் புவிபாரம்
இருத்தியயன் மலர்த்தாள் போற்றிப்
பங்கயவா சனத்திலிருந் தருந்தவஞ்செய்
தேபிரம பதம்பெற் றுனல். (3)

1540. கொந்து—பூக்கொத்து.

1542. சந்திராங் கன்புதல்வன் தானதரு
மம்புரிந்து தரைய னைத்தும்
மந்தரா சலப்புயத்தில் வைத்தருளு
மேல்வையொரு மறையோன் சைவ
சுந்தரா கரன் எச்சேச் சரன் அரசன்
தனைக்காண்பான் துறக்க மேவும்
இந்திரா தியர்க்கரிய கடவுள்சோ
மேச்சரன்ற னிடத்திற் புக்கான். (4)

1543. அருவுருவாய்த் திகழ்விந்து நாதவடி
வாமிலிங்கத் தணிந்த விழ்த்த
மருமலர்நின் மாலியத்தில் ஒருமாலை
வாங்கிவந்து மன்னன் கண்டத்(து)
ஒருமையுடன் ஆசிபல வுரைத்தணிந்து
முடிவேந்தன் உதவு தானம்
இருமையளித் திடவாங்கித் தனதுமணி
மாடத்தில் எய்தி னுனல் ; (5)

1544. ஆதிசைவ ரானவருச் சகர்கழித்த
மாலையுடன் அம்பொற் பூணூல்
வேதியன்வாங் கிக்குரிசில் கண்டத்து
வேய்ந்தனன்பின் விசாரித் தேவெண்
பூதிகண்டி யணிகுவா ரெச்சேசன்
றனைக்கேட்ட போது மன்னன்
சோதிதிகழ் கண்டத்தின் வேய்ந்தனன்கண்
டேநீவிர் தொடர்ந்து கேண்மின். (6)

1545. என்றவிரு பிறப்பாளன் றனைக்குரவர்
வெகுண்டுதவென் றிசைத்தார் பின்னுங்
கன்றிமறை யோன்நீவிர் புரவலனைக்
கேண்மினென்று கட்டு ரைத்தான்
துன்றுபுலன் வென்றசதா நந்தபக
வான்!கேண்மோ தொடுக முற்கால்
வென்றியர சன்மதத்தால் விப்பிரன்பே
சாதிருந்தான் விமலர் மீண்டார். (7)

1542. சுந்தராகரன்—அழகிய உடம்பை உடையவன்.

1546. வடிவாட்கை யரசனவை வதிந்துமணி
முடிவேந்தே! மலர யன்தான்
முடிநோக்கி யறிவரிய சோமேசன்
பொற்பூணூல் மொய்ம்ம லர்த்தா
ருடன்வேட்கை யாலுனக்கீந் தனனதனை
நீதருகென் றோதி னர்கள்
மடியாற்பின் கெடுகாலங் கேட்டுங்கே
ளாததுபோல் வறிதி ருந்தான். (8)

எண்சீர் விருத்தம்.

1547. அக்காலை முடியரச னருட்குருவாம் பெருமான்
ஆதிசைவர் குலத்தினும்வந் தவதரித்த கோமான்
தக்கோரெண் ணிடுவாமத் தனகிரிக்கு மடியான்
தனதுபெயர் வசியகர் ணன்சகல முணர்ந்தோன்
மைக்காவி மதர்விழியார் மதவேண்மன் னவன்பால்
வதிந்துமணி முடியரசே! மகிழ்சோமீச் சரன்றன்
எக்காலும் புனைந்தருள்பைம் பொற்பூணூல் மீள
இக்கணமீந் திடவேண்டு மென்றுபின்னு
[முரைப்பான். (9)

1548. வாக்கினெடுத் துரைக்குமா பாதகத்துக் கெல்லாம்
மருமுதற்கா ரணமூல மெனுஞ்சிவத்து ரோகந்
தாக்குகடு விடத்திவலை யொடுவடவைக் கனலந்
தரத்துவெடித் தெறிபுலிங்கந் தழற்பிழம்பிற்
[சிதைத்த
தீக்குழிவெங் கனற்கிறைசி கைபெருவாய் பிளந்து
திறந்தெடுத்தங் காந்துயிர்கள் தின்றுடன்தேக்
[கிட்டு
நாக்கடைகள் குதட்டியெழு வகைநீட்டித் துடிக்கும்
நரகுபுகுத் திடுந்தொலைவெந் நாளுமுயிர்க்
[கிலையே. (10)

1547. வாமத்தனகிரி—இடதுபாகத்தில் உள்ள தேவி (பார்வதி); வதிந்து—அடைந்து.

1548. புலிங்கம்—நெருப்புப் பொறி. தொலை—முடிவு.

வசியகர்ணர் கிராதனுக்கு உரைத்தது;

வசு கதை

சிவன் கோயிற்காசு கவர்ந்த துரோகம்.

1549. அடிக்கனத்துப் புடைத்திறுகித் திரண்டெழுந்து விம்மி
யாடகப்பொற் கிரிச்சிகரத் தழகொளிரப் பசுவேய்
வெடிக்குமுத்து மணிச்சிறுசெண் பகத்தொடைகுங் [குமத்தார்
மிலைந்துபசும் பொற்றிதலை விரிந்திளைஞ ராவி
பிடிக்குமிள முகிண்முலைச்செந் துவரிதழ்ச்சேல் விழியார்
பின்றொடர்ந்து மடலூரப் பிறங்குமல்லற் [றிண்டோள்
முடிக்குமரர் மல்த்தவிசிற் றமதுகிழத் தியர்பான்
முயங்குமணி மேடையெழின் முதிர் காம புரமே. ()

1550. அங்கண்மகிழ் குரிசிலருண் மதலைகளிற் றொழுகும்
அமிர்தமுமிழ் மதலைமொழிக் கிண்கிணிக்காற் [சிறுவன்
எங்கணுமொன் றியபெயராம் வசுப்புதல்வன் விளையாட்
டீசன்மணிக் கோயிலிறசுற் றலம்வருமேல் [வையிற்கண்
பொங்குமுள முண்மகிழ வொருபணங்கண் டெடுத்தான்
பொருக்கெனவே மனையில்வந்து தந்தைகரத் [தளித்துத்
திங்களணி குடிலசடை **சோமீசன்** கோயில்
திருச்சுற்றி லெடுத்ததுநீ சேமங்காத் தருளே. (12)

1551. என்றபசு லருச்சகர்வந் தரசனைக்கண் டரசே!
ஈசன்மணி யாலயத்தி லிருந்தபொரு ளனைத்துங்
குன்றவில்லி பொருளாகும் மதலைபணங் கண்டு
கொண்டுவந்த தளித்திடென்று கூறமன்னன் [கேட்டு
மன்றன்மலர் நிகழ்குடுமி மதலைகன்னிப் பேறாய்
மகிழ்ந்துகொடு வந்ததென்று மனத்திலெண்ணிக் [கொண்டே
துன்றுபுலன் வென்றகுர வரைநோக்கி யீதென்
சுபத்துக்குக் காரணமாய்த் தோன்றியதென் [றுரைத்தான். (13)

1551. கன்னிப் பேறு—முதல்முதற் கிடைத்த செல்வம்.

1552. சலந்தரன்றன் உடல்தடிந்த சக்கரம்பைந் துளவோன்
தனக்களித்த குழகனுக்கோர் தனிப்பணத்தா லேது
பலந்திரண மாத்திரமெல் லாரும்போ மென்று
பணந்தனைமுற் கருவூலப் பலபண்டத் துடனே
நலந்தருமென் றுதரவாய்ச் சேமித்து வைத்தான்
நம்பனரு ளாலற்றைப் பகலிரவிற் ககனத்
தலந்திகழ்பன் மாடமெலாம் வெந்தனசோ ருமத்
தனமனைத்துங் கொண்டகன்றூர் தலைவனுமாய்ந்
[தனனே. (14)

1553. நடுங்கியுளந் தளர்ந்தவர சிளங்குமரங் களிற்றை
நகரடுத்த மடப்பமகிழ் சாமந்த அரசன்
மடங்கலெனப் பிடித்துமுடி தடிந்தனனிங் கேதான்
மன்னனுமைந் தனுமீசன் திரவியங்கொண் டதனால்
இடங்கொளெரி வாய்நரகில் நடலையுற்று வருந்தி
யிப்போதுந் துயர்ப்படுகின் றார்களென்று
[கேட்டோம்
அடங்கலுமுற் றுணர்பௌரா ணிகரெமக்குச் சைவ
அரியபுரா ணங்கூறு மமையமுரைத் தனரே. (15)

கிராதன் கதை—தொடர்ச்சி.

1554. அரவமணி முடிக்கிடந்த புலிபுரக்கு மரசே!
ஆகையின்முன் கடுவிடமுண் டருள்புரியும்
[பெருமான்
உரமருவு பொற்பூணா லளித்தருளென் றுரைத்தார்
உபதேசம் புரிகுரவ னுரைக்கவுமவ் வரசன்
பரமதனை யறியாத படியாலுள் ளத்திற்
பயஞ்சிறிது மெண்ணாமல் வறிதவையில்
[இருந்தான்
குரவருமக் கணம்புரோ கிதனெடுமுக் காலங்
குறித்துணர்மந் திரியோடுங் கூறினருட்
[கொளவே. (16)

1553. மடப்பம்—மருதநிலத்து ஊர். நடலை—துன்பம்.

1555. அக்காலம் விதிவசத்தா லவர்களுங்கே ளாமல்
அறியாது போலிருந்தார் மீளவுமீ ளவுமே
தக்கோராம் அருச்சகர் பொற் பூணூல்கேட் டுள்ளம்
தளர்ந்தனர்கொற் றவன்சினத்தாற் கடுகடுத்து
[வெகுண்டு
மிக்கோரைப் போமின்கள் என்றனன்பூ சகர்தாம்
வேறொருபொற் பூணூலை விதிப்படியுண் டாக்கி
நெக்கார்வத் துடனருச்சித் தனரெச்சேச் சுரனும்
நிலைமைகெட்டுத் தரித்திரனாய் நிமைப்பில்மடிந்
[தனனே. (17)

1556. மந்திரியும் பொன்றினன்பின் புரோகிதனு மிருகண்
மணிவெடித்து விழக்கெட்டு மாய்ந்தனன்கா
[வலனுஞ்
சுந்தரமெய் யனைத்துநிறை குட்டமதா யதனால்
தோன்றுடலெங் கனும்புழுத்து மரித்தனன்வெந்
[நரகில்
அந்தரங்கள் தொறுமிந்த நால்வரையும் மறலி
அடுதூதர் விடுத்தெரித்திட் டமிழ்த்தியிப்போ
[தினுமே
வெந்துயரப் படுத்துகின்றா ரிவர்மரபெல் லோரும்
வீழ்ந்தனர்கள் இவர்க்கென்றும் விடுதலைமற்
[றிலையே. (18)

1557. தொழுதகுமா முனிவரனே! இவ்வரசன் தந்தை
தொல்லைபுரி மெய்த்தவத்தாற் பிரமபதம்
[அடைந்தான்
பழுதகலும் பதத்திருந்து மகிழுமந்தத் தந்தை
பாலனிழைத் திடுங்கொடிய பாதகத்தால் உள்ளம்
முழுதுநடுங் கிக்கடிது நரகத்தில் வீழ்ந்து
மூழ்கிவருந் தாநின்றான் என்றுபொன்னங் குவடு
விழுதுவிடு வதுகடுக்குஞ் சடிலநந்தி கேசன்
விளம்பமுனி சதானந்தன் விழைந்தவைகேட்
[டனனே. (19)

1556. அந்தரங்கள்—காவ எல்லைகள்.

1558. கேட்டவுடன் பயந்துபயந் துண்ணடுங்கி மனத்தாற்
சிஞ்சுகவா யுமைகொழுநற் பாவித்தங் கிருந்தான்
நாட்டமொரு மூன்றுளபெம் மான்மலர்த்தாள் கருதும்
நந்தீசன் மீளவும்பின் நரகத்தின் அயலிற்
கோட்டமனம் புன்கணுற அதிபாவம் புரிந்தே
கொடுநரகில் எரிகின்றோர் குயிற்றியபா தகத்தை
வேட்டவுனக் குரைக்கின்றேன் என்றுரைத்தான் அதனை
மெய்த்தவத்தீர்! கேண்மினென மிகுசூத
[னுரைப்பான். (20)

அத்தியாயம் 56.

சிவத்துரோக நரக வேதனை--தொடர்ச்சி

சிவாலயச் செங்கல் அபகரித்த துரோகம் :

நந்தியெம் பெருமான் சதானந்தரைப் பார்த்துச், 'சிவதேசிகன் பொருள் கவர்ந்தோர் நரகத்திற் பாம்பும் கருவண்டும் துளைப்ப ஆமையும் மீனும் புழுவும் நிறைந்த குழிகளில் இடர்ப்படுவார்கள். அதற்குச் சான்றாக ஒரு கதை கூறுகிறேன்' என்று கூறுகிறார்.

வச்சிரபாலன் கதை

கவுடம் என்னும் நாட்டிற் கவுடிப்புரம் என்னும் நகரத்தில் வணிகர் குலத்தில் வச்சிரபாலன் என்றொருவன் இருந்தான். அவன் சூரிய பூஜைக்காக ஒரு செங்கல் மேடை கட்ட விரும்பினான். எங்குஞ் செங்கல் கிடைக்கவில்லை. விசாரித்ததில் அர்ச்சகரிற் கவுடேசராம் சிவபெருமானை வழிபடும் தற்புருடன் எனும் ஆதி சைவக் குரு தேசிகர் சிவாலயம் ஒன்று கட்டத் தமது மடத்திலே செங்கற்கள் சேமித்து வைத்திருப்பதாகத் தெரிந்தது. வச்சிரபாலன் ஆள்விட்டும் தானே நேரிற் சென்று கேட்டும் தற்புருட சிவாசாரியர் கொடுக்க மறுத்துவிட்டார்.

அப்போது சௌபரி என்னும் அரண்மனை மருத்துவன் வச்சிர பாலனிடம் பொருள் விரும்பி வந்தான், அவன் வச்சிரபாலனது விருப்பத்தை

புணர்ந்து அவன் பொருட்டுத் தற்புருடரிடம் சென்று செங்கற்கள் கேட்டான். அவனுக்கும் மறுத்தார் தற்புருடர். சௌபரி வெகுண்டு வச்சிரபாலனிடம் வந்து, 'நாளைப் பகலில் தேசிகன் வருந்துமாறு செங் கற்களைப் பொடிபடுத்துவேன் பார்' என்று சூளுரைத்து அரண்மனைக்குச் சென்று யானைப்பாகனிடம் 'அந்தோ! யானைக்குக் கொடிய நோய்வந்துள்ளது. விரைவில் மருத்துவம் புரியாவிட்டால் இறந்திடும். நான் கொடுக்கும் மருந்து களுடன் செங்கற் பொடியையுங் கலந்து தரவேண்டும். தற்புருடரிடம் உள்ள செங்கல் எல்லாவற்றையும் கொணர்க' என்றான். யானைப்பாகன் தற் புருடரிடம் உள்ள செங்கற்களை ஆட்கள் மூலம் வலிந்து கொண்டுவந்தான். எல் லாச் செங்கற்களையும் பொடியாக்கிச் சிலமருந்துகளுடன் அப்பொடியையுங் கலந்து பொட்டணங்களாகக் கொடுத்தான் சௌபரி. அன்றிரவே யானை இறந் தது. மருத்துவம் புரிந்தும் யானை இறந்ததென்று யானைப் பாகன் அரசனிடம் தெரிவித்தான். அப்போது தற்புருட சிவாசாரியர் அரசனிடம் வந்து சிவா லயம் கட்டுவதற்காகத் தான் வைத்திருந்த செங்கற்களை வச்சிரபாலன் கேட்கத் தாம் மறுத்ததும், பின்பு சௌபரி வந்து கேட்கத் தாம் மறுத்ததும், அதன்பின் யானைப் பாகரது ஆள்கள் வலிதிற் செங்கற்களைக் கொண்டு சென்றதுமான முழு வரலாற்றையும் கூறி முறை யிட்டனர். சிவத்துரோகத்தால் யானை இறந்தது என உணர்ந்த அரசன், பாவந்தீரும் பொருட்டு யானைப் பாகனையும் அவனது ஏவலாளரையும் கொல்வித்தான். வச்சிரபாலனது பொருள்களைப் பறித்து அவனையுங் கொன்றான். பின்பு வயித்தியனை விசாரித்த பொழுது, தக்கன் என்னும் அமைச்சன் 'அரசே! அச்சுவினி தேவர்களாற் கொடுக்கப் பட்ட இந்த சௌபரியைக் கொல்வது சரியன்று; இவன் எல்லாருடைய நோயையும் அகற்றி வருகின்றான். வயித்தியத்தில் மிக வல்லவன். யானை யைத் தவிர இவன் மருந்தால் இறந்தவர் எவரும் இலர். இவனை மன்னித் தருளுக'—என வேண்டினான். அரசன் சினந்து நோய் தீர்ப்பவன் ஈசன் ஒருவனே; இவன் சிவத்துரோகி; இவனை வாள் கொண்டு வீசுக' என, அமைச்சனும் சௌபரியின் தலையைத் துணித்தான். பின்பு, அரசன் செங் கற்கள் கொண்டு சிவாசாரியர் விரும்பிய ஆலயத்தைக் கட்டுவித்து அவர் திருவடிகளில் வணங்கிப் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் எனப் பணி வுடன் கேட்டான். தற்புருடரும் அரசனுக்கு ஆசி கூறினர்; வானவர் மலர் மாரி பெய்தனர்; அந்தர துந்துபி முழங்கிற்று. திருமாலும் நான்முகனும் அரசனிடம் வந்து என்ன வரம் வேண்டுமெனக் கேட்டார்கள். அரசன் வணங்கி 'உலகம் நோயற்று வாழவேண்டும்' என வேண்டினான். அவர்கள் அங்ஙனமே வரத்தைத் தந்து மன்னனையும் சிவாசாரியரையும் வாழ்த்திச் சென்றனர். அரசன் நெடுநாள் சுகமாக ஆண்டான். சிவத்துரோகம் புரிந்த சௌபரி முதலானோர் இன்றளவும் நரகில் வேதனைப் படுகின்றனர். அவர் களுக்கு உய்வேயில்லை. அரசன் புகழும் சிவாசாரியர் புகழும் உலகில் ஓங்கின.

அத்தியாயம் 56.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

அறுசீர் விருத்தம்.

சிவாலயச் செங்கல் அபகரித்த துரோகம்

1559. குரவன்பொருள் கொண்டவர் யாதொருவெங்
கொடுமாநிர யத்தின் விழுந்துதுளைந்
தரவங்கரு வண்டுக ளுக்குநெளிந்
தலம்வந்து நெடும்புழு வாமைவன்மீன்
பரவுங்குழி யங்கண வெங்குழிடர்ப்
படவேதடை வாரதை யான்முனிவீர்!
விரவுங்கதி சேர வுரைப்பனெனை
மிகுசூதன் விளம்பிட மேயினனால். (1)

1560. நந்தீசன் மகிழ்ந்து வியந்துசதா
னந்தன்முகம் நோக்கி நவின்றிடுவான்
செந்தாமரை யண்ணல் நறுந்துளவத்
திண்டோளிறை நின்றயல் கேட்பமுனம்
நிந்தாபர ராய்க்குர வன்பொருள்கொள்
நீசரெரி வாய்நிர யத்தயலின்
சந்தாப முறும்படி சுற்றமுடன்
றண்டாஇடர் சேர்கதை சாற்றுதுமால். (2)

வச்சிரபாலன் கதை

சிவாசாரியரிடமிருந்து செங்கல் அபகரித்தது

1561. சிங்கங்கழல் கண்கள் சுழன்றுருளச்
செவிநின்று நெறித்திட வுன்னியெழுந் (து)
அங்கங்கள் சிலிர்த்திட வால்புவிமீ
தறையச்சக னங்கள் அசைந்திடமா

1559. வேது = வேதனை.

1560. நிந்தாபரர்—நிந்தையை யுடையவர். சந்தாபம்—துக்கம்; செய்த பாவத்துக்கு இரங்குதல்.

1561. சகனம்—பிருஷ்டபாகம். மாதங்கம்—யானை. உத்துங்கம்—உயர்வு. சிங்கம் யானையின் கோட்டைப் பறித்துக் குருத்தை நுகர்தல்—'வேழத்தின் வெண்மருப்பினைக் கீழ்ந்து சிங்கக் குருகுண்ண முத்துதிரும்—'' சம். தேவா—II. 114—9.

தங்கம்பிளி றும்படி மத்தகமேல்
தாவித்திரள் கோடு பறித்ததிலுத்
துங்கங்கொள் குருத்து நுகர்ந்து செந்நீர்
துய்க்குங்கவு டப்பெயர் நாடுளதால், (3)

1562. கிள்ளைக்கு முனஞ்சரி யாதிதவங்
கிளையோடுசெய் யென்றுசொல் நாகணவாய்ப்
புள்ளைச்சிவ ஞானம லாதுமாரும்
பொருள்வேறிலை யென்று சமாதியினல்
வெள்ளைக்கம லத்தர சன்னமெதிர்
விரைவிற்சொல வைதருப் பந்தழுவா
வள்ளைக்கவி மங்கையர் பின்கவுட
மறையோதுவர் வண்கவு டிப்புரமே. (4)

1563. வளங்கூர்கவு டிப்புர மீதுமகிழ்
வணிகோரிறை வச்சிர பாலனெனும்
இளங்கோமிகு புண்ணிய மேபுரிவான்
என்றுந்திகழ் சூரிய பூசைசெயத்
தளங்கூர்மண் எடுத்திடு வேதிகையிற்
சௌரார்ச்சனை செய்பவன் செங்கலினல்
விளங்காவுயர் வேதிகை வேண்டுமென
விதிவேதிகை மண்ணெடுத் தேற்றினனல். (5)

1564. சேங்கற்படை வேதிகை கட்டவுளஞ்
சிந்தித்திட யிட்டிகை யங்கரின்
மங்குற்பொலி தோரண வீதிமணி
மாடந்தொறு நேடியுங் கண்டிலனத்

1562. வைதருப்பம்—வைதருப்பநெறி. செறிவு, தெளிவு முதலிய பத்துக் குணங்களும் அமையப் பாடும் முறை. செய்யுள் நெறி—வைதருப்பம், கௌடம் என இருவகைப்படும். நெறியாவது சொல்லமைப்பு வகை. வைதருப்பம் என்பது விதர்ப்பநாட்டார் ஆதரித்த நெறி; கௌடமாவது வைதருப்பத்துக்கு மாறாய்ச் சிலவற்றைத் தழுவியும் சிலவற்றுக்கு மாறுகொண்டும் வருவது. செறிவுமுதலிய பத்துக்குணங்களுட் சில வற்றைக் கௌடர் வேண்டுவர், சிலவற்றைவேண்டார். (தண்டி—அலங்—14). வள்ளைக் கவி—உலக்கைப்பாட்டு.—மகளிர் நெற்குத்தும் போது ஒருதலைவனைப் புகழ்ந்துபாடும் பாட்டு.

1563. சௌரார்ச்சனை—சூரிய பூஜை.

1564. இட்டிகை—செங்கல்.

துங்கப்புரி சேர் **கவுடேசன்** மலர்த்
துணைமென்சர ணம்வழி பாடுசெய்வோன்
சங்கக்கட வுட்கிரி சந்ததிசேர்
தகுதற்புரு **டக்**குரு தேசிகனே. (6)

1565. **அ**த்தேசிகன் அந்தணன் ஆதிசைவன்
அருள்தேவ அருச்சனை யாலயமார்
வத்தோடு வகுத்திட ஈட்டிமுனம்
மடமீதினில் வைத்தருள் இட்டிகையை
முத்தார வடந்திகழ் தோள்வணிகன்
மொழிவார்சொலக் கேட்டுமை யோர்விடுத்தே
வித்தாரநல் இட்டிகை வேண்டுமென
விமலன்னவை நல்கிலன் என்றனனால். (7)

1566. **ந**சையாற்பினும் இட்டிகைக் கென்றுபணம்
நல்கிச்சில ராலவை கேட்கவதற்(கு)
இசையாத அருட்குர வன்மடமீ
திளங்கோ வெய்தி யெந்தைய ளித்தியென
வசையாக வந் நாய்கனுக் கிட்டிகைசை
வத்தேசிகன் ஈந்திலன் அக்கணமே
விசையாய்வணி கேசன்வெள் கித்தனதில்
மீண்டெய்தி யிடர்க்கடல் மேயினனால். (8)

1567. **அ**க்காலையில் வாகட முற்றுணர்வோன்
அரசன்றன் வயித்தியன் **சௌபரிதான்**
எக்காலமும் நட்புடை நாய்கனிடத்
தெய்திப்பொருள் வேண்டினன் நீள்நிதியம்
மிக்கோனவ் வயித்திய னோடுபையுள்
மீதார விளம்பிடும் தற்புருடத்
தக்கோனைமுன் இட்டிகை கேட்டனனச்
சைவன்னிலை யென்றெனைத் தள்ளினனால். (9)

1568. **அ**ம்போடு விழுந்திடு மானெனநொந்
தழிகின்றனன் என்ன வயித்தியனுங்
கும்போதயன் நேர்குரு தேசிகன்பாற்
குறுகிக்கடி திட்டிகை ஈவனெனத்

1565. ஈட்டி—சேகரித்து.

1568. கும்போதயன்—அகத்தியர். வெம்போர்—வெம்பு ஓர்.

தம்போத முணர்ந்தருள் தேசிகன்பால்
தானாக வயித்தியன் சென்று செங்கல்
வெம்போர்வணி கற்கருள் என்ன அவன்
விரைந்தீகிலன் என்றவற் கும்முரைத்தான். (10)

1569. ஈற்றங்கொள் வயித்தியன் மீண்டஞ்ஞர்வச்
சிரபாலனை நோக்கி உரைப்பனினி
ஏற்றங்கொள் குருக்கள் மடத்திலிழுந்
திடவேபல விட்டிகை நாளையினன்
தோற்றங்கொள் பகற்குர வன்கலுழத்
தூளாக்குவன் என்வலி பாருளத்தில்
தேற்றங்கொ ளெனச்சப தஞ்சொலியத்
தேர்வேந்திட மற்றையம் போதடைந்தான். (11)

எழுசீர் விருத்தம்

1570. கறையடிப் பாகன் தனைவிளித் தந்தோ
கனைகழற் கொற்றவற் கினிய
நிறைமதக் கலுழ்க் களிறுவெம் பிணியால்
நீப்பருந் துயர்ப்படு கின்ற(து)
இறைவரைப் பொழுதிற் பண்டிதம் புரியா
திருக்கினென் றிறந்திடு மென்மேற்
குறையறப் புகன்றேன் உண்மையிட் டிகைநீ
கொணர்திது ளாக்கியிக் கணமே. (12)

1571. அன்னிய மருந்து தூளுடன் கூட்டி
அவுடதப் பொட்டணங் களினுல்
துன்னிய தசைக்கும் சாற்றிலொத் திடநோய்
சுத்தமாய்த் தீருமீ தன்றிப்
பன்னிய மருந்தால் தீர்குவ திலையிப்
பகற்குரு வானதற் புருடன்
மன்னிய மடத்தில் இட்டிகை கொணர்தி
வாரணம் உய்யுமிவ் விரவே. (13)

1569. இனன்—சூரியன்.

1570. இறை வரை—சிறிதுநேரத்தில்.

1572. என்றசொற் கேளா மதகரிப் பாகன்
ஏவல்செய் வோர்களாற் புலன்கள்
வென்றதற் புருடக் குரவன்வா மடத்தின்
மேவுமிட் டிகையெலாங் கொணர்ந்தே
அன்றவை யிடித்துத் தூட்செயச் சவுரி
அன்னிய தூளுடன் கலந்து
கன்றவே பெரும்பொட் டணங்களேற் றிடவக்
கடகரி யிறந்ததவ் விரவே. (14)

1573. காலையிற் களிற்றுப் பாகன்மன் னவன்பாற்
கழறினன் சவுபரி மருத்து
நூலமுற் றுணர்ந்திவ் விரவெலாம் பார்த்தும்
நுவலரும் பிணியினு லானை
சாலயி விறந்த தென்னவக் குரிசில்
தரிக்கொணு வுளந்தளர்ந் திரங்கும்
வேலைசற் குரவன் வந்துகூப் பிட்டான்
வேந்த!கேள் ளென்னலுற் றதுவே. (15)

1574. தேவர்பூ சைக்கா லயம்வகுத் திடநான்
செங்கலீட் டியதெலாம் பாகன்
ஏவலா ளர்கள்வந் தெடுத்தவை யனைத்தும்
இடித்தெறிந் தனரெனைப் பசுக்கள்
காவல னுன வச்சிர பாலன்
கதிரவன் வேதிகைக் கென்றே
ஆவல்கூர்ந் தெனதிட் டிகையெலாங் கேட்டான்
அதற்குநான் இசைந்திலேன் அதனுல். (16)

1575. கருத்தினில் திருகு வெஞ்சினம் புழுங்கிக்
கடிதுபோய்ச் சௌபரியான
மருத்துவற் குரைத்தே அவன்றனை விடுத்தான்
வயித்தியன் கேட்கவும் மறுத்தேன்
உருத்தவன் களிற்றுப் பாகனோ டுரைக்க
ஓர்ந்திடா தவனுமந் நியரால்
திருத்தகு செங்கல் அனைத்தையும் இடித்தான்
செய்யகோல் நடாத்துமன் னவனே! (17)

1576. என்னமா சுணச்செஞ் சூட்டுல கனைத்தும்
இகலற நீதியிற் பரிக்கும்
மன்னவன் விரைந்திச் செயல்விசா ரித்து
மதகரி சிவத்துரோ கத்தால்
தன்னுயி ரிறந்த தென்றுமா வியானை
தனிப்பெரும் பாகனைத் தடிந்து
பின்னரு மவனே வற்செய்வோர்த் தடிந்தான்
பெரியபா வங்கள்தீர் பொருட்டே. (18)

1577. சீற்றமீ தூர வணிகனை அழைத்துத்
தேடிய பொருளெலாம் பறித்து
மாற்றம்வே றின்றி வணிகனைத் தடிந்தான்;
வயித்தியன் தன்னையும் விளித்துச்
சாற்றுதி யேது செய்தனை யென்னச்
சவுபரி யுரைத்தனன் அரசே!
யேற்றமாம் மருந்து கொண்டுபார்த் தனனேய்
இடர்ப்படுங் கரியிறந் ததுவே. (19)

1578. என்றுரைத் தனன்பின் கொற்றவர் கவிக்கும்
எரிமணி மகுடகோ டிகள்பட்(டு)
ஒன்றிடுந் தழும்பு பட்டசெஞ் சரண
வுத்தமக் குரிசில்கட் டுரைப்பான்
கொன்றையஞ் சடிலக் குழகனு யகனுங்
குரவனிட் டிகைகொள்பா வத்தால்
வென்றிசேர் கரடக் கலுழிமா வியானை
வீந்ததக் கணமென வுரைத்தான். (20)

1579. இக்கண முனையும் வதைப்பனென் றுரைக்கும்
ஏல்வைமுக் காலமு முணரும்
தக்கனும் அமைச்ச னுரைப்பனெண் டிசைப்பார்
தடமணிப் புயந்தரித் தெழில்கூர்
இக்குவே ளனையாய்! முன்னரும் பிணியால்
இடர்ப்பட அச்சுனி தேவர்
அக்கணம் அடைந்துன் பிணியெலா மகற்றி
அன்றுசெள பரியைஇங் களித்தார். (21)

1580. எங்களே வலினுல் இவன்பிணி யனைத்தும்
எவற்குமே யிரிந்திட மருத்துப்
புங்கவ ஞகி நின்னய விருந்தே
போற்றுவன் என்றவற் குரைத்துத்
தங்கள்தொல் பதியை யடைந்தன ரதனுற்
சவுபரி தனைவதைத் திடுதல்
இங்குநன் றலஅந் நாள்முத லெவற்கும்
இடர்ப்பிணி அகற்றியே இருந்தான். (22)

1581. குஞ்சரம் இறந்த தொன்றுமே யல்லாற்
குவலயத் தோர்கொடும் பிணியில்
துஞ்சின ரிலைமற் றிவனையே வதைக்கின்
தொல்லைநோ யகற்றுவோர் யாவர்
தஞ்சமென் றடைந்தோர்க் கருள்வது கடனே
சௌபரி தனைவிடுத் தருளென்(று)
இன்சொலா லுரைக்க மன்னவன் புகல்வான்
ஈசனே பிணியகற் றுவனுல் ; (23)

1582. அருங்கலை யனைத்தும் சைவனே உலகுக்
காதியாய் வயித்திய னெனுந்தா
பரங்கள்சங் கமங்கள் பிணிதனில் இடைந்து
படருரு திருந்துசீ விக்கும்
இரங்கிடா தினிநீ சிவத்துரோ கியைவாள்
எற்றியே தடிந்திடென் றுரைக்க
மருங்கிருந் தரசற் குறுதிசொ லமைச்சன்
வயித்தியன் சிரந்தடிந் தனனே. (24)

1583. அங்கணின் றரச னுலைமுகம் பழுத்த
ஆடகப் பசும்பொனு லயங்கள்
செங்கலால் வகுத்துக் குரவன்மா மலர்த்தாள்
சேர்த்துபு அடியனேன் அபரா
தங்களைப் பொறுத்தி கருணையங் கடலே !
சச்சிதா னந்தனே ! என்று
பங்கய மலர்த்தாள் பணிந்திடக் குரவன்
பார்த்திப ! எழுகெனப் பணித்தான். (25)

1582. சைவனே—சிவனே. "தழலிலங்கு திருவுருச் சைவனே"—சம். தேவா. III—108—7.

1584. அந்தர மிசைநின் றெழுந்துபூ மாரி
யவ்விடம் பொழிந்திடத் தேவ
துந்துபி கறங்க மரைமலர்ப் பொருட்டுத்
தோன்றலும் நறவுகொப் பளிக்கும்
பைந்தொடைத் துளவக் கடவுளு மடைந்து
பார்த்திப! வேண்டுவ துரைத்தி
யெந்தநல் வரங்க ளெனமன னுலகுக்
கென்றும்நோ யறச்செயு மென்றான். (26)

1585. அதென துளத்துக் கேற்றநல் வரங்க
ளென்னவப் படியதா மென்றப்
போதுமன் னனையுந் தேசிகன் றனையும்
புகழ்ந்தவ ரனுமதி யதனால்
ஆதரம் பெருகத் தமதிட மடைந்தார்;
அரசனு மனுநெறி முறையாற்
பூதலம் நெடுநாட் புரந்தனன் செங்கற்
பொருட்டடைந் தோர்கள்யா வருமே, (27)

1586. எடுத்துரைக் கரிய நரகினுட் படிந்தங்
கிடர்ப்படு கின்றன ரன்னாள்
தொடுத்தரு நரகி லிற்றைநா ளளவுந்
துயருழக் கின்றன ரவர்க்கே
யடுத்தநற் சாந்தி யில்லைமன் னவற்கும்
ஆதிசை வக்குர வனுக்கும்
உடுத்த நீர்ப்பரவை யுலகினிற் செல்வம்
ஒழிவறப் புகழுமோங் கியதே. (28)

1587. முன்னர்கட் டுரைத்த நரகயற் பிறந்து
முழங்குபே ரொலிதனைக் கேட்டா
ரன்னதிட் டிகைமு னெடுத்தவர் புலம்பி
யரற்றுகின் றதுவென நந்தி
சொன்னவா சகங்கள் தமைச்சதா னந்தன்
றுண்ணெனக் கேட்டுளம் வெருவிப்
பொன்னவி ரிதழிக் கடுக்கையஞ் சடையோன்
புண்டரீ கப்பதம் நினைந்தான். (29)

1586. ஒழிவற—நீக்கம் இலதாக.

அத்தியாயம் 57.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவனடியார் ஆடை கவர்ந்த துரோகம்.

சூத முனிவர் சொல்கிறார் :

விசயன் கதை.

சிந்து நாட்டிற் சலனதந்தபுரத்தைக் கரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் இந்திரன் அருள் பெற்றுக் குலிசப்படையேந்திப் பகைவரை வென்றவன். அவனிடம் விசயன் என்ற படைத்தலைவன் இருந்தான். அவன் நரசிங்க உபாசகன். ஒரு முறை மது என்னும் அரசன் இந்திரன் என்னும் அசுரனை வேண்டி அவன் சக்கரத்தைப் பெற்றுக் கரனுடைய நகரத்தை முற்றுகையிட்டான். கரன் தன் படைத்தலைவனாகிய விசயனை வேண்ட அவன் நரசிங்க மூர்த்தியைத் தொழுதான். நரசிங்க மூர்த்தி வெளிப்பட்டு மதுவின் சேனையை வாரி விழுங்கிக் கொன்று தீர்த்தது. கரன் விசயனை வாழ்த்தி வணங்கித் தன் நன்றியை அறிவித்தான்.

விசயன் மகனாகிய சூரன் பரத்தையரை மருவும் இழிவுடையவன். சூரன் ஒரு நாள் ஒரு பரத்தையைக் கூடியிருந்து வரும்போது அவள் வீட்டில் இருந்த ஆடையொன்று தவறாக இவன் மேலாடையாக வந்து விட்டது. அது திருநீறு, கண்டிகை புனையும் ஒரு சிவ பக்தனாகிய தருமன் என்னும் வேளாளனுடையது. அவன் இதனை அறிந்து விசயனிடம் சென்று, 'என் மேலாடையை உன் மகன் கொண்டுவந்து விட்டான். அதனுடன் கண்டிகையிருந்தது. அதனைக் கொடுக்கச் சொல்' என்றான். விசயன் வாளாவிருக்கவே, தருமன் மனம் நொந்து கரனிடம் சென்று செப்பினான். கரன் விசயனை அழைத்து வினவினான். விசயன் நகைத்துப், 'பரத்தைய ரில்லந்தொறுந் திரியுந் தருமன் சிவனடியான் ஆகான். அவன் பூண்ட கண்டிகையும் அணிந்த நீறும் உடையும் என்ன பயனுடையவை?' என்று இகழ்ந்தான். அரசன் சினந்து 'சிவனடியவரை இகழ்வரோ? அக்கமும் நீறும் அணிந்தோர் எத்துணை யிழிந்தவராயினும் யாவராலும் தொழத் தக்கோராவர். நீ உன் மகன் செயலைக் கண்டிக்காமற் சிவநிந்தை செய்தனை!' என்று அவனைப் புறக்கணித்து, அவன் மகனாகிய சூரனை யழைப்பித்து அவன் தலையைத் துணித்தான்.

விசயன் தருமனை யிகழ்ந்து தன் மகனுக் கிரங்கித் தன் வீட்டிற்குப் போனான். கரன் அது கண்டு விசயனுந் தண்டிக்கத் தக்கவனென்று துணிந்து, விசயனுடைய செல்வமனைத்தையும் பறிமுதல் செய்தான். விசயன் சினந்து நரசிங்கத்தைத் தியானித்தான். நரசிங்கமூர்த்தி வெளிப்பட்டு விசயனைச் சிவத் துரோகி யென்று சினந்து கிழித்துக் கொன்றார். மேலும், அரசனை நோக்கிச்

'சிவத்துரோகிகளை வதைத்து உலகு காத்திருப்பையாக. நீ நினைக்கும்போது என் உதவி கிடைக்கும்? என் அடியவராயினும் சிவத்துரோகிகள் எனக்குத் தகாதவரே. சிவனடியவரைப் பூசித்து ஆதரிப்பாயாக' எனக்கூறி மறைந்தார்.

கரன் வியந்து தருமனை அழைத்து அவன் கலையுடன் வேண்டுவன நல்கி விடுத்தான். விசயனும் சூரனும் மீளாநரகிற்கு ஆளானார்கள்.

இவ்வாறு சதானந்தர்க்கு நந்தீசர் நவின்றார்.

அத்தியாயம் 57.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவனடியார் ஆடை கவர்ந்த துரோகம்

எழுசீர் விருத்தம்

1588. காத லாற்சிவ பத்தர் பொன்கள்
கவர்ந்து பின்னு மகந்தையாய்
மாத வக்கிழ வோரை நிந்தை
மறித்து ரைத்து மகிழ்ந்தவெம்
பாத கத்திர ளால ளற்றிடைப்
பருவ ரற்பெறு வோர்கள்தங்
காதை மிக்கவர் கேண்மி னென்றருள்
கருது சூத னியம்புவான். (1)

விஜயன் கதை

1589. கான மீதுல வைத்தெ ரிந்துசெல்
கவரி மான்மயிர் முட்பட
மான மாயுளம் வெம்பி நின்று
வருந்தல் கண்டய லோர்வழி
போன கேசரி விறலு கிர்க்கொடு
பொறிய விழ்த்திட வெயிலெனச்
சேன மாநிழல் சிறைவி ரித்தருள்
சிந்து தேயம தாகுமால். (2)

1588. பருவரல்—துயர்.

1589. கேசரி—சிங்கம். சேனம்—பருந்து.

1590. கொண்டல் கண்படை கொள்ளு மேடை
குலாவு மஞ்ஞை யெனச்செலுங்
கெண்டை யங்க ணழைக்கு மங்கையர்
கேள்வ ரோடம ளிக்கணே
தொண்டை யங்கனி வாய்த்த டங்கள்
சுவைத்த ணைத்திரு கைவளை
தண்டை நின்று புலம்ப மேவுவர்
சலன தந்த புரங்களாம். (3)

வேறு

எழுசீர் விருத்தம்

1591. சீரும் வளங்களு மேவு புரம்படை
சேர்கரன் என்றொரு பேர்மேவும்
பாரர சன்றினம் வாசவன் அம்புய
பாதம் வணங்கியே மாபூசை
வார முடன்செய்து நீள்குலி சங்கொடு
மாறு செயும்பகை ஞோர்மாள
வீர முடன்பொரு தாழி யகன்புவி
மேன்மை பெறும்படி யாள்வோனால். (4)

1592. பூவுல கின்பினும் வேறொரு வன்றிகழ்
போர்மதுவென்றொரு பேர்மேவுங்
காவல னிந்திர னுமசு ரன்கழல்
காத லுடன் றொழு தேவீர
மாவ லுடன்கொடு மீள வவன்படை
யாழி யுடன்கடி தாய்மேவித்
தாவில் கரன்புர நாடி வளைந்தடு
தானை யுடன்பொரு தான்மாதோ. (5)

1593. சூர கரன் றுய ராய்மது வந்தெயில்
சூழ் வளைந்தனன் மாசேனை
சேர நடந்தவை கூறின வென்றவை
தேர்பொழு தின்படர் கோவாகும்

1593. படர் கோ—சேனைத்தலைவன். காரமடங்கல்—நரசிம்மமூர்த்தி. (காரமடங்கல்).

வீர மிகுந்தடர் கூர்விச யன்படை
மேலெதிர் சென்றுள மீதேதான்
நார மடங்கலை யோடி நினைந்தனன்
நாடிமுன் வந்தது போர்மீதே. (6)

1594. சேனை யடங்கலும் வாரி விழுங்கிமெய்
சீறி யதிர்ந்திடி யேறேபோல்
வானை யளந்திட சாரியின் வந்தல
மாய்மது வின்குடர் பாய்சோரி
யூனையு முண்டுயி ரேகொடு சென்றது
வோர்கர னின்றிவை தானுடித்
தானை யரும்பதி யாம்விச யன்பத
தாமரை முன்தொழு தேபோனான். (7)

1595. மாவிச யன்தரு சூர னகந்தையன்
வாழ்பொது மங்கையர் தாம்வேசி
யாவி யெனும்படி கூடின னங்கமு
ளுதரம் விஞ்சிய வேளாளன்
ஓவில்தன் மன்திரு நீறொடு கண்டிமெய்
யூடு புனைந்தவ னவ்வேசி
மேவின னங்கவள் பாலி லிவன்கலை
வீழ வறிந்துதன் மேல்வேய்ந்தான். (8)

1596. மீள அகன்றுதன் மாட மடைந்துபின்
வேறொரு சிந்தையெண் ணுனோர்போ
யாளென நின்றென தோர்கலை தந்தரு
ளார்வமொ டிங்கென ஈயாதே
மாள விரைந்திடு சூர னிருந்தனன்
மாறுதன் மன்புக லாதேபோய்
வேளென வென்றிகொள் போர்விச யன்புடை
மேவி மகன்செய லேசொன்னான். (9)

1594. இடசாரி—இடப்பக்கம். அலமாய்—போதிய அளவு.

1595. விசயன்மகன் சூரன். தன்மன் (தருமன்).

1596–97. இவை இடையில் விஜயன் இன்னது சொன்னான் என்னும் கருத்துள்ள பாட்டு விடுபட்டிருக்க வேண்டும்.

1597. நீதி செயுங்கர பூப நிரந்தர
நீறொடு கண்டிகள் பூண்மேனிச்
சோதி துலங்குமெ னுடை கவர்ந்திடு
சூரன் வழங்கியி டாதேநீ
போதிசெ லென்றன னேகொடி தென்கலை
போன தவன்தனை நேர்கூவிக்
காதி விரைந்தென தாடை புரந்தருள்
காவல வென்றுசொ னுன்மாதோ. (10)

வேறு

1598. புரவலன் கொடிய விசயனை விளித்துப்
பொருக்கென முனிந்துநின் புதல்வன்
தருமனுஞ் சிவபத் தன்கலை கவர்ந்தான்
தவறுநீ யறிந்தறி யார்போல்
இருநிலத் திருந்தாய் மூடவிக் கணமே
யீகெனக் குரிசில்சொற் றலுக்கு
வரமிகு விசயன் மன்னனை நோக்கி
மறுத்தொரு வாசகம் புகல்வான். (11)

1599. நிரந்தரம் பரத்தை யிளமுலை தழுவி
நிந்தைபெற் றிடுமிவ னயன்மால்
புரந்தரன் வழுத்து கண்ணுதற் கடிமை
பூண்டபத் தனுமல னறும்பால்
கரந்தநெய் யெனவா ருயிர்க்குமா ருயிராய்க்
கலந்தருள் முக்கணு யகன்பால்
உரந்தரு பத்தி யேதுகண் டிகைநீ
றுடையதாற் பயனென்கொ லுரைத்தி ; (12)

1600. என்ற சொற் குரிசில் கேட்டுவெஞ் சினமா
யிவன்றனை நோக்கிமீ ளவும்பார்த்(து)
ஒன்றுரைக் கின்முன் இலிங்கபா வனையே
யுற்றிடுங் கடவுளைப் புல்லர்கள்
வென்றிடு முனிவர் அமரர்கள் அறிஞர்
விழைந்துபூ தலமுற வணங்கல்
அன்றியே சிலையென் றுரைப்பரோ கெடுவாய்
அறிவொரு சிறிதிலா துரைத்தாய். (13)

1598. சொற்றல்—சொல்லுதல்.

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras

1601. கேவல மதுபோ லக்கநீ றணிந்து
கிளர்வத ஞற்றெழு குலத்தோர்
காவலர் வணிகர் பின்னவ ரொடுசங்
கரர்முத லியநர ரெவர்க்கும்
ஆவல்கூர் மனமெய் மொழியினாற் போற்றி
யருச்சனை செயப்படு குவர்மற்
றேவர்தூ சிவர்வா ரிப்படி யுரைத்த
திக்கண மறத்தியென் றுரைத்தான். (14)

1602. பின்னருங் கொடிய வெஞ்சினம் புழுங்கிப்
பெரிதுரை கடுகடுத் துரைப்பான்
நின்னுடை மதலை யிடத்தினுங் கோர்ந்து
நீதியா லிக்கணங் கொடுத்தி
யென்னுள மறிந்து நின்மகன் வெருவி
யிடர்ப்படல் முன்னிநற் கலையைத்
தன்னிகர் தருமற் கீந்திலை யென்றே
தள்ளியவ் விசயனை விடுத்தான், (15)

1603. விசயன்மா மகனை விளித்துமே லரசன்
வெஞ்சினத் தொடுசிவத் துரோகி
வசையறு சிவபத் தன்கலை கொணர்ந்தாய்
மனுநெறி விசாரியா தடுத்த
திசைசிவத் துரோகி தனைவதைத் திடவே
செப்புவர் முனிவர ரென்றே
யிசைவுறத் தடியா திருக்கில்வெம் பாவம்
எனக்குமா மென்றுமுன் தடிந்தான். (16)

1604, அதுதனை விசய னேக்கியே கரன்பா
லடுத்திடு தருமனைக் குறித்துக்
கதுமெனக் கொடிய நிந்தைசெய் திகழ்ந்து
கடுத்துடன் தன்மனை புகுந்தான்
இதுவென விசயன் மகன்சிவத் துரோகி
யென்றறிந் தும்பய மிலாமல்
அதிகநிந் தைகளை யென்முனம் பகர்ந்தான்
அவனுமே வதைத்திடப் படுவான். (17)

1601. எவர் தூசு இவர்வார்—எவர் ஆடையை விரும்பிக் கவர்வார். இவர்தல்—விரும்புதல்.
1602. உக்கு—உவ்விடம்,

1605. மற்றிதற் கைய மிலையெனக் குரிசில்
மனைபுகும் விசயனை யழைத்துச்
செற்றமோ டவனில் லிடத்துறு தனங்கள்
சேரவே தகைந்தனன் மனன்பால்
உற்றிடு விசய னிருபனைக் கோபித்
துள்ளத்திடை நாரசிங் கத்தைச்
சற்றுணர்ந் தனனப் பகல்நர சிங்கஞ்
சடுதிவந் ததுவெளிப் பட்டே. (18)

1606. எண்டிசை முழுதுஞ் செவிடுபட் டிர்ங்க
இடியுரு மேறெனு முழங்கிக்
கொண்டட னெதிர்ந்து விசயனுண் ணடுங்கக்
குறித்துநீ நிந்தைகள் பலவு
மிண்டிநற் சிவபத் தனையுரைத் தனையிவ்
வேலையுன் றனைக்கொல்வே னென்று
மண்டுபொற் கரங்கள் பற்றிமன் னவன்முன்
வதைத்தொரு வாசகம் புகலும் ; (19)

1607. கனைகழற் குரிசில் ! சிவத்துரோ கங்கள்
கடற்புவி தனிலொருக் காலுந்
தினைநொய்யி னளவு மின்றியோ ராழி
செலுத்தியெண் டிக்கினும் புரந்து
நினைவுடன் மடியற் றிகற்படை கடிந்து
நீதியிற் காத்தருள் புரிதி
பினையெனு தெனைநீ நினைத்திடி லடைந்து
பெருவலி யிகல்தொலைக் குதுமால். (20)

1608. உளத்தினி னினைத்த தனைத்தையு மளித்தே
யுனைத்தினம் பரித்தருள் கின்றேம்
வளத்தெம தடிமை யெனினுமைக் கடலின்
— மறித்தெழு கடுவிடத் தொகுதி
களத்தினி லடக்கும் பரற்கொரு துரோகங்
கருத்தினி லிழைத்தவன் றனைக்கொன்
றளற்றிடைப் புரட்டி யமிழ்த்திவெள் வாய்விட்
டரற்றிட வதைத்திடு விப்போம். (21)

1605. மனன்—மன்னன்.

1609. அனவர தமுமே சிவனடி யவரை
யருச்சனை புரிந்தவர் வேண்டுந்
தனநிதி பதிக ளறுசுவை யடிசில்
தருகலை யுதவியா தரவால்
மனமொழி யுடல மொருமையோ டிறைஞ்சி
வருதியென் றுடன்மறைந் ததுபின்
கனமுகில் படியு மனையிடை வதிந்தே
கரன்மகிழ் தருமனை யழைத்தே. (22)

1610. கூலபல நிதியோ டுதவிமற் றவன்தன்
கலையளித் தனுப்பினன் அதற்பின்
தொலைவில்பா தகஞ்செய் விசயனுங் கொடிய
சூரனும் அருநர கதனில்
நிலைகுலைந் தழிகின் றனரெனக் கேளா
நிமலமா முனிசதா னந்தன்
மலைவற அருள்நந் தியையயல் அளற்றில்
வருந்துவோ ரியாரெனப் புகன்றான். (23)

அத்தியாயம் 58.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவகுரவரைப் பழித்த துரோகம்

பாசுபத பாரதியைப் பழித்தோர் கதை.

சூத முனிவர் சொல்கிறார்: சோனகம் என்னும் நாட்டிற் சோனகம் என்ற நகரத்து அரசனான கலாதரனுடைய சபையில் ஒருநாள் பல சமய வாதிகளுந் தத்தம் கொள்கைகளைக் கூறினர். சைவத் தவ விரதியான பாசுபத பாரதி "சிவனே போற்றத் தகும் இறைவன். சைவ நெறியே மெய்ந்நெறி. அந்நெறியைப் பற்றினோர்க்கே பரமுத்தி. நிறைபோகமும், எண்வகைச் செல்வமும், சித்தி பலவும், சார்வபௌமத்துவமும், சுவர்க்காதிபத்தியமும், பிரமத்துவமும், வைணவத்துவமும் அவருக்கே எய்தும்" என்றுரைத்தார்; இக்கூற்றைப் பொறுக்க முடியாத வைணவத் துறவியான பரவாசுதேவ பாரதி, 'அரசே! சிவனுக்குத் தலைமை எங்ஙனம் கூறலாம். அவன் தாமத குணமுடையோன். தோலும், என்பும், சுடலை நீறும், பாம்பு மணிந்து

1610, அளறு—நரகம்,

சுடலையை உறைவிடமாகக் கொண்டவன்; பூதப்படையுடையோன்' என்று சிவநிந்தை புகன்றான். இதைக் கேட்ட பாசுபதபாரதி நடுங்கி இரு செவியும் புதைத்து, "அந்தோ! பேதையே! சிறிதளவும் சிவமான்மியந் தெரியாமற் பேசுகின்றாய். திருமால் நான்முகன் முதலியோர் அநித்தியரென விளக்க அவர்களின் தலை மாலைகளையும் என்புகளையும் அவர்களை நுதல் விழியால் எரித்த நீற்றினையும் எம்பெருமான் அணிந்தார். சங்காரம் அனைத்தையும் புரியும் இடமே மயானமாகும். கொன்றைச் சடையோர் அங்கே கொடு கொட்டி என்னும் தாண்டவம் புரிவார். அதனால் அவர் மயான நிலையோன் ஆவர். விபு வாகிய அவரை அறியாத உலகம் அவமே அடையும். பிரமன் ஒருகாலத்தில் அரியை நோக்கி, 'நின் அடியவர் பாசண்ட மதத்தினராகிச் சிவனை யிகழ்ந்து, நரகத்தில் இடர்ப்படுவர்' எனச் சபித்தான். அந்தச் சாபத்துக்கு நீயே முதற் பாத்திரம். தூய நீறும் கண்டிகையும் அற்ற உனை நோக்குவதும் பெரும்பாவம்! சிவனை யிகழ்ந்ததனால் அமரர்கள் தக்கன் மகத்தில் அடைந்த நிலையை அறியாயோ?" என்றார்.

அப்போது பிரமகேசரி யென்னும் அந்தணன் 'பாசுபத பாரதியே! வெண்ணீறணிவதாற் பயனுண்டோ? மரத்தில் உண்டாகும் உருத்திராக்கம் என்ன பயனைத் தரும்? மெய்ஞ்ஞானம் ஒன்றே முத்தியைத் தர வல்லது' என்றான். பாசுபத பாரதி சினந்து, "சுருதி புராணங்களைப் படித்ததனால் நீ பெற்ற பயனொன்றுமில்லை. சைவாகமங்களும் மறைகளும் புராணங்களும் 'கண்டி வெண்ணீறணிந்த பெருமையினால் முத்தி' என்று பேசும். பாவிகளாயினும் இவற்றை யணிவோர் புனிதராவர்; அணியாதார் பாவிகளாவர்' என்றார். இதைக்கேட்ட பிரமகேசரி குதர்க்கம் பேச, பாசுபத பாரதி மன்னனை நோக்கி, 'அரசே! நின் அவையிற் குதர்க்கம் ஏன் பேசவேண்டும்' என்றார். அப்போது பாசுபத பாரதியின் மாணாக்கன் வசு என்பவன் ஆசிரியரைப் பார்த்துத், 'துறவியாகிய நீ இவ்வாறு கலகம் புரிவதால் ஏது பயன்?' என்ற போது, சிவநிந்தையாலே தீமை வருமென்று பாசுபத பாரதி பகர்ந்தார். மாணவனோ 'கலகம் வேண்டாம். நரகம் போனாலென்ன? முத்தியிற் புகுந்தாலென்ன? நாம் போவோம்' என்றான். பாசுபத பாரதி, 'அருட் சிவ சம்மதம் பெற்ற நான் குருடனேனும் இந்தப் பேரவையிலே அவரவர்க்கேற்றவாறு வாதம் புரிந்து சிவமே பரமென நிலைப்படுத்துவேன்' என்றவுடன், வசு 'ஆசிரியரே! நீங்கள் இருங்கள்' என்று கூறிப் போய்விட்டான்.

அப்போது பிரமகேசரி, 'அந்தோ! கண்ணிழந்த பாசுபத பாரதிக்கு இனி வழிகாட்டுவோர் யார். கண்ணொடு அறிவையும் இழந்ததால் இந்நிலை பெற்றான்' என்று எள்ளி நகையாடியதைப் பரமசாந்தன் என்போன் கண்டு வெகுண்டு, 'பசுபத பாரதிக்கு நான் இனி அடிமை; வழியுங் காட்டுவேன். உனக்கு வந்தது என்ன?' என்று கூறி விட்டுப் பாசுபத பாரதியை நோக்கி, 'எந்தாய்! முனிவர் தலைவனான நீயே சிவபிரான். அடியேன் எப்போதும்

உன் மாணாக்கன். அக்கமணியும் நீறும் அணியும் எவர்க்கும் நான் அடிமை. உன் கையைப்பற்றி அழைத்துச் செல்லும் பேறு நல்குக!' என்று பணிவுடன் புகன்றான், பாசுபத பாரதி மகிழ்ந்து பரம சாந்தன் மெய்யைத் தடவிப் பார்த்துப் பேரருளுடன் அவன் கையைப் பற்றிக்கொண்டு, 'சிவ பத்தனை நீயே என் புதல்வன்' என இன்மொழி இயம்பினான்.

அப்போது பத்திரன் எனும் மறையவன் மனம்புழுங்கிப் 'பரமசாந்தன் பரத்தை கேள்வன்' என மொழிந்தான். பாசுபத பாரதி, 'என் பாதகம் பகர்கிறாய்? யாவனேனும் நீறுங் கண்டியும் அணிவோன் நின்மலன் அல்லனோ' என்றுரைத்து விட்டு, மன்னனை நோக்கி, 'அரசே! சிவ நிந்தை புரிந்த வாசுதேவ பாரதி, விபூதி ருத்ராக்ஷத்தை இகழ்ந்த பிரமகேசரி, எனக்கு வஞ்சஞ் செய்த மாணாக்கன் வசு, சிவ பத்தனை நிந்தித்த பத்திரன் இவர்கள் நால்வரும் கொடும் பாதகர்கள். அவர்களை நீ தண்டிக்க வேண்டும்; அல்லாக்கால் நான் கொல்விப்பேன்' என்றார். அரசன் பாசுபத பாரதியை வணங்கி 'ஐயா! சிவமான்மியத்தால் நீர் உமது கண்பார்வையைப் பெற்று நீரே அவர்களைத் தண்டிக்கலாம்' என்றான். அப்போது பரமன் அருளாலே பாரதி கண்பார்வை பெற்றுச் சிவநிந்தை புகன்ற இந்நால்வரும் இடி வீழ்ந்து இறக்கக் கடவர்' எனச் சபித்தார். அவ்வாறே நால்வரும் இடி வீழ்ந்து அங்கேயே இறந்தனர்.

பாசுபத பாரதி அரசனைப் பார்த்து, 'அரசே! நான் இவர்கட்குத் தக்க தண்டம் புரிந்தேன். நீ இவர்களை ஆதரித்ததாலே கழுதை யாகக் கடவாய்' என்று சபித்தார். அரசன் நடுங்கி மன்னிக்குமாறு வேண்ட, 'சிவத்துரோகத்துக்குக் கழுவாய் இல்லை' என்று கூறிச் சென்றார்.

அத்தியாயம் 58.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சிவ குரவரைப் பழித்த துரோகம்.

அறுசீர் விருத்தம்

1611. இந்தியமைந் தடக்குமுனி வரர்கேட்பச்
சூதமுனி யியம்ப லுற்றான்
தந்தியுரி புனைகடவுள் நிந்தைபுரி
பவரும்விதி தரிக்கு நீறு
நிந்தைபுரி பவருமிகு குரவநிந்தை
புரிபவரு நிமல மாக
வந்தஅக்க மணிநிந்தை புரிபவரும்
அடியர்நிந்தை வசனிப் போரும், (1)

1612. அனைவருமுள் நடுங்கமிகு கோரநர
கத்தினிடை யளப்பில் காலம்
நினைவறவெய் துற்றழுங்கக் கொடியவிரு
கடைப்புருவ நெறித்துத் தூதர்
முனைவயிரப் படைசெலுத்தி வருத்தஇடர்ப்
படுவோர்கள் முற்று கதை
தனைவியப்பி னுளத்துறவீர்! நுங்கட்கீ
தென்றெடுத்துச் சாற்று வேனால். (2)

பாசுபத பாரதியைப் பழித்தோர் கதை.

1613. கூர்ந்தவரி விழியளிகள் நாசிகா
புடைத்தயலிற் குறித்துப் பாய்ந்து
சேர்ந்துவருத் தியதெனவுட் கொண்டுபழம்
பகைவெல்லச் சிந்தித் தேமால்
ஆர்ந்தமட வரல்நாசி யளிவீழ்ந்தால்
உயிர்விடுமென் றறிந்து சோலை
சேர்ந்துசெண் பகமாகச் சோனகமாம்
பெயருடைய தேயத் தம்மா, (3)

1614. விளிக்குமதர் விழிக்கணிகை யரமியத்தூ
டும்பரர விந்த நான்ற
பளிக்குமணி மண்டபங்கண் டரசிளங் கோக்
குமரர்சென்று பரத்தை மாதர்
குளிக்கு மலர்ப் பொய்கையென முடிக்கலனு
ணவிழ்த்திருகை குடையச் செல்போ(து)
ஒளிக்கு நுண்ணூ லிடைக்கொடியார் நகைத்திடுசோ
னகபுரத்தி னுவந்து வாழ்வான். (4)

1615. கலைகொண்ட மதியனைய குரிசில்கலா
தரன்தருமங் கதித்த கோமான்
துலைகொண்ட நிறையுடைய கலையுணர்ந்த
தமருடனே தூய கன்மம்
நிலைகொண்ட மனுநீதி முறைபார்ப்பார்ப்
பிரித்தருளும் நிருபன் செம்பொன்
மலைகொண்ட சூளிகைசே ரவைக்கனக
மண்டபத்தில் வதிந்த போது, (5)

1613. நாசிகை—மூக்கு.
1614. அரமியம்—முற்றம்.

1616. விரிந்தபுக ழருங்கவிஞர் கமகர்வா
 தியர்வாக்கு மிகுத்து ளோர்சொல்
தெரிந்தபொரு ளுணர்ந்தருள்பண் டிதர்சித்தர்
 யோகியராச் சிரமத் தோர்கள்
பொருந்தவிவ ருடன்மறையோர் தமக்குளொரு
 வர்க்கொருவர் புகல்கா தைச்சொல்
பரிந்ததவ ரவர்தெரிந்த படியுரைக்கும்
 ஏல்லையங்கண் பயந்த தாமால். (6)

எண்சீர் விருத்தம்

1617. தொழுதருமா விரதியதி புங்கவனு மெய்த்
 துறவிமிகுபாசுபத பாரதி யெனும்பேர்ப்
பழுதின்முனி வரன்கலா தரவரசன் தனையே
 பார்த்தரிய தருமத்திற் பரமான தருமம்
முழுதுலகில் அனைவருக்குஞ் சிவனேயெப் போதும்
 முறைமையிலேத் தப்படுவோன் [முத்திபொருட் டாயெப்
பொழுதுமறி யப்படுவோன் தியானிக்கப் படுவோன்
 போற்றுமவ னேபரப் பிரமமுண்மை யரசே! (7)

1618. ஓங்குசிவ னேபரஞ் சோதிபரந் தாமன்
 உற்றிடுகா ரணங்கட்கெல் லாங்கார ணனும்
தாங்குபரா யணன்தேவர் தமக்கெல்லாந் தேவன்
 சகலருமற் றவனைவணங் கிடுவோரே தக்கோர்
நீங்கலரும் அவருக்கே பரமுத்தி யவற்கே
 நிறைந்திடுபோ கமுமவற்கே யெண்செல்வ [மவற்கே
யாங்குசித்தி சார்வபவு மத்துவமு மவற்கே
 பற்றுசுவர்க் காதிபத்தி யமுமவற்கே யாமால். (8)

1616. **கவி, கமகன் வாதி, வாக்கி—எனப் புலமையோர் நால்வர். கவி—நால்வகைக்கவியும் பாடவல்லவன்; கமகன்—நுண்ணறிவாலும் கல்விச் செல்வத்தாலும் கல்லாத நூற்பொருளையும் எடுத்துரைக்க வல்லவன்; வாதி—பிறர்கோள் மறுத்துத் தன்கொள்கையை நிறுத்தவல்லவன்; வாக்கி—அறம், பொருள், இன்பம், வீடு—என்னும் நாற்பொருளையும் விரித்துரைக்க வல்லவன்.**

1619. மன்னவரே றே! பிரமத் துவமவற்கே சோதி
வைணவத் துவமவற்கே யென்றிடுமவ் வேலை
பன்னருஞ்சீர் புகழ்படைத்த துறவியர்புங் கவனும்
பரவாசு தேவபா ரதியுளத்திற் பொருமல்
தன்னிகர்மன் னனைவிளித்தே சிவாதிக்க மென்கொல்
தாமதமா கியகுணமே தக்கவுருத் திரனும்
பின்னரத னென்புசவ நீறணிவோன் சுடலை
பெருநிலைய மாயுறைவோன் பேரணிபா ரிடமே. ()

1620. அனவரத போகரத னவன்பிரம மென்றே
யறைகுவதெப் படியரசே! அன்றியும் வெம் புயங்கம்
புனையுமணி கலனவனெப் படிபுத்தி முத்தி
புரப்பனென்று பரவாசு தேவபா ரதிதான்
மனமறுகச் சிவநிந்தை புகன்றதுகேட் டிருகை
மணிச்செவியிற் பாசுபத பாரதிவைத் தந்தோ
தினையளவா யினுஞ்சிவமான் மியமறியா துரைத்தாய்
சிந்தைதெளி குதியவையான் செப்பக்கேண் மதியே. (10)

1621. திங்களணி குடிலசடைக் கண்ணுதன்முன் வதைக்கச்
சென்றிறந்த அரிபிரமர் சிரங்களுமென் புகளும்
அங்கவர்மெய் யவனுதற்கட் பொறியிலெரிந் திடுநீ
றனைத்தையுமேல் வருமயன்மா லனித்தியரென் [றுணர்ந்து
துங்கவடி விற்றரித்தார் கலைபலதேர்ந் துணர்ந்தோர்
சொற்றிடுவ ரெப்பொழுதுந் தொல்லுலகிற் [சவங்கள்
தங்குதல மேமயா னத்தலமென் றறைந்தி
சங்கார மனைத்தையுஞ்செய் தானமயா னமதால். ()

1622. கொன்றைகம ழுச்சடையோ னந்தமயா னத்திற்
கொடுகொட்டி யொருவனு யம்பிகைபார்த் தருள
என்றுநடித் திடுமதனுன் மயானநிலை யோனும்
எல்லோரை யும்வதைக்குஞ் சங்காரக் கடவுள்

1620. போகரதன்—போகன்—சிவன்.

1622. விபு—கடவுள்.

வென்றிபெறு விபுவெனவே சொலப்படும்பூ லோகம்
விமலன்மிகு மான்மியமோர் சிறிதுமறி யாமல்
நின்றுபா ரவப்படுமென் றறைந்துமைபா கனையே
நிந்தைசொல்வோன் தனைநோக்கி நிகழ்த்துவநா
[லுணர்ந்தே. (12)

1623. பிரனுவ ணக்கடவுள் தனைநோக்கி யரியே
பெருத்திடுநின் னடியவர்கள் பிரித்துனையெப்
[போதும்
பரனெனக்கொண் டுணரொருகோற் பகவர்முக்கோற்
[பகவர்
பாசண்ட மதமாகிப் பரப்பிரம மான
அரனையிகழ்ந் தெரிநரகி லளப்பருநாள் வீழ்வார்
ஐயமிலை யெனச்சபித்த அருஞ்சூள்பொய் யன்றே
வரமிகுசா பத்தினுற் கெடுவை யந்தச் சாப
வாசகத்துக் கென்றும்நீ வருமுதற்பாத் திரமே.* ()

1624. புனிதமணிக் கண்டிவெண்ணீ றற்றவனை நோக்கிப்
புகன்றிடினு மரும்பாவம் பொருக்கெனவந் தடை
[யும்
இனியதனுக் கையமிலை முனந்தக்கன் மகத்தே
யிருந்திமையோ ரிருடியர்நின் றிகழாம லவன்தன்
மனதுவரப் புகன்றுசிவத் துரோகத்தால் வீரன்
வதைக்கமுடி கரஞ் சரண மணிக்குடர்வெவ்
[வேருய்த்
தனதறஅங் கந்தடியப் பட்டனர்வெஞ் சூரன்
தன்னுலுமிடர்ப்பட்டுத் தளர்ந்துவருந் தினரே. ()

1625. நிரந்தரமி யாதொருத்தன் மத்தகத்திற் புனித
நீறிலையங் கத்தின்மணி கண்டியிலை வேண்டும்
வரந்தருமெய்ச் சுருதியுணர் பிராமணனு கிலுமே
மற்றவனை யறிஞர்கள் நாய்க்கொத்திடுவோனென்று
துரந்திகழ்ந்து தணந்திடுவா ராகையினு லுன்சொல்
தூரத்திற் கேட்பினும்பார்க் கினும்பெரும்பாதகமாம்
அரந்தையுறு மெனுமேல்வை மவைமிகுமோ கமதா
யறைபிரம கேசிப்பே ரந்தணனெனுந் துடன்றே. (15)

1623. நீ—பரவாசதேவன்,

1626. பாசுபத பாரதியைப் பார்த்தொருசொற் புகல்வான்
பண்ணவனே! வெண்ணீறு பரித்ததனாற் பயனென்
வீசுதரு விற்பிறந்த விதையுருத்தி ராக்கம்
மிலைந்ததனா லென்னபயன் மெய்ஞ்ஞான மன்றித்
தேசுபெறு முத்திவரா தக்கமணி நீற்றாற்
சேருமுத்தி யிலையெனமன் சேர்ந்தஅவை [யினிலோர்
வாசகஞ்சொற் றனையென்று மறையவனை நோக்கி
மாதவஞ்சேர் பாசுபத பாரதிசொற் றிடுமால். (16)

1627. சுருதிபுரா ணம்புகன்ற மொழியனைத்துங் கேட்டுந்
தொழுகுலத்தோர் தனிலதம னுமுனக்குக் கதியே
தொருமைபெறு ஞானிகளா மவர்க்குமுத லாக
உரைப்பருமா பாதகர்க்குங் கண்டிவெண்ணீ [றணிந்த
பெருமையினான் முத்தியென்று சகல சைவா கமமும்
பிஞ்ஞகன்வே தமுமெந்தை புராணமுஞ்சாற் [றிடுமால்
இருநிலத்து முழுமுதலு முணர்ந்தோர்தா பதர்கள்
ஈசர்கண்டி மாலிகைநீ றேத்தியணி குவரால். (17)

1628. பாதகரா கிலுமக்க மணிநீறு தரித்தோர்
பரசிவனைத் திருப்பரந்தப் பண்ணவரே புனிதர்
ஏதுதரி யாதவர்மா தவரெனினும் பொல்லா
ஈனர்கொடும் பாதகரென் றிப்படிசொற் றனனப்
போதுகது மெனமீளப் பிரமகே சரியாம்
பூசுரகு லாதமன்பின் குதர்க்க வுத்தி புகன்றான்
ஆதபனோர் பாசுபத பாரதிமன் னவற்பார்த்
தரசே! நின் னவைகுதர்க்க மறைந்ததென்கொல் [பழுதே. (18)

1629. மாசுணச்செஞ் சுடிகைமுடிக் கிடந்தபுவிச் சுமையை
மாற்றிமணிப் புயகிரியில் வைத்தருளுங் கோமான்
பாசவினைக் கட்டகற்றுஞ் சாத்திரஞ்சொல் பகலுன்
பருமணிச்சிங் காசனச்சன் னிதிமுனிவர் வந்து

1626. மெய்ஞ்ஞானம் அன்றி—மெய்ஞ்ஞானத்தால் அல்லாமல் முத்தி வராது). மன்—அரசன்.

பேசுகுதர்க் கப்பலவுத் திகளுரைத்தா ரென்னப்
பின்னரங்கண் பாசுபத பாரதிமா ணுக்கன்
தேசிக ! நீ துறவி; கல கத்தாலிப் போது
சேர்ந்தபல மென்னே! நாம் செல்வோமென்
[றுரைத்தான், (19)

1630. பாசுபத பாரதிமீ ளவுமாணுக் கனையே
பார்த்துரைப்பா னிவர்கள்சிவத் துரோகிதமாம்
[நிந்தை
பேசுவத னல்தீது நமக்குவரு மென்னப்
பின்னருமா ணுக்கனுரைப் பானமக்குத் தீதேன்
மாசுரைப்ப தென்னபல னவர்கள்சுவர்க் கந்தான்
மாநரகந் தான்போவர் வாளாநா மிவண்வி ட்(டு)
ஏசறச்செல் வோமென்று னன்னவனை நோக்கி
யியம்புவன்பின் பாசபத பாரதிமா தவனே. (20)

1631. அந்தனென விருந்துமவ னருட்சிவசம் மதனே
யாகையினு லுரைப்பனிவ ணகல்வதுநன் றல்ல
எந்தவகை யுங்குரிசி லவையிலிருந் தவர்கட்
கேற்கவவ ருத்தரத்துக் குத்தரங்கள் புகல்வேன்
புந்திதளர் குவதிலையென் றிடுபகல்மா ணுக்கன்
பூரியன்வெங் கோபத்தாற் பொருக்கெனவே
[புகல்வான்
எந்தைபக வானிவண்நீ யிருக்குகயா னிங்கன்விட்
டேகுவனென் றுரல்லையெழுந் திருந்தனனவ்
[வேல்லை. (21)

1632. பிரமகே சரிபுகல்வா னந்தனெனக் கருதிப்
பின்னர்மிகு பாசுபத பாரதியை நோக்கி
வரமிகுதக் கோய்! மாணுக் கனைவிடுத்தாய் அந்தோ
மார்க்கதரி சிகளார்கொல் விழியுனக்குத் தெரியா(து)

1629. மாணுக்கன்—இவன்பெயர் வசு. செய்யுள் 1637 பார்க்க.

1630. ஏசற—ஏசுதல் அற; இகழ்தல் அற.

1631. அந்தன்—அந்தகன்—குருடன். பூரியன்—கீழோன்.

1632. சரி—வழி,

இருவிழிபோ யினவன்றி மதியும்போ யினதோ
என்றபகற் பரமசாந் தப்பெயர்வே தியனுத்
தரமொருசொற் பிரமகே சரிக்குரைப்பான் நீயென்
சாற்றினைநா னிவற்கடிமை சரியுங்காட் டுவனே. ()

1633. அருந்தவனும் பாசுபத பாரதிக்குத் துரோகி
யானவன்மா னுக்கனல னவன்போனு லென்ன
வருந்தலுனக் கேதென்று பகர்ந்தபின்னர் தக்கோர்
வழிபடப்பட் டருள்பாசு பாரதியை நோக்கிப்
புரந்தருளெந் தாயிருடி புங்கவனீ வடிவாய்ப்
பூவில்வெளிப் பட்டசிவன் போலுமடி யேன்தான்
நிரந்தரனு நிழலினின்பம் போற்றிவழி படுவன்
நின்மலக்கண் ணேய்! சுருதி சாத்திரங்க ளுணர்ந்தே.

1634. அக்கமணி நீறுதின மணிபவன்யா வனுக்கும்
அடிமைமையென வுரியேனீ யருளாற்கை பிடிக்கத்
தக்கபாத் திரமெளியே னென்றுரைத்த பரம
சாந்தன்வடி வினைவேத சாத்திரங்க ளுணர்ந்த
மிக்கமுநி பாசுபத பாரதிகை களினுல்
விரும்பியரு ளால்நீவி விரைந்துகரம் பற்றி
யொக்கவணைத் தேசிவபத் தன்புதல்வ வனீயும்
ஓங்குசிவ பத்தனு முளமகிழ்த் தமனே. (24)

1635. என்றுமொழி கருணைமுழு துங்கனிந்து சுரந்தூற்
றிருந்துமிழ்ந்து கான்றுசுவை யிரதமது ரமதாய்
நின்றருளும் பாசுபத பாரதியாந் துறவி
நின்மலன்பே ரவையயலில் நினைத்தோர்ந்து
[பொருமற்
கன்றுமனம் புழுங்கியபத் திரனெனும்பேர் மறையோன்
கதுமெனவே பாசுபத பாரதியை நோக்கி
வென்றதுற வோய்! நீமுன் னறிந்திலைகொ லுரைக்கேன்
மிகுபரம சாந்தனெனும் வேதியன்தன்
[செயலே. (25)

1633. உனக்கு—பிரமகேசரியைக் குறிக்கும்; பூ—பூமி; நிரந்தரனு—நிரந்தரனுக. நிழலின்—நிழல்போல. நின்மலக்கண்ணேய்—குற்றமற்ற ஞானக்கண் உடையவரே.

1634. நீவி—தடவி.

1636. பரத்தைபதி விப்பிரபா லகனிவனென் றுரைத்தாய்
பாதகமேன் பகர்கின்றாய் பவித்திரநீ றக்கஞ்
சிரத்தையொடு தரித்தவரே சுத்தருல கனைத்துந்
திப்பியமாக் கும்பூதர் தீதவர்கட் கிலையால்
வரத்தையருள் சிவபத்தன் தனையவையில் நிந்தை
வாசகஞ்சொற் றனையென்று மறுத்துரைத்த [பினுந்தன்
உரத்தையறிந் திகல்தடிந்தெண் டிக்கினுமோ ராழி
யுருட்டியருள் குரிசிலைப்பார்த் தொருமொழிசொற் [றனனே. (26)

1637. சிறப்பொடாறு தெரிசனஞ்சே ரறிஞனைப்போ லிருந்து
சிவநிந்தை புரிவாசு தேவபா ரதியும்
பிறப்பொடிறப் பகற்றுமக்க மாமணிவெண் ணீற்றின்
பெருமைகளை நிந்தித்த பிரமகே சரியும்
நிறப்படிகம் நிகரெமக்கு மாணுக்க னாகி
நின்றுவஞ்சஞ் செய்துகுரு நிந்தைபுரி வசுவும்
அறப்பகுதி யுணர்ந்துவருஞ் சிவபத்தர் நிந்தை
யடாதுபுரி பத்திரனு மருங்கொடும்பா தகரே. (27)

1638. விருதபரி மிதங்குறிக்குஞ் சின்னங்க ளிரட்ட
விறற்படைகொ டெதிர்த்தவரை வியன்மகளிர் [தமக்குக்
கருதுமுடி பிடுங்குபுல வகற்றவுட லசைத்துக்
கருஞ்சாணை பிடித்துநிணங் கழுவிநெய்மேற் [குளித்துப்
பொருதவடி வாளெடுத்திந் நால்வரையும் நிந்தை
புகன்றிடுவெள் வாய்க்குருதி கக்கநிரை நிறுத்தி
யிருதலையோ டொருதலையாப் பிணித்தரசே! தடிதி
யின்றெனில்வெஞ் சினத்தொடியா மிவர்முடி [மாய்க்குதுமே. (28)

1636. இச்செய்யுளின் முன் பாடல் விடுபட்டிருக்கவேண்டும்.

1637. ஆறு தரிசனம்—காட்சி ஆறு.

1639. என்றருளும் பாசபத பாரதியை நோக்கி
யிறைஞ்சிமணி முடிவேந்த னியம்புவன் தக்
[கோய்! நின்
வென்றிபெறு மான்மியத்தாற் கண்கள்பெற்றுப் பின்னர்
விரைந்திவரைத் தடிதியென்ற வேலையிருந் துறவி
மன்றினடித் தருள்குழக நம்பன்தாள் சேர்தன்
மான்மியத்தாற் பாசுபத பாரதிகண் பெற்றுக்
கன்றியுருத் திந்நால்வர் முடிவீழ அசனி
கடிதுவிழக் கடவதென்று கடுஞ்சாபமுரைத்தான்.

1640. அக்கணமே புரவலன்மு னனைவருநோக் குறவே
அண்டமுக டிடிபடநின் றூர்ப்பரித்துக் குமுறி
மிக்கதிசை செவிடுபடப் பிறந்தஇடி யேறு
வீழ்ந்ததிவர் முடிநான்கும் வெடித்துயிருண் டுழந்த
தொக்க அயல் கண்டுளமெய்ந் நடுங்குறு சிலைப்பார்த்
தொளிறுவடி வாளரசே! யுன்முன்மற் றிவர்க்குத்
தக்கதண்டம் புரிந்தனம் நீ யிவர்களைத்தா பரித்த
தகைமையினாற் கரமாகச் சனித்திடுகென்
[றுரைத்தான். (30)

1641. அக்காலை யரசனுளம் பயந்துநடு நடுங்கி
யட்டாங்கம் பூவுறவீழ்ந் தாதரித்துப் பணிந்து
தக்கோய்! மற் றெளியேனஞ் ஞானத்தா லபரா
தங்கள்புரிந் தனவெல்லாந் தகைமையினாற்
[பொறுத்தி
யெக்காலு முனதடிமை யென்றுகரங் கூப்பி
யிறைஞ்சி நின்ற புரவலனை யெரிவிழியாற்
[பார்த்துச்
சிக்காமா பாதகத்துக் குண்டுபுகல் சாந்தி
சிவத்துரோ கவ்வுரைக்குச் செயுஞ்சாந்தி யிலையே()

1640. தாபரித்தல்—ஆதரித்தல். கரம்—கழுதை.

அத்தியாயம் 59.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

விராகன் முதலியோர் செய்த சிவத் துரோகம் (கதை.)

நந்திகேசர் சதானந்தரைப் பார்த்துக் கூறுகின்றார். கலிங்கம் என்ற நாட்டில், கடகம் என்ற நகரில் அரசன் மகன் விராகனும், அமைச்சன் மகன் சுதந்திரனும், புரோகிதன் மகன் சுனந்தனும், வாயிற் காவலன் மகன் சுகுந்தனும் மனமொத்த நண்பர்களாய்த் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டு, இரவில் சுவரம் என்னும் ஊரில் தங்கினார்கள். அரசன் மகன் திருக் கோயிலிலும், அமைச்சன் மகன் சிவயோகியார் மடத்திலும், புரோகிதன் புதல்வன் ஒரு சிவபக்தன் வீட்டிலும், வாயில் காப்போன் மகன் சிவன் கோயில் நந்தவனத்திலும் தூங்கினார்கள். மறுநாள் காலையில் அவ்வூரை விட்டுப் புறப்பட்ட போது வழியிற் கவுதம முனிவரைத் தரிசித்து வணங்கினார்கள். அவர் இவர்களை நோக்கி நீங்கள் அறிவின்றிச் செருக்குடன் செய்த சிவத்துரோகத்தால் இன்று மாலையில் உயிர் இழப்பீர்கள்' என்றனர். நாங்கள் யாது குற்றம் செய்தோம் என அவர்கள் கேட்க, 'விராகன் சிவன் கோயிலில் தூங்கின பொழுது தலைமயிர் அவிழ்ந்து மயிர் கோயிலில் விழுந்தது குற்றம்; சுதந்திரனது தாம்பூல எச்சில்சிவயோகியாரின் மடத்தில் விழுந்தது குற்றம், சுனந்தன் வாய் கொப்புளித்த நீரைச் சிவபக்தன் மிதிக்க நேர்ந்தது குற்றம், சுகுந்தன் நந்தவனத்தில் கோழையைத் துப்பினது குற்றம்'—என அவர் விளக்கிச் சென்றார். கௌதமர் கூறிய வண்ணமே, விராகன் தலைநோயாலும், சுதந்திரன் நெஞ்சடைப்பாலும், சுனந்தன் நா இற்று விழுந்ததாலும், சுகுந்தன் மூக்கில் இரத்தம் ஒழுகிப் பெருகினதாலும் இறந்தார்கள். இறந்த பின் நரகில் விராகன் தனது தலையில் காரீயத்தைக் காய்ச்சி ஊற்ற வருந்துகின்றான்; சுதந்திரன் வாயில் செம்பை உருக்கி ஊற்ற வேதனைப் படுகின்றான்; சுனந்தன் பல் உகுமாறு உடைக்கப்பட்டுத் துன்புறுகிறான்; சுகுந்தன் மூக்கில் நாராசம் புகப் பெற்றுப் பதைக்கின்றான்: இம்மட்டோ! இவர்கள் தந்தையரும் முன்னோரும் கூட இவர்கள் செய்த அபசாரத்தால் நரகவேதனை உறுகின்றார்கள். இவர்களுக்கு மீட்சியே இல்லை—என இவ்வாறு நந்தீசர் விளக்க—இது வரையும் சிவத்துரோகிகளைப்பற்றி உரையாடினதற்குச் சிவதரிசனமே சாந்தி என்று நந்தீசர், சதானந்தர், பிரமா, விஷ்ணு நால்வரும் சிவ சந்நிதியை அடைந்து வணங்கினார்கள். சிவபெருமான் சதாநந்தரை நோக்கி 'விரும்பின யாவையுங் கேட்டாயிற்றே' எனச், சதானந்தர் 'நந்தீசர் அருளால் யாவையுந் தெளிந்து உய்ந்தேன்' என்று கூறி வணங்கினர்: பின்பு, சதானந்தரும் மாலும் பிரமனும் சிவபிரானையும் நந்தீசரையும் வணங்கி விடை பெற்றுத் தத்தம் இடத்துக்குச் சென்றனர்.

இங்ஙனம் சூதமுனிவர் கூறக்கேட்ட முனிவர்கள் 'பின்னும் நரகவேதனை அடைந்தோர் சரித்திரங்களை விளக்கவேண்டும்' என வேண்டினர்.

அத்தியாயம் 59

சிவத்துரோகிகள் நரக வேதனை—தொடர்ச்சி

எண்சீர் விருத்தம்

1642. ஆடரவம் அரைக்கசைத்த அண்ணல்முக்கட் பெருமான்
ஆகமங்கள் சுருதிகளோ டாராய்ந்து தெளிந்து
நாடரிய பரம்பிரமம் பரசிவனே யென்று
நாதாந்த சித்தாந்தம் நவில்கருணைச் சூதன்
வீடமலர்க் கருள்சிவன்மான் மியத்திலொரு காதை
விளம்பினனேம் புலன்களையும் வெல்முனிவர்ப் [பார்த்துத்
தோடலர்பொற் றுணர்சிவன்தாள் தூஉய்ப்பரவு [துறவீர் !
சொல்கெனினுங் கேண்மினது துகள்தீரோர் [கதையே. (1)

விராகன் முதலியோர் செய்த சிவத்துரோகம் (கதை)

1643. விரவுபொழில் உலவைபஃ றலைகள்விரித் தகல்வான்
வெளிமுகடு திணியிருளின் மிகுதிசியிற் பொதுளக்
குரவுமுத லியவிணர்மேல் விதழ்முறுக்கு விரித்துக்
குறுந்துளிதேன் பிலிற்றமந்தக் குளிர்காற்று [விசிறப்
பரவுசுழல் விழிமடங்கல் மரவுரிக ளுரித்தைப்
பசித்திங்க ளனத்துயரப் படுவரென்று துறவோர்
வரவுகுறித் ததரினிடை வதிந்தறவோர் தமக்கு
வழங்கியிடும் புகழ்படைத்து வருங்கலிங்க [தேயம். (2)

1644. பைங்கழைவிற் குனித்துமலர்ப் பகழிசொரி கிள்ளைப்
பரிகடவு மதனனெழில் பழிக்குமர சிளங்கோத்
துங்கமத கரடகவுள் களிற்றெருத்தத் துதித்துத்
தோரணவீ தியிற்பவனி சூழவரக் கேளாச்

1642. சொல்கெனினும்—சொல்கேன் இன்னும்.

1643. ஐப்பசித் திங்கள்—ஐப்பசி மாதம்.

1644. மூன்றும் அடியில் மங்கையர் பந்துமுதலிய விளையாட்டு வகைகள் கூறப்பட்டன.

செங்கைவரிப் பந்துகழல் அம்மனையுண் டாட்டுத்
தெண்ணீரு சற்குரவை தீர்ந்துவள்ளை தணந்து
மங்கையரா யங்கொடெதிர் கண்டுகுவைகுவையாய்
மணிக்கடகஞ் சொரிந்தவளம் மலிகடக நகரே. (3)

1645. அங்கண்மகிழ் குரிசிலருட் குமரன்பேர் **விராகன்**
அமைச்சனருள் புதல்வன்பேர் **சுதந்திரன்**மற் றரசன்
இங்கிதஞ்சொல் புரோகிதன்மைந் தன்**சுனந்தன்** வாயில்
இருந்துபுரப் போன்குமரன் **சுகுந்தன்**இவர் நால்வர்
தங்களிற்றங் களிற்கேண்மை யாயொருவர்க் கொருவர்
சார்ந்துசம வயதாகிச் சகலகலை நூலும்
பொங்குமுளங் களிப்பவியற் கழகமிசை யோதிப்
புகன்றவவ ரவர்கருமம் போற்றினரா தரித்தே. (4)

1646. நீத்தியநல் தானதரு மம்புரியக் கருதும்
நேயமுள்ளோர் தீர்த்தயாத் திரையிலொருப் பட்டுப்
பத்திகொடு தந்தையரைப் பணிந்தனுக்கை பெற்றுப்
பரவியளப் பருந்தனங்கள் பரிந்துகொண்டு
[சென்றே
எத்திசையும் புகழ்கடக நகரடுத்த **சவரம்**
எனும்பெயராங் கிராமத்தில் எய்திஅற்றை இரவில்
அத்தியுரி புனையீசன் ஆலயத்திற் புகுந்தே
யங்கொருவர்க் கொருவரடுத் தடுத்துரைத்து
[வதிந்தார். (5)

1647. வரிசிலைக்கை அரசுபுதல் வன்திருக்கோ யிலினும்,
மந்திரிசேய் சிவயோகி மடத்திலும்; நன் னீதி
பிரிவறச்சொல் புரோகிதன்சேய் விபுதசிவ பத்தன்
பிறங்குமனை யினும், வாயில் பிரியாது புரப்போன்
வரிசைபெறு புதல்வனண்ணல் ஆராமந் தனிலும்,
வதிந்துமறை யோர்மனையின் மகிழ்ந்தடிசில்
[நுகர்ந்து
பிரிவின்மற்றை வைகலெழு காலைவேற் றூரில்
படர்வழியில் **கவுதமனும்** பண்ணவற்கண்
[டனரே. (6)

1646. **அநுக்கை—அனுக்ஞை—அனுமதி,**

1648. விழைவினுடன் இவர்களொரு நால்வருஞ்சென்
[றிறைஞ்சி
வினையமல்க தீர்த்தயாத் திரைகுறித்துத் தொடர்ந்த
பழவினைகள் பற்றறுப்பான் புறப்பட்டோம் என்று
பகர்ந்தனர்மற் றவர்கள்முகம் பார்த்திறைவி
[தனக்குந்
தொழுதகுமெய் வரமுதவு கேதார விரதஞ்
சொற்றஅருந் தவம்புரியுங் கவுதமா முனிவன்
மழவிடையங் கணற்கெல்லீர் அறிவின்றி மதத்தால்
வந்திழைத்த துரோகத்தால் மாலையிற்போம்
[உயிரே, (7)

1649, அருமறையா கமமுணருங் கவுதம சிகனே !
அடியோங்கள் செய்தசிவத் துரோகமென்கொல்
[எந்தக்
கருமமத னுலுயிர்விட் டகலுமவை தெளியக்
கழறுதியென் றவர்கேட்பக் கவுதமன்கட்
[டுரைப்பான்
குரிசிலருள் குமரநீ நென்னல்மழ விடையோன்
கோயில்வதிந் தனைகேசங் கோதவிழ்ந்த ததனுல்
நிருமலன்சந் நிதியிகழ்ச்சி யானது;மந் திரிசேய்
நீத்திடுதாம் பூலமட நிலையஞ்சேர்ந் ததுவே. (8)

1650. தெளியஅறி வுணர்வருபு ரோகிதன்சேய் தெண்ணீர்
சிவபத்தன் இல்லிடைக்கொப் பளித்திடத்தி ராமல்
விளியவரு சிவபத்தன் செஞ்சரண மலர்த்தாள்
மிதிக்கப்பட் டது ; வாயில் காப்பவன்சேய் அறுகால்
அளியமர்பன் மலர்கமழ்கண் ணுதலாரா மத்தின்
ஐவிழுகோ ழைகள்நாசி யவைசிந்தி உமிழ்ந்த
துளியடைந்த தாலிகழப் பட்டது ; நால் வருஞ்செய்
துரோகத்தாற் கொடும்பாவந் தோற்றியதென்
[றனனுல்.

1648. போம்உயிரே—உயிர்போம் (என்றார்).

1649. நென்னல்—நேற்று. கேசம்—தலைமயிர்,

1650. ஐ—கபவியாதி.

1651. வளமலிசோற் றுத்துறைமா யேச்சுரபூ சைக்காய்
வளர்கதிர்மல் கியசெந்நெற் பயிர்குளகி னுக்காக்
களவிலத ரடைபடிறு வடிவுகொளச் சேதாக்
கருதிவிடுத் திடுகொடிய விப்பிரரை முனிந்து
துளவுகமழ் புயப்புத்தேட் காளாகி முக்கட்
சோதியடி யரைப்பழித்துச் சொலற்கருமா
[நிரயத்(து)
அளவில்பல காலமுழைத் திடவென்று சபித்த
அருமுநியைத் தொழுதிதனுல் ஆவதென்னென்
றகன்றார். (10)

1652. அக்கணமன் னவன்குமரன் சிரத்தருநோய் விளைந்த(து)
அமைச்சன்மகன் மணிக்களத்தில் அடைப்பன்மற
[லியைப்போல்
ஒக்கல்நெருக் கியதுபுரோ கிதன்மகன்நா நழுவி
உடன்வெளியிற் புறப்பட்டே உடன்றதுமன்
[வாயில்
திக்கிலிருந் திகல்காப்போன் சிறுவனெடு மூக்கிற்
செங்குருதி பிரளயமாய்ச் சிவிறியெனச்
[சொரிந்த(து)
இக்கொடிய நால்வருயி ரிறந்தனர்ஐ தெனப்போய்
எரி நிரய நடுப்புறம்வீழ்ந் திடர்ப்படுகின்
றனரால். (11)

1653. அறைகழற்காற் குரிசில்மகன் முடிதனிற்கா ரீயம்
அழலுலையிற் கொதித்தெழுக அறக்காய்ச்சி வாக்கி
முறைமுறைசெற் றுதிரமெழச் சிரம்பலகண் டமதாய்
முடங்கிடவாள் கொடுதடிந்து மூளையில்வெவ்
[வழல்நீர்

1651. சோற்றுத்துறை—திருவையாற்றுக்கு அருகில் உள்ள ஒரு சிவஸ்தலம்; தேவாரம்பெற்றது. குளகு—விலங்கின் இலை உணவு. வடிவுகொள் அச் சேதா. சேதா—சிவப்புப்பசு.

இச்செய்யுளிற் குறித்த கதை "கௌதம பசு நியாயம்" என்னும் உலக வழக்குக்கு ஆதாரமானது. இவ் வரலாற்றுக் குறிப்பைச் சிவ மகா புராணம், சிவரகசியம் என்னும் நூல்களிற் பார்க்க. [அபிதான சிந்தாமணி].

1652. களத்தில் அடைப்பன்—நெஞ்சடைப்பு நோய். சிவிறி—நீர்வீசுங் கருவி.

1653. கொப்பளித்த அர்த அன்னியன். காரசம்—இருப்புச் சலாகை.

நிறையவொழுக் கிப்பிறைவெண் பற்றூதர் வருந்த
நெருக்கி,மற்றை யோன்நாவில் நெகிழச்செம் புருக்கி
உறநிறைத்துக், கொப்பளித்தவ் வன்னியன்பல்
[லுகுத்தே,
உருக்குநா ராசமற்றை யோன்மூக்கில்
[அறைந்தார். (12)

1654. அந்தோ! இப் படியிவைக ளாதியவ ரவர்க்கே;
அனந்தசதம் வருந்துகின்றூர் அளப்பருகா லங்கள்
நொந்தோல மிட்டலறு கின்றுரோ கட்டம்
நுவலிவர்முற் சனனத்தும் நோக்குபிதா வவனைத்
தந்தோன்மற் றவன்தந்தை யிப்படியன் னையருந்
தண்டாவெந் நரகினிடைச் சார்ந்துபதை பதைத்துச்
சிந்தோதை வருத்தஅயர் கின்றனர்மற் றிவர்க்குச்
செயுஞ்சாந்தி யெக்காலஞ் செப்புதற்கிங்
[கிலையே. (13)

1655. அன்னியரிப் படியனந்தர் வசனத்தால் நரகில்
அரந்தையுறு கின்றனரீ தையமிலை யென்று
துன்னியசெஞ் சடிலமுடி நந்தீசன் உரைக்கத்
தொழுதுசதா னந்தன்மலர் தூஉய்ப்பரவி
[உரைப்பான்
உன்னியமான் மழுதரித்தோய்! இக்கதைகள் கேட்டென்
உடலனைத்துங் கம்பித்த துளமுருகிற் றென்றுன்
மன்னியசக் கரப்படையோன் ஆதியபண் ணவரும்
மனமெமக்கும் அப்படியே மறுகியதென்
[றனரால். (14)

1656. அனைவரையும் நந்திகுறித் தறைகின்றுன் எமக்கும்
அப்படியென் ருல்நுங்கட் காவதுவும் வியப்போ
நினைவினெடுத் துரைக்குமெப் பாதகங்கட் கெல்லாம்
நின்மலன்தன் தெரிசனமே நிகழ்த்தியிடுஞ் சாந்தி

1654. அனந்த சதம்—பல நூறு (தண்டனை). ஓ கட்டம்—ஓ-இரக்கக் குறிப்பு. சிந்தோதை—சிந்து—ஓதை—கடல்போன்ற ஆரவாரம்.

பினையிதனைத் தவிரவே றொன்றுமில்லை யென்று
பெட்பினுட னிவருடன்போய்ப் பிஞ்ஞகன்பா
[லடைந்தான்
நனைகமழ்தண் டுளவனயன் முதலியபுங் கவர்கள்
நம்பனையுங் கௌரியையும் நயந்திறைஞ்சித்
துதித்தார், (15)

1657. ஐந்துபுலன் வென்றசதா னந்தமுனி மடங்கல்
ஆசனத்தில் இருந்தருளும் அண்ணலுடன்
[உமையை
வந்தனைசெய் திருகரங்கள் கூப்புபுநின் றனன் அம்
மாமுநியைக் கூன்முகச்சோ மனைச்சடிலத் தணிந்த
எந்தைகரு ணைக்கடைக்கண் நோக்கிமுநி வரர்தம்
ஏறே! கேட் டிடவேண்டும் என்றவைக ளனைத்தும்
புந்திமகிழ்ந் தெமதுகணங் கட்கரசாம் நந்தி
புங்கவன்பாற் கேட்டனையோ புகறியெனப்
[புகன்றான், (16)

1658. கண்ணுதலிப் படியுரைத்த கருணை மொழி கேளாக்
கஞ்சமலர்க் கரங்கூப்பிக் காதலின்மா முநிவர்
அண்ணல்சதா னந்தன்முக்கட் பெருமானை நோக்கி
அடியேன்வந் தடிகள்முகத் தனைத்துங்கேட்
[டதுபோல்
எண்ணினவை யாவுமகிழ் நந்தீசன் முகத்தால்
இன்பமுறக் கேட்ட னென் றிசைத்திறைஞ்சி,
[வழுத்திப்
பண்ணவன்தன் அனுமதியால் விடைகொடயல்
[தணந்து
படர்ந்தனன்மா லயன்விண்ணோர் பணிந்துபுறப்
[பட்டார். (17)

1659. பிரம்புகொடு நந்தீசன் பிஞ்ஞகன்பே ரருளாற்
பிறழுநவ மணிகுயிற்றும் பெருவாயி லடைந்தான்
வரம்பில்கரு ணைக்கடலாம் நந்தீச னருளால்
மாலயனு தியதேவர் மன்னுசதா னந்தன்.

விரும்பியவ ரவரிடஞ்சென் றனர்களென்று சூதன்
விளம்பக்கேட் டருள்முனிவர் மீளவுஞ்சூ தனையா
தரம்பெருக வழுத்துபுகேட் கின்றனர்மா நிரயந்
தனில்வருந்து வோர்காதை சாற்றுதியென்
[றனரால்.(18)

அத்தியாயம் 60.

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சோம சன்மன் முதலியோர் கதை.

முனிவர்கள் சூத முனிவரை நோக்கி 'அறிஞர்களாகவும் முனிவர்களாகவும் அடியார்களாகவும் உள்ளவர்கள் அறியாது சிவத்துரோகம் செய்தால் நரகமுண்டோ?' என்று வினவினர். அவர்களுக்கும் உண்டு என்று சூத முனிவர் சொல்கிறார்:

சோம சன்மன், சிவ சன்மன் கதை.

சோமசன்மன், சிவசன்மன் என்னும் அந்தணர் இருவர் மறை முதலியவற்றை நன்குணர்ந்தவர்கள். அவர்கள் இருவரும் ஒரு முறை சிவபெருமான் ஆலயத்திற்குச் சென்று வணங்கி வலம் வரும்போது சோமசன்மன் நடை வேகக் காற்றால் ஒரு திருவிளக்கு நின்று விட்டது. இதைச் சோமசன்மன் பார்க்கவில்லை. சிவசன்மன் கண்டு சோமசன்மனுக்கு உரைத்தானே ஒழிய அவர்கள் அவ் விளக்கை யேற்றவில்லை; அதனால் அவர்களிருவரும் இறந்த பின்னர் நரக வேதனையில் வருந்துகின்றனர்.

புண்ணியசன்மன் கதை.

புண்ணிய சன்மன் என்றொரு சிவ பக்தன் ஒருநாள் சிவலிங்கத்தின் அருகில் உள்ள ஒரு விளக்கைத் தூண்டினபோது அவன் நகத்திலே நெய் ஒட்டியது. அந்தப் பாவத்தால் அவன் இறந்த பிறகு நரகத்தில் அளவில்லாத காலம் இடர்ப்பட்டு நாயாய்ப் பிறந்து வருந்தினான்.

சுமதி கதை.

சுமதி யென்னும் சிவயோகி யொருவர் பொற்குவை பல திரட்டித் தந்து சிவபெருமானுக்கு அபிடேகம்· அருச்சனை யாதியவற்றைச் செய்துவந்தார்.

அவர் ஒரு நாள் சிவபெருமானுக்கு இளநீரபிஷேகம் செய்தபோது அபிஷேகம் ஆன பின்பு எடுத்து எறியப்பட்ட இளநீரின் ஓட்டிலிருந்த சாரத்தைத் தின்று விட்டதற்காக அவர் இறந்தபின்னர் நரகிலே அமிழ்த்தப் பட்டுப் புழு முதலிய வற்றால் அரிக்கப் பட்டார்.

ஒருசெட்டி கதை.

முருகவேளின் திருக் கோயிலில் ஒரு செட்டி நாடோறும் பல திருவிளக் கேற்றி நீங்காமல் வழிபாடு செய்து வந்தான். அவன் ஒருநாள் கோயிலில் தழைத்து வளர்ந்திருந்த புளிப்புக் கீரை சிறிது கொண்டுபோய்ச் சமைத்துத் தின்று விட்டான். அந்தப் பாபத்திற்காக அவன் எரிவாய் நரகத்தில் இடர்ப் பட்டான்.

வச்சிரதந்தன் கதை.

வச்சிரதந்தன் என்பவன் இயமம் முதலான யோகப் பயிற்சியிற் சிறந் தவன். அவன் செவிடன். அவன் ஒருநாள் சிவன் கோயிலிற் சிவநிந்தை புகல்பவனுடன் இருந்த பாவத்திற்காக நரகஞ் சேர்ந்தான்.

பாரதன் கதை.

பாரதன் என்னும் பெயரையுடைய ஒரு சந்நியாசி முக்கட் பெருமான் திருமுன் துயின்ற ஒருவன் மேல் இடறி விழப்பார்த்தான். பிறகு, அவனையும் எழுப்பிச் சிவதரிசனம் செய்வித் தகன்றான். அவன் இறந்தபிறகு காலதூதர் நரகில் வதைப்பிக்க வருந்தினான்.

ஆகையால், யாவராயினும் சிவத்துரோகம் செய்தால் நரகம் கிடைப்பது உறுதி ; சிவனடியாராக இருந்து சிவத்துரோகம் புரிவோர் நரகத்திற் சிவத் துரோகத்தைக் கழித்தபிறகே சிவனடி சேர்வர். சிவத்துரோகஞ் செய்தவர் செயலைக் கேட்கவும் கூடாது ; சிவத்துரோகம் செய்தவர் பக்கலில் இருத் தலுங் கூடாது.

இவ்வாறு சூதர் கூறியது கேட்ட முனிவர்கள் சிவத்துரோகங் கேட்ட பாவந்தீர ஐந்தெழுத்தையும் ஓதி, உளத்திலே உமையொருபங்கனை வழுத் தினர். சூதமாமுனிவரும் உரைத்த பாவந்தீர அவ்வாறு செய்தார்.

பின்னர், முனிவர்கள் சிவபெருமானை அருச்சிப்பதால் வரும் பெருமையை இயம்புகவெனச் சூதமுனிவரை வேண்டினர்.

அத்தியாயம்—60

சிவத்துரோக நரக வேதனை—தொடர்ச்சி

சோமசன்மன் முதலியோர் செய்த சிவத்துரோகம்

எண்சீர் விருத்தம்

1660. சருகுநுகர் அருமுனிவர் எவரும் ஈசன்
சரணமலர் கருதிவிழி ததும்பு தெண்ணீர்
பெருகவுரை குழறமயிர் பொடிப்ப நீறு
பெருமணியக் கம்புனைகு தனைப்பார்த் துள்ளம்
உருகமுக மன்பலசொற் கூறி யெந்தாய்!
ஒளிறுபடை யரசன்மகன் முதலினோர்கள்
செருகுமதர் தன்னிலுட னறியா திப்போ
செய்ததினல் அருநரகஞ் சேர்ந்தார் என்றாய். (1)

1661. அறிஞர்களாய் முனிவர்களாய் முக்கட் கோமான்
அடியர்களாய் இருந்தோர்கள் அறியா தேதாம்
வறிதிழைத்த கருமங்கள் தமக்கு மீள
மற்றுமவர் அனுபவிக்க வருமோ? வாதை
பிறிவறச்செய் யருநரகம் உண்டோ? ஈது
பெருமான்கண் டனையோ?கேட் டனையோ?
[எங்கட்(கு)
உறுதிபயக் கப்புகறி யென்னச் சூதன்
உண்மைபெற யாவையுமே உரைக்க லுற்றான். (2)

1662. அந்தணர்காள்! எல்லிருங் கேண்மின் தக்கோர்
ஆதிமழ விடையோனுக் கடிமை யாகி
வந்தவருங் கடல்விடமுண் டிருண்ட கண்ட
வள்ளலுக்கு ஞானத்தால் அஞ்ஞா னத்தால்
எந்தவித மாகிலு மடாது கன்மம்
இழைத்திடிலக் கருமத்துக் களறில் என்றும்
தொந்தமுறும் அனுபவமுன் கண்டோம் பின்னர்
தோற்றுபசு கன்மத்துக் கில்லை யம்மா. (3)

1660. இப்போ—இப்போது.

1661. அறியாதே—தாம்—வறிது—இழைத்த,

சோமசன்மன் சிவசன்மன் கதை

1663. சோமசன்மன் சிவசன்மன் எனும்பேர் பெற்றுத்
தொழுகுலத்தோ ரருமறையா கமநூல் அங்கம்
பாமருவு சகலகலை தெரிந்து தக்கோர்
பலவறிந்தோர் திடவிரத பால ரோர் நாள்
தேமருவும் இதழிவனை சடிலப் பெம்மான்
சேவைசெய என்றுசிவா லயத்திற் போகி
ஏமவுல கர்க்கிறையாஞ் சிவலிங் கத்தை
எதிர்நோக்கிப் பூவில்வீழ்ந் திறைஞ்சிப்
[பின்னும், (4)

1664. துதிசெய்திரு வருமாக வலஞ்செய் போது
சோமசன்ம னங்கமிசை தோற்று காற்றல்
விதிதலைகிள் ளியஇறைசந் நிதியில் தீபம்
வீந்ததவன் கண்டிலன்பின் மேவிக் கூட
வதியில்வரு சிவசன்மன் கண்டும் முன்போம்
மறையோனுக் குரைத்த தல்லால் மறுகா னுஞ்சந்
நிதியில்விரைந் துடன்தீபம் தானேற் றுமல்
நேயமொடு வலஞ்செய்து நீங்கி னரால். (5)

புண்ணியசன்மன் கதை

1665. இருவரும்பின் சிறிதுநாள் சென்ற பின்னர்
இறந்தனர்மற் றவர்கள்நர கிடையில் அந்தோ
பருவரலுற் றிடுதுயரிவ் வளவே யென்று
பார்த்தெனக்கு மெடுத்துரைக்கப் படாது
[கேட்டேன் ;
ஒருமையுடன் பின்னரும்புண் ணியசன் மாவென்
றொருசிவபத் தன்சிவா லயத்தி லோர்நாள்
அருவுருவாம் சிவலிங்க முக்கட் பெம்மான்
அருகொளிர்தீ பந்நாசம் ஆகும் போது, (6)

1666. சிறுவிரலில் நுகிர்நுதியால் தூண்டச் சற்றே
சென்றுகிரிற் புறந்தயிலஞ் சேர அன்னோன்
இறுதியிலக் கணம்புரியட் டகத்திற் கொண்டே
இயமபடர் நரகத்தெண் ணிலாத காலங்

1664. வதி—வழி.

1666. புரியட்டகம்—சூக்குமதேகம், கன்ற வீழ—கன்றிப்போய் விழ.

கறுவியெயி றிதழதுக்கிக் கடிந்த மிழ்த்திக்
காய்ந்தனர்பின் சுருண்டவால் கன்று வீழ
முறுகுசெவிச் சுணங்கனுய் அனந்த சென்மம்
முரிதிரைப்பார் மிசையுதித்து முற்றும் நொந்தான்.

சுமதி கதை

1667. சுமதியெனும் பெயர்கொள்சிவ யோகி எங்கும்
தொடர்ந்துசெல்லிங் தியமடக்கும் துறவி கொன்றை
கமழ்சடில நாயகற்கென் றிரந்து செம்பொன்
கணிப்பிலபொற் குவைகுவையாய்க் கட்டி நாளும்
அமலசிவன் அருச்சனைக்கெண் அனைத்தும் நல்கி
அபிடேக நிமித்தியமே யாக வாங்கி
இமகரன்தெள் அமுதனைய நாளிகேர
இளநீரை அபிடேகம் இறைஞ்சிச் செய்தான். (8)

1668. எடுத்தெறிந்த கோம்பையிலுள் ளிருக்குஞ் சாரம்
என்றேநுங் கந்தமுநி இறந்த போது
கடுத்துமிழ்வெம் பொறிசிதறு சூல மேந்திக்
காலபடர் பாசத்தாற் கட்டிச் செந்தீ
மடுத்தெரியும் அருநரகத் தவனை வீழ்த்தி
வச்சிரவாற் புழுவெரிக்க வருத்திப் பின்னும்
அடுத்தநர கங்களனைத் தினும்விட் டார்கள்
அந்தஇடர் எடுத்துரைக்க அரிதா மன்றே. (9)

ஒரு செட்டி கதை

1669. தென்றல்தவழ் மலயமுநிக் கருளும் எந்தை
செவ்வேளா லயத்திலொரு செட்டி நெய்யால்
நின்றுசுடர் விடுபலதீ பங்க ளேற்றி
நித்தியமும் வலம்புரிந்து நீங்கா தங்கண்
துன்றுதழை குழைத்தசெவ்வி ஆமில் சாகம்
துணைக்கரத்தால் மிகப்பறித்துச் சுமந்து போகி
என்றுமனை புகுந்தனன்பின் இறந்த காலை
எரிவாய்வெங் நரகில்விழுந் திடர்ப்பட் டானல். ()

1668. கோம்பை—தேங்காயின் ஓடு. நுங்கு—உண்ணும்.

1669. ஆமில் சாகம்—புளிப்புக்கீரை. ஆமிலம்—புளிப்பு.

வச்சிரதந்தன் கதை.

1670. **வச்சிரதந்** தப்பெயரோன் இயம மாதி
மருவியச மாதியந்தம் வாயு வாங்கி
உச்சியள வுஞ்சுழுனை யூடு விட்டே
ஓங்குவிந்து நாதங்கண் டுணர்ந்த யோகி
அச்சின்முத லானவொலி சிறிதுங் கேளா
அருஞ்செவிடன் ஆகையினால் அமலன் கோவில்
நச்சுநிந்தை புகல்பவன்பால் அடுத்த பாவம்
நரகத்தில் வீழ்ந்தயர்ந்தெந் நாளும் நொந்தான். ()

பாரதன் கதை

1671. **பாரத**னென் னும்பெயர்கொள் சந்நி யாசி
பண்ணவன்சந் நிதிமுன்கண் படைகொண் டோனை
நேரிடறிக் கடந்துபயந் தெழுப்பிக் கூட
நெட்டூரப் பாவியையும் நிமலன் தன்னை
வாரமுடன் தெரிசிப்பித் தகன்றான் அந்த
மாபாவத் தாற்கொடிய மறலி தூதர்
கோரநர கத்தினிடை அமிழ்த்தித் தீராக்
கொலைபுரிந்தார் படுதுயரம் கூறற் பாற்றே. (12)

1672. இந்தியங்கள் செயித்துவரு முனிவ ராலும்
ஏற்றரிய யோகிலென்றும் இருந்தோ ராலும்
அந்தணரா கியதக்கோ ராலும் ஞானம்
அறிந்தோர்க ளாலுமனுத் துணைய தேனும்
சிந்தைமொழி காயத்தாற் சிவத்து ரோகம்
செய்யவொணா தாயத்திற் சிவற்கு கந்தோர்
எந்தவித மாகிலுங்குற் றங்கள் செய்தோர்
எரிநரகில் உழப்பர்பின்வீ டெய்து வாரே. (13)

1673. **அருமுனிவீர்!** ஆகையினாற் சிவத்து ரோகம்
அறிந்துகேட் கவொன்று ததுசெய் தோர்பால்
மருவியயல் வதிந்திடவும் ஒன்று தென்று
வாய்மைபுகல் சூதமுனி வரன்சொற் கேட்டுப்

1670. நிந்தை புகல்பவனுக்கு (அடுத்து) அருகில் இருந்ததால் வந்த பாவம்.

1671. கோயிலில் தூங்கி சிவாபசாரம் செய்தவனைப் பார்த்தபாபம். நெட்டூரம்—நிட்டூரம்—கொடுமை.

பொருவரிய மகாமுனிவர் எல்லோ ருந்தும்
புந்திநடு நடுங்கியுடல் பொருக்கென் றெங்கும்
வெருவவிழிர் விதிர்த்திடவே கம்பித் தாகம்
மெலிந்துபரு வரற்கடலுள் வீழ்ந்து சொல்வார். ()

1674. பன்னரிய சிவத்துரோ கங்கள் தம்மைப்
பரிகரித்தன் னியமாகப் பலன்கள் நல்கும்
உன்னரிய தவமில்லை இந்தக் காதை
ஒருமித்துக் கேட்ட தற்காய் உரைக்குஞ் சாந்தி
தன்னிகரில் சிவபஞ்சாக் கரமே யென்று
தாங்கள் செபித் திதயமலர்ச் சரோரு கத்தின்
மின்னிகர்சிற் றிடையுமையை இடப்பா கஞ்சேர்
வெள்விடையோன் தனையிருத்தி விரும்பி
[ஞரால். (15)

1675. முற்றுமுணர்ந் திக்கதையை யுரைத்த சூத
முனிவரனும் மணிநாவால் மொழிந்த பாவக்
குற்றமற ஐந்தெழுத்துஞ் செபித்து ளத்திற்
குரும்பைமுலை உமையுடனே கூடத் தண்டா
ஒற்றைநுதற் கட்பெருமான் தனையே வைத்திங்
கோதருமா முனிவரன்முன் உரைத்தான்
[அப்போ(து)
அற்றமில்சீர் முனிவரர்மீ ளவுமே யீசன்
அருச்சனைமான் மியத்தின்விதி அறைக
[என்றார். (16)

அத்தியாயம் 61.

சிவ பூஜை மான்மியம்

சூதமுனிவர் சொல்கின்றார் :

சத்தியைவிட்டுப் பிரியாத சிவபெருமான் சர்வசங்கார காலத்திற்குப் பின்னர், உருத்திரன், திருமால், நான்முகன் ஆதியோரைப் படைத்தார். பிறகு, தேவர்கள், கணங்கள், முதலிய சகம் அனைத்தையும் படைத்தார். பின்பு வேதாகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் உண்டாக்கப்பட்டன. அரி, அயன் முதலோரைப் பார்த்துச் சிவபெருமான் "பத்தி செய்வோர்க்கு முத்தி

1675. **தண்டா—நீங்காத.**

யளித்தற் பொருட்டு நாம் இலிங்கத்திலே எப்போதும் இருப்போம். சிவலிங்க பூஜை அதிகபலனைத் தருவது. மணி, பொன், வெள்ளி, சிலை, மரம், மண், சந்தனம், இரதம் இவைகளில் இலிங்கம் அமைத்துப் பூசிக்கலாம். கேதாரம், காசி, ஸ்ரீசைலம், காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவண்ணாமலை, விருத்தாசலம், தில்லைச்சிற்றம்பலம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருவாரூர், மதுரை, சேதுராமேசுவரம் ஆதிய பல தலங்களிலும் தேவியுடன் நாம் வீற்றிருப்போம். ஆதலால், நீவிர் யாவரும் சிவலிங்க வழிபாடு செய்யுங்கள்" எனக்கூறி அருளுருவாய், அண்ட பகிரண்ட மெலாம் நிறைந்தே மறைந்திருக்கின்றார். அவர் கயிலை, மந்தரம், மேரு, சக்ரவாளகிரி, சிவலோகம் ஆதிய இடங்களில் வீற்றிருந்து அடியார்க்கு எளியவராய் எவர்க்கும் அருள்புரிந்து ஐந்தொழில் நடத்திக் கணங்கள், உமையாள், வேலன், கணபதி தம்மைச் சூழ வீற்றிருந்து திருவிளையாடல் புரிந்து நிற்கின்றார்.

இப்பெருமானைத் திருமால் முதலான தேவர்களும், இருடியர்களும், தவத்தினரும், விரும்பிய இன்பம் பெறச், சிறந்த தலங்களிலும் நதிதீரங்களிலும் சிவலிங்க வடிவில் உமையம்மையுடன் பதினாறு உபசாரங்களால் அன்புடன் வழிபட்டுப் பூசித்து அவன் திருவடி நீழலாம் வீட்டின்பத்தை அடைந்தார்கள்.

அத்தியாயம் 61.

சிவ பூஜை மான்மியம்

அறுசீர் விருத்தம்

1676. கேவல மைந்தர்கள் யாதொரு நன்கதை
கேள்வியி லும்பர்மெய்வீ(டு)
ஆவ லுடன்பெற வேயருள் கின்றது
ஆகம நன்சொலினால்
பூவல யங்கதி சேரவ ருஞ்சிவ
பூசை விதந்துறவோர்
காவலன் என்றிடு சூதன் மகிழ்ந்தொரு
காதை அறைந்தருள்வான். (1)

வேறு

1677. ஓங்குபரை யாகவரு சத்தியயல்
நின்றுளம் உவந்து பிரியா(து)
ஆங்கவை தெரிந்திட விரிந்துதன்
இராமுழுதும் ஆடல் செய்தபின்

நீங்கியுத யம்பரவு காலையின்முன்
　　போலுளம் நினைந்து பெருநீர்
தாங்குசடை சூடிறை படைத்திட
　　மதித்துறு சகந்த னையுமே.　　(2)

எண்சீர் விருத்தம்.

1678. **த**ற்பரநம் பரஞ்சோதி யகண்டாகா ரமதாம்
　　சச்சிதா னந்தசிவன் சாற்றுபல அண்டம்
அற்புதமாம் ஆறுவகை அத்துவிதத் துணிலே
　　யாகவுணர் கங்குற்பத் தளவிலவை யனைத்தும்
உற்பவித்த தபரிமித வடிவுகளா கத்தன்
　　உயிரினின்று முத்தொழிலும் உவந்துபுரிந்
　　　　　　　　　　　　[தருள்வான்
சிற்பரனு முருத்திரன்தண் துளபமணி மாயோன்
　　திசைமுகனென் றெனப்படுமுத் தேவரும்வந்
　　　　　　　　　　　　[தனரே.　　(3)

1679. **உ**ருத்திரர்மா திருக்கணங்கள் பிரமதகணம் பின்னும்
　　ஓங்குபிர்ம தாதிபர்வான் உலகளந்த அகடு
பெருத்தவுடற் பூதங்கள் பூதகண நாதர்
　　பிறங்குமிமை யோரசுரர் பிலவாய்முள் எயிற்றே(டு)
உருத்தெழுமா உரகரிரு டியர்கணந்தென் புலத்தோர்
　　உரைப்பருபல் பூதங்கள் ஓங்குசகம் அனைத்தும்
திருத்தகுசிற் பரையுடனே சிறந்துவினை யாட்டாய்ச்
　　சிவன்சுத்த மாயாதி திரிவிதத்தாற் படைப்பன்.　　()

1680. **பொ**றியரவம் அரைக்கசைத்த புங்கவன்எங் கோமான்
　　புண்ணியசற் குருவாய்த்தன் புந்தியின்எப் போதும்
பிறிவறமல் இயவேதா கமங்கள்புரா ணங்கள்
　　பின்னருஞ்சாத் திரங்கள்பல பேதவிதம் அனைத்தும்
எறிதிகிரிப் படைசுமந்தோன் பதுமமலர்க் கடவுள்
　　இருடியர்புங் கவர்சிறிதிங் கியம்பதிகா ரிகட்கும்
அறிவுறுத்த ஓதுவித்தவ் வரியயனு தியராம்
　　அமரரைத்தண் டம்புரிந்தே அருச்சியுமென்
　　　　　　　　　　　　[றனனால்.　　(5)

1679. *பிரமத கணம்—சிவகணம்.*

1681. பின்னர்முக்கட் கோவுரைக்கும் அரியயனு தியரைப்
பெட்பினுட னேகடைக்கட் பேறருளிப் புகல்வான்
உன்னரிய சிவன்சதா சிவமாயேச் சுரமென்(று)
உரைத்தருளும் மூர்த்திகளில் ஒருமையொடே
[அருளப்
பன்னருஞ்சீர்த் தண்டுள்வோன் அனமுயர்த்தோன்
[தேவிர்
பத்தியினுல் எமைப்பூசைபண்ணுறுமின்பா
[வித்தே. (6)

1682. நுங்கள்தமக் கதிகார மளிக்குதுமென் றதற்பின்
நுண்ணுணர்வா மணிவண்ண னுதியர்வீழ்ந்
[திறைஞ்சிச்
செங்கைமலர் கூப்புநின் றுடல்வளைத்தென் புருகச்
செப்பினர்கள் பகவான்நித் தியபரிபூ ரணனும்
துங்கமறை யாகமத்திற் புருகூத னென்றுந்
தூய்யபுரு டுதனென்றுஞ் சொலக்கேட்டோம்
[எந்தாய்
எங்களுக்கெவ் வுருவாலெப் படிபூசை செயப்பட்
டிருப்பைபுகல் சகலவுரு எடுத்தவனும் நீயே. (7)

1683. விண்ணவர்கள் தம்பெருமான்! வேதங்க ளனைத்தும்
விச்சுவரூ பன்பொருட்டு விளம்பிடுஞ்சங் கரனும்
அண்ணலவை தனிலெந்த விதத்தாற்சிற் றடியோம்
ஆதரவால் எவ்வுருவை அருச்சித்தே அந்தக்
கண்ணுதலின் அருள்தனக்குப் பாத்திரபூ தர்களாய்க்
கடிதுபெறு வோஞ்சகத்திற் காவல!சொல்
[லெனவே
பண்ணவன்சொல் வானெந்த மூர்த்தியிலும் எவரும்
பரிந்துபூ சிக்கவெளிப் பட்டருள்வோம்
[எவையும். (8)

1681. இச்செய்யுளில் ஒரு அடி குறைவு.

Govt. Oriental Mss. Library,
Triplicane P.O., Madras

1684. புத்தேளிர் காள்! அதிக பலமுளதி லிங்க
பூசகர்க்குக் கதுமெனவே புந்தியில்வேண் டுவன
வித்தார மாகநா முபகரிப்போம் இலிங்க-
விச்சுவமூர்த் தியையென்று மேவினமந் திராதி
ஒத்தேறு கிரியைகளில் லாமல்வெளிப் பட்டே
ஓங்குபத்தி புரிவோர்கட் குயர்முத்திப் பொருட்டுச்
சித்தாக வேபீட இலிங்கத்தெப் போதுந்
திப்பியநிட் களசகள திருவுருவாய் உறைவோம். ()

1685. என்றருளும் அண்ணல்முனம் பைந்துளவோன் ஆதி
யிமையவரேத் திசைப்பரெந்தாய் இயமலிங்கம் ஏது
தன்றுணையோ டாதியந்த மில்லாநீ யிலிங்கி
தானாக இருந்ததென்கொல் சாற்றுமிது தனக்கு
ஒன்றுபவி தேதென்று தெளிந்துணரும் பொருட்டால்
ஒருவகையா லையமற வுடன்காட்டு குறியே(து)
அன்றொருநால் வர்க்குவட நீழலிருந் துரைத்தோய்
அவ்விலிங்கம் ஈதென்றே அடைவில்விரித்
[தருளே. (10)

லிங்க லக்ஷணம்.

1686. அரனுரைக்கும் இலிங்கப்பேர் அவ்வியத்தம் அனந்தம்
அசரதுரு வங்கள்குண மதுதானெ னுமாந்
தரைபடைத்துக் காத்தழிப்ப ததுவெமது லிங்கந்
தன்னுருவம் நான்குபர விந்துபர நாதம்
விரவபர விந்தபர நாதமேல் கீழாய்
மேவபர விந்துவதன் மேலபர நாதம்
பரவிந்து பரநாதம் ஒன்றின்மேல் ஒன்றும்
பற்றோங்கா ரம்பீடம் பரநாத மிலிங்கம். (11)

1687. அரியயனு தியதேவிர்! நாதவிந்து வடிவாம்
அந்தலிங்கத் தெப்போதும் அருள்கொடுநாம்
[இருப்போம்
பரிவுடனே இலிங்கவழி பாடுசெய்வோர் வேண்டும்
பலமனைத்து மந்நேரம் பாலித்து மகிழ்வோம்

1684. நிட்கள சகள திருவுரு—அருவுருவத்திருமேனி.

1686. பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதம்.

பிரிவறவவ் விலிங்கத்தில் அனுதினநாம் உவந்து
பெருகுபூ ரணகலையாய்ப் பேதமற இருப்போம்
விரிவுடைய சகமனைத்துந் திலதயிலம் போல
மேவுபிர ளயத்தொன்று மிகுபடைப்பில்
உண்டாம். (12)

1688. அருமுனிவீர் எமதுருவை வேதிலிங்க வடிவாய்
அரவமுடிக் கிடந்தபுவி யதனிலுரைத் திடுவார்
மருவியவே திகையிலிங்கந் தனிலிலிங்கி யென்றே
வாரமுடன் எப்போதும் மகிழ்ந்திருப்போ
[மென்றும்
ஒருமைகொள்வை திகலிங்கம் மணிக்கனகம் வெள்ளி
யோங்குசிலை தாருமணிந் தொளிர்சந்தம் இரதம்
இருமைதரும் இவைமுதலாம் இலிங்கத்திக் கணமே
எல்லீரும் அசைவறவே எமைப்பூசை செயுமே.(13)

1689. சுருதிசிவா கமவிதியில் மடியறவெப் போதுஞ்
சோதிலிங்கத் தெவரேனுந் தொழுதருச்சிக்
[கின்றோர்
கருதரிய முத்தியடை பவரனந்த தானம்
கணிப்பில்வேள் விகளிருந்தெக் காலமுஞ்செய்
[தவங்கள்
அரிதினிலிந் தியமடக்கல் ஆதியெல்லா மிலிங்க
அருச்சனைகோ டியிலொன்றுக் காயினும்நே
[ரன்றால்
பருதியளப் பில்கோடி யெனும்லிங்க பூசை
பண்ணுமவற் கொப்பிலையெம் பாசவினை
[யிலையே. (14)

1690. அந்தவிலிங் கத்திலென்றுஞ் சதாசிவமெய் கொணர்ந்தே
அமர்ந்தவெமைப் பாவசுத்தி யாய்மனவாக் குருவால்
வந்தனைசெய் தருச்சிக்கக் கடவர்கள்மூ வுலகின்
வளர்பிரமாண் டங்களினும் மருவியவெவ்
[விடத்துஞ்

சிந்தைமகிழ்ந் தங்கங்குத் திலதயில மெனவுஞ்
செழுமலரின் மணமெனவுஞ் சிவலிங்க வடிவாய்ச்
சந்ததமு மரீஇயொன்ருய் வதிந்தெல்லோ ராலும்
சாற்றுமறை-விதிப்படிபூ சனைசெய்யப்
[படுவோம். (15)

1691. கேதாரங் காசிசித்தி நல்குபருப் பதஞ்சீர்
கிளர்ந்திடுதென் கயிலைவடா ரணியமிகு காஞ்சி
ஆதார அருணகிரி பழமலைதில் லைச்சிற்
றம்பலத்தென் குடமூக்கா ரமலஇடை மருது
காதாரு மதர்விழியம் பிகையுடனு மென்றுங்
கலந்துமன மகிழ்கமலா லயங்கதிசேர் கூடல்
சேதார வருமிரா மீச்சுரமா தியபல்
சிவதலம்அண் டங்கள்தொறுந் தேவியுடன்
இருப்போம். (16)

1692. ஆகையி னுல்தண்டுளவோ னுதியபுத் தேளீர்!
அமலவிந்து நாதமா மவ்விலிங்கத் தென்றுந்
தோகையுட னிருக்குமெமை விதிப்படியே யென்றுந்
தூங்கலற எல்லீருந் தொழுதருச்சித் திடுமென்(று)
ஓகையினே டுரைத்துலகம் அனைத்தினுக்கும் பதியாய்
ஓங்கொளியா கிய அண்ணல் ஒல்லையுரு மறைந்தே
ஈகைவடி வாயிருக்கும் அங்கங்குப் பலவாய்
இருக்குமண்ட பகிரண்டம் எங்குநிறைந்
திருந்தே. (17)

1693. பரஞ்சுடராங் கயிலைமா கயிலாயப் பொருப்பிற்
பருப்பதமாம் மந்தரத்திற் பசும்பொன்மே ருவினில்
நிரந்தரசக் கரவாள கிரியில்விண்டு பதமேல்
நின்மலமா கியசிவலோ கத்திலங்கங் கருளால்
இருந்துபுரு கூதனுமாய்ப் புருட்டுதனு மாகி
எல்லோரும் பூசிக்க எவர்க்குமருள் புரிந்தே
விரைந்துடனைந் தொழில்நடத்திக் கணங்களுமை
[எங்கோன்
வேலன்விநா யகனுடனே விளையாடல்
புரிந்தே. (18)

1691. பருப்பதம்—ஸ்ரீசைலம்; வடாரணியம்—திருவாலங்காடு; பழமலை—விருத்தாசலம்; குடமூக்கு—கும்பகோணம்; கமலாலயம்—திருவாரூர்; கூடல்—மதுரை; சேது ஆரவரும் இராமேச்சுரம்.

1694. பின்னருவ னக்கடவுள் ஆதியவிண் ணவர்கள்
பிறங்குமிரு டியர்தவத்தோர் பெட்பினவ ரவர்கள்
உன்னரும்பல் போகங்கள் விழைந்ததெலாம் பெறவே
ஓங்கார வேதிகத்தில் உயர்நாத இலிங்கம்
பன்னருதா னங்கள்நதி தீரங்கள் கிரிகள்
பற்றுடனே உபசாரம் பதினாறுங் கொண்டு
மன்னுமைமா தொடுசிவனை அருச்சித்தே வேண்டும்
மகிழ் பதங்கள் பெற்றமலன் மலர்ப்பதவீ
[டடைந்தார். (19)

அத்தியாயம் 62.

சிவ பூஜை மான்மியம்—தொடர்ச்சி

விண்ணவர், முனிவர், எவ்வெத் தலங்களிற் சிவனை உமையுடன் வழிபட்டனர், எங்களுக்கு உணர்த்தி யருளுக என முனிவர்கள் கேட்கச் சூத முனிவர் கூறுகின்றார்.

திருமால்

திருமால்:—காசியிற் சிவனைப் பூசித்துக் காத்தல் தொழிலும், ஐந்தாயுதமும், திருமகளும், கருடவாகனமும் பின்னும் பல வரங்களும் அளிக்கப் பெற்றார். சிவலோகத்தின் கீழே வைணவபதத்தில் இருக்கப் பெற்றார்.

பிரமன்

பிரமன்:—காஞ்சியிற் பிஞ்ஞகனை வழிபட்டுப் படைத்தல் தொழிலும் கலைமகளும், அன்னவாகனம் முதலியவும் தரப் பெற்று வைணவபதத்தின் கீழ் இருக்கப் பெற்றான். அந்த இடம் பிரமலோகம் எனப்படும்.

இந்திரன்

இந்திரன்:—ஸ்ரீ சைலத்தில் ஈசனை அருச்சித்து வானுலக ஆட்சியும், புலோமிசை (இந்திராணி)யும், ஐராவதமும், உச்சைச்சிரவமும், குலிசப்படையும், கற்பகத்தருவும், காமதேனுவும், சிந்தாமணியும், கீழ்த்திசையரசும் கிடைக்கப் பெற்றான்.

அக்கினி

அக்கினி:—அண்ணாமலையில் அண்ணலைப் பூசித்து அக்கினிகளுக்கு அரசும், சுவாகா தேவியும், ஆட்டுவாகனமும், சத்திப்படையும், தென் கீழ்த் திசை அரசும் பெற்றான்,

இயமன்

இயமன் :—கேதாரத்தில் எம்பெருமானை வழிபட்டுத் தண்டமும், எருமைக் கடா வாகனமும், நடுவன் என்ற நிலையும் பெற்றுத் தென்றிசைக்குத் தலைவனுனன் : மற்றும் சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் புகவேண்டிய உயிர்களின் புண்ணிய பாவம் அறிந்து கூறும் சபையினரையும், கதிரவன் முதலான உயிர்கள் புரியுங் கருமத்தை அறிந்துரைக்கப், பதினன்கு எழுத்தாளர்களுக்குத் தலைமை பூண்ட சித்திரகுத்தனையும் பெற்றான்.

நிருதி

நிருதி :—கோகரணத்தில் நீலகண்டரைப் பூசித்து வாளும், அரக்கர் சேனையும் பெற்றுத் தென்மேற்குத் திசைக்குத் தலைமை கொண்டான்.

வருணன்

வருணன் :—திருவானைக்காவில் வள்ளலை வழிபட்டு மகரமீன் வாகனமும், பாசம் முதலிய படைகளும், கடலரசும் மேற்றிசைத் தலைமையும் பெற்றான்.

வாயு

வாயு :—காளத்தியில் மங்கை பாகனைப் பூசித்துக் காற்றின்தலைமையும், பல படைகளும், வடமேற்குத் திசை அரசும் பெற்றான்.

குபேரன்

குபேரன் :—சித்தேச்சுரத்திற் குன்ற வில்லியைப் பரவி வடதிசையரசும், நவநிதித் தலைமையும், புட்பக விமானமும், இயக்கர் முதன்மையும், கதை முதலாம் படைகளும், சிவபெருமானது தோழமையும் அருளப் பெற்றான்.

ஈசானன்

ஈசானன் :—திருவாரூரில் எந்தையைப் பூசித்துப் பெயருக்கு ஏற்ப சிவரூபமும், படைகளும், விடைவாகனமும், பிற சிவசின்னங்களும் வடகீழ்த் திசை யரசும், அதிகாரம் முடிந்தவுடன் சிவனடி நிழல் வாழ்வும் வேண்டிப் பெற்றனன்.

சூரியன்

சூரியன் :—காஞ்சியிற் சூலபாணியைப் பூசித்து மறைமண்டலத்தில் தனி இருப்பும், ஏழ்பரித் தேரும், நவக்கிரகத் தலைமையும் பெற்றுப் பருதி மண்டலத்திலே இருக்கப் பெற்றான்.

சந்திரன்

சந்திரன் :—கும்பகோணத்திற் சம்புவை ஆராதித்துப் பயிர்களுக்கு அரசும், நக்ஷத்திரங்களுக்கு நாயகனும் பேறும் பெற்றுப், பரமனுக்கு ஆபரணமுமாகிச் சூரியனுடன் மேருவை வலம்வரப் பெற்றான்.

கிரகங்கள்

இவ்வாறே செவ்வாய் (அங்காரகன்) திருவிடைமருதூரிலும், புதன் மதுரையிலும், வியாழன் (குரு பிரகஸ்பதி) சேதுவிலும், வெள்ளி (சுக்கிரன்) திருவாலங்காட்டிலும், சனி வேதாரணியத்திலும் பரமனை வழிபட்டுச் சோம சூரிய மண்டலங்களின் மேற்கே அருகிலேயிருந்து உயிர்களின் வினைக்கீடாக அனுபவம் தரவும், வியாழன் தேவர் குருவாகவும், வெள்ளி அசுரர் குருவாகவும் இருக்கப் பெற்றனர்.

எழு முனிவர்

வசிட்டர் முதலான எழுமுனிவரும் (தில்லைச்) சிற்றம்பலத்திலே சிவனை வழிபட்டுப் பல நூல் உணர்வும், நவ கோள்களின் மேல் நிலையிலே வாழும் பேறும், இறுதியிற் பேரின்ப வீட்டை அடையும் வாழ்வையும் பெற்றனர்.

அத்தியாயம் 62.

சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

எழுசீர் விருத்தம்

1695. முக்குறும் பெறிந்தே கருணையங் கடலின்
முளைத்தெழு சூதமா முனிவ!
மிக்கவிண் ணவர்க ளிருடியர் நுதற்கண்
விமலனை யெத்தலங் களின்முன்
மைக்கண்மா துமையோ டருச்சனை புரிந்தார்
வழியடி யோங்களுக் கெந்தாய்!
இக்கணம் அவைகள் அனைத்தையும் விரித்தே
இயம்புதி அடைவிலென் றனரால். (1)

திருமால் காசியிற் பூசித்தது

1696. முனிவரர்! ஒருமை யுடனிவை கேண்மின்
மொழிகுதும் அளவிடற் கரிய
புனிதமெய்க் கடவுள் மணிவணன் நெடுமுப்
புரநகைத் தெரித்தருள் பெம்மாற்(கு)
இனியநல் லடிமை யச்சுதன் காசி
யெனும்விழுத் தகையநற் றலத்தில்
தனியனுய் வருடம் அளப்பருங் காலந்
தவமதி கோரமாய்ப் புரிந்தான். (2)

1697. மிடறுளே குழறித் தழுதழுத் திடநா
வெளியசைந் திடஇதழ் துடிப்ப
உடல்பதை பதைப்ப மயிர்பொடித் திடவேர்
வுதித்தெழ நாவிழுந் துளறத்
தடவிழி புடைநீர் பிலிற்றவாய் கலுழத்
தற்செய லறப்பர வசமாய்
உடனெழுந் திலிங்க மொளிர்சதா சிவனை
ஒருமையோ டருச்சனை புரிந்தான். (3)

1698. ஓங்கொளி வடிவாம் இலிங்கமூர்த் தத்தில்
ஒல்லைகண் ணுதல்வெளிப் பட்டே
ஆங்கபி டேகம் ஆட்டியெவ் வுயிர்க்கும்
அளித்தருள் புரிதொழில் கொடுத்துப்
பாங்குசேர் வைண வத்துவ பதமும்
பலவரங் களுமைந்தா யுதமும்
பூங்கம லஞ்சேர் திருவும்பொற் றுயிலும்
புள்ளர சுங்கொடுத் தனனால். (4)

1699. அன்றியும் அகில சகமனைத் தையுங்காத்
தருடியென் றருள்கடைக் கண்ணால்
வென்றிசேர் கருணை சிறிதளித் தனனவ்
வேலைகண் ணுதலனு மதியாற்
பன்றிவெண் கோடும் ஆமையும் வனைந்த
பண்ணவன் பதத்தினிற் கீழாய்
நின்றிடு பதத்தில் இருந்தசை வறவே
நித்தமு வுலகையும் புரந்தான். (5)

1700. கழுவவி ரொளிகொள் நவமணி குயிற்றுங்
கனகதண் டத்தின்மேன் முனஞ்சேர்
பழுதற வளரெண் ணிருகலை பழுது
பனித்திடக் களங்கம்விட் டகன்ற
முழுமதி யனைய கவிகைமேல் நிழற்ற
முரிதிரை அனையசா மரங்கள்
ஒழுகுதெள் ளமுதம் உறழ்மணிக் காம்போ
டுபயமும் இருபுறம் இரட்ட. (6)

1701. அளியிதழ் குடையும் மரைமலர்க் கடவுள்
ஆறிய அமரரா னந்தத்
துளிவிழி பிலிற்றும் யோகியர் மலர்கள்
தூஉய்த்தொழு தேத்தநற் குணமாம்
தெளிவில்பூ ரியரைத் தினந்தொறு மாய்த்துச்
சீரியர் தங்களைக் காத்து
நளிமலர்த் திருமால் நயப்புறுஞ் செல்வம்
நவில வை ணவபதத் திருந்தான். (7)

பிரமன் காஞ்சியிற் பூசித்தது

1702. வாரிசக் கடவுள் காஞ்சிமா நகரின்
மகிழ்சிவ லிங்கமே அருச்சித்(து)
ஆரியற் கணிந்தான் அமலன்முன் வெளிபட்
டவற்கபி டேகமே புரிந்து
பாரியை யுடனே பலவரங் கொடுத்துப்
படைப்பதி காரமே கொடுத்து
நேரிய வுபய சாமரங் கலைகள்
நிறைமதிக் கவிகையுங் கொடுத்தான். (8)

1703. விரிசுடர்த் தவளச் சூட்டுவெண் தூவி
விண்முதல் திசைபடர் எகினப்
பரியும்நல் கினன்மற் றிவைகள்பெற் றேமால்
பதத்தினிற் கீழிமை யவர்கள்
இருடியர் கணங்கள் அருச்சனை புரிய
ஈசனல் லருளினுல் இருந்தான்
மருவுமப் பதமே பிரமலோ கமதாய்
மதித்திரு புகழ்படைத் ததுவே. (9)

இந்திரன் ஸ்ரீபருப்பதத்திற் பூசித்தது

1704. இந்திரன் வளர்சீ பருப்பத மடைந்தே
இலிங்கத்தி லீசனோ டுமையை
வந்தனை புரிந்து வழிபட மகிழ்ந்து
மழவிடைக் குழகன்முன் தோன்றி
அந்தமில் வரங்கள் அளித்தபி டேகம்
ஆட்டிவா னுலகினுக் கரசும்
விந்தைகொள் அமர ராதிபத் தியமும்
மிகுபுலோ மிசைபதித் துவமும். (10)

1702. ஆரியன்—சிவன்.

1705. கலினவாம் பரியுச் சையிச்சர வமுநற்
கனஅயி ராபதக் களிறும்
குலிசவான் படையும் கற்பகத் தருவும்
கோவெனும் காமதே னுவுஞ்சீர்
மலியும் ஆதரவால் மனத்தின்வேண் டுவன
வழங்குசிந் தாமணி வளனும்
பொலியுநீள் குணக்கில் ஆதிபத் தியமும்
புண்டரீ கச்சங்க நிதியும், (11)

1706. கணங்குபூத் தெழில்வார்ந் தொழுகிமுத் துரிஞ்சுந்
துணைமுலைக் கயல்விழிக் கனிவாய்
அணங்குசூழ் குழுவும் அளித்தனன் அவைபெற்
றமரரா தியரிரு புடையும்
வணங்கவே சுவர்க்கம் வதிந்துவான் கங்கை
மாநதி முழுகியெண் விபவம்
இணங்கவா ரமுதம் இனிதுடன் அருந்தி
யெண்டிசைக் கதிபனுய் இருந்தான். (12)

அக்கினி அண்ணுமலையிற் பூசித்தது

1707. எரிதழற்கடவுள் அருணைமா மலையில்
இலிங்கபூ சனைசெயப் பரன்வந்(து)
அரியநல் வரங்கள் அளித்தபி டேகம்
ஆட்டியக் கினிகளுக் கரசும்
பிரிவறு சுவாகா தேவியுந் தகரும்
பெரும்படைச் சத்தியுந் தென்கீழ்
வரிசையாந் திசையும் நல்கினன் பெற்றே
வைபவத் தோடுவீற் றிருந்தான். (13)

யமன் கேதாரத்திற் பூசித்தது

1708. தருமநா யகன்கே தாரவெற் பினின்முன்
சம்புலிங் கார்ச்சனை புரிந்தான்
கருணையாங் கடவுள் தோற்றியே யபிடே
கம்புரிந் ததிகமாம் வரங்கள்
பொருவில்தென் திசையா திக்கமு மயிடம்
புடைத்திடு காலதெண் டமுமே
அருளியெவ் வுயிர்க்கும் நடுவனு யிருந்தே
அவரவர் இருவினை யறிந்தே. (14)

1709. புண்ணிய மதனுற் சுவர்க்கமார் கதியும்
புரிந்தபா வத்தினுல் நரகில்
நண்ணிய அளற்றின் மிசையிருப் பதையும்
நாடுமற் றவரவர் பாவம்
பண்ணிய பலத்திற் கேற்றயா தனையாம்
பருவரல் களையும்நற் சவையில்
எண்ணிய நடுவ ராய்ந்துதக் கோராய்
என்றுமே யிருப்பவர் தமையும். (15)

1710. இரவியா தியரா ருயிர்புரி கருமம்
இயம்ப ஏழிருவரோ டெழுதிப்
பரவுசித் திரகுத் தனையுமே யளித்தான்
பணிந்துகண் ணுதலனுக் கையினுல்
விரவிய தருமன் அளப்பரும் போகம்
மேவியே தனதுசக் கரத்தால்
இரவொடு பகலெவ் வுலகுமோச் சிச்சங்
கியமணி நகரில்வீற் றிருந்தான். (16)

நிருதி கோகரணத்திற் பூசித்தது

1711. நிருதியாங் கடவுள் கோகர ணத்தில்
நின்மல இலிங்கபூ சனைசெய்(து)
அரிதின்வந் தமலர் அருளவே தென்மேற்
காதிபத் தியமபி டேகம்
விருதுசேர் கட்கம் அடைந்தவர்க் குதவு
விதரணம் அரக்கமா சேனை
கருதுமா தியபத் தியமடைந் தேயெக்
காலமும் அரசுவீற் றிருந்தான். (17)

1709. யாதனை—நரகவேதனை. பருவரல்—துன்பம்.

1710. ஏழிருவர்—பதினுன்குபேர்—இவர்கள் 'சிரவணர்' எனப்படுவர். யமனுக்கு ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாவங்களை அறிக்கை செய்வோர். இவர்கள் பன்னிருவர் என்றும் கூறப்படும். சங்கியமணி—யமபுரி—செய்யுள் 1380 பார்க்க.

வருணன் திரு ஆனைக்காவிற் பூசித்தது

1712. **வருணனுங்** கடவுள் சம்புவா ரணியம்
வதிந்தயன் மேவுபொய் கையினீர்
தருணமாங் கலசக் கொங்கைமை விழிச்சுந்
தரியகி லாண்டநா யகிமுன்
கருணையாற் றிரட்டி யருச்சனை புரிந்த
கண்ணுதல் திப்பிய இலிங்கம்
அருணமாங் கழுநீ ராதிய மலர்கொண்
டாகமப் படியருச் சித்தான்.

1713. **பி**ன்னிரக் கஞ்செய் அண்ணல்முன் தோன்றிப்
பெறுமபி டேகமே புரிந்து
மன்னுவெண் பிறைப்பல் மகரவா கனமும்
வரிந்திடு பாசமா தியவாம்
மின்னுதிப் படையும் வேலைகட் கரசும்
விபவமும் மேற்றிசை யரசும்
தன்னருட் பலமே வரமளித் தனனத்
தனையுமே பெற்றுவாழ்ந் திருந்தான்.

வாயு காளத்தியிற் பூசித்தது

1714. **மா**ருதக் கடவுள் தென்கயி லாய
மலையெனுங் காளகத் தியினிற்
சேருநித் தனைமா துடனருச் சித்தே
சிற்பர னலபி டேகம்
பாரினிற் கோடி ஆதிய படையும்
பரிவட மேற்றிசை யரசும்
வாரமுற் றிடுகா லாதிபத் தியமும்
வரங்களும் பெற்றுவீற் றிருந்தான்.

குபேரன் சித்தேச்சுரத்திற் பூசித்தது

1715. **இ**ருநிதிக் கிழவன் மகிழ்சித்தேச் சரமென்
றிசைத்திடும் இடத்திலிங் கத்திற்
பெருவருச் சனைசெய் திடவிறை தோற்றிப்
பிறங்கபி டேகமே புரிந்து

1712. சம்பு ஆரணியம்—ஜம்பு கேசரம்—திருவானைக்கா. அருணப
கழுநீர்—செங்கழுநீர்.

1713. 'பின்னிரக்கஞ்செய் அண்ணல்'—திருவானைக்காவில் இறை
பெயர்—"பின்னிரக்கஞ் செய்வான் தன்னை திருவானைக்காவுளா
அப். தேவா. VI—63—3. திருவானைக்கா வுலா—கண்ணி 30.

1714. தென்கயிலாயம்—காளத்தி, கால்—காற்று.

திருநவ நிதிச்செல் வங்கதை முதலாய்ச்
சேர்படை புட்பக விமானம்
மருவுதோ ழமையும் இயக்கருக் கரசும்
வடதிசை பெற்றுவாழ்ந் திருந்தான். (21)

ஈசானன் திருவாரூரிற் பூசித்தது

1716. **செய்ய**ஈ'சானன் ஒருமையோ டிறைஞ்சிச்
சேர்கம லாலயம் வதிந்தே
துய்யசீர் இலிங்கத் தண்ணலா கமமும்
சுருதியும் புகல்விதிப் படியே
ஐயனை யளத்தற் கருமுப சாரம்
அவையினுல் அடியனென் றிரந்து
பையவே அபிடே காதிபூ சனைகள்
பரவசப் பட்டருச் சித்தான். (22)

1717. **சி**ற்பரன் இலிங்கத் தினின்வெளிப் பட்டே
செய்யஈ சானனை நோக்கிப்
பொற்புற வுனக்கு வேண்டுவ தேது
புகறியென் றருளஈ சானன்
தற்பர! அமல! சச்சிதா னந்த!
சங்கரா! என்றுசந் நிதியின்
முற்பணிந் தெழுந்து செங்கைகூப் பிப்பின்
மொழிகுவன் குறையிரந் திரந்தே. (23)

1718. **கொ**ன்றையஞ் சடில நாயக! நுனக்குக்
கூறிய அனந்தநா மத்தில்
ஒன்றினுக் குவமை யானநா மத்துக்
கொத்திடு முருவமா யுதங்கள்
அன்றியுஞ் சிவசின் னம்விடை யூர்தி
அருள்வட கீட்டிசை அரசும்
வென்றியா தியபல் வரமுநல் கெனவே
விமலனப் படியவை அளித்தான். (24)

1719. **பி**ன்னுமீ சானன் அடிமுறை பணிந்து
பேதையேற் கின்னுமொன் றுளது
நின்னரு ளதனுல் எனததி காரம்
நீங்கிய அந்தத்தின் மீள

1716. கமலாலயம்—திருவாரூர்

உன்னரும் நினது மலர்ப்பதத் தடியேன்
ஒன்றுபட் டிருக்கும்வீ டருள்தி
என்னவப் படியென் றருளியே மறைந்தான்
ஏத்தியீ சானன்வாழ்ந் திருந்தான். (25)

சூரியன் காஞ்சியிற் பூசித்தது.

1720. சூரியன் காஞ்சி நகரிலிங் கத்தில்
தோடலர் மரைகொடர்ச் சிக்க
ஆரியன் அபிடே கம்புரிந் திருக்கே
ஆதிய மறைகள் மண் டலத்திற்
சீரிய இருப்பும் ஏழ்பரித் தேருந்
திகழ்கிர காதிபத் தியமும்
பாரிய அருளால் நல்கவே பெற்றுப்
பருதிமண் டலத்திருந் தனனால். (26)

சந்திரன் கும்பகோணத்திற் பூசித்தது

1721. சந்திரன் முதலாற் கும்பகோ ணத்திற்
சம்புவைப் பூசைசெய் ததனாற்
பந்தனக் கிறைமை பயிர்களுக் கரசும்
பனிக்கதிர் இருபிறப் பேராம்
இந்தமெய் வரங்கள் பெற்றம லேசற்
கேற்றவா பரணனும் இனனோ(டு)
அந்தரத் திறைமே ருவைகிர கத்தோ
டனுதினம் வலம்புரிந் தனனால். (27)

அங்காரகன் முதலிய கிரகங்கள் பூசித்தது.

1722. சேய்புதன் குருபார்க் கவன்சனி அடைவே
திருவிடை மருது தென் னால
வாய்திகழ் சேது வடவனஞ் சுருதி
வனத்திலீ சனையருச் சித்துக்

1720. மரை—தாமரை.

1721. பம்—விண்மீன் (நக்ஷத்திரம்); இருபிறப்பு—வளர்தல்—தேய்தல். இனன்—சூரியன்.

1722. சேய்—செவ்வாய்—அங்காரகன்; பார்க்கவன்—சுக்கிரன்—வெள்ளி. வடவனம்—திருவாலங்காடு. சுருதிவனம்—வேதாரணியம். அந்தணன்—பிரகஸ்பதி. புகர்—சுக்கிரன்.

காய்கதி ரிரவி சோமமண் டலமேற்
கருகிருந் துலகிரு வினைக்கீ(டு)
ஆயனு பவந்தே வாசுர குருவா
அந்தணன் புகரொடே யளித்தான். (28)

எழுமுனிவர் தில்லையிற் பூசித்தது.

1723. இருடியர் வசிட்ட ராதியர் எழுவர்
இணையில்சிற் றம்பலத் திறையை
ஒருமையோ டருச்சித் தனந்தசாத் திரங்கள்
உழைமழு ஏந்திய விமலன்
கருணையால் உணர்ந்தொன் பான்கிர கங்கள்
கதித்திடும் பதத்தின்மேல் என்றும்
மருவியே பரன்பே ரின்பவீ டடைவான்
வரங்களும் பெற்றுமே யினரால். (29)

அத்தியாயம்—63

சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி.

துருவன் முதலியோர் வழிபட்டது

சூதமுனிவர் மேலுஞ் சொல்கிறார்:

உத்தான பாதன் மைந்தன் துருவன் காசியில் விச்சுவேச்சுரனை வழிபாடு செய்து அளவற்ற வரங்களையும் எழுமுனிவர் நிலைக்கு மேலான நிலையும், எழுமுனிவரும் தன்னைச்சுற்றி வரும் பேற்றையும் பெற்று உயர் பதத்தில் திகழ்கின்றான்.

ஆதிசேடன் கும்பகோணத்திற் பரமனை அருச்சித்துக் கடல் புவியனைத்தும் முடித்தலையிற் சுமக்கும் பேறு பெற்றான்.

இப்படியே எண்ணற்ற தலங்களினும் மலைமுடியினும் கடல் கரைகளிலும் இமையவரும், முனிவரும், சித்தரும், காருடரும், கந்தருவரும், வித்தியாதரரும், இயக்கரும், நாகரும் மற்றும் பலரும் இறைவனைப் பூசித்துத் தத்தம் பதவியையும்வரங்களையும் பெற்றனர்.

ஆகையால் அறத்தை விரும்பும் மக்கள் ஒவ்வொரு நாளும் பல்வகைப் பொருளையும் நல்கும் சிவபூஜை செய்யவேண்டும். இறை வழிபாட்டாற் சித்தராயினர் சிலர். இங்ஙனம் வழிபட்டுப்புகழ் பெற்றவர் நவநாதசித்தர், கபிலராதியோர் சித்தராயினர். சிலர் சாலோகத்தையும், சிலர் சாமீபத்தையும்,

சிலர் சாரூபத்தையும், சிலர் சாயுச்சியம் எனும் இறைவன் திருவடி நிழலையும் பெற்றனர். சில மானிடர் சிவ வழிபாட்டால் அளவற்ற செல்வத்தை இம்மையிலே பெற்றும் செல்வச்செருக்கால் மாயையில் மீளவும் மூழ்கி மறுபடியும் வழிபட்டார். மற்றும் வெற்றி வேண்டினவர் வெற்றியையும், மனைவி மக்களை வேண்டினவர் மனைவிமக்களையும், பசு, வாகனம், செல்வம், அழகு, வடிவு, வண்மை, சத்தியம், பராக்கிரமம் முதலிய வேண்டினவர் தாம் வேண்டினவற்றையும் வழிபட்டாற் பெற்றனர்.

இவ்வாறு வழிபட்டோர் கதைகளிற் சிலவற்றை இனிக் கூறுகிறேன்.

அத்தியாயம் 63.

சிவபூஜை மான்மியம்—தொடர்ச்சி

பலர் பூசித்தது

எழுசீர் விருத்தம்

துருவன் காசியிற் பூசித்தது

1724. பரத்தில்வாழ் துருவ னுமவுத் தான
பாதிமுன் காசியில் வதிந்து
சிரத்தையால் விச்சு வேசுரன் பாதம்
பூசைசெய் தமலனால் அனந்தம்
வரத்தையுங் கிரகம் உடுமுநி வரர்மேல்
மருவிய பதத்தையு மிவனை
உரத்தினால் வலமாய்ச் சுற்றிடுந் தொழிலும்
உவந்துபெற் றுயர்பதத் திருந்தான். (1)

ஆதிசேடன் கும்பகோணத்திற் பூசித்தது

1725. விரிசுடர்க் கற்றை உமிழ்மணிச் சுடிகை
விடதரத் துளையெயிற் றகல்வாய்
வரியுடற் புயங்க மாசுணக் குலங்கள்
வணங்கு சே டன்குட மூக்கில்
அரியயற் கரிய நாயகன் மலர்த்தாள்
அருச்சனை புரிந்தவ னருளால்
முரிதிரைக் கடற்பார் பஃறலைக் கனக
முடிதரித் தரசுவீற் றிருந்தான்; (2)

1724. துருவன்—உத்தானபாதன் மகன்.

பலர் பூசித்தது

1726. அந்தணிர் ! புவியில் இப்படித் தலங்கள்
அனைத்தினுங் கிரிமுடி யினும்நீள்
சிந்துவின் தடத்தும் இமையவர் முனிவர்
சித்தர்பே ரசுரர்கா ருடர்கள்
கந்திரு வர்கள்விஞ் சியாதர ரியக்கர்
கட்செவி உரகரீ சனையே
வந்தனை புரிந்தே அவரவர் பதமும்
வரங்களும் பெற்றுவாழ்ந் திருந்தார். (3)

1727. கின்னரர் முனிபுங் கவரியாழ் தழீஇய
கிம்புரு டாதியர் மனிதர்
பொன்னவி ரிதழிச் சடிலநா யகனைப்
பூசனை புரிந்துவா னவர்கள்
தன்னிகர் கருடர் உரகர்கந் தருவர்
தயித்தியர் மனிதர்கிம் புருடர்
கின்னரர் மரீஇய ஆதிபத் தியங்கள்
கிரீசனால் அடைந்துமே வினரால். (4)

1728. கொண்டலா திபர்கள் அட்டதிக் கயங்கள்
கொடுமுடி சத்தபூ தரங்கள்
எண்டிசா முகத்து நாகர்க ளியாவர்
யாவருக் கென்றுமே அதிபங்
கொண்டசீர்ப் பதத்திற் கண்ணுதல் அருளாற்
குறைவறும் ஆதிபத் தியங்கள்
பண்டைநாள் அடைந்தார் முனிவிர்காள் !
வேறு பகர்ந்தருள் தவத்தினு லன்றே. (5)

1729. ஆகையால் தருமம் வேண்டுமா னிடர்கள்
அனைவரா னும்மனு தினமும்
ஈகையா தியபல் பொருளெலாம் பயக்கும்
இம்மையோ டம்மைநல் குவதாம்
தோகையோர் பாகன் மலர்ப்பதம் பூசை
தொடர்ந்தெநா ளுஞ்செய வேண்டும்
ஓகையாய்ச் சிலர்கள் சம்புபூ சனையால்
ஒல்லைமா சித்தரா யினரே. (6)

1728. சத்த பூதரங்கள்—ஏழு மலைகள்.

1730. மற்றவ ரணுமா தியபல சித்தி
வரங்களியா வையுமுனம் அடைந்து
செற்றமே ஒருவி வருநவ நாத
சித்தரேன் றியாவரும் புகழப்
பெற்றனர், கபிலா தியரியோ கியர்கள்
பிஞ்ஞுகன் பூசையா லநேக
அற்றமி லுலோகா தியர்களா யிருந்தோர்
அநேகர்நித் தியர்களா யிருந்தோர். (7)

1731. சிலர்சிவ லோக மெனச்சொல்சா லோகஞ்
சேர்ந்தரன் தாள்தொழு திருந்தார்
சிலர்பிறைச் சடில அண்ணல்சந் நிதியிற்
சேர்ந்துசா மீபமுற் றனர்கள்
சிலர்பட அரவம் அரைக்கசைத் தருள்வோன்
செய்யசா ரூபமுற் றனர்கள்
சிலரரு வுருவாம் பரசிவன் மலர்த்தாள்
சேரும் வீட்டின்பமுற் றனரே. (8)

1732. பற்றறு துறவீர்! இமையவர் அசுரர்
பாரின்மா னவர்களின் னோர்கள்
பெற்றமூர் தியைமுன் னருச்சனை புரிந்து
பிரிவரும் அளப்பில்செல் வங்கள்
பற்றின ரெனப்பூ வுலகினி லுரைத்தார்
பாரி னிற் சிலர்செல்வ மதத்தால
முற்றுமூ டர்களாய் மீளவும் பாசம்
மூழ்கியே அருச்சனை புரிந்தார். (9)

1733. விசயம்வேண் டினர்கள் அளப்பிலர் சிவனை
விழைந்தருச் சித்துமாற் றலரைத்
திசைதொறும் வதைத்துப் புவியெலாம் புரந்தார்,
திகழ்வலி வேண்டினர் அனந்த

1730. அணிமா ஆதிய சித்தி. நவநாத சித்தர்—சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அனாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திர நாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர் ஆகிய பிரதானசித்தர் ஒன்பதின்மர்.

1733. இந்திரை—இலக்குமி,

வசையறு மிகுத்த வலிதனை அடைந்தார்;
மைந்தர்வேண் டினருமைந் தர்களை
இசையுறப் பெற்ருர், மனைவிவேண் டினரும்
இந்திரை யனையமா திசைந்தார். (10)

1734. பசுவிரும் பினர்கள் பசுஅடைந் தனர், வரம்
பரிவிரும் பினருமப் படியே,
வசுநிறை விபவம் அழகொளிர் வடிவம்
வண்மைசத் தியம்பராக் கிரமம்
இசையிவை புவியில் விழைந்தவை அடைந்தார்
இப்பொருள் களிலிதி காசம்
திசைபுகழ் அனந்தம் அவைதனில் துறவீர்
சிலகதை செப்புதும் கேண்மின். (11)

1734. வசு—செல்வம். இதிகாசம்—பழங்கதை